2878

# T.N.L.A. Debates

## Official Report

VOL XII No 4

10th July 1985

C

V211,31 N85
N85.12-4
136419

24 ஏப் 1986
சென்னை-600 009
305 | 86

தமிழ்நாடு

# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

2878

TAMILNADU

# LEGISLATIVE ASSEMBLY DEBATES

OFFICIAL REPORT

புதன்கிழமை, 1985 ஜூலை 10, தொகுதி XII-எண். 4.
Wednesday the 10th July 1985—Volume XII-No. 4.

சட்டமன்றப் பேரவை செயலகம், சென்னை-600009
Legislative Assembly Department, Fort St. George,
Madras-600 009

விலை-ரூ. 3.50 காசுகள்]

Price Rs. 3-50 paise

ர
4311.3 N85
N85 · 12-4

கன்னிமாரா பொது நூலகம்
136419
சென்னை-600 008.

உள்ளடக்கம்

10—7—1985

பக்கங்கள்

1. இரங்கல் குறிப்பு :

முன்னாள் உறுப்பினர் திரு. ஆர். சம்பங்கி அவர்களது மறைவு .. .. .. 601

2. அரசினர் சட்ட முன்வடிவுகள் :

(அ) விளம்பரப் பலகைகளை கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவு, 1985 .. .. 602

(ஆ) நகராட்சிகள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1985 .. .. .. 602

3. வரவு-செலவுத் திட்டம் 1985-86 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண். 15—காவல் துறை .. 603—697

(ஆ) கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் (தொடர்ச்சி) .. .. .. 603—697

திரு. கி. மனோகரன் .. .. 603—618

திருமதி டி. யசோதா .. .. 618—635

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் .. .. .. .. 635—697

(இ) கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் .. 697—719

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் .. 698, 698, 714

திரு. சா. ஜெயச்சந்திரன் .. .. 698—703

திருமதி இரா. சரோஜா .. .. 703—708

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் 708—715

திரு. ஆர். சிவக்குமார் .. .. 715—719

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 719

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1985, ஜூலை 10, புதன்கிழமை

ஆனி 26, குரோதன—திருவள்ளுவர் ஆண்டு 2016.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
என நான்கே ஏமம் படைக்கு. ''

வீரம், மானம், சிறந்த வழியில் நடக்கும் நடக்கை, தலைவரால் நம்பித் தெளியப்படுதல் ஆகிய நான்கு பண்புகளும் படைக்குச் சிறந்தவையாகும்.

## 1. இரங்கல் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் திரு. ஆர். சம்பங்கி அவர்களது மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஆர். சம்பங்கி அவர்கள் 8–7–1985 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சம்பங்கி அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை வட ஆற்காடு மாவட்டம், விரிஞ்சிபுரம் தொகுதியிலிருந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 2. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) விளம்பரப் பலகைகளைக் கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவு, 1985.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரப் பலகைகளைக் கையகப்படுத்துதல் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) நகராட்சிகள் சட்டங்கள் (திருத்த( சட்ட முன்வடிவு, 1985.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவை தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.



## 3. வரவு-செலவுத் திட்டம் 1985—86 வாக்கெடுப்பு (தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 15—காவல் துறை

(ஆ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் ப ணிகள் தொடர்ச்சி.

*திரு. இ. மனோகரன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது 2 நாட்களாக விவாதங்கள் நடைபெற்று இன்று மூன்றாவது நாள், முடியும் தறுவாயில் இருக்கிறது. நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், மாண்புமிகு உறுப்பினர் ரகுமான் கான் அவர்கள் பேசியதற்குப் பிறகு, இறுதியாக இந்த மானியக் கோரிக்கையைப் பற்றி ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு முன்பு வேதனையோடு ஒரு உண்மையை இந்த மன்றத்தில் நான் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கோரிக்கைகளைப் பற்றியோ அல்லது மானியங்களைப் பற்றியோ இங்கே விவாதித்ததைவிட, கட்சிக்கு கட்சி, கட்சி மாச்சரியங்களை அடிப்படையாக வைத்து உள்நோக்கம் கற்பிக்கின்ற வகையிலே காழ்ப்புணர்ச்சியோடு பேசிய பேச்சுக்கள்தான் அதிகமாக அமைந்திருந்தன என்பதை சபாநாயகர் அவர்களே, நீங்களும் உணர்வீர்கள், அவை முன்னவர் அவர்களும் உணர்வார்கள். இந்த மன்றமும் உணரும்.

என்னைப் பொறுத்தவரையில் நான் அந்த வளையத்தில் சிக்காமல் மிக முக்கியமான சில கருத்துக்களை மட்டும் தெரி வித்து விடை பெற விரும்புகிறேன். இங்கே விவாதிக்கிற பொருள் எவ்வளவு மிகமுக்கியமான முக்கியத்துவம் வாய்ந்த வொன்று என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அந்தக் காரணத் தாலே தான் நான் இதுகுறித்து பேசும்போது புதியதாக தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இந்த மாமன்றத்திலே இருக்கி றார்கள் என்பதற்காகவும், பழைய உறுப்பினர்கள் இருக்கி றார்கள் என்று தெரிந்தும், சொல்கிறேன். நேஷனல் போலீஸ் சர்வீஸ் கமிஷன் 1981 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு, அந்தக் கமிஷன் அளித்த எட்டு ரிப்போர்ட்டுகளை புதியவர்கள் ஒரு வேளை படித்திருக்க நியாயம் இருக்காது ; பழையவர்கள் படித்தி ருந்தால் ,ஒருவேளை மறந்திருக்கக் கூடும், மறந்திருந்தால் அதை நினைவுபடுத்துகிற வாய்ப்பாக இந்தச் சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்த விரும்புகிறேன். அந்தக் கமிஷன் ஆரம்பிக்கப் பட்டது 1981 ஆம் ஆண்டிலே ஆகும். அந்தக் கமிஷனிலே பங்குபெற்றவர்கள் அல்லது யார் தலைமையில் அந்தக் கமிஷன் அமைக்கப்பட்டது என்பதை இந்த மாமன்றத்திலே நான் படித்துக் காட்ட விரும்புகிறேன். அந்தக் கமிஷனின் தலைவ ராக பணியாற்றியவர் தர்மவீரா என்பவர். அவர் மாஜி கவர்னர். அதிலே உறுப்பினர்களாக அங்கம் வகித்தவர்கள்

[திரு. கி. மனோகரன்] [1985 ஜூலை 10

Thiru N. K. Reddy, Retired Judge of the Madras High Court, Ex. I. G. P., Madhya Pradesh and Ex. Special Secretary Thiru K. F. Rustomji, Thiru N. S. Saxsena, Ex. I. G. P. U. P., Pro M. S. Gore, Professor, Tata Institute of Social Sciences, Bombay, Thiru C. V. Narasimhan, presently Director of C. B. I. ஆகியோர்.

அவர்கள் அப்போது வழங்கிய அந்த ரிப்போர்ட்டை முழுமையாக படித்துப் பார்க்கிற வாய்ப்பை நான் பெற்றேன். அதிலே திரு. தர்மவீரா அவர்கள் ஆரம்பத்திலே என்ன தெரிவிக்கிறார் என்பதை இந்த மன்றத்திற்குச் சுட்டிக்காட்டுவது என்னுடைய தலையாய கடமையென்று கருதுகிறேன்.

The basic and fundamental problem regarding the Police today is how to make them function as an efficient and impartial law enforcement agency fully motivated and guided by the objectives of service to the public at large upholding the constitutional rights and liberty of the people இன்றைக்கு நம் முன்னாலே இருக்கிற அடிப்படை பிரச்னை எந்த அளவிற்கு காவல் துறை Law Enforcement Agency என்ற அளவிற்கு மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அவர்கள் இயங்க வேண்டுமென்பது தான் நம் முன்னாலே இருக்கிற பிரச்னையென்று திரு. தர்மவீரா அவர்கள் தெளிவாக தெரிவித்திருக்கிறார்கள். அப்படி தெரிவித்த திரு. தர்மவீரா அவர்கள் இன்னொரு கருத்தையும் அந்த ரிப்போர்ட்டிலே தெரிவித்திருப்பதை நான் காவல் துறை மானியத்தின் மீது பேசுகிற இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

The Commission has been given a very wide range of terms of reference covering practically the entire gamut of the Police system. We have identified a number of issues for detailed examination and we are presently in the midst of relevant study, but from what we have seen and heard already we felt very much distressed and deeply concerned about the increasing intensity of the public complaints, of oppressive behaviour ond excesses by the police, it was apparent to us that the puplic is fast losing confidence in the existing arrangements for chezking the gross abuse of powers by the Police, and also in the ability to deal effectively with the law and order and crime situation in the country. At the same we greatly concern to fine the Police morale particularly at the level of constabulary to be very very low.



1985 ஜூலை 10] [திரு. கி. மனோகரன்]

(முற்பகல் 9.10)

இதனுடைய கருத்துக்கள் உங்களுடைய கவனத்தை கவர்ந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். அவர்கள் இந்தப் பிரச்சினையை அலசி ஆராய்ந்து அவர்கள் கருத்து தெரிவிக்கின்ற போது, பல்வேறு மாநிலங்களுக்கு அந்தக் குழு சென்று, காவல் துறையைச் சேர்ந்த உயர்ந்த அதிகாரிகளை மற்றவர்களையும் சந்தித்து, பொது மக்களைச் சந்தித்து, அதிலே சமுதாயத்திலே தரமானவர்களைச் சந்தித்து, தகுதி படைத்தவர்களையும் சந்தித்து கருத்துக்களைத் திரட்டியபோது, எங்களுக்குத் தெரிந்ததும், பார்த்ததும் கேட்டதும் என்னவென்றால், திரும்பியும் ஒரு முறை நான் அதை படிக்க விரும்புகிறேன்.

From what we have seen and heard alre dy we felt very much distressd ane deeply concerned about the increasing intensity of public complaints, of oppressive behaviour and excesses by Police it was apparent to us that the public is fast losing the confidence i the existing arrangements for checking the gross abuse of powersbyn the Police.

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் காட்சியை நாம் இன்றைக்கு தமிழகத்திலே பார்க்கிறோமா என்பதைப் பற்றி மனச்சாட்சியோடு சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

போலீஸ்காரர்கள் உதைத்தால்தான் உண்மை வெளியே வரும், அவர்கள் உதைத்தால்தான் பல்வேறு நிலைமைகளுக்கு வெளிச்சம் கிடைக்கும். ஆகையினாலே போலீஸ்காரர்கள் கையிலே வைத்திருக்கின்ற அந்தத் தடி உதைப்பதற்கு, உண்மையை வெளியே கொண்டு வருவதற்காக என்று பேசப்படுகின்ற பாசிசப் பேச்சுக்கள் எந்த அளவிற்குக் காவல் துறையை காப்பாற்றும், மக்கள் நலனைக் காப்பாற்றும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று அனைத்து உறுப்பினர்களையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இங்கே உட்கார்ந்து இருக்கிற நாம், ஆட்சிக் கட்சியானாலும் சரி, அல்லது எதிர் வரிசையைச் சார்ந்திருக்கின்றவர்களானாலும் சரி, நிரந்தரமானவர்கள் அல்ல என்பதை மறந்துவிடக் கூடாது. நாளை, தேர்தலிலே தோற்றால், தெருவிலே நிற்க வேண்டியவர்கள். ஆனால் இந்தக் காவல் துறை என்பது அப்படி அல்ல. அது நிரந்தரமாக நிற்கக் கூடியது. எந்த ஆட்சி வந்தாலும் சரி, காவல் துறை நிற்கும். ஆகவே காவல் துறை தன் மீது களங்கம் [illegible] உருவாக்கப்பட்டக் கூடாது. 'காவல் துறை' [illegible] யத்தையும் இழந்து விடக் கூடாது. தடி [illegible] [illegible] கூடாது. [illegible]

[திரு. கி. மனோகரன்] [1985 ஜூலை,

மத்தியிலே அவர்கள், உங்கள் மேல் வைத்திருக்கின்ற நம்பிக்கையை நீங்கள் வீண் அடிக்கக் கூடாது. அந்த நம்பிக்கை உள்ளவர்களாக நீங்கள் நடந்து கொண்டால் தான் காவல் துறை ஒழுங்காக இயங்க முடியும். அவர்கள் ஒழுங்காக இயங்கத்தான் அரசு இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், காவல் துறையைப் பொறுத்த வரையில் இன்றைக்கு இருக்கிற நிலைமையை நான் தெரிவிக்க விரும்புவது ஒன்று. பாரதத்தினுடைய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் கூட நேற்றைக்கு முந்தா நாள் பேசும் போது குறிப்பிட்டார்கள்- காவல் த்துறை அரசியலில் புகுந்து விளையாடக் கூடாது. அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையில் காவல் துறை இயங்க வேண்டும். அப்படி இயங்கினால்தான் காவல் நுறை தனது கடமையை ஆற்ற முடியும். அதே கருத்தைத் தான் காங்கிரஸ் கட்சியின் சார்பாக இங்கே பேசிய அருமை நண்பர் மாண்புமிகு சித்தன் அவர்கள் வலியுறுத்தி கூறினார்கள். இதே கருத்து திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உண்டு. இதே கருத்து, ஆட்சிக் கட்சியில் இருப்பவர்களுக்கும் இருக்க வேண்டும் என்பதே எனது ஆசை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு உண்மையை நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு சில கட்சியைச் சார்ந்தவர்களை நம்பினால்தான் தங்களுக்கு புரமோசன் கிடைக்கும், தங்களுக்கு உயர் பதவி கிடைக்கும் என்ற அளவிற்கு ஒரு சிலர் கட்சிக்காரர்களைத் தேடிப் பிடித்து, அலைகின்ற அளவிற்கு காவல் துறை துரத்தப்படுமேயானால், காவல் துறையிலிருந்து நீதியை நிச்சயமாக யாரும் எதிர்பார்க்க முடியாது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப் பட்டு இருக்கிறேன். இங்கே பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள். இங்கே இருக்கின்ற நமது காவல் நுறை மிக அருமையாக இயங்குகிறது என்றும், இந்தக் காவல் துறையிலே பங்கு பெற்று, பணியாற்றுபவர்கள் எல்லாம், குற்றங்களை உடனடியாகக் கண்டு பிடிக்கிறார்கள் என்றும் இங்கே பேசினார்கள். கிரைம் சிட்டுவேஷன் எப்படி தமிழகத்திலே இருக்கிறது என்பதை எனக்கு முன்னாலே இந்த மன்றத்திலே பேசிய உறுப்பினர் ரமணி அவர்களும், அருமை நண்பர் ரகுமான்கான் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள்.

பத்திரிக்கையில் வந்தவைகளை எல்லாம் தொகுத்துக் கூறுகிறீர்களே; இவைகளை எல்லாம் நம்பலாமா என்று ஒரு கேள்வி எழுப்பப்பட்டது. பத்திரிக்கையில் வருவதை எதையும் நம்பக் கூடாது என்ற வாதத்தை நான் ஏற்றுக் கொள்ளுவதற்கு இல்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பத்திரிகையில் வருகின்ற செய்திகள் பல செய்திகள் உண்மையான செய்திகள், சில செய்திகள் திரித்துப் போடுகின்ற செய்திகள் அல்லது



1985 ஜூலை 10] [திரு. கி. மனோகரன்]

கற்பனை செய்தியாக இருக்கக் கூடும். அந்த காரணத்தால் எந்த பத்திரிக்கையையும் நம்பக் கூடாது, எந்த பத்திரிக்கையில் வருகின்ற செய்திகளையும் தொகுத்துக் கூறக் கூடாது என்று வாதாடுவது நியாயமான வாதமாக எனக்குப் படவில்லை. சரி, அவர்கள் சொன்னது தவறு என்று வைத்துக் கொள்ளுங்கள், நான் இப்போது சில ஆதாரங்களை இந்த அவையின் முன்னால் வைக்க விரும்புகிறேன். அதற்கு காவல் துறையை கையில் வைத்து இருக்கிற முதல்வர் அவர்கள் விளக்கம் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

உதாரணத்திற்குச் சொல்கிறேன், தொலைதூரம் போக வேண்டியது இல்லை. நமது முதல்வர் கொடுத்துள்ள கொள்கை குறிப்பைப் பார்த்தேன். அதிலே சேலத்திலே அவர் பிடிபட்டார் என்றும், செங்கற்பட்டில் ஒருவரை பிடித்தோம் என்றும் செய்திகள் தரப்பட்டிருக்கிறது. நான் இங்கே தெரிவிக்க விரும்புவது, கொலை செய்யப்பட்டு, கொலையாளிகள் யார் என்று தெரிந்து அவர்கள் மேல் வழக்கு பதிவு செய்யப்பட்டதற்குப் பிறகு அந்த கொலையாளிகள் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படவில்லை என்பது மட்டும் அல்ல, அந்த கொலையாளிகள் இன்னும் கம்பீரமாக தமிழகத்தில் உலா வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை வெட்கத்தோடு நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

பக்கத்தில் இருக்கின்ற திருவொற்றியூரில் ஒரு ஆண்டு காலத்திற்குள் நடைபெற்ற கொலை மட்டும் 7. அதிலே முதலில் நான் ஒரு தம்பியின் பெயரை இங்கே படிக்க விரும்புகிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர், நான் அந்த இயக்கத்தில் இருந்த போது என்னிடம் பாசம் பொழிந்தவர், அவர் பெயர் தங்கசாமி, நகர செயலாளர். மூன்று பேர்கள் அவரை கொலை செய்து இருக்கிறார்கள். அந்த மூன்று பேர்களை பிடித்து இருக்கிறார்கள். அந்த 3 பேர்களுக்கும் கிரைம் நம்பர் தந்து இருக்கிறார்கள். 603/84. ஒரு ஆண்டுக்கு முன்னால் நடந்த கொலை. செக்ஷன் ஐ.பி.சி. 302. அவரை கொலை செய்த அந்த 3 பேர் பெயரையும் நான் முதல்வருக்கு தர விரும்புகிறேன். ஒருவர் பெயர் டோக்கியோ மணி, இன்னொருவர் பெயர் சேகர், இன்னொருவர் பெயர் சுந்தரம். இந்த மூன்று பேர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்ட பிறகு இன்னும் அவர்கள் கைது செய்யப்படவில்லை. அவர்கள் வெளியே உலவிக் கொண்டு இருக்கிறார்கள். வெளியே இவர்களை உலாவ விட்டுவிட்டு இந்த தங்கசாமியின் குடும்பத்திற்கு பவள விழா என்ற பெயரில் அங்கே முதல்வர் 75 ஆயிரம் ரூபாய் நிதி அளித்து இருக்கிறார்கள் என்ற செய்தியை நான் பத்திரிக்கையில் பார்த்தேன். அது நல்ல காரியம். நான் தெரிந்து கொள்ள விரும்புவது, இந்த 3 பேர்கள் எப்படி தப்பினார்கள். அவர்கள் மேல் இவ்வளவு பயங்கரமான செக்ஷன் போடப்பட்டதற்கு பிறகு, வழக்கு பதிவு செய்யப்பட்டதற்கு பிறகு அவர்கள் எப்படி தப்ப முடிந்தது. வேறு எந்தக் காரணமும் அல்ல

[திரு. கி. மனோகரன்] [1985 ஜூலை 10

டோக்கியோ மணி, சேகர், சுந்தரம் ஆகிய 3 பேரும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். இது நியாயம்தானா என்பதை நான் பணிவன்போடு மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு பிறகு வட சென்னை நாடாளுமன்ற தேர்தலில் வேட்பாளராக நின்ற சேமன் படுகொலை செய்யப்பட்டார். படுகொலை செய்யப்பட்டாரே தவிர அது கிரைம் நம்பர் 827/84, செக்ஷன் ஐ.பி.சி. 302. இதுவரை அந்த வழக்கு என்ன ஆயிற்று என்று யாருக்காவது தெரியுமா என்றால் இல்லை. அதற்கு பிறகு பல பேர். சாராய வியாபாரி ராதாகிருஷ்ணன் கொலை. அடுத்து கிருஷ்ணமூர்த்தி கொலை, அடுத்து ஆயுள் குப்பன் தம்பி கொலை, இப்படி பல கொலைகள் நடைபெற்று இருக்கின்றன. ஆனால் எந்தக் கொலையிலும் கொலையாளிகள் இதுவரை கைது செய்யப்படவில்லை என்பது மட்டும் அல்லாமல் அந்த கொலையாளிகள் தப்பி இருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நான் இந்த மன்றத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இவர்கள் மேல் எடுத்த ஆக்ஷன் என்ன என்பது எனக்கு தெரிந்து ஆக வேண்டும். (குறுக்கீடு).

(முற்பகல் 9-20)

திரு. வி. பி. சிந்தன் : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், விவாதம் நடந்து கொண்டிருக்கும்போது அமைச்சர் அதிகாரிகள் காலரிக்கு சென்று பேசிக் கொண்டிருக்கலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒன்றும் பெரிய பிரச்சினை அல்ல. Please do not make it an issue.

திரு. ஆ. நடராசன் : அமைச்சர் அப்படிச் செய்வது சரி தானா ? மானக் கேடு இல்லையா ? (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மானக் கேடு என்று எல்லாம் பேசுவது முறை அல்ல. மானம் கெட்டுப்போனவர்கள்தான் அப்படியெல்லாம் பேச வேண்டும். என்ன செய்வது ? இல்லாதவன் கண்ணுக்கு இருப்பதே தெரியாது. (குறுக்கீடு)

Mr. SPEAKER : It is a minor matter. Do not take it seriously.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே விவாதம் நடக்கின்றபோது, விவாதத்திலே பல பிரச்சினைகளை எழுப்புகிறார்கள், உறுப்பினர் பெருமக்கள், அந்தப் பிரச்சினைகளுக்குரிய தன்மையிலே



1985 ஜூலை 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அந்தப் பிரச்சினைகள் எப்படிப்பட்டது, அது பற்றி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், மற்றவைகள் எல்லாம் உரிய அதிகாரிகளிடத்தில், மற்றவர்களிடத்தில் இருக்கும். அதனால்தான் ஒவ்வொரு மானிய கோரிக்கையும் இங்கே விவாதத்திற்கு வருகின்றபோது, அதற்குரிய செயலாளர்கள், அதிகாரிகள் எல்லோரும் வந்து உட்காருவது வழக்கம். (குறுக்கீடு) விளக்கம் சொல்கிறேன், தவறு இல்லை என்பதற்காக இதைச் சொல்கிறேன். ஆகவே, ஒரு அமைச்சரோ அல்லது பொறுப்பேற்றிருக்கிற அமைச்சரோ சென்று சில பல விளக்கங்களை கேட்டுத் தெரிந்து வைத்துக் கொள்வதும், விளக்கங்கள் தயாரித்து வையுங்கள் என்று சொல்வதும் தவறான நடவடிக்கை அல்ல. இது வரை நடைபெற்றுக் கொண்டு வருவது தான். நான் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்போதும் சரி, இங்கே காங்கிரஸ் அமைச்சர்கள் இருக்கும் போதும் சரி, சில குறிப்பிட்ட பிரச்சினைகளை எழுப்புகிறபோது, அது பற்றிய நிலைமை என்ன என்று உடனடியாக தெரியக் கூடியதாக இருந்தால், உடனடியாக பதில் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும். இல்லையெனில், அது பற்றி இப்போது இல்லை, பின்னால் சொல்வோம் என்று சொல்வோம். ஆகவே, போய் ஒரு விளக்கம் கேட்பது என்பது தவறான செயல் அல்ல. அது விவாதம் நடக்கின்றபோது குறுக்கிடுகின்ற ஒன்றாக ஆகாது. ஆகவே, அப்படிப்பட்ட நிலையில் அவைக்குள்ளாக, அந்த விவரம் அவர்கள் கேட்டது வேண்டுமென்றால் சரியாக இல்லையெனினும் கூட, வெளியே போய் கேட்டுக் கொள்வதற்கான முறைகளில் அமைச்சர்கள், மற்றவர்கள் செய்யலாம். இங்கேயே கேட்கும் முறைகள் வேண்டாம் என்ற நிலையில் தான் நாங்கள் இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்லிவிடுகிறேன். அது தவறே அல்ல.

On a point of order raised whether it was in order for a Minister to converse to the officials in the Officers' Gallery while a Member was speaking the Chair observed that it was in order for a Minister to consult officials and it was already allowed in the past. There is nothing wrong.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய கவனத்திற்கு நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் நாஞ்சிலார் அவர்கள் பேசும்போது, டோக்யோ மணி, இன்னும் இருவர் என்று தங்கசாமி கொலையைப் பற்றிச் சொன்னார்கள். அந்த மூவரும் கைது செய்யப்படவில்லை, வெளியே உலாவிக் கொண்டு இருக்க விடப்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அவையினுடைய குறிப்பிலே ஏறவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன் ; அந்த மூவரும் கைது செய்யப்பட்டு, ஜாமீனிலே வெளியே வந்தார்கள். குற்றவாளிகள் ஜாமீனிலே வெளியே வரமுடியாது என்று சொல்வதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடையாது. அதிலே ஒரு குற்றவாளி கொலை செய்யப்பட்டுவிட்டார் என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இதற்கு முன்பு கூட மாண்புமிகு எனது மதிப்பிற்குரிய நாஞ்சிலார் அவர்கள் அறிவார்கள் : குற்றம் சாட்டப்பட்டவர்களே, குற்றவாளிகள் ஆவதில்லை. அவரும் அறிவார். நானும் அறிவேன். இங்கே சாட்சியமாக, வீர பாண்டியத்தினுடைய தியாகத் திலகம் நம்முடைய சுகுமாரி னுடைய சகோதரி இருக்கிறார். அவரைக் கொன்றவர்களே, வெளியே ஜாமீனிலே விடப்பட்டார்கள் என்பதை உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. கி. மனோகரன் : பிரச்சினை இங்கே சிக்கலாக ஆகி விட்டது. காவல்துறை மானியத்தின் மீது, விவாதம் நடை பெற்றுக் கொண்டிருக்கும்போது, செய்திகளை தெரிந்து கொள் வதற்காக, பதில் சொல்கிறபோது, அதற்குப் பதில் சொல்வதற் காக இருக்கிற நாவலர் அவர்கள் எழுந்து சென்று கேட்டால் அது பொருத்தமாக இருக்காதா என்ற உணர்வின் அடிப்படையில் இந்தக் கேள்வி எழுந்ததே தவிர, வேறு அல்ல என்பதை கொஞ்சம் கோபமாக இருக்கிற எனது அருமை மாண்புமிகு ப. உ. ச. அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். (குறுக்கீடு)

தயவுசெய்து என்னைப் பேச விடுங்கள். இரண்டாவதாக, இங்கே, பேசப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இங்கே வீரபாண்டி ஆறுமுகத்தைப் பற்றி நமது மாண்புமிகு அமைச்சர் கே. ஏ. கே. எடுத்துச் சொன்னார்கள். வீரபாண்டி ஆறுமுகம் சட்டப்படி குற்றச்சாட்டுகளுக்கு நீதிமன்றம் சென்று, நீதிமன்றத்திலே வழக்கறிஞரை வைத்து வாதாடி அவர் வெற்றி பெற்று வெளியே வந்திருக்கிறார் என்பதை மட்டும் இந்த மன்றத் திற்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்படி குற்றவாளி சட்டத் தின் சந்துபொந்துகளினால் விடுதலை பெற்றிருக்கலாம். தர்ம தண்டனை அளிக்கப்பட்டு, எனது அருமைச் சகோதரி இங்கே அமைச்சராக அமர்ந்திருக்கிறார்.

திரு. கி. மனோகரன் : சட்டத்தைப் பற்றியும் பேசுகிறார் கள் ; தர்மத்தைப் பற்றியும் பேசுகிறார்கள். நான் சட்டத்தைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Law and Justice are different.

திரு. கி. மனோகரன் : Thank you very much. இங்கே வாகன வசதிகளைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. காவல் துறையினருக்கு நல்ல வாகன வசதிகள் தரப்பட்டிருக்கின்றன என்று நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனது கொள்கைக் குறிப்பிலே விளக்கியிருக்கிறார்கள். அதை இந்த அவைக்கு





நான் படித்துக் காட்டுவதில் பெருமைப்படுகிறேன். ''அரசுக்கும் மக்களுக்குமிடையே நல்லெண்ணத்தை வளர்க்கவும் சமுதா யத்தில் பல பிரிவினருக்குமிடையே ஒற்றுமை ஓங்கச் செய்யவும் காவல் துறை அயராது அரும்பாடுபட்டு வருகிறது. காவல் துறையினர் தங்களுடைய பெரும் பொறுப்புக்களை சிறந்த முறையில் நிறைவேற்ற வழிவகை செய்யும் பொருட்டு, வேக மாகச் செல்வதற்கான வாகன வசதிகளையும், விரைந்து செய லாற்ற நல்ல செய்தித் தொடர்பு அமைப்பினையும், தமிழக அரசு, காவல் துறையினருக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது". இதை நீங்கள் நம்பச் சொல்கிறீர்களா என்பதைப் பணிவோடு தெரி வித்துக் கொள்ள விரும்புகிறேன். உங்கள் அனுமதியைப் பெற்று, 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'—லே வந்துள்ள சின்ன குறிப்பை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

"In the absence of proper maintained vehicles Senior Police Officials themselves cut a sorry figure in public. The last occasion witnessed by public was last month when Partymen were evicted from the D.M.K. Office." என்று வந்திருக்கிறது.

இங்கே நிறுத்தப்பட்ட பஸ்களில் திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் ஏற்றப்பட்டார்கள். ஆனால், பஸ்கள் நகர மறுத்தன, அவ்வளவு கண்டிஷனில் பஸ்கள் இருந்தன என்பதற்கு இதைவிட ஆதாரம் தேவைதானா என்பதைத் தெரிந்துக் கொள்ள விரும்பு கிறேன்.

போட்டிக்குப் போட்டி என்ற அளவிலே இல்லாமல், ஏச்சுக்கு ஏச்சு என்ற அளவிலே இல்லாமல், பேச்சுக்கு பேச்சு என்ற அள விலே இல்லாமல் விஷயங்கள் நடைபெற வேண்டுமென்ற நல்ல எண்ணத்திலே இதைப் பேசுகிறேனே தவிர, உருப்படியான வாகனங்கள் இன்றைக்கு காவல் துறையினருக்கு இல்லை என்பதை அழுத்தம் திருத்தமாக இந்த அவையில் தெரிவிக்க விரும்புகிறேன்.

பிறகு கிரைம் சிட்சுவேஷனைப் பற்றி நான் சொல்லத் தேவையில்லை. எந்த அளவிற்கு தமிழக அரசு அல்லது தமிழகத் தில் இந்தத் துறை கீழே இறங்கிக் கொண்டிருக்கிறது என்பதைப் பற்றி இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை, 17 ஆம் தேதி தலைப்பிட்டு தந்திருக்கின்ற புள்ளிவிவரங்களை கொஞ்சம் படித்துக்காட்ட விரும்புகிறேன், அதுவும் உங்கள் அனுமதியோடு,

"According to available statistics 235 cases of counterfeiting were reported, but only 12 were dected. Similarly, under Cheating 1352 cases were reported and 231 were detected. Criminal breach of trust—1259 cases were reported and 234 were detected. Kidnapping and abduction—660 cases were reported and 138 were detected. And Culpable homicide—31 cases were reported and 10 were detected."

[திரு. கி. மனோகரன்] [1985 ஜூலை 10

இது கிரைம் நிலைமை. தமிழகத்திலே மிகத் தீவிரமாக குற்றங்களைக் கண்டு பிடிக்கிறார்கள் காவல் துறையைச் சார்ந்தவர்கள் என்று குறிப்பிடுகிறார்களே, அவர்களின் கவனத்திற்கு நான் இதை வைக்க விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு, மிகவும் வேதனையோடு தெரிவிக்க விரும்புவது, இன்றைய தேவை, காவல் துறையைப் பொறுத்த வரையில், Streamlining is a must. Coordination is not in existance.

(முற்பகல் 9-30)

உயர் அதிகாரிகளுக்கும் கீழே இருக்கிற அதிகாரிகளுக்கும் இடையே இருக்க வேண்டிய நல்லுணர்வு, நல்லெண்ணம், பிணைப்பு, இணைப்பு இருக்கிறதா என்றால் எனக்குக் கிடைத்த தகவலின்படி இல்லை என்பதை இந்த மன்றத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். நான் சொல்வதற்காக யாரும் வருத்தப்படக் கூடாது. எவ்வளவு கேவலமான அளவுக்கு உயர்தர அதிகாரிகள் நடந்து கொள்கிறார்கள் என்பதற்கும் என்னிடம் ஆதாரங்கள் உள்ளன. நான் அவருடைய பெயரைச் சொல்ல விரும்பவில்லை. ஒரு டி.ஐ.ஜி. இன்றைக்கு ஐ.ஜி. யாக உயர்த்தப்பட்டிருக்கிறார். அவர் டி.ஐ.ஜி.யாக இருந்தபோது அவர்மீது விஜிலன்ஸ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. அந்தக் காரணத்தினால் அவருக்குத் தண்டனை தரவேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் விரும்பி அவரைத் தரம் தாழ்த்தவேண்டுமென்று விரும்பி ஐ.ஜி.யாகத் தரைமட்டமாக்கினார்கள். அப்படித் தரைமட்டமாக்கியதோடு அவர் திருப்திப்படாமல் அவரை விஜிலன்ஸ் அதிகாரியாக தமிழ்நாடு எலக்ட்ரிசிடி போர்ட்டில் போட்டு மீண்டும் முதலமைச்சர் அவரைக் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள் என்ற செய்தியை நான் இந்த மாமன்றத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். நான் அவர் பெயரைத் தெரிவிக்க விரும்பவில்லை. பெயரைச் சொல்ல வேண்டுமென்று இந்த மன்றத்திலே யாராவது கேட்பார்களானால் நான் பெயரைச் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். இதனுடைய மொரேல் கெட்டுப்போனால் நாடு உருப்படியாக இருக்காது. **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **

என்பதான குற்றச்சாட்டுகள் உட்பட இதுபற்றி நடந்த விவாதம் அனைத்தும் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்பெறுகின்றன.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இப்படி நீக்கப்படுவது முறை அல்ல.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க (முற்பகல் 9-32—9-40) அகற்றப்பெற்றது.



1985 ஜூலை 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓரலாக ஸ்வீப்பிங்காகச் சொல்லிவிட்டுப் போவதென்றால், It is not proper. You give me evidence, I will allow after seeing it. தம்முடைய குற்றச்சாட்டுக்கான ஆதாரத்தைக் கொடுக்கட்டும் இங்கே அனுமதிக்கிறேன்.

திரு. க. அன்பழகன் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. I have to protect the people even outside. The officer is also a citizen of India.

[முற்பகல் 9-40].

திரு. கி. மனோகரன் : நான் எதற்காக இங்கே எடுத்து வைக்கிறேன் என்றால் மாண்புமிகு முதலமைச்சரிடம் கொடுக்கலாம், பெயரைச் சொல்லலாம், பரிகாரம் காணலாம் என்பதற்காக அவை முன்னால் பல கருத்துக்களை எடுத்து வைக்கிறேன். இந்த போலீஸ் மானியத்தில் பேசும்போது முதலமைச்சர் பத்து நிமிடமாவது இங்கே இருப்பார் என்று நினைத்தேன். அவர் இருந்தால் அவரிடமே கொடுத்து பரிகாரம் காணவேண்டுமென்று கேட்டிருப்பேன். இப்படிச் சொல்வதன் மூலம் முன்னவர் மூலம் முதலமைச்சருக்குச் சென்று அதன் மூலம் இதற்கு ஒரு பரிகாரம் கிடைக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில்தான் பேசுகிறேன். ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவரைப் பற்றி குறிப்பிட்ட செய்திகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. கி. மனோகரன் : நான் சில உணர்வுகளை மட்டும் இந்த அவையில் எடுத்துவைக்க விரும்புகிறேன். காவல் துறையை திருத்த வேண்டும். Cleansing operation is necessary. அதற்காக இந்தக் கருத்தைச் சொல்கிறேனே தவிர இந்தக் காவல் துறை அதிகாரிகளின் மனதைப் புண்படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல என்பதை அவை முன்னவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் கேள்விப்பட்டேன். நான் டெல்லியில் இருந்தபோது ஒன்றைத் தெரிந்துகொண்டேன். சௌத் பிளாக், நார்த் பிளாக் என்று அங்கே இருக்கும். சௌத் பிளாக்கில் பிரதமர் இருப்பார் ; நார்த் பிளாக்கில் மற்றவர்கள் இருப்பார்கள். இங்கேயும் அந்த மாதிரி இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. கி. மனோகரன்] [1985 ஜூலை 10

North Block is dominated by Superstar Mr. Rangaswamy I.G.,

South Block is dominated by Kingpin Mr. Mohandas, D.G.P.

அவர்கள் இரண்டு பேர்களும் இணைகிறார்களா? பிணைந்து தான் தங்களுடைய பணிகளை ஆற்றுகிறார்களா என்பதை அருள் கூர்ந்து பார்க்க வேண்டும்.

சௌத் பிளாக்கிற்கு ஒரு அதிகாரி சென்று, பின்னால் நார்த் பிளாக்கிற்குச் சென்றால் அவர்மீது நார்த் பிளாக்கில் இருப்பவர் சந்தேகப்படுகிறார். அதேமாதிரி அங்கே சென்றுவிட்டு, இங்கே சென்றால் இவருக்குச் சந்தேகம் வருகிறது. இந்தச் சந்தேகம் காவல் துறையில் இருக்கலாமா? இந்தப் பொறாமை, பொச்சரிப்பு காவல் துறையில் இருக்கலாமா? சில ஐ ஜி.-களுக்கு ஒரு "சாடிஸ்டிக் பிளஷர்" இருக்கிறது. தான் ஏதாவது சொல்லி, கேட்கவில்லை என்று அவர் நினைத்து, அதற்கு என்ன செய்கிறார் என்றால் "நான் சொன்னதை அவர் கேட்கவில்லை, ஆகையால் அவரை இங்கே வைப்பது தவறு", என்று கருதி 300 கிலோ மீட்டர், 400 கிலோ மீட்டர் தூரத்திற்கு ட்ரான்ஸ் ஃபர் செய்கிறார். இந்த ட்ரான்ஸ் ஃபர் பிளஷர் சில ஐ.ஜி.களுக்கு இருக்கிறது. இதை நான் நேரடியாகவே உணருகிறேன். ஏன் இந்த எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள்? Constables are not slaves. சப் இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் ஸ்லேவ்ஸ் அல்ல. இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் ஸ்லேவ்ஸ் அல்ல. தாங்களே மனதில் ஒன்றை நினைத்துக்கொண்டு, ஒருவரைப் பிடிக்கவில்லை என்றால் ஒருவரை ட்ரான்ஸ்ஃபர் செய்துவிட்டு, பிளஷர் அடையும் நிலைக்குப் போய்விடுகிறார்கள்.

நேஷனல் போலீஸ் சர்வீஸ் கமிஷனிலே இதைப்பற்றி தெரிவித்திருக்கிறார்கள். அதை உயர் அதிகாரிகள் படித்து இருப்பார்கள் நிச்சயமாக. படித்து என்ன பலன்? மறந்திருக்கக் கூடும். மறந்ததை நினைவுபடுத்த வேண்டும் என்பது என்னுடைய ஆசை, என்னுடைய கடமை என்று கருதி நான் அதை இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன்.

The pressure on the Police Force is of a variety of forms ranging from promise of career advancement and preferential treatment in service matters; if the demand is not yielded to, there is the threat of drastic penal action and disfavoured treatment in service matters if the pressure is resisted. While it is not possible to punish a Police Officer with a statutory punishment under disciplinary and appeal rules with out adiquate grounds and following the prescribed procedure it is very easy to subject him to administrative action by way of transfer or suspension on the basis of an alleged complaint taken up for enquiry. While suspension act. is a humiliating factor the transfer act is a severe economic blow and destructi on of the Police Officers' family and children's education, etc.



1985 ஜூலை 10] [திரு. கி. மனோகரன்]

(முற்பகல் 9-50)

இப்படி ட்ரான்ஸ்ஃபர் செய்கின்ற Sadist'ic pleasure படைத்த ஐ.ஜி-க்கள் இருக்கிறார்கள். அதை நான் திட்டவட்டமாக நிரூபிக்க முடியும். அவர்களின் பெயர்களை நான் சொல்ல விரும்பவில்லை. அவர்கள் திருந்தினால் சரி. மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் பன்னிப் பன்னிச் சொல்கிறேன். நீங்கள் இந்த விஷயத்தில் அதிகமான அக்கறை எடுத்து அவர்களை ஒழுங்குபடுத்தினாலொழிய நிச்சயமாகக் காவல் துறை திருந்தாது. காவல் துறையின் மூலம் நீங்கள் எதிர்பார்க்கின்ற பலனைப் பெற முடியாது என்பதை இந்த நேரத்தில் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து எல்லோரும் எடுத்துச் சொன்னதுபோல் சப்-இன்ஸ்பெக்டர் தேர்வு 1979-ல் கடைசியாக நடைபெற்று முடிந்தது. நான் கேட்கிறேன், இது வரையில் அந்த சப்-இன்ஸ்பெக்டர் தேர்வு நடைபெற்றிருக்கின்றதா? அப்படி நடைபெறவில்லை. ஏன் நடைபெறவில்லை? ஏறத்தாழ 3,000 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதைப்போல்தான் கான்ஸ்டபிள்கள் இருக்கிறார்கள். அவர்களும் 10,000 பேர், 15,000 பேர் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். மூன்று முறை அதற்குரிய முயற்சிகள் நடந்தன. மிகவும் ஆபாசமான ஒரு விஷயத்தை நான் பத்திரிகையில் படித்ததைச் சொல்கிறேன்.

இராஜரத்தினம் ஸ்டேடியத்தில் சேமியானா போட்டு வந்திருந்தவர்களின் உயரத்தையும் அவர்களது எடையையும் பார்த்து, அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு, அவர்களில் சிலர் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்குப் பிறகு அது கைவிடப்பட்ட கதை ஊரறிந்த கதை. நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புவது—வேடிக்கை அல்ல—மிகக் கேவலமான நிகழ்ச்சி நடந்திருக்கிறது. சேமியானா போட்ட கான்ட்ராக்டர் ஒருவருக்கு அதற்கான பணம் தரப்படவில்லை என்பதற்காகக் கமிஷனரையே அவர் மிரட்டியிருக்கிறார். 'பணம் தருகிறாயா அல்லது நான் கோர்ட்டுக்குச் செல்லவா? என்று மிரட்டியிருக்கிறார். அதற்குப் பிறகு செய்தி பத்திரிகையில்வந்தது. Somehow it was settled எப்படியோ அது ஒருவகையாகத் தீர்க்கப்பெற்றது. மூன்று தடவை நடைபெற்றது. மூன்று தடவை காவல் துறையைச் சார்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. காவலர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. எனக்கு மெத்த மகிழ்ச்சி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்து உட்கார்ந்திருக்கிறார்கள். நியாயமாக இங்கே இருக்கவேண்டிய அவர் வந்து உட்கார்ந்திருக்கின்ற காரணத்தால் இனி முன்னவரிடம் பேசிப் பயன் இல்லை. முதல்வர் அவர்களிடத்தில் பேசிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.

[திரு. கி. மனோகரன்] [1985 ஜூலை 10

திரு. கி. மனோகரன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னுடைய பேச்சைக் கேட்பதற்காகவே வந்திருக்கிறார்கள் என் பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வகையில் ஆதாரங் கள் அனைத்தையும் நான் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களிடம் தருகிறேன். நீங்கள் அதைத் தயவுசெய்து கவனி யுங்கள். ** என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் சே. பி. இராமலிங்கம் : ** என்பது தேவையில்லாத ஒன்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்று சொல்லப்பட்டது அவைக்குறிப்பிலே இந்ருது நீக்கப்படுகிறது.

திரு. கி. மனோகரன் : இது சாதாரணமாகச் சொல்லப் படுகின்ற ஒன்றுதான்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன் னார்கள். அப்படி என்றால் ** தயவுசெய்து கொடுக்க வேண் டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு).

திரு. கி. மனோகரன் : இது ஒரு பெரிய விட்டோ? தமிழ் நாடு முழுவதும் இன்றைக்கு ஏராளமான நிலங்கள் காவல் துறை யினருக்குக் கட்டிடம் கட்டிக் கொடுப்பதற்காகக் கையடக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர் களைப் பார்த்து கேட்கிறேன் எங்கே கட்டிடம் கட்டப்பட்டி ருக்கின்றது? கட்டப்பட்டிருக்கின்றன என்று அவர் சொன்னால் கட்டப்படவில்லை என்பதற்கான ஆதாரங்கள் உண்டு. ஒரே ஒரு ஆதாரத்தை மட்டும் இந்த அவைக்குக் குறிப்பாக மாண்பு மிகு முதலமைச்சரின் கவனத்திற்கு நான் வைக்க விரும்புகிறேன். இது Report of the Comptroller and Auditor-General of India.

அதிலே Creation of Commissioners Office at Madurai and Coimbatore. The provision was for the introduction of metropolitan police system in Madurai and Coimbatore. The Special Officer appointed in June 1982 by the Government to formualte the scheme submitted his proposal in December 1982. Two Officers posted in January 1983 for scrutiny of those porposals gave a report in April 1983. Consequently the scheme was not implemented during the year resulting in surrender of the provision of Rs. 1,49,70,000.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற் றப்பெற்றது.



1985 ஜூலை 10] [திரு. கி. மனோகரன்]

எடுக்கப்பட்ட தொகை ரூ. 1 கோடியே 50 லட்சம். சரண்டர் செய்யப்பட்ட தொகை எவ்வளவு? செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 30,000. கட்டப்பட்ட கட்டிடங்கள் இருக்கின்றனவா? இல்லையா? இதுவரையில் ஏராளமான நிலங்களை கையகப் படுத்தி இருக்கிறீர்கள். கையடக்கம் செய்யப்பட்ட அந்த நிலங் களை.....(குறுக்கீடு)

திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு தலைவர் அவர் களே, மாண்புமிகு நாஞ்சிலார் அவர்கள் காவல் துறைக்குக் கட்டி டங்கள் கட்டப் பட்டு இருக்கின்றன என்று கொள்கை குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றனவே, எங்கே என்று கேட்டிருக்கிறார் கள். அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சொல் கிறேன், திருச்சி மாவட்டம் திருவரம்பூர் தொகுதியில் நாவல் பட்டி என்ற கிராமத்திற்குப் பக்கத்தில் பல நூற்றுக்கணக்கான கட்டிடங்கள் கட்டப்பட்டு, அண்ணா பவள விழாவின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் அவற்றிற்கான சாவி ஒப்படைக்கப்பட்டு, பெரும் விழா எடுக்கப்பட்டது.

திரு. கி. மனோகரன் : நான் ஆங்கிலத்தில் படித்ததே தவறு போல் இருக்கிறது. (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு 1/2 மணி நேரம் தான் ஒதுக்கப்பட்டது, 56 நிமிடங்கள் முடிந்துவிட்டன. இன்டரப்ஷன் என்று 20 நிமிடங்கள் வைத்துக் கொண்டாலும் நேரம் ஆகிவிட்டது. தயவுசெய்து சீக்கிரமாக முடித்துக் கொள் ளுங்கள்.

திரு. கி. மனோகரன் : கடைசியாக நான் பேசிய பேச்சில் ஏதாவது கடுமையான சொற்கள் இருந்திருந்தால் தயவுசெய்து அவைகளைப் பொருட்படுத்தாமல், உணர்வுகளை மட்டும் ஏற்று மதித்து, அதன்படி ஒழுங்குபடுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இறுதியாக என் பேச்சை முடிக்கும் முன், அதிகாரிகளுக் கும் மற்றவர்களுக்கும் இந்தக் கருத்தைப் படித்து முடிக்கிறேன்.

Our authority under the law is strictly defined and we are personally liable for the consequeces whenever we invoke it. We play no part in determining the guilt or punishment and our accountability to the Courts, both Criminal and Civil, to local Police Authorities, to Parliament and to Public opinion is unsurpassed anywhere else in the world In the legal and constitutional fram work in which society requires us to enforce the laws enacted by its elected representatives; the most essessntial weapons in our armoury are not fire arms, water cannon, tear gas or rubber bullets, but the confidence and support of the prople on whose behalf we act. The confidence and the support depends not only on the factors I have already mentioned

[திரு. கி. மனோகரன்] [1985 ஜூலை 10

but on our personal and collective integrity and in particular on our
long tradition of constitutional freedom from political interference, in
our operational role என்று இந்த கருத்தைச் சொன்னவர்—Sir
Robert Mark, Ex. Chief Commissioner of Police, London. இந்தக்
கருத்து அதிகாரிகளின் கவனத்தைக் கவரட்டும், முதல்வர்
அவர்களின் சிந்தனையைக் கிளறட்டும். அவையினரின் உணர்
வையும் தொடட்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி
அமர்கிறேன்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கோரிக்கை எண். 15, காவல் துறை மற்றும் கோரிக்
கை எண். 16, தீயணைப்பு பணிகள் மீது என்னுடைய கருத்துக்
களை இம்மாமன்றத்திலே சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''குடிகுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்''

என்ற திருக்குறளின் வாக்கியங்களை உதாரணம் காட்டி, காவல்
துறையினுடைய மானியக் கோரிக்கைகளுக்கான குறிப்புகளை
நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமர்ப்பித்திருக்கி
றார்கள்.

இம்மாமன்றத்திலே பேசிய பலர் உட்பட குற்றம் கடியாத
தினாலேயே வடுவாகியிருக்கிறது என்பதை நான் உங்கள் கவ
னத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அரசு துறைகளில், மக்
கள் தொடற்பிற்கும், அரசின் கவனத்திற்கும் அன்றாடம் உள்
ளாக்கப்படுகின்ற துறைகளில் மிக முக்கியமானது, முதன்மை
யானது காவல் துறை. மாண்புமிகு அமைச்சரவர்கள் காலையில்
விழித்து எழுந்தவுடன், தங்கள் மனைவி மக்கள் முகங்களிலே
மூழிக்காவிட்டாலும் கூட, காவல் துறையைச் சார்ந்தவர்களுடைய
முகங்களிலே விழிக்காமல் இருக்க மாட்டார்கள். அதன் காரண
மாகக் கூட அவர்களுக்குக் கொஞ்சம் அதிகமான சலுகைகள் அளிக்
கப்பட்டிருந்தாலும் கூட, அது சிறப்புக்குரியது என்றுதான் நான்
குறிப்பிடுகிறேன். அது மட்டுமின்றி, ஆண்டுதோறும் குற்றங்கள்
நடப்பதைத் தடுக்கவும், நடந்த குற்றங்களைக் கண்டு பிடிப்ப
தற்கும் நவீன முறையில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தும்
மூழுக்க முழுக்க காவல் துறை நவீன மயமாக்கப்பட்டு வருகிறது.
இருந்தாலும் கூட குற்றங்கள் பெருமளவில் நடவாது தடுக்கப்
பட்டதா என்றால் இல்லை. நடந்து விட்ட குற்றங்கள் பெரு
மளவிற்குக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதா என்றால் அதுவும்
இல்லை. இங்கே நான் கூறுகின்ற இந்தக் கணக்கு நம்முடைய
மாண்புமிகு முதல்வர் அவர்கள் தந்திருக்கிற கணக்கு என்பதைத்
தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒவ்வொரு ஆண்
டும் நடந்த குற்றங்களில் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களை
நீக்கி, மீதியை மறு ஆண்டு நடக்கிற குற்றங்களோடு சேர்த்து



1985 ஜூலை 10] [திருமதி டி. யசோதா]

கணக்கிட்டுப் பார்ப்போமேயானால் காவல் துறை எந்த அள
விற்குச் செயல்பட்டிருக்கிறது என்பதை அறிவதற்கு வாய்ப்பாக
இருக்கும்.

[முற்பகல் 10-10]

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் ஆதாயத்திற்
காக தமிழகத்தில் நடைபெற்ற கொலைகள் 1980-ல் 53;
அதில் கண்டு பிடித்தவை 28; கண்டு பிடிக்க வேண்டியவை
25 ஆகும். 1981-ம் ஆண்டில் ஆதாயத்திற்காக நடைபெற்ற
கொலைகள் 66; அதில் 35 கண்டுபிடிக்கப்பட்டன; 31 கண்டு
பிடிக்கப்படவில்லை. ஆகவே இந்த இரு ஆண்டுகளில் சேர்த்துப்
பார்த்தால் 56 கொலைகள் கண்டுபிடிக்கப்படவில்லை. 1983-ம்
ஆண்டில் நடைபெற்ற 69 கொலைகளில் 29 கண்டுபிடிக்கப்
பட்டன. 40 கொலைகள் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆகவே
இதனையும் சென்ற ஆண்டுகளில் கண்டுபிடிக்க வேண்டியவை
களோடு சேர்த்தால் 124 கொலைகள் கண்டுபிடிக்கப்படவில்லை.
1984-ஆம் ஆண்டில் 62 கொலைகள் நடந்திருக்கின்றன. அதில்
42 கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. 20 கண்டு பிடிக்கப்பட
வில்லை. மொத்தமாக ஐந்து ஆண்டுகளில் 1980-ம் ஆண்டு
முதல் 1984 வரையில் 144 கொலைகள் கண்டுபிடிக்கப்பட
வில்லை என்பது கொள்கைக் குறிப்பிலே அரசு தந்திருக்கிற
விவரங்களிலிருந்து தெரிகிறது. வரவிற்கு வராத கடனை எல்லாம்
'ரைட் ஆப் செய்வதைப் போல கண்டுபிடிக்கப்படாத வழக்கு
களை எல்லாம் ரைட் ஆப் செய்வதற்குத் துறை தயாராக இருக்
கிறதென்று நான் சொல்ல விரும்பவில்லை. குற்றங்களை விசா
ரித்துக் கண்டுபிடிக்க காவல் துறைக்கு அரசு இவ்வளவு நவீன
வசதிகளை ஏற்படுத்தியும் கூட, பல சலுகைகளை வழங்கியும்
கூட குற்றங்களை கண்டுபிடிப்பதில் ஒரு சுணக்க நிலை இருக்கிறது.
இந்த நிலையை மாற்றுவதற்கு துறை முன்வரவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே கொள்ளை, வழிப்பறி, வீடு உடைப்பு,
பெரிய திருட்டு, சிறிய திருட்டு, கால்நடைத் திருட்டு ஆகிய
அனைத்துக் குற்றங்களிலும் ஒவ்வொரு ஆண்டிலும் பாதிக்கு
மேல் கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே இந்த நிலையில் இப்
படி நடக்கிற குற்றங்களைப் பார்த்தால், குற்றவாளிகள் யாருக்
கும் பயந்ததாகத் தெரியவில்லை. மிகப் பெரிய வசதி படைத்
தவர்கள் போலீசிற்கு பயப்படுவதில்லை. அடித்தளத்தில் இருப்
பவர்களுக்கும் போலிசிடம் பயமில்லை. அவர்கள் இது
போன்ற குற்றங்களைச் செய்வதற்கு அஞ்சுவது கிடையாது.
ஆனால் நடுத்தர மக்கள்தான் போலீசைக் கண்டு அஞ்சுகிற
நிலைமை இருக்கிறது. காரணம் பணக்காரர்கள் தங்களுடைய
வசதியை வைத்து எப்படியாவது போலீசை சரிக்கட்டி விடலா
மென்று இருக்கிறார்கள். அடித்தளத்தில் இருக்கிறவர்கட்கு
போலீஸ்காரர்கள் மிக நெருங்கிய நண்பர்களாக இருக்கிற

காரணத்தால் அவர்களுக்கும் அந்த அச்ச உணர்வு இல்லாமல் இருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், பெண் ஒருத்தி தனியாக பூரண நகைகளோடு அழகாக கள்வர் பயமின்றி, காமுகர் பயமின்றி நட்ட நடு இரவிலே என்றைக்குச் சென்று தான் சேர வேண்டிய இடத்திற்குப் போய் சேருகிறாளோ அன்றைக்குத், தான் இராம ராஜ்யம் உருவாகும் என்று மகாத்மா காந்தியடிகள் சொல்லி இருக்கிறார்கள். அன்றைக்கு இராம ராஜ்யம் என்றால் இராமன் ஆளுகின்ற ராஜ்யம் என்பது பொருள், இன்றைக்கும் இராமன் தான் ஆண்டு கொண்டிருக்கிறார். காவல் துறையினுடைய முழுமையான ஒத்துழைப்பு இருந்தால் நிச்சயமாக இராம ராஜ்யத்தை நம்மால் உருவாக்க முடியுமென்பதை குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்து மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். தாய்க்குலத்தின் மீது அதிகப்படியான பற்றை வைத்திருக்கிறீர்கள். அந்தத் தாய்க்குலத்தினுடைய கற்பே கேள்விக் குறியாக ஆக்கப்பட்டிருக்கிறது. வேலியே இறங்கி வந்து பயிரை மேய்வதைப்போல விழிகளுக்கு இமைகளே வேலாக மாறுகிற சூழ்நிலையைப் போல நிலைமைகள் இன்றைக்குத் தமிழகத்தில் இருந்து வருகின்றன. அரசின் கவனத்திற்குக் கூட வந்திருக்குமென்று நினைக்கிறேன். நாங்குநேரி காவல் நிலைய ஆய்வாளர் மங்கள தனராஜ் அவர்கள் விசாரணைக்கு வரச்சொல்லி ஒரு பெண்ணை ஏமாற்றி பலாத்காரமாக அவளின் சம்மதமின்றி 7-6-1984 அன்று கற்பழித்தது குறித்து விவரம் வந்திருக்குமென்று நினைக்கிறேன். அதனுடைய நகலை எனக்கு அனுப்பி இருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் சுப்புலட்சுமி என்ற அந்தப் பெண்ணின் கணவனுக்கும் அவளின் சகோதரிக்கும் ஒரு தகராறு ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. பா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில்., அந்தக் காவல் துறை அதிகாரி மீது வழக்கு தொடரப்பட்டு, அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து, இப்போது வழக்கிலே இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி டி. யசோதா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் வழக்குக்கு உள்ளே செல்லவில்லை. இந்தச் சம்பவத்தைப் பற்றி நம்முடைய முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அவர்கள் மீது வழக்கு இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் நான் சொல்வது இன்றைக்கு மறுபடியும் அவர்கள் பொறுப்புக்கு வந்துவிட்டார்கள். அந்த சுப்புலட்சுமியினுடைய கணவருக்கும், அவருடைய தங்கைக்கும் ஏற்பட்ட வீட்டுத் தகராறிலே அந்தச் சகோதரி, அந்த தனலட்சுமியினுடைய நாத்தனார் என்று சொல்லக்கூடி



யவர் நேராக போய் இன்ஸ்பெக்டர் மங்களதனராஜ் என்பவரைச் சந்தித்து, விவரத்தைச் சொல்ல, இன்ஸ்பெக்டர் மங்களதனராஜ் அந்தப் பெண்ணை வரச் சொல்லி, அந்த சுப்புலட்சுமியினுடைய கணவரையும் வரச்சொல்லி, கடைசியில் அந்த கணவரைப் பார்த்து, நீ, வெளியே போய் இரு, இங்கே, இருக்காதே, நான் அவர்களிடத்திலே தனியாகச் சென்று விசாரிக்க வேண்டும் நான் உன்னுடைய சகோதரியை வரவழைக்கச் சொல்லி இருக்கிறேன், அவர்கள் இரண்டு பேரையும் வைத்து பேசி விட்டால். இந்தப் பிரச்சினை முடிந்துவிடும் என்று சொல்ல, அந்தக் கணவரும் இன்ஸ்பெக்டரை நம்பிவிட்டு செல்ல, போலீஸ் ஸ்டேசனும், இந்த இன்ஸ்பெக்டருடைய வீடும் ஒன்றாக இருந்த காரணத்தாலே, இரவு வரையிலும்அவர்கள் வராத காரணத்தால் அந்தப் பெண் பயந்து, நான் போகிறேன் என்று சொன்னபோது, அவர்கள் வந்துவிடுவார்கள் என்று சொல்லி, கடைசியில் வராமல், அந்த வீட்டிலேயேவைத்து கற்பழித்து இருக்கின்ற கொடுமை மிக்கச் சம்பவம் நடைபெற்று இருக்கிறது.

இந்தச் சம்பவத்தைக் குறித்து அவர்கள் எல்லா இடங்களிலும் புகார்கள் கொடுத்து இருக்கிறார்கள். அதுபற்றிய நகல்தான் இது. புகார் கொடுத்து இன்றைக்கு வழக்கு மன்றத்திலே அது இருக்கிறது என்று சொன்னார்கள். வழக்கு தீர்க்கப்பட்டதா இல்லையா? என்பது தெரியாது. அவர் மறுபடியும் பணிக்கு வந்து சேர்ந்து இருக்கிறார் என்பதை நினைக்கும்போது, இதை நிச்சயமாக நீங்கள் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நீங்களே தாய்க்குலத்திற்குப் பாதுகாப்பு கொடுக்கவில்லை என்றால், நிச்சயமாக வேறு யாராலும் கொடுக்க முடியாது என்ற அந்த நம்பிக்கையின் அடிப்படையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் நான் தங்களுக்கு சொல்லிக் கொள்ள ஆசைப்படுவது எல்லாம், இராமநாதபுரம் மாவட்டத்தில் பத்தநந்தல் என்ற கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்திலே குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், பெண்கள் அங்கே வீடுகளுக்குத் தேவையான விறகுகளை காடுகளிலே சென்று எடுத்து வருவது வழக்கம். அந்த ஊரிலே இருக்கும் பெண்கள் மீன் பிடித்து அவர்களுக்குத் தேவையானவற்றை அவர்கள் எடுத்துக் கொள்வது வழக்கம். இந்தப் பத்தநந்தல் என்ற கிராமத்திற்கும் கடற்கரைக்கும் $1\frac{1}{2}$ கி.மீ. இருக்கிறது. அந்தக் கிராமத்திற்கு இடையிலே இருப்பது கருவேலங்காடு. அந்தக் காட்டிலே அவர்கள் விறகு பொறுக்குவது உண்டு.

நாம் அதற்குக்கூட சில சட்டதிட்டங்களை வைத்திருக்கிறோம். அந்தப் பத்தநந்தல் என்ற கிராமத்திற்குப் பக்கத்திலே இருக்கிற கடற்கரையிலே மீன்கள் பிடிப்பதற்காக என்று ஒரு கூட்டம் வருகிறது. அந்தக் கூட்டம் சமுதாயக் கேடுகளை விளைவிக்கின்ற மிகப் பயங்கரமான கூட்டம். அந்தக் கூட்டம் கரு

வேல மரங்களை வெட்டிக் கடலிலே போடுவது உண்டு. அந்தக் கருவேல மரங்கள் கடலில் அழுகியதற்குப் பிறகு, அதைத் திண்பதற்காகப் பல இடங்களிலிருந்தும் மீன்கள் அங்கே ஒன்றாகச் சேர்வது உண்டு. அப்படி ஒன்றாகச் சேருகின்ற நேரத்தில் அவர்கள் நாட்டு வெடி குண்டுகளைக் கடலிலே எறிந்து, அதனால் செத்த மீன்கள் எல்லாம் மேலே மிதக்கின்றபோது, ஒட்டுமொத்தமாக மீன் பிடித்து, மிக அதிகமான மீன்களை அவர்கள் சேகரிப்பது உண்டு. அப்படிச் சேகரித்த அந்த மீன்களை அவர்கள் சட்டத்திற்குப் புறம்பான வகையில் மார்க்கெட்டிலே விற்க முடியாது என்ற காரணத்தால், அந்தக் கருவேல காட்டுக்குள்ளேயே அந்த வியாபாரத்தை நடத்துவது உண்டு. அந்தக் கருவேலங்காட்டிலே இப்படி மீன் வியாபாரம் நடைபெறுகிற காரணத்தால், பல பகுதிகளிலேயிருந்தும், அந்தக் கருவேலங்காட்டுக்குள்ளே வந்து அந்த மீன்களை வாங்கிக் கொண்டு செல்வது பலருடைய வழக்கம். அந்த அடிப்படையிலே அவர்களுக்குக் கிடைக்கின்ற அதிகமான காசை வைத்துக்கொண்டு, சாராயம் குடிப்பதும், அங்கே தவறான காரியங்களை எல்லாம் செய்வதும் வழக்கமான ஒன்றாக இருந்து வருகிறது.

அதேபோல்தான் 30—4—1985 அன்று பஞ்சவர்ணம் என்று சொல்கின்ற அந்தப் பெண், நான்கு குழந்தைகளுக்கு தாய். அவளுடைய கணவன் அரபு நாட்டிற்குச் சென்று இருக்கிறார். அப்படிப்பட்ட நிலைமையில், தன்னுடைய கணவன் பணிமுடிந்து வருகின்றபோது, நல்ல நிலைமைக்கு நாம் வரலாம் என்று எதிர்பார்ப்போடு இருக்கின்ற போது, பஞ்சவர்ணம் என்ற பெண் வீட்டுக்குத் தேவையான விறகு பொறுக்கச் சென்று இருக்கிறார். காலை 10 மணிக்குச் சென்றவர் மாலை 6 மணி வரையிலும் வரவில்லை.

(முற்பகல் 10-10)

என்ன காரியம் என்று சொன்னால் இந்தச் சமுதாய விரோதிகள் கூட்டம் குடித்துவிட்டு கும்மாளம் போட்டுக்கொண்டு இருந்த நிலையில் விறகு பொறுக்குகின்ற அந்த 4 குழந்தைகளுடைய தாயை தாய் என்று பாவிக்காமல் அவளிடத்தில் தவறாக நடந்த பிறகு அவளிடத்தில் உள்ள நகைகளை, செயின், கம்மல், மூக்குத்தி போன்ற பொருட்களை அபகரித்தது மட்டும் அல்லாமல் அந்தத் தாயையும் கொலை செய்து இருக்கிறார்கள். கொலை சம்பவம் நடந்து இருக்கிறது. ஊரார் 4 குழந்தையை விட்டுவிட்டு விறகு பொறுக்கச் சென்றவள் காணவில்லை என்று தேடித் தேடிப் பார்த்து பஞ்சவர்ணத்தினுடைய பிணம் இருக்கிறது என்று போலீஸ் இடத்தில் சொல்லியும் கூட இரவு 8 மணிக்குப் போய் போலீஸ் அந்தப் பிணத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி தீக்கு இரையாக்கிவிட்டார்கள்.





செய்தி கணவனுக்குத் தெரியப்படுத்தப்படுகிறது. அரபு நாட்டில் இருந்து திரும்பி வந்து பார்க்கின்ற அந்த கணவனுக்கு 4 குழந்தைகள்தான் மிச்சம். மனைவி கிடைக்கவில்லை.

இருந்தாலும் கூட இது குறித்து நம்முடைய போலீசார் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதைப் பார்க்கும்போது இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. சமுதாயத்திற்குப் புறம்பாக நடக்கக்கூடியவர்களை, சட்டத்தைத் துச்சமாக மதிப்பவர்களை, சட்டத்தைத் தன் கையில் எடுத்துக்கொண்டு இருப்பவர்களை, வெடிகுண்டு வீசி மீன் பிடிப்பதைத் தடுப்பதற்கு அந்தப் போலீஸ் நிலையம் தயாராக இல்லை. இப்படிப்பட்டப் பயங்கரமான சூழ்நிலையில் பெண்கள் வெளியே நடமாடுவதற்கு கூட அச்சப்படுகின்ற சூழ்நிலை அந்த ஊரில் ஏற்பட்டு இருக்கிறது என்று சொன்னால் அதை போக்க வேண்டிய பொறுப்பு காவல்துறையை சார்ந்து இருக்கிறது என்று இருந்தும்கூட அதை இதுவரையில் கண்டுபிடிக்காமல் புலன் விசாரணை செய்து கொண்டு இருக்கிறோம், புலன் விசாரணை செய்து கொண்டு இருக்கிறோம் என்று சொல்லுவது எப்படி சிறப்பாக இருக்கும்.

நம்முடைய ராமாநாதபுரத்தைச் சேர்ந்த அமைச்சர் மாண்புமிகு இராமசாமி அவர்களிடத்தில் கூட மகஜர் கொடுத்து இருக்கிறார்கள். இருப்பினும்கூட நடவடிக்கை இல்லாத காரணத்தால் இன்றைக்கு அந்த மக்கள் பயந்த சூழ்நிலையிலே நாங்கள் போராட்டம் நடத்தித்தான் இதற்கு முடிவு காணவேண்டும் என்று சொன்னால் அந்தப் போரரட்டத்தை நாங்கள் நடத்துவதற்குந் தயாராக இருக்கிறோம். அதைக் கோட்டைக்கு முன்னால் நாங்கள் நடத்துவதற்கு தயாராக இருக்கிறோம் என்று சொல்லும் நிலைமை எல்லாம் பத்திரிகையில் வந்து இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது நாம் இவ்வளவு திறமையாக, சிறப்பாக இதை நடத்துவதாக சொன்னாலும்கூட ஒரு சிலரால் இது போன்ற சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்படுவதைந் தடுப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் நான் இதை கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அம்மையார் அவர்கள் இங்கே ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அது பத்தநந்தல் கிராமம். அவர் சொன்னது போல் அவருடைய கணவர் அரபு நாட்டில் இருந்தவர் தான். என்னிடம் வந்து முறையிட்டார்கள். நான் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்குத் தெரிவித்து இருக்கிறேன். இதை நான் மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்தநந்தல் கிராமம்தான். அதுபோல மற்றொரு சம்பவத்தை நான் சொல்ல விரும்புகிறேன். சேலம் கிச்சிப் பாளையம் காவல் நிலையம் புகழ் பெற்ற காவல் நிலையம். ஏற்கனவே தெய்வமணி என்ற அரிசன பெண் கொலை செய்யப்படுவதற்கு காரணமாக இருந்த காவல் நிலையம் என்று நம்முடைய அவையாலேயும், நாம் அமைத்த விசாரணைக் குழு வின் தீர்மானப்படியும் தெரிய வந்தது. அந்தக் காவல் நிலையத் திலே மற்றொரு சம்பவம் நடைபெற்று இருக்கிறது.

இந்த சம்பவம் எப்படி என்று சொன்னால், பாண்டு என்று சொல்லுகின்ற பாட்டரி கடை ஓனர். ஆறுமுகம் என்று சொல்லுகின்ற அம்பிகா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மெக்கானிக். இந்த 2 பேரும் நண்பர்கள். அவர்களுக்குத் தங்கவேலு என்ற ஒரு அடியாள். இந்த அடியாளுக்கு 10 குண்டர்கள். இவர்களை வைத்துக்கொண்டு அந்தப் பகுதியில் லாரி வாங்குவதோ, விற் பதோ எதுவாக இருந்தாலும் அவர்கள் மூலமாகத்தான் நடை பெறவேண்டும். வேறு யாராவது அதில் தலையிடுவார்களானால் அவர்களுடைய நிலைமை என்ன என்பது கேள்விக்குறியான ஒன்றுதான். இது போன்று மிகப்பெரிய தனியான சாம்ராஜ்ஜி யத்தை அவர்கள் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள் சேலத்திலே.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆறுமுகம் என்ற ஒருவர் அவுசிங் போர்டில் பெயிண்டராக பணியாற்றுபவர். இந்த ஆறுமுகத் திற்கு ஒரு பெண் இருக்கிறது. அந்தப் பெண்ணை குண்டர் களின் தலைவனாக இருக்கின்ற தங்கவேலு விரும்பினான். ஆனால் ஆறுமுகமோ தான் ஏழையாக இருந்தாலும் தன் பெண்ணை கௌரவமாக திருமணம் செய்துகொடுக்கவேண்டும் என்று விரும்பி அதன் அடிப்படையில் திருமணம் செய்தார். திருமணம் நடந்த அன்று அந்த சாப்பாடு பரிமாறும்போது உணவுப் பொருட்களிலே, சாப்பாட்டிலே மெத்தையின் மேல் இருந்து சாம்பலைத் தூவி முழுமையான உணவை பாழ்படுத் தினான் அந்த தங்கவேலு. அதை கேட்கவே முடியவில்லை. இந்த சூழ்நிலையில் திருமணம் நடந்து 2 மாதங்கள் ஆகிவிட்டது. ஒரு நாள் இந்த பெண்ணினுடைய தந்தை ஆறுமுகம தனியாக வருகின்றபோது வீட்டு வாசலில், அவன் வீட்டு வாசலில் தங்க வேலு பெண்களை வீட்டு வழி மறித்து இருக்கிறான்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆறுமுகம் சொல்லியிருக்கிறான், 'உங்க வீட்டுக்கு போங் கம்மா, ஏன் எங்கள் வீட்டுக்கு வந்து தகராறு பண்ணுகிறீர்கள்' என்று. உடனே தங்கவேலு கோபத்தோடு வந்து, அந்த ஆறு முகத்தைச் சரியாக அடித்திருக்கிறார்.





உடனே அந்த ஆறுமுகம், தலைவர் என்று சொல்கிற அந்த பாக்டரி கடை முதலாளியிடத்திலே, ''மெகானிக்கல்—அம்பிகா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்'' ஓனரிடம் சென்று, 'இதுபோல் உங்களுடைய ஆள் என்னை அடித்துவிட்டான், என்னை இப்படி கொடுமைப்படுத்துகிறான். அவனை நீங்கள் பார்த்து கண்டித்து வையுங்கள்' என்று சொல்லிவிட்டுத் திரும்பும்போது, 'நீ ஓனர் கிட்டேயா சொன்னாய்?' என்று சொல்லி திரும்பவும் அவனை அடித்தபோது, தாங்கமுடியாத அவனும், மகனும், கிச்சிபாளையம் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் இருக்கிறார்கள்.

அங்கே போய் அவர்கள் புகார் கொடுத்து இருக்கிறார்கள். உடனே கிச்சிப்பாளையம் போலீஸ் ஸ்டேஷனிலே இருக்கின்ற அதிகாரிகள், அந்தத் தங்கவேலுவைக் கூப்பிட்டு விசாரித்துக் கொண்டிருக்கிறபோது, ஒரு போன் வருகின்றது. அந்த போன் வந்தவுடனே, பேசிக் கொண்டிருக்கின்ற அந்த ஆய்வாளர் உடனே கேட்கின்றாராம்—'தங்கவேலு யாருய்யா? என்று கேட்கிறாராம். 'நான் தான்' என்று அவன் சொல்ல, 'சரி உனக்குப் போன் பண்ணி இருக்கிறார்கள்' என்று சொல்லி, அவரை அனுப்பிவிட்டார்கள். அதற்குப் பிறகு, அந்த ஆறு முகத்தையும், அவன் மகனையும் போலீஸ் ஸ்டேஷனிலே அடித்து இருக்கிறார்கள்.

ஏற்கனவே, தங்கவேலுவிடத்தில் இரண்டு முறை அடி வாங்கி விட்டு, போலீஸ் நிலையத்திற்கு வந்தவருக்கு, மூன்றாவது முறை யும் பாதுகாக்கவேண்டிய பாதுகாவலர்களாலேயே தாக்கப்பட்ட சூழ்நிலையில், தாங்கமுடியாத நிலையில், மாவட்ட அதிகாரி யிடத்தில் புகார் கொடுப்பதற்கு அவர் சென்று இருக்கிறார். மாவட்ட அதிகாரியைச் சந்திக்க முடியவில்லை.

உடனே வெறுப்படைந்து போய், மாவட்ட அதிகாரியையும் சந்திக்க முடியவில்லையே, நான் போனால் மறுபடியும் தங்க வேலு நம்மை உயிரோடு வைக்கமாட்டான். அதை விட இந்த உயிர் இருந்துதான் என்ன பிரயோசனம் என்று சொல்லி அந்த கிச்சிப்பாளையம் போலீஸ் நிலையத்திற்கு முன்னாலே யே பெட்ரோலை ஊற்றி தீக்குளிக்கின்ற கொடுமைமிக்கச் சம்பவம் சேலத்திலே நடைபெற்றிருக்கின்றது. இது தவிர்க்கப் படவேண்டுமா, வேண்டாமா என்பதைத்தான் நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

இதுபோன்று அடித்தளத்திலே இருக்கிறவர்கள், வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கிறவர்கள், ஏழைகளாக இருக்கிறவர்கள் அத்தனை பேர்களிடத்திலும் நண்பர்களாகவும், அவர் களுடைய நம்பிக்கையைப் பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும் போலீஸ் துறையைச் சேர்ந்தவர்கள் என்று நம் முடைய முதல்வர் அவர்கள் இந்தப் புத்தகத்திலே அழகாக வெளியிட்டு இருக்கிறார்கள். ஆனால், அதை ஏற்று நடத்தக் கூடிய சூழ்நிலைமை இன்றைக்கு அவர்களிடத்திலே இல்லை என்று நினைக்கின்றபோது வேதனை அதிகரிக்கின்றது.

[திருமதி டி. யசோதா] [1985 ஜூலை 10

அதே நேரத்தில், இன்றைக்கு எங்களுடைய வட சென்னை மாவட்டத்தினுடைய காங்கிரஸ் கட்சியினுடைய செயலாளராக இருக்கின்ற மா. விநாயகமூர்த்தி அவர்களுடைய தந்தை இரும்பு வியாபாரம் செய்கிறார். அது எப்படிப்பட்ட வியாபாரம் என்பதைப் பற்றி நான் விமர்சனம் செய்வதற்குத் தயாராக இல்லை. முந்தா நாள் இரவு 11 மணிக்கு யாரோ வேனிலே வந்து வெளியிலே இருக்கிறார், உங்களை அழைக்கிறார் என்று சொன்னவுடனே அவர் வெளியே எழுந்து வந்ததுதான். திரும்பி வரவில்லை.நேற்றையதினம் எல்லாப் போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் சென்று, அவர் எங்கே இருக்கிறார் என்பதைப் பார்த்தால், அவர் எங்கு இருக்கிறார் என்பது தெரியாத ஒன்றாக இருக்கிறது.

இது போன்ற நிலைமைகள் நாளுக்கு நாள் வளர்ந்து வருவதைத் தடுக்கவேண்டும் என்றுதான் நாங்கள் விரும்புகிறோம்.

காவலர்களுடைய எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கின்றது வெளிநாடுகளில் எல்லாம் 500 பேர்களுக்கு ஒரு காவலர் என்ற நிலைமையிலே இருக்கிற நிலைமை இருந்தாலும், ஆயிரம் பேர்களுக்கு ஒரு காவலர் என்ற நிலைமையை நாம் இங்கு மாற்றுவதற்கு முயற்சிக்கவேண்டும்.

நடைபாதைகளிலே அதிகமான கடைகள் இன்றைக்கு இருக்கின்றன. நடந்து செல்வதற்கு முடியாத சூழ்நிலை இருக்கிறது. சென்னையினுடைய எந்தப் பகுதியிலே பார்த்தாலும் நடைபாதைக் கடைகள் அதிகமாக இருப்பதால், நாம் செல்ல முடியவில்லை. ரோடுகளில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது.

எனவே, நடைபாதைக் கடைகளை அகற்றுவது என்று சொல்கிற அதேநேரத்தில், அவர்களுக்கு மாற்று வழியாக வேறு ஏதாவது ஒரு இடத்திலே கடைகளை தோற்றுவித்துக் கொடுத்து, நடைபாதைக் கடைகளை அகற்றுவதற்கு நாம் முயற்சிக்கவேண்டும்.

மதுரையிலே எங்களுடைய கட்சியினுடைய செயலாளராக இருக்கிறார், மதுரை மாவட்ட காங்கிரஸ் கட்சியின் செயலாளர் ஜோதிலால். அவர் நகரமன்ற உறுப்பினராகவும் இருந்தார். அவர் வீட்டிலே ஒரு நாள் திருட்டு நடந்தது. அந்தத் திருட்டைப் பற்றி அவர் போலீசிலே புகார் கொடுத்தார். நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால், மீண்டும் அதே வீட்டிலே திருடன் வந்து இருக்கிறான். வீட்டுக்குச் சொந்தக்காரர்கள் விழித்துக் கொண்டிருந்த காரணத்தினால், அவனைத் துரத்தி, அதனால் அவன் பின்வாங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.



1985 ஜூலை 10] [திருமதி டி. யசோதா]

ஆகவேதான் சொல்கிறேன். இதுபோன்ற சூழ்நிலைகளிலே போலீசார் தங்களுடைய கடமைகளைச் செவ்வனே ஆற்ற வில்லை என்று சொன்னால், நிச்சயமாகச் சொல்வேன்— நல்ல ஒரு அமைதியான சூழ்நிலை தமிழகத்திலே பார்க்கமுடியாமல் போய் விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. எனவே, அதைத் தவிர்க்க வேண்டுகிறேன்.

எங்கு பார்த்தாலும் கோஷ்டிச் சண்டைகள். அதுவும் போலீசார் உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்காத காரணத் தால் நடைபெற்றிருக்கின்றன. திண்டிவனம் கோட்டக்குப்பம், நடுக்குப்பம் என்ற இரண்டு கிராமங்களில், இரண்டு கோஷ்டி களுக்கிடையே சண்டை ஏற்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10–20)

பெரிய பெரிய ஆயுதங்களையெல்லாம் அவர்கள் பயன்படுத்தி யிருக்கின்றார்கள். அத்தனை ஆயுதங்களையும் பயன்படுத்திய நேரத்திலே அது குறித்து உடனடியாகப் போலீசார் நடவடிக்கை எடுத்திருப்பார்களேயானால் அங்கேயுள்ள ஒருவர் உயிர் துறந் திருக்க வேண்டிய அவசியம் இருந்திருக்காது. 13 பேர்கள் படுகாயமடைந்திருக்க வேண்டிய நிலையும் உருவாகியிருக்காது.

போடி அருகிலே அணைக்கரைப்பட்டி கிராமத்திலே தேவர் கோஷ்டிக்கும் தங்கராசு கோஷ்டிக்கும் பயங்கரமான மோதல் ஏற்பட்டு இருக்கிறது. மூவர் உயிரிழந்திருக்கிறார்கள்; பலர் படுகாயம் அடைந்து இருக்கின்றார்கள்.

நேற்றைக்கு முன்தினம் நம்முடைய செம்பியம் பகுதியிலே கோவிந்தராசு என்று சொல்கின்றவருக்கும் வியாசர்பாடி கருணா நிதி சாலையைச் சேர்ந்த அசோக் நீலகண்டன் தலைமையிலே ஆறு பேர்களுக்கும் ஒரு தகராறு ஏற்பட்டது. அது ஏப்ரல் மாதத்திலே ஏற்பட்டது. ஏப்ரல் மாதத்திலே நடந்த தகராறைக் குறித்து கோவிந்தராசு போய் போலீஸ் ஸ்டேஷனிலே சொல்லி யிருக்கிறார். உடனடியாக செம்பியம் போலீசார் அவர்களைக் கூப்பிட்டு விசாரித்திருந்தால் இதற்கு முற்றுப்புள்ளி கிடைத்திருக் கும். ஆனால் அப்படிக் கூப்பிட்டு விசாரிக்காத காரணத்தினால் மறுபடியும் அந்தத் தகராறு ஏற்பட்டு கோவிந்தராசுவினுடைய வீட்டில் இருந்த ராஜன், குணசுந்தரி என்பவர்களைக் கத்தியால் குத்தியிருக்கின்றார்கள். குணசுந்தரியின் கையிலே உள்ள குழந் தையினுடைய காதை அறுத்திருக்கிறார்கள்; அந்தக் குழந்தையின் கழுத்திலேயிருந்த தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றிருக்கிறார் கள். அதுபற்றி போலீஸ் ஸ்டேஷனிலே சொல்லியும் எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை என்பதால், நம் முடைய சென்னை நகர காவல் துறை ஆணையாளர் அவர்களிடத் திலே போய் நேரடியாக முறையிட்டதற்குப் பிறகு இன்றைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்தக் குற்றவாளிகளைத் தேடுகின்ற

முயற்சி நடைபெறுகிறது என்றால் எத்தனைபேர்கள், ஏழைகள் அடித்தளத்திலே இருப்பவர்கள் எத்தனை காரியங்களுக்காக காவல்துறை ஆணையாளரைச் சந்திக்க முடியும் என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

1980ஆம் ஆண்டு நம்முடைய முதல்வர் அவர்கள் காவல்துறை மானியத்திலே பேசுகின்றபொழுது முடிவிலே நான்கூட ஒன்றைக் கேட்டேன். எஸ்கார்ட் வேலை செய்கின்றார்கள் பெண்கள். அவர்கள் யார் என்று கேட்டால் காவலர்கள் அதாவது போலீஸ் கான்ஸ்டபிள் என்று சொல்லுகிறோமே அவர்கள் வீட்டிலே இருக்கின்ற விதவைப் பெண்கள். அவர்கள் வீட்டிலே இருக்கின்ற கணவன், போலீஸ்காரராக இருந்து இறந்து விட்டால் அவர்களுடைய மனைவிமார்கள் ஆகிய இவர்களுக்கெல்லாம் அந்த எஸ்கார்ட் வேலையைக் கொடுத்திருக்கிறோம். ஆனால் அவர்கள் இன்றும் நிரந்தரமாக்கப்படவில்லை. பல ஆண்டுகளாக அவர்கள் இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 15,20 ஆண்டுக்காலமாக இருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளமும் ஒரு நாளைக்கு ஐந்து ரூபாய் என்ற நிலையிலேதான் இருக்கிறது. இவைகளை நிச்சயமாக நீங்கள் பார்த்து, பரிசீலித்து, ஏழைத்தாய்மார்களுடைய அந்த நிலையைப் போக்க வேண்டும். அவர்கள் மிகவும் அதிகமான பேர்கள் கூட இருக்க மாட்டார்கள். மிஞ்சி மிஞ்சிப் போனால் நூறு பேர்களுக்குள்ளேயேதான் இருப்பார்கள். அவர்களுக்கும் உரிய சலுகைகளை அளித்து அதை இந்த நேரத்தில் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தீ விபத்து பற்றியும் இங்கே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது, குறிப்பாக, மூர்மார்க்கெட் பற்றி எரிந்தது. மூர்மார்க்கெட் ஏன் பற்றி எரிந்தது ? உண்மையிலேயே என்ன நடந்தது என்பது அரசியல் காழ்ப்புணர்ச்சி அற்றவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் சிலர் சுயநலம் காரணமாக, அரசியல் ஆதாயம் தேட வேண்டுமென்று விரும்புகின்றவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், மூர் மார்க்கெட் ஏன் பற்றி எரிந்தது என்றால், மத்தியிலே இருக்கின்ற இரயில்வேத் துறைக்கு அங்கே உள்ள இரயில்வே நிலையத்தை விரிவுபடுத்துவதற்காக இடம் தேவை, ஆகவே, இந்திரா காங்கிரஸ்காரன் கொளுத்தி விட்டான்; அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திரா காங்கிரசும் கூட்டாக இருக்கின்ற காரணத்தினால் தமிழக அரசு இதைப் பார்த்தும் பார்க்காமலும், கண்டும் காணாமலும் விட்டு விட்டது என்று சொல்லுகின்ற ஒரு போலியான, சொத்தையான வாதத்தை அந்த இடத்திற்குச் சென்றபொழுது நான் நேரடியாகவே கண்டு அறிந்தேன்.



இன்றைக்கும் நான் சொல்கிறேன், அங்கே ஏற்பட்ட தீ விபத்து டேப் ரிக்கார்ட் கேசட் இருக்கின்றதே, அந்தக் கேசட்டை விற்கக் கூடியவர்கள் தனியாகவே ஒரு கனெக்ஷனே வாங்கி யிருக்கின்றார். அதை அவர் ஆப் செய்யாமல் போய் விட்டார். அதன்காரணமாக அது தீப்பற்றி பலயிடங்களில் பயங்கரமான தீ விபத்து ஏற்பட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அதற்கான காரணங்களைச் சொல்லுகின்ற அரசியல்வாதிகள் நியாயத்தினுடைய அடிப்படையில் சொல்ல வேண்டுமே தவிர இப்படி அநியாயமாகச் சொல்லி அரசியல் ஆதாயம் தேடவேண்டும் என்று நினைத்தால் இது நிச்சயமாக திரும்ப உங்களுக்கும் வருகின்ற காலம் வரும் என்பதைத்தான் நான் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். இதுபோன்ற போலியான பிரச்னைகளைக் கிளப்புவதை விட்டுவிட்டு, உண்மையான பிரச்சனைகளுக்கு நாம் தீர்வு காண வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போன்றே, சைதாப்பேட்டை பகுதியிலே தீப்பற்றி எரிந்தது. தீப்பற்றி எரிந்த நேரத்திலே போய்ப் பார்த்தோம். ஒரு பகுதி எரிந்தது; மறுபடியும் இன்னொரு பகுதி எரிந்தது. பார்த்துக்கொண்டிருக்கின்ற நேரத்திலேயே, போலீஸ் இருக்கிறது, தீயணைக்கும் படை இருக்கிறது. இத்தனைபேர்களும் இருக்கின்றபொழுது, பார்வையிட்டுக் கொண்டிருக்கும்பொழுதே ஒரு பகுதி எரிகிறது என்று கூட்டம் கூட்டமாக ஓடுகின்றார்கள் அதற்குப்பிறகு அணைக்கப்படுகிறது. எனவே, இதுபோன்ற நிலைமைகளையெல்லாம் நாம் மிகவும் உன்னிப்பாகவும், கூர்ந்தும் கவனிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மற்றொன்றையும் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நம்முடைய சட்டமன்றத்திலே, மாண்புமிகு பேரவைத்தலைவரவர்கள், ஒரு பத்திரிகையினுடைய ஆசிரியருக்கு, அவர் நம்முடைய சட்டமன்றத்தைப்பற்றித் தவறாக விமர்சனம் செய்து எழுதினார் என்பதற்காக தாங்கள் இரண்டு வார சிறைத் தண்டனை தந்ததாகப் பத்திரிகையிலே பார்த்தேன். அவர் பிடிக்கப் பட்டாரா? அவர் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டாரா என்பது தெரியாத ஒன்றாக இருக்கிறது.

அதேபோல் ஆம்னி பஸ். அந்த ஆம்னி பஸ் நிலைமை இன்றைக்கு எப்படி இருக்கிறது? நம்முடைய முதல்வர் அவர்களும் இந்த அரசும் எடுக்காத முயற்சிகளே கிடையாது. அதிலே நாம் தோற்றிருக்கிறோம் என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஏன் தெரியுமா? மாலை 6 மணிக்கு மேல் நீங்கள் எழும்பூருக்குச் செல்வீர்களானால் சென்னத் லேன், காந்தி இர்வின் சாலை, எவரெஸ்ட் பக்கத்திலே சாதாரணமாக நடந்தே போக முடியாது. ஒரு பெட்டியை சுற்றுலாத் துறையின் சார்பாக நீங்கள் எங்களுக்குக் கொடுத்துவிட்டீர்கள். தெரியாமல்

[திருமதி டி. யசோதா] [1985 ஜூலை 1

அந்தப் பெட்டியை எடுத்துக்கொண்டு நான் நடந்துபோனேன். என் பெட்டியையும் என் கையையும் சேர்த்து ஒருவன் இழுக்கிறான். ஏன் ஐயா என்று கேட்டால் திருச்சிக்குத்தானே பஸ் இருக்கிறது என்றான். திருச்சி இல்லை ஐயா என்றால், மதுரையா என்று கேட்கிறான். என்னைப் பேசவே விடாத சூழ்நிலைஎன்பது மட்டுமல்ல, வருகின்றவர்கள் யார் என்பதைப்பார்க்காமல், புரோக்கர்கள் இருக்கிறார்களே, அவர்கள் ஆட்களைப் பிடிக்க வேண்டுமென்று போட்டி போட்டுக் கொண்டு மேலேயே விழுகின்ற, இடிக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அந்த அளவுக்கு மிக அதிகமான அளவுக்கு சாலைகளை வழிமறித்து பிரம்மாண்டமான பஸ்கள் நிற்கின்றன. ஆகவே, இதுபோன்ற சூழ்நிலையைத் தடுப்பதற்கு நாம் எடுக்கின்ற முயற்சிகள் அத்தனையும் விழலுக்கிறைத்த நீராகப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சுமன், திவாகர் போன்றவர்களைக் கைது செய்ததை நான் நிச்சயமாகத் தவறு என்று சொல்ல விரும்பவில்லை. பெண்களை ஆபாசமான முறையிலே படம் எடுத்து அவர்கள் பணம் சேர்த்ததை நான் வரவேற்கவில்லை, அதை நான் விரும்பவும் இல்லை. ஆனால், அதே நேரத்திலே சுமன், திவாகர் போல இன்றைக்குப் பல பேர்கள் அதிலே இருக்கிறார்கள். குறிப்பாக, நான் கேள்விப்படுவதைச் சொல்கிறேன்; அதிலே உண்மை இருக்குமானால் நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது. சினிமாப் படம் எடுத்து தோல்வி கண்டு அதிலே நஷ்டம் அடைந்தவர்கள் பெரும்பாலும் அதையே தொழிலாகச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். அப்படிப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் தராசு போல் நின்று—நம்முடைய முதல்வர் அவர்கள்—நடுநிலை நோக்கோடு, யாராக இருந்தாலும், எவராக இருந்தாலும், நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சினிமாப் படங்களைப் பார்த்து இன்றைக்குப் பல கொலைகள் நடைபெறுவதாக நாம் பத்திரிகையிலே பார்க்கிறோம். ஜெயப்பிரகாஷ் 9 கொலைகளைச் செய்தான் என்று சொன்னால், 'நீ எப்படி இதைச் செய்தாய்?' என்று கேட்டால், நான் 100-வது நாள் படம் பார்த்தேன், அதனாலே செய்தேன் என்று சொன்னானாம்.

ஒரு போலீஸ் வண்டியை ஓட்டுகின்ற ஓட்டுநர், தான் விரும்பிய ஒரு அம்மாவைக் கடத்திக் கொண்டு போய் வேறு ஒரு இடத்திலே குடித்தனம் நடத்துகின்ற பொழுது அந்த அம்மா செத்துப் போய்விட்டார்கள் என்று காட்டுவதற்காக இன்னொரு அம்மாவைக் கொண்டுபோய் அந்தப் பழைய கணவர் வீட்டின் முன்னால் எண்ணெய் ஊற்றி கொளுத்திவிட்டார். இதை எப்படி நீ செய்தாய் என்று கேட்டால், நான் 'விலாங்கு மீன்



1985 ஜூலை 10] [திருமதி டி. யசோதா]

படம் பார்த்து இதைச் செய்தேன்' என்று சொன்னானாம். இப்படி ஆங்கிலப் படங்களைப் பார்த்து நான் செய்தேன் என்று சொல்லவில்லை. தமிழ்ப் படங்களைப் பார்த்துச் செய்தேன் என்று சொல்லுகின்றபொழுது, தமிழ்ப் படங்களை அடித்தளத்திலே இருக்கிற, நடுத்தர வர்க்கத்திலே இருக்கிற மக்கள் பார்க்கின்றபொழுது அவர்கள் உணர்ச்சிவயப்பட்டு இதுபோன்ற சூழ்நிலைகளை, சம்பவங்களை உருவாக்குகின்றார்கள் என்பதை நினைக்கின்றபொழுது—நமது முதல்வர் சினிமாவில் குடிப்பதைப் போல்கூட காட்டமாட்டார், குடிப்பதைப் போல் ஒரு சம்பவம் வந்தால்கூட அதைத் தூக்கிச் செடியிலே ஊற்றிவிடுவார். அப்படி சினிமாவிலே ஒழுக்கத்தை வளர்த்து, அதன்மூலம் ஆட்சிப்பீடம் அமைத்தவர் ஆளும்போது, சினிமா உலகம் வியாபார நோக்கோடு, பால் உணர்வைத் தூண்டும்விதமாகவும் கொலை, கொள்ளை செய்ய வழிகாட்டும் சூழ்நிலை உருவாகிக் கொண்டு வருவதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, கடுமையான தண்டனை அளிக்க வேண்டும். முன்னாலே, எப்படி குடிப்பவர்கள் மீது நான்-பெய்லபிள் வாரண்ட் என்று, நான்-பெய்லபிள் செக்ஷன் என்று, நடவடிக்கை எடுத்து சிறைச்சாலைக்கு அனுப்பினீர்களோ அதுபோல் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் யாராக இருந்தாலும் சரி, குறைந்தபட்சத் தண்டனை, அது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, 2 ஆண்டுக்காலம் என்று கடுமையான தண்டனையாக நீங்கள் ஆக்குவீர்களானால் நிச்சயமாக கள்ளச்சாராயம் ஒழிக்கப்படும்.

சிறுவர்கள் குடிப்பதைத் தடுப்பதற்குச் சட்டம் இருக்கிறது. அந்தச் சிறுவர்களை சாராயக் கடைகளிலே பணிகளிலே அமர்த்தக் கூடாது என்பதற்கு விதி இருக்கிறது. இவ்வளவு இருந்தும் அவர்கள் காக்கப்படவில்லை. அது போலீசாருடைய கவனத்தை ஈர்க்கவில்லை. அது இனிமேலாவது ஈர்க்கப்பட வேண்டும். வளர்கின்ற ஒரு சமுதாயம் அது. அந்தச் சமுதாயத்தைப் பாழ்பண்ணக் கூடிய சூழ்நிலை நம் கண் எதிரிலேயே நடைபெறுவதைத் தடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், மதுவை விளம்பரம் செய்வதுகூட குற்றமாக இருக்கிறது. ஆனால், இன்றைக்கு நான் மீனம்பாக்கத்திற்குப் போகின்ற பொழுது பார்த்தேன், மதுவைப் பற்றி மிகப்பெரிய அளவு 'கோல்டன் ஈகில்' என்று போட்டு, சின்னதாக, 'மினரல் வாட்டர்' என்று போட்டிருக்கிறார்கள். அதிலே ஒரு பகுதி, அந்த கோல்டன் ஈகில் ஏதோ மது சம்பந்தமானதை எடுத்துச் சொல்வதைப் போல ஒரு மிகப்பெரிய பிரம்மாண்டமான விளம்பரம். அந்த விளம்பரத்தைப் பார்க்கின்றபொழுது நமக்கேகூட

இவ்வளவு பெரிய விளம்பரம் இதற்குத் தேவைதானா என்று நினைக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது. ஏனென்றால், இங்கே விளம்பரப்படுத்துவதே தவறு என்று இருக்கிறது. விளம்பரப் படுத்துகின்ற சூழ்நிலையை நீங்கள் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

அதைப்போல புதிய குடியிருப்புகள் இன்றைக்கு புறநகர்ப் பகுதிகளில் தோன்றிக் கொண்டு வரும்போது, புறநகர்ப் பகுதிகளில் காவல் நிலையங்கள் அவசியம். புறநகர்ப் பகுதிகளில் நிறைய காவல் நிலையங்களை உருவாக்குகிறோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட நிறைய காவல் நிலையங்களை உருவாக்குகிறோம் என்று தெரிவித்திருப்பதாக நேற்று மக்கள் குரல் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. உண்மைதான். சந்தோஷத்திற்குரிய செய்தி அது. அதே நேரத்தில் அங்கே தொலைபேசி வசதி இருக்க வேண்டும். இல்லை என்றால் ஆடை இல்லாத மனிதன் அரை மனிதன் என்பதைப்போல அந்தக் காவல் நிலையம் கூட அரை காவல் நிலையமாக இருக்குமே தவிர ஒரு முழுமைபெற்ற காவல் நிலையமாக இருக்க முடியாது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. பணிக்காலத்திலே இறக்கின்ற காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு அரசாங்கம் அவர்களுடைய அந்தத் தியாகத்தைப் பாராட்டி, அவர்களுக்கு சொந்தத்திலே வீடு கொடுக்க நீங்கள் திட்டம் வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வெடிக்குண்டு சம்பவங்கள் இன்றைக்கு தமிழ்நாட்டில் வந்திருக்கின்றன. நடந்துகொண்டு வருகிற வெடிக்குண்டு சம்பவங்களைத் தொடக்கத்திலேயே ஒழிப்பதற்கு முன்வர வேண்டும்.

1984 ஆம் ஆண்டில் 334 வேலை நிறுத்தங்களும் 22 கதவு அடைப்புகளும் நடைபெற்றிருக்கின்றன. இதை சமாளிக்க போலீஸ் துறை வெப்பமான சூழ்நிலையைக் குறைத்து வேறு வழிகளைக் கையாள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பதவி உயர்வு தருவதிலே திறமையானவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்ற பெருமூச்சு அவர்களிடையே இருக்கிறது. அதைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு மாண்புமிகு முதலமைச்சருக்கு இருக்கிறது. திறமையானவர்கள் உங்கள் கண்ணிலே இருந்து விடுபட்டுவிடக் கூடாது. அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து கொண்டுவந்து, அவர்களுக்கு உரிய நிலையை அளிக்க, பதவி உயர்வு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





நம்முடைய போலீஸ் நிலையங்களில் எப்.ஐ.ஆர். ரெஜிஸ்டர் பெரும்பாலும் இருப்பதில்லை. எப்.ஐ.ஆர். ரெஜிஸ்டர் இல்லாத காரணத்தால் அங்கே வருகிறவர்களிடம் பேப்பர் கொண்டு வா, கார்பன் பேப்பர் கொண்டுவா, கொண்டுவந்தால் தான் எப்.ஐ.ஆர். எழுத முடியும் என்று சொல்லக்கூடிய நிலைமை பல காவல் நிலையங்களில் இருக்கிறது. எப்.ஐ.ஆர். ரெஜிஸ்டர் கவர்ன்மெண்ட் பிரசிலிருந்து அனுப்புகிறார்கள் என்று நினைக்கிறேன். உரிய காலத்தில் அவை கிடைக்கவில்லை என்றால், சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டுமென்ற முக்கியமான பிரச்சனை இருக்கின்ற காரணத்தால் அவசரக் காலத்திற்கு வேறு எங்காவது இருந்து தருவித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவலர்களுக்கும் துணை ஆய்வாளர்களுக்கும் உடை விஷயத்தில் ஒரு முடிவுக்கு வர பெருத்த காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு காக்கி உடை கொடுக்க வேண்டும். அதற்கு காட்டன் துணி கொடுப்பதா அல்லது டெரி காட்டன் துணி கொடுப்பதா என்பதுபற்றி ஒரு முடிவுக்கு வர காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இப்போது டெரிகாட்டன் கொடுக்கலாம் என்று முடிவாகிவிட்டது. கடந்த இரண்டு ஆண்டு காலமாக அவர்களுக்கு சீருடை கொடுக்கப்படவில்லை. இப்படி இருந்தால் வேலை செய்கின்றவர்களுக்கு ஒரு சலிப்பு உணர்வு ஏற்பட்டுவிடும். ஆகவே, சீருடையை உடனடியாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று போலீசாருக்கு வீடு கட்டும் திட்டத்திற்கு மத்திய அரசு கூட உதவி செய்யத் தயாராக இருக்கிறது. அந்தத் திட்டத்தை நீங்கள் விரைவாக அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அவர்கள் ஒட்டுமொத்தமாக ஒரே இடத்தில் இருந்தால் ஏதாவது ஒரு அவசரத் தேவையின் நிமித்தம் அவர்களை அழைக்க வேண்டும் என்றால் ஒரு ஊதுகுழலை எடுத்து ஊதினால் ஒன்று சேர்ந்து விடுவார்கள். இல்லையென்றால் பல கஷ்டங்கள் இதிலே வரும். அவர்களுக்கு இந்த 60 ரூபாய்தான் வீட்டுவாடகை கொடுக்கிறோம். குறைந்த வாடகைக்கு வீடு வேண்டுமென்றால் பக்கத்திலே கிடைக்காது. அதனால் தூர இடங்களில் போய் வாடகைக்கு குடியிருக்கிறார்கள். அப்படி இருக்கிற காலத்தில் அவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது. ஏதாவது பணியின் காரணமாக அந்தக் காவலர் சென்றுவிட்டால் வீட்டில் இருப்பவர்களுக்கு இரவு நேரங்களில் பாதுகாப்பு இருக்க முடியாது. அவர்கள் வெளியிலே சென்றாலும் அவர்களுடைய வீட்டில் இருப்பவர்ளுக்கு, பொருள்களுக்கு பாதுகாப்பு இருக்க வேண்டும். அந்த வகையில் அவர்களுக்கு விரைவாக வீடு கட்டித்தர நாம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று கோவையில் அமராவதி என்னுமிடத்தில் மத்திய அரசு ஒரு இராணுவப் பள்ளியை நடத்தி வருகிறது. சைனிக் ஸ்கூல் என்று பெயர். அங்கே 5 முதல் 18 வரை வயது உள்ள சிறுவர்களை சேர்த்து, பயிற்சி கொடுக்கிறார்கள். அங்கே பயிற்சி பெற்றவர்களைத்தான் இராணுவத்தில் சேர்த் துக் கொள்கிறார்கள். அதைப்போல போலீஸ் துறைக்கு என்று ஒரு பள்ளியை ஏற்படுத்தி, சிறுவர்களுக்கு பயிற்சி கொடுக்க வேண்டும். அந்தப் பள்ளியில் 5 முதல் 18 வயதுவரை யிலான சிறுவர்களைச் சேர்த்து பயிற்சி கொடுத்து, போலீஸ் துறைக்கு அவர்களை எடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய் தால் சிறப்பாக இருக்கும்.

அடுத்தபடியாக, வழக்குகள் சீக்கிரமாகத் தீர்க்கப்பட வேண்டும். சட்டமன்ற துணைச் சபாநாயகர் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். இன்றைக்கு வழக்குகள் எல்லாம் அதிக மாகத் தேங்கியிருக்கின்றன, தேக்கநிலை இருக்கிறது என்று சொன்னார்கள்.

வழக்குகள் சீக்கிரமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்றால், காலியாக இருக்கின்ற நீதிபதிகளின் பதவிகள் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படாத காரணத்தாலும் இன்றைக்கு வழக்குகள் உடனடியாகத் தீர்க்கப்படாமல் இருக்கின் றன, எனவே குறைந்தபட்சம் அந்தக் காலியிடங்களையாவது நிரப்பினால் விரைவாக வழக்குகளை ஓரளவுக்கு முடிக்க முடியும். இன்று பல வழக்குகள் தேக்க நிலையில் இருக்கின்றன. மருத்துவ மனையிலே டாக்டர்களிடத்திலே உடனடியாக சான்றிதழ் வாங்கி விட முடியாது. அவர்கள் உடனடியாகக் கொடுப்ப தில்லை. அதேபோல் நீதிமன்றங்களிலும் தேக்க நிலை இருக்கின்றது. அந்தக் கணக்கைப் பார்க்கின்றபோது தீர்க்கப் பட முடியாத வழக்குகள் பல இருக்கின்றன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்குக் காலையிலே ஒரு பத்திரிகையைப் பார்த்தேன். அந்த இதழின் நடுப் பக்கத்திலே ஒரு சப்-இன்ஸ்பெக்டர், மற் றொரு சப்-இன்ஸ்பெக்டரம்மா—இரண்டு பேருமே சப்-இன்ஸ் பெக்டர்கள். அது ஒரு சினிமாப் படம் என்று நினைக்கிறேன். ஜீவிதா மற்றும் கார்த்திக் ஆகிய இரண்டு பேர்களும் அந்த உடை யிலே கட்டிப் பிடித்துக் கொண்டு இருக்கின்ற ஒரு கேவலமான நிலையைப் பார்க்கிறோம். அந்த இரண்டு பேர்களும் அந்தக் காவலர் உடைகளைக் கழற்றிப் போட்டு விட்டு தங்களது சொந்த உடையிலே கட்டிப் பிடித்துக் கொள்ளட்டும்; வேண்டாம் என்று சொல்லவில்லை. காவல் துறை என்கிறபோது ஒரு அச்சம் இருக்க வேண்டும். தவறு செய்கின்றவர்களுக்கு ஒரு பயம்





இருக்க வேண்டும். சமுதாயத்தைப் பாதுகாப்பதற்கான வகையில் காவல் துறையினருக்குக் கொடுக்கப்படுகின்ற பாது காப்பான உடை அது என்று சொல்கிற சூழ்நிலையில் அந்த உடையிலே இருந்துக் கொண்டு இதுபோன்று படங்கள் வெளி வருவது என்பது கவுரவம் உள்ளதாக இல்லை என்பதை நான் இந்த மன்றத்திற்குச் சொல்லிக்கொள்கிறேன்.

காவல் இலக்கணங்கள் கல்லறைக்குப் போகாமல் காக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு நம்முடைய முதல்வர் அவர் களுக்கு இருக்கின்றது என்பதையும் சுட்டிக் காட்டி அதே நேரத் தில் நமக்கும் மிகப் பெரிய பொறுப்பு இருக்கின்றது, அதையும் செவ்வனே நிறைவேற்றி நாட்டு மக்களுடைய உயிருக்கும் உடை மைக்கும் பாதுகாப்பு அளிக்க இந்தத் துறை பயன்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டி முடிக்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக் கையின் மீதும் தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கையின் மீதும் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு வகைப்பட்ட கருத் துக்களை இந்தப் பேரவைக்கு வழங்கியிருக்கிறார்கள். தமிழகக் காவல் துறையினர் தம்மால் இயன்ற அளவுக்கு ஆற்றிய பணி களைப் பாராட்டியும், புகழ்ந்தும் கருத்துக்களைக் கூறிய உறுப் பினர்களுக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள் ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

காவல் துறை மேலும், மேலும் சிறப்பாகவும், செம்மை யாகவும் பணியாற்றி சீரிய பரிந்துரைகள் பலவற்றை எடுத்துக் கூறிய உறுப்பினர்களுக்கும் என்னுடைய பாராட்டை நான் தெரி வித்துக் கொள்கிறேன். குற்றம், குறைகளைச் சுட்டிக் காட்டி குறைகளைக் களைய வேண்டும் என்றும் குற்றங்கள் நீக்கப்பட வேண்டும் என்றும் காரணகாரிய விளக்கங்களோடு கருத்துரை களை வழங்கிய உறுப்பினர்களுக்கும் என்னுடைய போற்றுதல் உரித்தாகுக.

பழிப்புரைகளையும், எதிர்ப்புரைகளையும் தேடிப் பிடித்து எடுத்துச் சொல்லிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய இரக்கம் உரித்தாகுக. அதாவது பரிதாபம்.

நாட்டின் எல்லையையும், சுதந்திரத்தையும், உரிமைகளை யும் பேணிக் காக்கும் பொறுப்பை போர்ப் படையினர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். மக்களுடைய உயிர், உடல், உடமை, அவர்களுடைய வாழ்வு நிலை ஆகியவற்றைக் காத்து குற்றவாளி களைக் கண்டறிந்து அவர்களுக்கு உரிய தண்டனை வாங்கித்

தரும் பொறுப்பை காவல் துறையினர் ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள். இங்கே உறுப்பினர்கள் சிலர் சுட்டிக்காட்டியது போன்று தமிழகக் காவல் துறை வரலாற்றுச் சிறப்போடு பெரும் புகழும் பெற்று வளர்ந்தோங்கி வந்திருக்கின்ற ஒன்றாகும். In India the best police is Tamil Nadu Police. என்று இந்தியாவிலேயே சிறந்த காவலர்கள் தமிழ்நாட்டு காவலர்கள் என்று பிறர் புகழத்தக்க அளவுக்கு சிறந்து விளங்குபவர்கள் அவர்கள்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. நாஞ்சிலார் அவர்கள் எடுத்துச்சொல்கிறபோது கூட 1981 இல் அமைக்கப்பட்ட போலீஸ் கமிஷன் அறிக்கையில் அந்தக் கமிஷனின் தலைவராக இருந்த திரு. தர்மவீரா கூட பல்வேறு சூழ்நிலைகளையும் மற்றவைகளையும் எல்லாம் படித்துப் பார்த்து அவர்கள் பல்வேறு பரிந்துரைகளைச் செய்திருக்கிறார்கள் என்பது மட்டுமல்லாமல் அவர்கள் எடுத்துச் சொல்லியதுமாதிரி நாளுக்கு நாள் தரம் குறைந்து வருகின்ற அத்தகைய நிலைமையில் மேல்மட்டத்தில் செம்மைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான காரண, காரிய விளக்கங்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கின்ற வகையிலே கூட அவர்கள் ஒப்பிட்டுக் காட்டுகிறபோது குற்றம் செய்ய வேண்டும் என்ற உணர்வுடைய மக்கள் குற்றம் புரிய வேண்டும் என்ற அளவுக்கு ஆளாக்கப்படுகின்ற மக்கள் மிகக் குறைவாக இருக்கின்ற பகுதிகளில் சென்னை மாநகரமும், தமிழகமும் குறிப்பிடத் தகுந்தது என்று அந்த அறிக்கையிலே ஒரு இடத்திலே குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

(முற்பகல் 10-40)

இதை ஏன் சொல்ல வருகிறேன் என்று சொன்னால், குற்றங்கள் குறைகள் இழைக்கப்படுவது என்பது சர்வ சாதாரணமாக உலகெங்கும், எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும், எல்லாவகை மக்களிடத்திலும் நிலவி வருகிற ஒன்றுதான் என்றாலும் அவற்றைத் தடுப்பதும், அப்படிப்பட்ட குற்றங்களை, குறைகளை இழைப்பவர்கள் மீது உரிய தண்டனைகளை வழங்க வேண்டும் என்ற தன்மையிலேயும் படிப்படியாக முன்னேற்றம் காண வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் இந்த அரசு ஏற்றுக் கொள்கிறது. அதற்கான நடவடிக்கைகளையும் அவ்வப்போது தேவைப்படுகின்ற அளவுக்கு எடுத்துக் கொண்டு வருகிறது என்பதையும் நான் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தின் காவல் துறையினுடைய வரலாறு 1859 ஆம் ஆண்டிலேயிருந்தே துவங்கப்பட்டு, படிப்படியாக சீர் பெற்று வளர்ந்தோங்கி வந்து இன்றைய சூழ்நிலையில் எட்டியிருக்கிறது. 1659 இல் காவலர்கள் முதன் முதலாக நியமிக்கப்பட்டபோது,





அப்போது நியமிக்கப்பட்டதன் நோக்கமே கிழக்கிந்தியக் கம்பெனியினுடைய பண்டகசாலைகளையும், அந்தப் பண்டகசாலைகளில் உள்ள பொருள்களையும் காப்பாற்றுவதற்கென்று அமர்த்தப்பட்டனர். அப்பொழுது அவர்களுக்கு அரசியல் நோக்கு கிடையாது. வணிக நோக்கு தான் இருந்தது. ஆக பண்டகசாலைகளின் பொருள்களை காப்பாற்றுவதற்காக அமைக்கப்பட்ட காவல் படையினர் 18 வது நூற்றாண்டிலே, சில பல இடங்களிலே கிழக்கிந்தியக் கம்பெனிகள் நாட்டைப் பிடித்து, நாட்டை ஆளுகின்ற பொறுப்பையும் மேற்கொண்ட நிலையில், இரண்டு பொறுப்புகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் வந்து, பண்டகசாலைகளை காக்கிற பொறுப்பும் அவர்களுக்கு ஏற்பட்டது, பிடிக்கப்பட்ட சிலபல பகுதிகளிலே மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற பொறுப்பும், ஆட்சியை ஏற்கின்ற பொறுப்பையும் அவர்கள் ஏற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

ஆனால் 18 வது நூற்றாண்டிலேயே அத்தகைய நிலைமைகள் விலகி கிழக்கிந்தியக் கம்பெனியிடத்திலிருந்து பிரிட்டிஷ் அரசு இந்தியாவினுடைய ஆட்சிப் பொறுப்பு முழுவதையும் ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, இந்தக் காவலர்கள் முழுக்க முழுக்க அரசின் கீழே கொண்டுவரப்பட்டு, அரசியல் நோக்கத்தின் அடிப்படையில், பொது மக்களுடைய வாழ்விற்கு பாதுகாப்பு அளிக்கின்ற பெரு முயற்சியில் அவர்கள் ஈடுபட வேண்டியவர்களாக இருந்தார்கள். 1859 ஆம் ஆண்டிலேதான் இந்தக் காவல்துறை படையினர் செம்மைப் படுத்தப்பட்டு, காவல் படை அமைக்கப்பட்டு, காவல் துறையின் கீழ் கொண்டுவரப்பட்டது. அதிலிருந்துதான் இன்றைக்கு இருக்கிற காவல் துறையின் வரலாறு முழுமையாக செம்மையாகத் துவங்குகிறது என்று நான் சொல்லலாம்.

இதை ஏன் சொல்கிறேன் என்றால், 1859 ஆம் ஆண்டு சென்னை காவல் சட்டம் 24 நிறைவேற்றப்பட்டு அதன்படி காவல் படை ஒழுங்குபடுத்தப்பட்டபோது, அந்த 1859 ஆம் ஆண்டு சென்னை காவலர்களின் சட்டத்தை முன்மாதிரியாக வைத்துக் கொண்டு பல்வேறு மாநிலங்களிலும் காவல் படைகளை சீர்திருத்தி அமைக்கலாம் என்று மைய அரசு ஒரு அறிவிப்பு செய்து, சென்னையிலே இயற்றப்பட்ட காவல் துறை சட்டத்தையும், சென்னையிலே காவல் துறை இயங்குகின்ற பாங்கினையும் பிற மாநிலங்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்ற அளவுக்கு ஒரு தனி அறிவிப்பை இந்தியாவில் பிரிட்டிஷ் அரசின் கீழே இருக்கிற மாநிலங்களுக்கெல்லாம் அப்போது அறிவிக்கப்பட்டது. ஏன் இதைச் சொல்லுகிறேன் என்று சொன்னால் அன்று தொட்டு இன்று வரையில் தமிழகத்தின் காவல் துறை பல்வேறு வகைகளிலேயும் பிற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாகத்தான் இருந்து வருகிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூலை 10

காவல் துறையினுடைய பொறுப்புகளும், கடமைகளும்
நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டே வருகின்ற தன்மைகளை
இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் சுட்டிக்காட்டினார்
கள். குற்றங்கள் இழைக்கின்ற முறைகளும் வளர்ந்து வருகின்
றன. குற்றங்களை இழைப்பதற்காக அவர்கள் எடுத்துக் கொள்
கிற முயற்சிகளும் அதற்காக அவர்கள் தேடிப் பிடித்து வைத்திருக்
கிற அணுகுமுறைகளும் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றன.

நவீன முறையில் குற்றங்களைக் கண்டு பிடிக்கவும், கண்டு
பிடித்ததன் மூலமாக அவர்களுக்கு உரிய சாட்சியங்களை அடிப்
படையாக வைத்து உரிய தண்டனைகளை வழங்க வேண்டும்
என்பதிலே நவீன கருவிகளையும், அறிவியல் சாதனங்களையும்
பயன்படுத்தி நாம் எப்படி முயற்சி செய்து வருகிறோமோ அதே
போன்று மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தெரிவித்ததற்கு
இணங்க குற்றம் இழைப்பவர்களும் அந்த முறைகளிலே மிகவும்
வளர்ந்து, அவர்களும் அறிவியல் முறைகளிலேயே புதிய புதிய
குற்றங்களை இழைப்பதற்கு அதற்கான சாதனைகளையும்
மற்றவைகளையும் கண்டு ஆராய்ந்து வைத்து, அந்த முறைகளிலே
அவர்கள் தங்களுடைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள
வும், தங்களுடைய தீங்கான கருத்துக்களை நிறைவேற்றுகின்ற
முயற்சிகளையும் மேற்கொள்கிறபோது, அதற்கேற்ற முறையில்
அவற்றை எல்லாம் கண்டு பிடிக்க வேண்டிய பெரும் பொறுப்பு
காவல் துறைக்கு அளிக்கப்படுகிறது.

ஆகவே அப்படிக் கண்டு பிடித்து அவர்களுக்கு தண்டனை
வழங்கித் தீர வேண்டிய கடமையும் காவல் துறையினருக்கு இருக்
கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும்
இங்கே சுட்டிக் காட்டினார்கள். அதிலிருந்து இந்த அரசு எந்த
வகையிலும் வழுவவில்லை. அது மட்டும் அல்லாமல், எந்த ஒரு
தனிப்பட்ட தீங்கு இழைப்பவர்களையும், குற்றம் இழைப்பவர்
களையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு
இல்லை. தனிப்பட்டவர்களின் குற்றத்தை மறைத்து காப்பாற்றி
அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதன் மூலமாக பல இலட்சக்
கணக்கான மக்களின் அன்பையும், அரவணைப்பையும் பெற்று
இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு,
ஒரு அவப் பெயரை ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாக இருக்
காது. ஆகவே, ஒருவரை காப்பாற்றி, அதன் மூலமாக இந்த
அரசுக்கு ஒரு இழுக்கு ஏற்படுத்தவும், ஒரு அவப் பெயரை ஏற்
படுத்தவும் இந்த அரசு என்றைக்கும் ஆயத்தமாக இருக்காது
என்பதையும் இந்த வாய்ப்பிலே நான் கூறிக் கொள்ள விரும்பு
கிறேன்.

ஆகவே குற்றங்கள் எப்படி எப்படியெல்லாம் நடைபெற்றன
என்பதையெல்லாம் எடுத்துக் காட்டினார்கள். எப்படிப்பட்டக்
குற்றங்கள், குற்றச் செயல்கள் நிகழ்ந்து வருகின்றன என்பதை



1985 ஜூலை 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துக் காட்டினார்கள்.
அவர்களுடைய கடமைகளை எல்லாம் வரையறுத்து வகுத்து
எடுத்துச் சொல்கிறபோது, குடிமக்களுக்கு தீங்கிழைக்காமல்,
இடையூறு ஏற்படாமல் காப்பது காவல் துறையின் நீங்காக் கட
மையாக இருக்கிறது.

பொதுமக்களுடைய உயிருக்கும், உடைமைக்கும், உரிமைக்கும்
முழு பாதுகாப்பு அளிப்பது, அதற்காக வரையறை செய்யப்
பட்டுள்ள சட்ட நெறிகளையும், விதிமுறைகளையும் நிலைநாட்டு
வது, சமூகத்தின் கட்டுக்கோப்பு ஒழுங்கைப் பேணி காப்பது,
குற்றங்கள் நிகழாமல், குறைகள் ஏற்படாமல் தடுப்பது, நடை
பெற்றுவிட்ட குற்றங்களையும், குறைகளையும் கண்டுபிடிப்பது,
பொதுமக்களுடைய புகார் முறையீட்டு மனுக்களை ஏற்று அவை
பற்றி புலனாய்வு செய்து உண்மை நிலையைக் கண்டுபிடிப்பது,
கண்டுபிடிக்கப்பட்ட குற்ற நிகழ்வுகளை ஒட்டி உரிய முறையில்
வழக்கு மன்றங்களில் வழக்குகளை தொடுப்பது, தொடுக்கப்பட்ட
வழக்குகளை பொறுத்த வரையில் உரிய சாட்சியங்கள் துணைக்
கொண்டு நீதியை நிலைநாட்ட முயல்வது, குற்றவாளிகளுக்கு
உரிய தண்டனையை முறைப்படி பெற்றுத் தர முயற்சி செய்
வது, இடையூறின்றி போக்குவரத்து நடைபெற கண்காணிப்பது,
பொதுமக்கள் கூடும் இடங்களில், பொதுமக்கள் திரளாகக் கூடி
நடத்தும் பொது நிகழ்ச்சிகளில், விழாக்களில் அமைதியை நிலை
நிறுத்தி பாதுகாப்பு அளிப்பது, சட்டம் ஒழுங்கை மீறுபவர்களை,
சமூகக் கட்டுக் கோப்பை குலைப்பவர்களை, கொடிய வன்செயல்
களில் அத்துமீறி ஈடுபடுபவர்களை, அமைதிக்கு பங்கம் விளை
விப்பவர்களை, பயங்கர கலவரங்களில் ஈடுபடுகிறவர்களை,
முறைப்படி முன்கூட்டியே தடுத்து நிறுத்த வேண்டிய
பொறுப்பை ஏற்றுக்கொள்வது, பொது மக்களுக்கு
இயற்கையாகவோ, செயற்கையாகவோ ஏற்படும் துன்பம்,
துக்கம், இடையூறு, இழப்பு போன்றவைகளைத்
துடைக்க துணை நிற்பது, பொதுமக்களுக்கு உற்ற
நண்பர்களாக எப்போதும் எல்லா இடங்களிலும் விழிப்புணர்ச்சி
யோடு உலா வந்து காப்பது, உயர்ந்த எண்ணத்தோடு சமத்துவ
சமதர்ம அடிப்படையில் சமூக நீதியை நிலைநாட்ட அரசு மேற்
கொள்ளும் முயற்சிகளுக்கு துணைபுரிவது, மக்களாட்சி நெறி
அடிப்படையில் அரசு கடைப்பிடிக்கும் நடவடிக்கைகளுக்கு உற்ற
துணை புரிவதாக இருப்பது, பல்வேறு வகைப்பட்ட சமயங்கள்,
ஜாதிகள், இனங்கள், மொழிகள், பழக்க வழக்கங்கள் கொண்ட
மக்களிடையே அவ்வப்போது இடம் பற்றியும், அந்தந்த இடங்
களில் ஏற்படுகிற நிகழ்ச்சிகளைப் பொறுத்தும் ஏற்படுகிற மன
மாச்சரியங்கள், வேறுபாடுகள் காரணமாக ஏற்படுகிற கலவரங்
கள், மற்றவைகளை கூடுமான வரையில் முன்கூட்டியே தெரிந்து
ஏற்படாமல் தடுத்து நிறுத்துவதும், அவைகள் ஏற்பட்ட
சூழ்நிலையில் கடுத்து நிறுத்துவதுமான பொறுப்புகளை ஏற்றுக்
கொண்டு, கூடுமான வரையில் ஆங்காங்கு வாழ்கிற மக்களிடத்
திலே ஒரு சுமுகமான நல்லுறவு ஏற்படுத்த வேண்டுமென்பதிலே

பெருமுயற்சி எடுப்பது, ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், மறியல்கள், முற்றுகைகள், வேலை நிறுத்தங்கள், கண்டன கூட்டங்கள் போன்றவைகளில் மக்களாட்சி கொள்கையின் அடிப்படையில் அமைதியை நிலைநாட்டுகிற முறையில், அந்த அடிப்படையில் ஒழுங்குபடுத்தி நிலைமையை கட்டுக்குள் வைக்க வேண்டியது போன்ற பல்வேறு பொறுப்புக்களையும், கடமைகளையும் இன்றைய காவல் துறையினர் மேற்கொண்டு வருகிறார்கள் என்பதை இந்த அவையிலே இருக்கிற உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள்.

உள்ளபடியே தீங்கு செய்கிற மனப்பான்மையைத்தான் சட்டம் கண்டுபிடிக்க முடியுமே தவிர, தீங்கு செய்கிற மனப்பாங்கை சட்டம் நீக்கிவிட முடியாது என்று ஜான் மில்ட்டன் ஒரு இடத்தில் வெகு அழகாக குறிப்பிடுகிறார். அந்த நிலையில் அரசியல், பொருளாதார சமூக சூழ்நிலைகள் மாற மாற, காலத்திற்கேற்ப வாழ்க்கைப் பிரச்சனைகளும் வளர வளர சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளும் பெருகித்தான் இருக்கிறது. சட்டம் ஒழுங்கு அமைதியை நிலைநாட்ட நவீன அணுகுமுறைகளையும், செயல்பாடுகளையும் காவல் துறை கையாண்டு வந்தாலும், குற்ற நிகழ்வுகளும் நான் முதலில் கூறியதைப்போல நவீன முறைகளில் வளர்ந்து கொண்டு வருகின்றன.

அதுமட்டுமல்லாமல், செய்து விட்ட குற்றங்களிலிருந்து எப்படி தப்பித்துக் கொள்ளலாம் என்று, முன்னேற்பாடான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு அதற்கான தந்திர முறைகளை பலபேர் கையாளுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் தான் பொதுமக்களுடைய நல்ல ஒத்துழைப்பும், ஆதரவும் காவல் துறைக்கு இருக்கவேண்டுமென்று பலரும் பலசமயங்களில் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அதற்கு காரணமே நிகழ்ந்து விட்ட குற்றங்களைப்பற்றி உண்மை தெரிந்தவர்கள், உண்மையை காவல் துறைக்கு அளிக்கவும், அப்படிப்பட்ட உண்மைகள், நிகழ்வுகளுக்கு ஆதாரங்கள், தடயங்கள் கிடைக்குமானால் காவல் துறைக்கு எடுத்துச் சொல்வதன் மூலமாக, அதற்கு உரிய சாட்சியங்களைச் சொல்வதன் மூலமாக, வழக்குகளை நடத்துவதன் மூலமாக குற்றம் செய்பவர்களுக்கு உரிய தண்டனையை வாங்கித் தர வேண்டியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள்.

பல நேரங்களில் பட்டப் பகலில் 10 மணி, 12 மணி அளவில் பகிங்கரமாக நடைபெறுகிற கொலைகளில் கூட சாட்சியம் சொல்ல யாரும் முன் வர மறுக்கிறார்கள். சாட்சியம் சரியாக இல்லாத காரணத்தால் பட்டப்பகலில் கொலை செய்யப்பட்டிருக்கிற சூழ்நிலையில் கூட வழக்குகளைத் தொடுத்தாலும், வழக்கு மன்றத்திலே அந்த வழக்குகள் அடிபட்டு போய், யார் மீது வழக்கு தொடருகிறோமோ அவர்களுக்கு எதிராக சரியான



சாட்சியம் சொல்ல யாரும் வராமல், தடயங்கள் எல்லாம் மறுக்கப்பட்டுள்ள காரணத்தாலே, பொது மக்கள் ஒத்துழைப்பு இல்லாத காரணத்தாலே பல வழக்குகள் நீதிமன்றங்களில் தள்ளுபடி செய்யப்பட்டு, குற்றவாளிகள் பிழைத்துக்கொண்டு நம்மிடையே உலாவுகிறார்கள்.

(முற்பகல் 10—50)

அதை அறிகின்ற போதுதான் நாட்டு மக்களுடைய நல்ல ஒத்துழைப்பும், அந்த உணர்வோடு மன்ற உறுப்பினர்கள் யாரும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லுகின்றபோது எப்படிப்பட்ட உணர்வை அடிப்படையாக வைத்து எடுத்துச் சொன்னார்களோ, அந்த உணர்வுகளுக்கு பொது மக்களும் நல்ல மதிப்பு தந்து, கூடுமான வரையில் உதவி செய்வார்களேயானால், நாம் எண்ணுகிற நோக்கமும், நாம் எண்ணுகிற குறிக்கோள்களும் ஓரளவிற்கு நிறைவேறுவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது, காவலர்களுக்கு அவர்கள் அறிவுறுத்திய ஒரு கோட்பாட்டை இங்கே நான் நினைவு படுத்துவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். '' நியாயங்கள் எக்காலத்திலும், எக்காரணம் கொண்டும் காயப்படுத்தப்படக்கூடாது, அதைப் போலவே காயங்கள் எக்காலத்திலும், எக்காரணம் கொண்டும், நியாயப்படுத்தப்படக்கூடாது '' என்று அறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த கோட்பாடாகும். அந்தக் கோட்பாட்டைத் தான் இன்றைய முதல் அமைச்சர் அவர்களும், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கடைப்பிடித்தும், வலியுறுத்தியும் வற்புறுத்தியும் வருகிறார்கள் என்பதை பல்வேறு நிகழ்ச்சிகளிலே எடுக்கின்ற நடவடிக்கைகளிலேயிருந்து ஓரளவிற்கு நாம் நன்றாக அறிந்து கொள்ளலாம்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பல்வேறு குற்ற நிகழ்ச்சிகளைப் பற்றியும், வழக்குகள் பற்றியும் இங்கே பட்டியல் மூலமாக எடுத்துச் சொன்னார்கள். அதைப் போல மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் பட்டியல் போட்டுக் காட்டினார்கள். இதிலே அவர்கள் காட்டியப் பட்டியல் மிகக் குறைவு என்பதுதான் எல்லோரும் அறிந்த ஒன்று. ஆனால், எப்படிப்பட்ட வகையான குற்றங்களை எல்லாம் செய்ய மக்களுடைய மனப்பாங்கு கெட்டு இருக்கிறது என்பது இதன் மூலம் நன்றாக நாம் அறிகிறோம் என்பது மட்டுமல்லாமல், இவ்வளவு பயங்கரமான வழக்குகளையும், எவ்வளவு பயங்கரமான தன்மைகளையும் சமாளிக்க வேண்டிய நிலையில் காவல்துறையினர் வைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதையும் நாம் உணர்த்துவதற்கு அவர்கள் எடுத்துத் தந்த பட்டியல் நமக்கு எல்லாம் அறிவுறுத்துகின்ற ஒன்றாக அமைந்து இருக்கிறது. ஆகவே, காவலர்கள் திறம்பட செயல்படவேண்டும் என்

பதற்கான முறையில் இந்த அரசு கூடுமான வரையில் நிதி வசதிக்கு ஏற்ப ஆண்டுக்காண்டு அவ்வப்போது செய்து கொண்டு வருகிறது. அதுவும் முதல்வர் அவர்கள் இதிலே மிகவும் உன்னிப்பாகவும், கவனமாகவும், இருந்து அவர்களுக்கு வசதி வாய்ப்புகளை, அதற்கான சூழ்நிலைகளை செம்மைப்படுத்தவேண்டும், என்பதிலே மிக முனைப்புள்ளம் கொண்டு, அதற்கான வகையில் பல்வேறு வசதி வாய்ப்புக்களை செய்து கொண்டு இருக்கிறார்கள்.

சிறந்த முறையிலும், புதுமையான வகையிலும் காலத்தின் நிலைக்கு ஏற்பவும், காவலர்கள் காவல்துறை அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் அத்தகைய பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தேவையான அளவிற்கு காவல் நிலையங்கள் பரவலாக ஆங்காங்கு அமைக்கப்பட்டு வருகின்றன. சரியான துணைக் கருவிகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன. விரைந்து சென்று பணியாற்றுவதற்கு வேண்டிய வகையில், அதற்கான ஊர்திகளும் செய்து தரப்பட்டு இருக்கின்றன. விரைந்து உடனடியாக செயலாற்ற, பரவலான வகையில் செய்தி தொடர்பு அமைத்துத் தரப்பட்டு இருக்கிறது. குற்றங்களில் பல்வேறு வகைகளில் புலன் ஆய்வு செய்ய, அறிய அறிவியல் கருவிகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. கம்யூட்டர்கள், விரல் ரேகைக் கூடங்கள், பயன்படுத்தப்பட்டு வருகின்றன. குற்றம் புரிந்தோரை மோப்பம் பிடித்து, கண்டு பிடித்துக் கொடுக்கக்கூடிய வல்லமை பெற்ற, பழக்கப்பட்ட, நாய்கள் தேவையான அளவிற்கு நகரங்களிலே எல்லாம் வைக்கப்பட்டு, அந்தந்தப் பகுதிகளில் பணியாற்றி வருகின்றன.

அன்றாடம் நிர்வாகத்தில் புதுமையான முறைகளைக் கையாளுவதற்கான முயற்சிகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலும் கிட்டத்தட்ட இந்த மோப்பம் பிடித்து, குற்றங்களுக்கு துப்பு துலக்குவதற்கு பயன்படுத்துகின்ற வகையில் அடிப்படையாக அமைந்து பழக்கப்பட்ட நாய்கள் இப்போது 13 பணியாற்றி வருகின்றன. நாம் அதற்காக 23 நாய்களை வைத்துக்கொள்வதற்கு நிர்வாக ஒப்புதல் அளித்தாலும், கூட மற்றைய நாய்களை வாங்கி, அதைப் பழக்கப்படுத்துவதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டு இருந்தாலும், 13 நாய்கள் இந்தப் பணியிலே மிகச் சிறப்பாக ஈடுபட்டு வந்ததன் காரணமாக, 1984 ஆம் ஆண்டின் கணக்குப்படி பார்த்தாலும் 482 வழக்குகளிலே இந்த நாய்கள் பயன்படுத்தப்பட்டு இந்த நாய்கள் மோப்பம் பிடித்து துப்பு துலக்கித் தந்ததன் காரணமாக 178 வழக்குகளிலே காவல்துறையினர் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் சில பல வழக்குகளைத் தொடுப்பதற்கு உறுதுணையாக இருந்தன என்பதையும் நான் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



அதுமட்டுமல்லாமல், குற்றங்கள் பற்றி, யார் புகார் தந்
தாலும், அதை விசாரிக்க வேண்டும் என்றும், அதற்குத் தகுந்த
தண்டனை, அதற்கான முயற்சிகளிலே வழக்கு தொடுத்து, எடுக்க
வேண்டும் என்ற முறையிலேதான் இந்த அரசு கையாண்டு வரு
கிறது. 1976-க்கு முன்பு, காவல்துறையின் கவனத்திற்குக்
கொண்டுவரப்படும் எல்லாக் குற்றங்களும் பதிவு செய்ய வேண்
டும் என்ற கட்டாயம் இல்லை. 17-7-1976-ல் மாநில காவல்
துறைத் தலைவர் வெளியிட்ட ஆணையின் மூலம் எல்லாக் குற்
றங்களும் பதிவு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.
பிறகு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப்
பிறகு, 11-8-1977-ல் குற்றங்களைக் குறைத்து பதிவு செய்ய
வேண்டும் என்ற எண்ணத்தை வைக்காமல் குற்றங்களுடைய
எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்பதற்காக காவல்துறை
யிலே செய்யப்படுகின்ற புகார்களுடைய எண்ணிக்கையைக்
குறைக்க வேண்டிய அவசியம் இல்லை, ஆகவே யார் புகார்
தந்தாலும், குற்றங்களைப் பொறுத்த வரையில் பதிவு செய்ய
வேண்டும் என்று மறுபடியும் ஒரு உத்தரவு 11-8-1977-லே
வெளியிடப்பட்டு, எல்லாக் குற்றங்களும் பதிவு செய்யப்பட
வேண்டும், அதன் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்
என்று எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கிறது என்பதை நான்
இங்கே குறிப்பிட்டுக் கூற கடமைப்பட்டு இருக்கிறேன்.

**மேலும் இங்கே போலீஸ் என்ற பெயர் இருப்பது நல்லதா ? காவலர் என்ற பெயர் இருப்பது நல்லதா என்ற ஒரு பிரச்சினை இங்கே எழுப்பப்பட்டது.** மாண்புமிகு உறுப்பினர் திரு. முசிறி புத்தன் அவர்கள் போலீஸ் என்றால்தான் பயப்படுவார்கள். அச்சப்படுவார்கள், அச்சத்தோடு நடந்து கொள்வார்கள் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் சமது அவர்கள் பேசுகிறபோது போலீஸ் என்று சொல்லுவதை விட காவலர் என்ற சொல் இருப்பது பொருத்தமானது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

போலீஸ் என்பது வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்ட
போது அவனுடைய பிடிப்பு, மற்றவைகள் ஆட்டம் காணக்
கூடாது என்பதற்காக எல்லோரையும் அடிமையாக வைத்து
யாரையும் நம்பாமல், ஐயப்பாட்டோடு நடைபெற்று வந்த
போது போலீஸை ஒரு டெரரிஸ்ட்டாக வைத்துக் கொண்டு
ருந்தார்கள். ஆகவே அச்சுறுத்தும் படையாக வைத்து இருந்
தார்களே தவிர மக்களை காப்பாற்றுவதற்காக வைத்து இருந்
தார்களா என்றால், அல்ல. ஆனால் போலீஸ்க்கு அப்படிப்
பட்ட பதம் டிக்ஷ்னரியில் சொல்லவில்லை. ஆனால் அப்படி
நடைமுறையில் வந்து விட்டது என்றாலும் அப்படிப்பட்ட
முறையை ஜனநாயக நாட்டில் இந்த நாடு விடுதலைப் பெற்றப்
பிறகு அப்படி கையாளுகிற நோக்கம் இந்தியாவைப் பொறுத்த
மட்டில் இல்லை. குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்தவரையில்

இல்லை. ஆகவே, காவலர் என்று சொல்லுவது தான் பொருத்த மாக இருக்கும். ஏன் என்றால் அச்சுறுத்துவது இந்த படை யின் நோக்கம் அல்ல. பிறரை மிரட்டுவது உருட்டுவது இந்த படையின் நோக்கம் அல்ல. யாரையும் துன்புறுத்துவது, கொடுமைப்படுத்துவது, தொல்லைப்படுத்துவது இதனுடைய நோக்கம் அல்ல. எல்லோருக்கும் காப்பு அளிக்கவேண்டும், எல்லோருக்கும் பாதுகாப்பு அளிப்பது தான் இதனுடைய நோக் கம் ஆகும். இதனால் எவ்வளவு கஷ்டம் ஏற்படுகிறது என்றால், '' மண்பதை காக்கும் தென்புலம் காவல் துன்பம் வந்தது தொடி அளவு இல்'' என்று இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தில் மிக அழகாகச் சொல்லி யிருக்கிறார்கள். காவல் காப்பது என் பது அவ்வளவு எளிதான, மகிழ்ச்சிக்கு உரிய ஒரு செயல் ஆக இருக்க முடியாது. துன்பம் வந்தது தொடி அளவு இல் என்று 1,800 ஆண்டுகளுக்கு முன்பு எடுத்துச் சொல்லுகின்ற கடமை களை செய்யவேண்டிய தன்மைகளில் இருக்கிறார்கள்.

மேலும் இந்த காவல்துறையினுடைய தன்மைகளைப் பொறுத்த வரையில் காவலர்களின் எண்ணிக்கையை பெருக்க வேண்டும், அப்போது தான் குற்றங்கள் கண்டுபிடிக்கின்ற, தன்மையும் திறமையும் கொஞ்சம் அதிகமாகும் என்ற கருத்தை பல்வேறு உறுப்பினர்களும் இங்கே சுட்டிக்காட்டினார்கள், அதை யும் இந்த அரசு உணர்ந்து அதற்கு ஏற்றப்படி நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது என்றாலும் கூட இருக்கிற சூழ்நிலை மற்றவைகளை அறிய வேண்டும். என்பதற்காக நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். மேற்கு வங்கத்தைப் பொறுத்த வரையில் 1059 பேருக்கு ஒரு காவலர் என்று இருக் கிறார்கள். பீகாரைப் பொறுத்தவரையில் 1047 பேருக்கு ஒரு காவலர் என்று இருக்கிறார்கள். ஆந்திர பிரதேசத்தைப் பொறுத்த வரையில் 944 பேருக்கு ஒரு காவலர் என்று இருக் கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 872 பேருக்கு ஒரு காவலர் என்றும், கர்நாடகத்தைப் பொறுத்தவரையில் 748 பேருக்கு ஒரு காவலர் என்றும், உத்திர பிரதேசத்தைப் பொறுத்த வரையில், 783 பேருக்கு ஒரு காவலர் என்றும், கேரளாவைப் பொறுத்த வரையில் 769 பேருக்கு ஒரு காவலர் என்றும், ராஜஸ்தானைப் பொறுத்த வரையில் 728 பேருக்கு ஒரு காவலர் என்றும், அரியானாவைப் பொறுத்தவரையில் 642 பேருக்கு ஒரு காவலர் என்றும், மகாராஷ்டிராவைப் பொறுத்த வரையில், 597 பேருக்கு ஒரு காவலர் என்றும், குஜராத்தைப் பொறுத்த வரையில் 577 பேருக்கு ஒரு காவலர் என்றும், அசாமைப் பொறுத்த வரையில் 576 பேருக்கு ஒரு காவலர் என்றும், பஞ்சாபைப் பொறுத்த வரையில் 397 பேருக்கு ஒரு காவலர் என்றும் இருக்கிறார்கள்.

இதனுடைய எண்ணிக்கை கூட்டப்படவேண்டும் என்ற கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு அவ்வப்போது ஏற்படுகின்ற தன்மைக்கு ஏற்ப அவர்களை நிய



மித்துக்கொண்டு இருக்கிறார்கள் என்றாலும் கூட தமிழகத் தைப் பொறுத்தவரையில் 872 பேருக்கு ஒரு காவலர் என்ற நிலை இருந்து வந்தாலும் கூட நான் முதலிலே சுட்டிக்காட்டிய படி நாம் எடுக்கின்ற முன் எச்சரிக்கை நடவடிக்கையின் அடிப் படையிலேயும், திட்டவட்டமான தெளிவான நடவடிக்கை எடுப்பதன் காரணமாகவும் தமிழகத்தில் ஓரளவுக்கு சட்டம் ஒழுங்கு அமைதி நிலை நாட்டப்படுவதில் பெரும்பாலும் மற்றவர் கள் பாராட்டத்தக்க அளவுக்கு நாம் ஆளாகிக்கொண்டு வருகி றோம். கடந்த 8 ஆண்டுகளிலும் சரி அதற்கு முன்னாலும் சரி நாம் பார்த்தால் தமிழகத்தைப் பொறுத்த வரையில் கர்ஃப்யூ சட்டம் போட வேண்டிய அவசியம் தமிழகத்தை பொறுத்த வரையில் எந்த ஒரு கால கட்டத்திலும் எந்த ஒரு நாளிலும், எந்த ஒரு இடத்திலும் ஏற்படவில்லை. இப்போதும் சரி இதற்கு முன்னாலும் சரி ஊரடங்கு சட்டம் போட்டு தான் கலவரங்களை அடக்க வேண்டும் என்ற சூழ்நிலை தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஏற்படவில்லை. ஏறத்தாழ இந்தியாவில் இருக்கின்ற பிற மாநிலங்களில் முக்கியமான நகரங்களில் எல்லாம் கிட்டத் தட்ட 3 மாதங்கள், 4 மாதங்களுக்கு ஒரு முறையாவது 15 நாட் களுக்கு நீட்டித்தாவது ஊரடங்குச் சட்டம் போட்டு காப்பாற்ற வேண்டிய அவசியம் இருக்கிற தன்மையை நாம் காண்கிறோம்.

குறைவான எண்ணிக்கை கொண்டு இருக்கிற அளவுக்கு மக்க ளுக்கு ஒரு காவலர் என்ற நிலை மகாராஷ்டிரா, குஜராத் அசாமில், பஞ்சாபில் இருந்தாலும் நம்முடைய மாநிலத்தில் 872 பேருக்கு ஒரு காவலர் என்று இருந்தாலும் திறமையாக இவர்கள் சமாளிப்பதன் காரணமாக— திறமையாக சமாளிக்கி றார்கள்— அவ்வளவு குறைவாக இருந்தாலும் கூட பஞ்சாப் நிலையையும், அசாம் நிலையையும், குஜராத் நிலையையும் இன்றைக்கு எப்படி இருக்கிறது என்பதை நான் சொல்லி மாண்பு மிகு உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. இது செம்மைப்படுத்தப்பட வேண்டிய அவசியம் இல்லை என்ற முடிவுக்கு நான் வரவில்லை.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று இன்னும் செம் மைப்படுத்தப்படவேண்டும். இன்னும் சிறப்பு அடையவேண்டும். கடமைகள் சிறப்பாக ஆற்றுவதற்கான சூழ்நிலைகள் ஏற்பட வேண்டும் என்பதை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

அதைப் போன்றே, பெருநகரங்களைப் பொறுத்த வரையி லும், கணக்கு எடுத்துப் பார்த்தால், பெங்களூரில் 536 பேருக்கு ஒரு காவலர், கல்கத்தாவில், 450 பேருக்கு ஒரு காவலர்,

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூலை 10

சென்னையில் 436 பேருக்கு ஒரு காவலர், அகமதாபாத்தில் 381 பேருக்கு ஒரு காவலர், பம்பாயில் 350 பேருக்கு ஒரு காவலர், ஐதராபாத்தில் 295 பேருக்கு ஒரு காவலர், டெல்லியில் 262 பேருக்கு ஒரு காவலர் என்றும், தமிழகத்தைப் பொறுத்த வரையில், பெருநகரில் 436 பேருக்கு ஒரு காவலர் என்ற விகிதத்தில் இருக்கிறார்கள்.

இருந்தாலும், இந்த எண்ணிக்கையைக் கூட்ட வேண்டும் என்றும், போக்குவரத்தைக் கட்டுப்படுத்தி கண்காணிப்பதற்கு போதுமான அளவுக்கு காவலர்கள் இல்லை. ஆகவே, இந்த எண்ணிக்கையையும் பெருக்கவேண்டும் என்கிற செயல் குறிப்பு அரசின் இடத்தில் இருக்கிறது. அதை நாளடைவில் செய்யும்.

இந்த எண்ணத்தை எல்லாம் வைத்துக் கொண்டு பார்க்கும் போது, 1977-லிருந்து 1985 வரையில், 1977-இல் தமிழக காவல் படையினருடைய மொத்த எண்ணிக்கை 46716 ஆக இருந்தது. ஆண்டுக்காண்டு இதை பெருக்கிக் கொண்டு வந்ததன் காரணமாக இப்போது 57,375 பேர், 30— 6— 1985 அன்றைய கணக்குப்படி தமிழகத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த எட்டு ஆண்டுக் காலத்தில், கிட்டத்தட்ட 12 ஆயிரம் பேர் கூடுதலாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இது போதுமா என்று கேட்டால், போதாதுதான். இருந்தாலும் 46,716, 1977-லிருந்ததை 57,375 என்ற அளவுக்கு எண்ணிக்கையை உயர்த்திக் கொண்டேதான் வந்திருக்கிறோம்.

மாவட்ட சேவை படையினருடைய எண்ணிக்கை 11,880 ஆக இருந்தது. 13,634-ஆக ஆக்கி இருக்கிறோம் இப்போது. தமிழ்நாடு சிறப்பு காவல் அணிகள் 5 இருந்தது. 1977-இல், அதனுடைய தேவை, அவசியம் கருதி, அது இப்போது 8 ஆக ஆக்கப்பட்டிருக்கிறது. காவல் நிலையங்களுடைய எண்ணிக்கை 1977-ல் 873 ஆக இருந்தது. புதிய, புதிய இடங்களுக்கு காவல் நிலையம் வேண்டும் என்றும், ஆங்காங்கே ஏற்படுகிற மக்களுடைய மனமாச்சரியம், சூழ்நிலைகள் ஆகியவற்றை ஒட்டி அவசியப்பட்ட இடங்களில் செய்யப்பட்டதன் காரணமாக 976 காவல் நிலையங்கள் இப்போது இயங்கி வருகின்றன.

மேற்கொண்டும் சில பல காவல் நிலையங்கள் ஏற்படுவதற்கான செயற் குறிப்பு அரசினிடத்தில் இருக்கிறது. புறக் காவல் நிலையங்கள் 181 இருந்தது. இப்போது 186-ஆக ஆக்கப்பட்டிருக்கிறது. தொலைபேசி வசதிகள் பல்வேறு நிலையங்களுக்கு வேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள்.



1985 ஜூலை 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மாண்புமிகு உறுப்பினர் தீர்த்தகிரி கவுண்டர் அவர்களும் எடுத்துச் சொன்னார். அந்த வகையில் ஏற்கனவே, 756 நிலையங்களுக்கு தான் இருந்த இவ்வசதி இப்போது 1,023 இடங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. மேலும் தருவதற்கான முயற்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வழங்கிய வி.எச்.எப் செட்டுகள் 904 தான் இருந்தது. இப்போது 1,392 ஆக ஆக்கப்பட்டிருக்கிறது.

காவலர்கள் உடனுக்குடன் செய்தியை காவல் நிலையத்திற்கு தெரிவிக்கவும், உரிய அதிகாரிகளைக் கொண்டு வந்து சேர்க்கவும், அல்லது குறிப்பிட்ட அளவுக்கு போதுமான அளவுக்கு, காவல் படையினர் இல்லாத இடத்தில் கூடுதலாக காவல் படையினர் வரவேண்டும் என்று அவசியம் வரும் போது, தந்தியின் மூலமாக, வேறு செய்தியின் மூலமாக என்றால் காலதாமதம் ஏற்படும் என்பதால், வாக்கி-டாக்கி, எல்லா நிலையங்களுக்கும் இருக்கவேண்டும். வெளியே ரோந்து போகிறவர்கள் அல்லது குறிப்பிட்ட கலவர இடங்களுக்குச் செல்கிறவர்கள், ஒரு குறிப்பிட்ட குழப்பம் ஏற்படும் இடங்களுக்கு செல்கிறவர்கள், அந்த வாக்கி-டாக்கியை கூட எடுத்துச் சென்று, உடனுக்குடன் காவல் நிலையத்துடன் தொடர்பு கொண்டு அல்லது எங்கு தொடர்பு கொள்ள வேண்டுமோ, அங்கு கொள்ள வேண்டும் என்பதற்காக ஏற்கனவே, 1977-ல் 100 ஆக இருந்தது. 1,800 ஆக வாக்கி—டாக்கி எல்லா நிலையங்களுக்கும் இருக்கவேண்டும் என்று ஆக்கப்பட்டிருக்கிறது.

மோட்டார் வாகனங்கள் எண்ணிக்கையை கூட ஓரளவுக்குப் பெருக்கிக் கொண்டு தான் வந்திருக்கிறோமே தவிர, அது அப்படியே வைக்கப்பட்டு விடவில்லை. 1977-ல் 1808 வாகனங்கள் மொத்தம் இருந்தன. இப்போது 2,634 வாகனங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

இவை அத்தனையும் மோசம் என்று சொல்வதற்கில்லை, அது மட்டுமல்லாமல், காவல் துறையின் திறமையைப் பொறுத்த வரையிலும், நாம் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. சில பல இடங்களில் தவறாக நடக்கின்றார்கள். மீறி விடுகிறார்கள். என்பதையும் மறுப்பதற்கு இல்லை. ஆகவே, ஒட்டு மொத்தமாக காவல்துறையே அப்படி இருக்கிறது என்ற முடிவுக்கு நாம வந்து விடக் கூடாது.

எந்தப் பொறுப்பிலேயும், எந்த இடத்திலேயும், குறை உடையவர்கள், குறைபாடு உடையவர்கள் இருப்பார்கள். 8 பிள்ளைகள் பெற்றிருக்கும் ஒரு குடும்பத்தில் கூட இரண்டு பிள்ளைகள் வெவ்வேறு மாதிரியாக இருக்கக் கூடும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜுலை 10

எனவே, குற்றங்களே நடைபெறவில்லை; செம்மையாக நடைபெறுகின்றது என்று நான் சொல்லவில்லை, ஒட்டு மொத்தமாகக் கணிக்கின்ற போதும், பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற போதும், இருக்கிற நிலைமைகளைக் காணுகின்ற போதும், நாம் எல்லாமே கூட போலீஸ் அதிகாரியாக ஆனால், எப்படி நடக்குமோ என்று எண்ணுகின்ற அளவுக்கு, நாமே இந்தத் துறையிலே பொறுப்பேற்றுக் கொண்டால் எப்படி நடக்கும் என்பதை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, கூடுமான வரையில் செய்கிறார்கள், தவறு செய்கிறவர்களே இல்லை என்று சொல்லவில்லை.

தவறு செய்கிறவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். அதற்கான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு நீக்கப்படுபவர்களும் இருக்கிறார்கள். தற்காலிகமாக நீக்கப்பட்டவர்களும் இருக்கிறார்கள். பதவி உயர்வு கொடுக்கப்படாமலேயே அவர்கள் மீது பிளாக் மார்க் என்று சொல்லப்படுகிற அளவுக்கு, கண்டனக் குறிப்புகள், ஏதேனும் அவர்கள் குற்றச் செயல்கள் புரிந்து இருந்தால், அந்தக் காரணத்தை வைத்து, அவர்கள் மேல் பதவிகளுக்கு செல்லுகின்ற காலத்தில் செல்லவிடாமல் தடுக்கின்ற அளவுக்கு,— வேறு எந்தத் துறையினையும் விட அதிகமாகக்கண்காணிப்புடன் இருந்து சீனியாரிட்டியை மட்டுமே பார்த்து மேலே அனுப்பி விடாமல் தடுத்து நிறுத்தி குற்றம் செய்கிறவர்கள் மேல் மட்டத்திற்குச் செல்லாத அளவுக்கு கூடுமானவரையில் காப்பாற்றி வருவது வேறு எந்தத் துறையையும் விட காவல் துறையில் அதிகமாகும்.

அதிலே சிலபல தவறுகள் இருக்கக்கூடும். அவ்வாறு இல்லையென்று நான் சொல்லவரவில்லை. அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காவல் துறையினருக்கு இருக்க வேண்டிய திறமைகள், அவர்கள் கையாள வேண்டிய முறைகள், குற்றங்களைக் கண்டுபிடிக்க அணுக வேண்டிய முறைகள் இவைகளைப் பொறுத்தவரையில் பார்த்தால், அகில இந்தியாவிலேயும் உள்ள 22 மாநிலங்களைச் சேர்ந்த காவல்துறையினார் ஆண்டுக்கு ஆண்டு Police Meet என்ற முறையில் அவர்கள் ஒரு இடத்தில் சேர்ந்து தங்களுடைய திறமையைக் காட்டி வருகின்ற சமயத்தில் பல்லாண்டுக் காலமாக தமிழ்நாடு காவல் துறையினர் சிறப்பாக வெற்றி பெற்று வருகிறார்கள் என்கின்ற மகிழ்ச்சிகரமான செய்தியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். 'All India Banner' என்று சொல்லுகின்ற அளவிற்கு அதிக அளவில் பதக்கங்களையும், கேடயங்களையும் நற்சான்றிதழ்களையும் பெற்றதால் பேனர்ல் என்று சொல்லக்கூடிய வெற்றிக் கொடியை எடுத்து வருகின்ற நிலைமையை ஏழெட்டு வருட காலமாகவே தமிழ்நாடு காவல்துறையினர் பெற்று வருகிறார்கள்.



1985 ஜுலை 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

1981 ஆம் ஆண்டு பெங்களூரில் நடைபெற்றது. காவல்துறையினரின் திறமைக் கணிப்பு போட்டியில் மொத்தம் உள்ள 24 பதக்கங்களிற 14 பதக்கங்கள் தமிழ்நாட்டிற்கு மட்டும் வந்தது; மொத்தம் உள்ள 11 கேடயங்களில் 2 கேடயங்கள் வந்தன.

1982 ஆம் ஆண்டில் கல்காத்தாவில் நடைபெற்ற போட்டியில், மொத்தம் உள்ள 24 பதக்கங்களில் தமிழ்நாடு மட்டும் 11 பதக்கங்களைப் பெற்றது; மொத்தம் உள்ள கேடயங்கள் 11-இல் தமிழ்நாட்டிற்கு 5 கேடயங்கள் கிடைத்தன.

1983 ஆம் ஆண்டில் லக்னோவில் நடைபெற்ற போட்டியில், மொத்தம் உள்ள 24 பதக்கங்களில் 9 பதக்கங்கள் தமிழ்நாட்டிற்கு வந்தன; மொத்தம் உள்ள 11 கேடயங்களில் 5 கேடயங்களைத் தமிழ்நாடு பெற்றது.

1984 ஆம் ஆண்டில் ஜெய்ப்பூரில் நடைபெற்ற போட்டியில், மொத்தம் உள்ள 24 பதக்கங்களில் 14 பதக்கங்களை தமிழ்நாடு காவல்துறை பெற்றது; மொத்தம் உள்ள 11 கேடயங்களில் 4 கேடயங்கள் நமக்குக் கிடைத்தன.

இதையெல்லாம் நான் எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், இவர்களை ஓரளவிற்குத் திறமை குறைவானவர்கள் என்று நாம் கொள்வதற்கில்லை என்பதற்காகத்தான்.

12,000 புதிய காவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள், மாண்புமிகு ரகுமான்கான் அவர்களும் சுட்டிக்காட்டினார்கள், மற்றவர்களும் சுட்டிக்காட்டினார்கள், 1977 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு வரையில் நியமிக்கப்பட்ட காவலர்கள் மொத்தத்திலே 12,272 பேர்கள்.

1977 ஆம் ஆண்டில் 2,883 பேர்களும், 1978 ஆம ஆண்டில் 1,698 பேர்களும 1979 ஆம் ஆண்டில் 2,999 பேர்களும் 1980 ஆம் ஆண்டிலே 1,646 பேர்களும் என்று இப்படியே பார்த்துக் கொண்டு வருவோமேயானால் 1984 ஆம ஆண்டிலே 3,946 பேர்கள் என்றும் ஆக மொத்தத்தில் 12,272 பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு 1980 ஆம் ஆண்டில் 12,000 காவலர்களை நியமிக்க வேண்டுமென்று முடிவு செய்தது. 1980 ஆம் ஆண்டுக்கும் 1984 ஆம் ஆண்டுக்கும் இடையிலே கூடுதலாக 5,592 காவலர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். தற்போழுது 3,000 காவலர்கள் நியமனம் செய்வதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூலை 10

ஒரு ஆண்டுக் காலமாவது இந்தக் காவலர்களுக்கும், மற்றவர் களுக்கும், சார்-ஆய்வாளர்களுக்கும் பயிற்சி தர வேண்டியதா யிருக்கிறது. கோவையிலே, இப்படி இரண்டு மூன்று இடங் களிலேதான் அதற்கான வசதி இருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு ஆயிரத்து சில்லரை பேர்களுக்குத்தான் முழுப் பயிற்சியையும் அவைகளின் மூலம் நாம் தர முடியும். எனவே, 12,000 பேர் கள் அல்லது ,0,000 பேர்கள் அல்லது 5,000 பேர்கள் என்று ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நாம் அவர்களுக்குப் பயிற்சி தர முடியவில்லை எனவே, 5,000 பேர்கள் நியமிக்கப்பட்டி ருக்கிறார்கள், விரைவில் இன்னும் 3,000 பேர்களை தேர்ந்தெடுக் கப்பட்டு பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள். மீதமுள்ளவர்கள் ஒன்றிரண்டு ஆண்டுக் காலத்தில் நியமிக்கப்படுவார்கள்.

ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட பெரிய அதிகாரிகளைப் பொறுத்தவரையிலே கணக்குப் பார்த்தால், இலஞ்சக் குற்றச் சாட்டுக்கள் சாட்டப்பட்டு, விசாரிக்கப்பட்டு, இலஞ்ச ஒழிப்புத் துறையால் விசாரிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு, வழக்கு தொடரும் அளவிற்கு ஆளானவர்கள், 1980 ஆம் ஆண்டில் 30 பேர்கள், 1981ஆம் ஆண்டில் 36 பேர்கள்; 1982ஆம ஆண்டில் 38 பேர்கள் ; 1983 ஆம் ஆண்டு 33 பேர்கள், 1984 ஆம் ஆண்டு 43 பேர்கள், 1985 ஆம் ஆண்டிலே இதுவரையிலே 12 பேர்கள்.

அதுமட்டுமல்லாமல், பொதுத் தேர்தல் பணிகளைப் பொறுத்த வரையில் நம்முடைய மாநிலத்தில் காவல் துறை மிகச் சிறப்பான முறையில் பணியாற்றியுள்ளது என்பதை நான் இந்த வாய்ப்பிலே குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். இந்தத் தடவை பொதுத் தேர்தலை ஒரே நாளில் நடத்த வேண்டுமென்று சொல்லப்பட்டது. ஏற்கெனவே இரண்டு மூன்று கட்டங்களாக நடத்தினோம். ஆனால் இந்தத் தடவை ஒரே கட்டத்தில், 234 தொகுதிகளிலேயும் ஒரே நாளில் தேர்தலை நடத்த வேண்டும் என்று சொல்லப்பட்ட பொழுது, அதே சமயத்தில் வேறு பல யிடங்களிலேயும் நாடாளுமன்றத் தேர்தல் நடந்ததால் வேறு மாநிலங்களிலேயிருந்து நம் மாநிலத்திற்குக் காவல் துறையினரை ஈர்த்துக் கொள்ளக்கூடிய வழி ஏற்படவில்லை. எனவே, காவல் துறையினரோடு மற்றவர்களையும் சேர்த்து இந்தத் தேர்தலை நாம் நடத்தினோம். வேறு பல மாநிலங்களோடு ஒப்பிடும் பொழுது சிற்சில கலவரங்கள், மாச்சரியங்கள், அடிதடி கலவரங் கள் சிலபல நடைபெற்றன.

(முற்பகல் 11-10)

என்றாலும் பெரிய கலவரங்களாக அல்லது நம்மை அச்சுறுத்து கின்ற வகையிலோ அல்லது நாம் ஆதங்கப்படுகின்ற வகையிலோ, வருந்தத்தக்க வகையிலோ பெரிய நிகழ்ச்சிகள் எதுவும் நடக்க வில்லையென்பதை எல்லாத் துறையினரும் ஏற்றுக் கொண்டிருக்



1985 ஜூலை 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கிறார்கள். பல்வேறு அரசியல் கட்சிகள் ஈடுபட்ட நிலைமை களில் கூட, பாரபட்சமற்ற நிலைமையில், கூடுமானவரையில் ஒழுங்காக, அமைதியை காப்பாற்றப்படுவதில் அவர்கள் முனை ப்புடன் இருந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் நாஞ்சிலார் அவர்கள் எடுத்துரைததற் கிணங்க, காவல் துறையினர் அரசியல் கட்சிகளுடைய கைப் பாவைகளாகவோ, அவர்கள் சொல்கிறபடி விளையாட்டுப் பதுமைகளாகவோ ஆகிவிடக்கூடாது என்ற கொள்கையைப் கொண்டிருக்கிறோம். ஆகவே, கொடுக்கப்பட்டிருக்கிற வாய்ப்பு வசதிகளைக் கொண்டு சிறந்ததோர் உதாரணமாக நடை பெற்றது என்பதை நாம் மனதிலே கொள்ள வேண்டும்.

இத்தேர்தலுக்காக 44,500 காவல் களப்பணியாளர்களும் 4,500 காவல் அதிகாரிகளும், மற்றும் 15,000 முன்னாள் ராணுவ வீரர்களும், 2,000 ஓய்வு பெற்ற காவல் துறையினரும் பயன் படுத்தப்பட்டனர். இதனால் இந்தத் தேர்தலை ஓரளவுக்கு ஒழுங்காக நடத்த முடிந்தது. ஆக, அதிலேயும் நாம் ஓரளவுக்குப் பயன்படுத்திக் கொண்டு வருகிறோம்.

குண்டர்கள் தடைச் சட்டத்தைப் பற்றியும் பேசப்பட்டது. அது மத்திய அரசு இயற்றியது. அதற்குப் பிறகு மாநில அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து நாமும் இயற்றி, அதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறோம். அந்தக் குண் டர்கள் சட்டத்தின் கீழே கைதாகிய ஓராண்டுக் காலம் அவர் களை உள்ளே பாதுகாப்பாக வைத்துவிட யாரும் முடியாது. அதற்கென்று ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குப் பின்னர் புகார் செய்ய வேண்டும். அதற்கென்று ஒரு குழு இருக்கிறது. குழு பார்த்து முடிவு செய்ய வேண்டும். அவர்களை உள்ளே வைத்தது சரிதானா என்று கவனிக்க வேண்டும். சரியல்ல என்று அவர்களை விடுதலைச் செய்யச் சொல்லி விடுவார்கள் என்றால், அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்வதற்குக் கூட, ரிட் போடுவதற்குக் கூட வாய்ப்பிருக்கிறது. அப்படிப் பாதுகாப் போடு தான் இந்தச் சட்டம் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் சமுதாயத்தில் கேடு விளைவிக்கின்ற சமூகத்திற்கு விரோத மாக இருக்கிற, சமூக விரோதிகளாக இருக்கிறவர்களைத் தடுத்து நிறுத்துவதன் மூலம், குற்றம் புரிபவர்களைப் பெரும் அளவுக்கு நாம் குறைக்க முடிகிறது.

1982 ஆம் ஆண்டு 1,382 பேர்கள் இந்தக் குண்டர்கள் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டார்கள். 1983-லே 257 பேர்கள், 1984-லே 532 பேர்கள். இதனால் குற்ற எண்ணிக்கை ஓரளவுக்குக் குறைந்து வருகிறது. சமூக விரோதச் செயல்களும் குறைந்து வருகின்றன. குறிப்பாக,

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜுலை 10

சென்னை நகரத்தில் 1982 முதல் 30–6–1985 முடிய 597 பேர்கள்
மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதிலே குண்டர்கள் என்ற
கணக்கிலே வருகின்றவர்கள் 45 பேர்கள். கள்ளச் சாராயம்
காய்ச்சுவோர் என்ற பட்டியலில் வருகிறவர்கள் 552 பேர்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் குறிப்
பிட்டது போன்று இவ்வளவு தன்மைகள் இருந்தாலும் கூட
கள்ளச் சாராயம் காய்ச்சுவதிலே தொடர்ந்து சட்ட விரோதமாக
ஈடுபடுகின்ற காரணத்தால்தான் இந்தச் சட்டத்தின் மூலம் 552
பேர்களை நாம் கைது செய்து வைத்திருக்கிறோம். வேறு பல
கலவரங்கள், வேறுபல நிலைமைகளில் ஈடுபட்டு, தொடர்ந்து
தொல்லை கொடுக்கின்றவர்கள் என்ற வகையில் 45 பேர்களைத்
தான் நாம் வைத்திருக்கிறோம்.

காவல் துறையினரைப் பொறுத்த வரையிலும் அவர்களுக்கு
அளிக்கப்பட்டு வருகின்ற மலிவு விலை உணவுப் பொருள் வழங்கும்
திட்டம் சரியாகச் செயல்படவில்லை யென்று சில உறுப்பினர்கள்
இங்கே சுட்டிக் காட்டினார்கள். அப்படிப்பட்ட நிலைமையிலே
இல்லை. தமிழக அரசு மலிவு விலையில் இன்றியமையாத உணவுப்
பொருள்களைப் பொது விநியோகத்தில் வழங்கப்படும் அளவுக்கு
ஏற்றவாறு, அங்கு எந்த அளவு வழங்கப்படுகிறதோ அதே அள
வுக்குத்தான் காவல் துறையினருக்கும் வழங்கப்பட வேண்டு
மென்ற திட்டத்தின் அடிப்படையில் 1–10–1980 ஆம் ஆண்டு
முதல் செயல்பட்டு வருகின்றது.

பொதுமக்களுக்கு நாம் வழங்கியது 20 கிலோவாக இருந்து
12 கிலோவாகக் குறைந்தபொழுது, காவலர்களுக்கும் 12
கிலோவாகக் குறைத்தோம். பொது மக்களுக்கு மீண்டும் 20
கிலோ வரையிலும் உச்ச வரம்பாக வைக்கலாம் என்று சொல்லப்
பட்டபொழுது, காவலர்களுக்கு அந்த 20 கிலோ வரை போகலாம்
என்று வைத்தோம். பொது மக்களுக்கு என்ன வரையறை
வைத்திருக்கிறோமோ அதே வரையறை காவல் துறையினருக்கு
உண்டு. ஆனால் காவல்துறையினருக்கு வழங்குகிற உணவுப்
பொருள்களுக்கு சலுகை உண்டு, சலுகை தரப்படும் என்ற அடிப்
படையில் சராசரி ஒரு காவலருக்கு இதன் மூலம் மாதம் ஒன்றுக்கு
ரூ. 70 மிச்சப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு இதன் மூலம்
கூடுதல் செலவு ரூ. 2⅓ கோடியிலிருந்து ரூ. 3 கோடி வரை
ஆகிறது. இப்பொழுது நாம் தருகின்ற அளவு 4 யூனிட் அளவுக்குக்
கணக்கு எடுத்துக் கொண்டால் ஒரு குடும்பத்திலே இருப்பவர்
களை 4 யூனிட் என்று எடுத்துக் கணக்கிட்டால், அரிசி 20 கிலோ,
உச்ச அளவு கோதுமை 8⅔4 கிலோ, சர்க்கரை 1.8 கிலோ, ரவை
3 கிலோ, பனை எண்ணெய் 1 கிலோ, துவரம் பருப்பு 4 கிலோ,
உளுத்தம் பருப்பு, 4 கிலோ, ஆக பொதுமக்களுக்கு கொடுக்கிற
அதே அளவுதான் இவர்களுக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது.
அதிலே ஒன்றும் வேறுபாடில்லையென்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.



1985 ஜுலை 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தமிழ்நாடு காவலர்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்தித் தர
வேண்டும், பெரும்பாலான காவலர்களுக்கு இருக்கிறது என்றெல்
லாம் சொன்னார்கள். ஒரு சிலருக்கு ஆங்காங்கு இல்லை. அப்படி
இருக்கிற வீடுகளும் நவீனப்படுத்தப்பட வேண்டும், புதுமைப்
படுத்தப்பட வேண்டும், ஒரு நூற்றாண்டுக்கு முன்னால், 75,
80 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட வீடுகள், இல்லங்கள்
அவர்களுக்கு வசதி வாய்ப்பாக இல்லையென்ற குற்றச்சாட்டை
எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அந்த அடிப்படையிலே நிதி ஆதாரத்திற்கு ஏற்ப, நிதி வச
திக்கு ஏற்ப நாம் வீடுகளைக் கட்டித் தருகின்ற பணியை தமிழ்
நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகச் செய்கிறோம்.
காவல்துறை இயக்குநர் தரத்தில் ஒரு தனி அலுவலரைக் கொண்ட
காவலர் வீட்டுவசதி வாரியம் ஒரு கோடி ரூபாய் மூலதனத்தில்
இயங்கி வருகிறது. திருச்சி மாவட்டத்தில் 164 இலட்சம் ரூபா
யில் நாவல்பட்டுத் திட்டத்தின் கீழ் 670 வீடுகள் காவல் துறை
யினருக்குக் கட்டப்பட்டுள்ளன. அதைப் போன்று கோவை
மாவட்டத்தில் 194 இலட்சம் ரூபாயில் கணபதி திட்டத்தின் கீழ்
வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

நாவல்பட்டு திட்டத்திற்கென காவல் துறையினருக்கு முன்
பணமாக அரசு ஒரு கோடி ரூபாயும், இவ்வாரியத்திற்கு வீடுகள்
கட்டுவதற்கு 37 இலட்சம் ரூபாயும் அளித்துள்ளது.

மேலும் நெல்லை மாவட்டத்தில் திம்மராஜபுரம், மதுரை
மாவட்டத்தில் வடபழஞ்சி, வடாற்காடு மாவட்டத்தில் தொரப்
பாடி, காரைக்குடியில் கழனிவாசன், நாமக்கல்லில் வசந்தாபுரம்
ஆகிய இடங்களில் குடியிருப்பு கட்டும் பணி மேற்கொள்ளப்பட
விருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்பு
கிறேன்.

காவலர்களுக்கு சலுகை அளிப்பதிலும் காலத்திற்கு ஏற்ப
மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்
டிருக்கிறார்கள். 1977-ல் வீட்டு வாடகைப்படி 30 ரூபாயாக
இருந்ததை இப்போது 135 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள்.
அதைப் போன்று கூடுதல் நேரப்பணி ஊதியம் 2 ரூபாயாக இருந்
ததை இப்போது 7 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். உணவுப்
படி ரூ. 1·50 ஆக இருந்ததை ரூ. 4.50 ஆக உயர்த்தப்பட்டிருக்
கிறது. இடர்ப்படி ஏற்கெனவே இல்லாமல் இருந்தது. 1980-
லிருந்து 20 ரூபாய் ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. அதைப்
போன்று உடுப்பு பராமரிப்புப் படி முன்னால் இல்லாமல் இருந்
தது. 1981-முதல் அதற்கு 15 ரூபாய் வழங்கப்பட்டு வரு
கிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூலை 10

அடுத்து, கொலைக் குற்றங்கள் அளவு பெருகி விட்டது. நாளுக்கு நாள் இந்தக் குற்றங்கள் எல்லாம் பெருகிவருகின்றன என்று தங்களுக்குக் கிடைத்த ஆதாரங்களை, தகவல்களை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அவர்கள் உண்மையைச் சொல்லவில்லை என்று நான் குற்றஞ்சாட்டவில்லை அவர்களுக்குக் கிடைத்த தகவல்களை வைத்து சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றிய உண்மை நிலைமையை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அகில இந்திய அளவில் எல்லா மாநிலங்களிலும் ஏற்பட்டிருக்கின்ற நிகழ்ச்சிகளைப் பற்றி ஒரு விரிவான அறிக்கையை ஆண்டுக்காண்டு தயாரித்து மத்திய அரசு அனுப்பி வருகிறது. அந்த அடிப்படையிலே பார்த்தால் கூட, நம்முடைய மாநிலத்தில் நான் குற்றங்களே நடக்கவில்லை என்று சொல்லவில்லை, ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழகத்தில் குறைவாக நடந்திருக்கின்றன. மற்றமாநிலங்களைவிட ஓரளவுக்குக் குறைவாகத்தான் தமிழ்நாட்டில் குற்றங்கள் நடை பெற்றிருக்கின்றன என்பதை அந்த புள்ளிவிவரங்கள் அடிப்படையில் தெரிவிக்க விரும்புகிறேன். 1984 ஆம் ஆண்டில் கொலைகள் மட்டும் உத்தரப்பிரதேசத்தில் 6218; மத்திய பிரதேசத்தில் 2,610 மகாராட்டிரத்தில் 1,840; ஆந்திரப்பிரதேசத்தில் 1,591; தமிழ் நாட்டில் 1,412. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது உத்தரப்பிரதேசத்தில் மட்டும் கிட்டத்தட்ட இரண்டு மடங்குக்குமேல் கொலைக்குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. தமிழ்நாட்டில் 1,412 என்று இருக்கும் போது உத்தரப்பிரதேசத்தில் 6,218 குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன.

கற்பழிப்பு சம்பந்தப்பட்ட குற்றங்களை எடுத்துக்கொண்டால் மத்தியப் பிரதேசத்தில் 1,305; மகாராட்டிரத்தில் 552, ஆந்திரப் பிரதேசத்தில் 372, தமிழ்நாட்டில் 215 என்று இருக்கிறது. இதுவும் ஆக வேண்டுமா என்றால் ஆகக் கூடாது. இருந்தாலும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மற்ற மாநிலங்களைக் காட்டிலும் இங்கே குறைவாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1984 ஆம் ஆண்டில், நடைபெற்ற கூட்டுக் கொள்ளைகளை எடுத்துக் கொண்டால் மத்தியப் பிரதேசத்தில் 440; மகாராட்டிரத்தில் 380; உத்தரப் பிரதேசத்தில் 360; ஆந்திரப்பிரதேசத்தில் 278; தமிழ்நாட்டில் 101, பலர் சேர்ந்து நடக்கின்ற கூட்டுக் கொள்ளையைப் பொறுத்தமட்டில் மற்ற மாநிலங்களைவிட இந்த அளவுக்கு குறைவாக தமிழ்நாட்டில் நடைபெற்றிருக்கின்றன.

கூட்டுக் கொள்ளை இல்லாமல் சாதாரண கொள்ளைகள் என்று எடுத்துக் கொண்டால் உத்தரப்பிரதேசத்தில் 6,578; மத்தியப் பிரதேசத்தில் 2,512 ; மகாராட்டிரத்தில் 2,158 ; ஆந்திரப் பிரதேசத்தில் 557 ; தமிழ்நாட்டில் 338 என்று அளவில் இருக்கிறது.



1985 ஜூலை 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

1984-ல் நடைபெற்ற திருட்டுக் குற்றங்களில் கணக்கைப் பார்த்தால் மத்தியப் பிரதேசத்தில் 39,918 ; மகாராட்டிரத்தில் 29,498 ; தமிழ்நாட்டில் 25,626 ; ஆந்திரப் பிரதேசத்தில் 20,848. தமிழ் நாட்டைவிட ஆந்திரத்தில் சற்று குறைந்திருக்கிறது. தமிழ்நாட்டில் 5,000 குற்றங்கள் கூடுதலாக இருக்கின்றன.

அதுமட்டுமல்ல, கண்டுபிடிக்கப்பட்ட பொருள்கள் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்களும் வேறுசில உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள், நான் முதலிலேயே சொன்னேன். பல்வேறு குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. கண்டுபிடிக்க முடியாமல் செய்யப்படுகின்ற குற்றங்களும் இருக்கின்றன. முன்னேற்பாடாக சிலபல குற்றங்களை திட்டமிட்டு செய்கின்றவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைக் கண்டுபிடித்தாலும் தடயங்கள் சரியாகக் கிடைப்பதில்லை; தைரியமாக யாரும் சாட்சி சொல்ல வருவதில்லை. அப்படியே வந்தாலும் வழக்குமன்றம் ஏதாவது ஒரு விதியைக் கொண்டு அடிப்படை உரிமை காப்பாற்றப்படவில்லை என்று சொல்லி, குற்றவாளியை விடுதலை செய்யக்கூடிய சூழ்நிலைகள் பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருக்கின்றன என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள்.

(முற்பகல் 11–20)

அந்த வகையில் காண்கிறபோது களவாடப்பட்ட பொருட்களில் மீட்கப்பட்ட பொருட்களைக் கணக்கிட்டுப் பார்த்தால் 1975 ஆம் ஆண்டில் அகில இந்திய விகிதாச்சாரம் 27.3 அதாவது களவாடப்பட்டபின் அவற்றிலே கண்டுபிடிக்கப்பட்டவை என்று சொல்லப்படுகின்ற அந்த சதவீதம் அகில இந்திய அளவில் 27.3 ஆனால் தமிழகத்தினைப் பொறுத்தவரையில் 1975 ஆம் ஆண்டு 59 சதவீதம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. இதைப் பொறுத்த வரையில் 1980 ஆம் ஆண்டு அகில இந்திய சராசரி 22.3 தமிழ்கத்தைப் பொறுத்தவரையில் 72.5 சதவீதம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. 1984 ஆம் ஆண்டில் அதாவது சென்ற ஆண்டு இந்த அகில இந்திய சராசரி 25 சதவீதம். தமிழகத்தைப்பொறுத்த வரையில் 65.5 சதவீதம் என்று இருக்கின்றது. ஆக கண்டுபிடிக்கப்படாமல் போக பல காரணங்கள் இருக்கின்றன. வேண்டுமென்றே சிலபேர் விட்டுக்கொடுத்துவிட்டார்கள் என்று கூட மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். இருக்கக் கூடும். அதை நான் மறுக்கவில்லை.

ஆங்காங்கே இருக்கின்ற காவல்துறை அதிகாரிகள் பேரம் பேசி விட்டுவிடுகிறார்கள் என்று கூட சொல்கிறார்கள். இந்த 35-க்குள் அது வந்தாலும் வரக்கூடும். அப்படிப்பட்ட இடங்களிலும் கூட அதுபற்றிக் கண்டறிந்து நிலைமையை எடுத்துச் சொன்னால் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு

வருகின்ற மனப்பான்மையைத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கூறிக்கொள்ள நான் விரும்புகிறேன்.

கொலைகளைப் பொறுத்தவரையில் பிற நகரங்களில் எப்படி நடைபெற்றது என்று கணக்குப் பார்த்து அதுபற்றி மன்ற உறுப்பினர்கள் அறிவது பயனுள்ளதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். பம்பாயைப் பொறுத்தவரையில் 1983-ல் 261 கொலைகள் நடைபெற்றன. டெல்லியைப் பொறுத்தவரையில் 245 கொலைகள் நடைபெற்றன. ஹைதராபாத்தில் 100 கொலைகள் நடைபெற்றன. கல்கத்தாவில் 95 கொலைகள் நடைபெற்றன. பெங்களூரில் 68 கொலைகள் நடைபெற்றன. சென்னையிலே 33 கொலைகள்தான் நடைபெற்றன 1983 ஆம் ஆண்டில்.

1984 ஆம் ஆண்டில் பம்பாயில் 293 கொலைகள். டெல்லியில் 317 கொலைகள், சென்னையைப் பொறுத்தவரையில் 43 கொலைகள்தான் நடைபெற்றிருக்கின்றன. அந்த வகையில் பார்த்தால் ஓரளவுக்குக் கணிசமாகக் குறைந்துதான் இருக்கின்றது.

பிற நகரங்களில் குற்றங்கள் எவ்வளவு என்று காண்கின்ற போது மாநகராட்சியினுடைய மக்கள் எண்ணிக்கை மாறும். எனவே அந்த எண்ணிக்கையின் கணக்குப்படி பார்த்தால், அதாவது ஒரு இலட்சம் பேருக்கு எவ்வளவு குற்றங்கள் நடைபெறுகின்றன என்று பார்த்தால் கொலையைப் பொறுத்தவரையில் பெங்களூரில் 2.4 ; பம்பாயில் 2.3: கல்கத்தாவில் 2.8; டெல்லியில் 3; ஹைதராபாத்தில் 2.1; சென்னைப் பொறுத்தவரையில் அந்த எண்ணிக்கை ஒன்றே ஒன்றுதான்.

கற்பழிப்பு என்பதைப் பொறுத்தவரையில் அந்த வகையில் பார்த்தால் பெங்களூரில் ·8 பமபாயில் ·7: கல்கத்தாவில் ·7ம் டெல்லியில் 1.5; ஹைதராபாத்தில் ·6 ஆனால் தமிழகத்தில் .3 தான்.

வழிப்பறி கொள்ளை என்பதைப் பொறுத்தவரையில் பெங்களூரில் 2.2;. பம்பாயில் ·5; கல்கத்தாவில் 1.4; டெல்லியில் 1, ஹைதராபாத்தில் ·6; சென்னையில் ·2.

கொள்ளையைப் பொறுத்தவரையில் பெங்களூரில் 15.6; பம்பாயில் 4.2; கல்கத்தாவில் 5.4; டெல்லியில் 10.8 ஹைதராபாத்தில் .6; சென்னையில் 2.1.

கலவரம் என்பதைப் பொறுத்தவரையில் பெங்களூரில் 22.5 பம்பாயில் 3.4; கல்கத்தாவில் 25.5; டெல்லியில் 6.7; ஹைதராபாத்தில் 39.6; சென்னைப் பொறுத்தவரையில் 6.9





இவ்வாறு இந்த விவரங்களை எல்லாம் நான் ஏன் கூறுகிறேன் என்று சொன்னால் நாம் ஓரளவுக்குச் சமாளித்துக்கொண்டு வருகிறோம் என்பதைச் சொல்வதற்காகத்தான்.

அடுத்து குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும் காவல் துறையினர் பல வழக்குகளைத் தாமதப்படுத்துகிறார்கள்; கண்டுபிடிக்காமல், கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறார்கள் என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அதற்கான காரண காரிய விளக்கங்களை காவல் துறையினரும் மற்றவர்களும் கூர்ந்து கவனித்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஒரு குற்றம் நிகழ்ந்து விட்டால் உடனடியாக அந்தக் குற்றவாளி கண்டுபிடிக்கபடுகின்ற வகையில் 24 மணி நேரத்திற்குள்ளாக காவல் துறையினர் உஷாராக நடவடிக்கை எடுத்து அந்தக் குற்றங்களை கண்டுபிடித்த வகையில் சென்ற ஆண்டு அதாவது அண்மையில் நடைபெற்றவைகளை மட்டும் நான் குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது நலம் பயக்கும் என்று கருதுகிறேன்.

சேலம் மாவட்டம் பாலக்கரணூர் கிராமத்தைச் சேர்ந்த தங்காயி அம்மாள் 18—2—1984 அன்று கொலை செய்யப்பட்டாள். ரூபாய் 10,000 மதிப்புள்ள நகைகள் களவாடப்பட்டன. குற்றம் நடந்த அன்றே இரு எதிரிகளும் கைது செய்யப்பட்டு இழந்த சொத்துக்கள் அன்றே மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது.

பெரியார் மாவட்டம் பவானியைச் சேர்ந்த பொன்னம்மாள் வயது 60, 25,000 ரூபாய் பெறுமானம் உள்ள நகைகளுக்காக 9—2—1984 அன்று கொலை செய்யப்பட்டாள். உடனடியாகத் துப்பு துலக்கப்பட்டு எதிரி கைது செய்யப்பட்டான். வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது.

செங்கை கிழக்கு மாவட்டம் செங்குன்றத்தில் 30—9—84 அன்று சில நபர்கள் பின் வாசல் வழியாக வீட்டுக்குள் புகுந்து நாட்டு வெடி குண்டுகளை வீசி ரூ. 19,000 மதிப்புள்ள பொருட்களைக் கொள்ளை அடித்தனர். மேலும் அண்டையிலுள்ள இரண்டு வீடுகளிலும் தங்கள் கைவரிசையைக் காட்டினர். தப்பித்துச் சென்று விட்டனர். இரண்டு மணிநேரத்திற்குள் துப்பு துலக்கி எதிரிகள் கைது செய்யப்பட்டனர்.

இராஜமங்கலம் கிராமத்தில் 19—11—1984 இரவு ஆறு குற்றவாளிகள் ரூ. 10,000 மதிப்புள்ள தங்க நகைகளை கொள்ளையடித்து, ஒரு நபரையும் தாக்கினர். தகவல் அறிந்த காவல் துறையினர், துரித நடவடிக்கையால் எதிரிகளை வளைத்துக் கொண்டனர். காவலர்கள் தாக்கினர். பாதுகாப்பிற்காக துப்பாக்கியால் சுட்டனர். எதிரி ராஜேந்திரன் காயமுற்று இறந்தான் மற்றவர்கள் கைது செய்யப்பட்டனர்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூலை 10

ஸ்ரீமுஷ்ணம் (தென்னாற்காடு மாவட்டம்) அருள்மிகு பூவராகசுவாமி கோயிலில் 21—12—1984 அன்று களவாடப்பட்ட ரூ. 70,000 மதிப்புள்ள தங்க கிரீடத்தை காவல் துறையினரின் துரிதநடவடிக்கை காரணமாக அன்றே குற்றவாளி கைது செய்யப்பட்டு சொத்து மீட்கப்பட்டது.

மதுரை கே. கே. நகரில் 9—1—1984 அன்று ஒருவரின் வீட்டில் ரூ. 3½ லட்சம் மதிப்புள்ள நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன. இதனைச் சவாலாக ஏற்ற காவல் துறையினர் துப்பு துலக்கி, குற்றவாளிகளை கைது செய்து, சொத்து மீட்கப்பட்டிருக்கிறது. நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

கோவை நகரில் ஒரு லாட்ஜில் 26—6—1984 அன்று ஒருவர் புகுந்து ரூ. 80,000-ஐ களவாடினார். எதிரி விரைவில் கைது செய்யப்பட்டார். பணமும் மீட்கப்பட்டது. குற்றவாளி தண்டிக்கபட்டார்.

கள்ளக்குறிச்சி கூட்டுறவு வங்கியில் அடமானம் வைக்கப்பட்ட ரூ. 43½ லட்சம் பெறுமான நகைகள் 4—11—1984 அன்று களவாடப்பட்டன. அதே வங்கியின் நகை மதிப்பாளரும் மற்றும் நால்வரும் காவலர் வீசிய வலையிலிருந்து தப்ப முடியவில்லை. அத்தனை நகைகளும் மீட்கப்பட்டன.

திருவொற்றியூரில் 1—6—1985 அன்று இந்தியன் மெட்டல் தொழிற்சாலையிலிருந்து ரூ.1 லட்சத்து 80 ஆயிரம் களவாடப்பட்டது. பழைய தொழிலாளி கைது செய்யப்பட்டு, பணமும் மீட்கப்பட்டது. அதேபோன்று சிலபல வழக்குகளிலே உடனடியாக துப்பு துலக்காமல் இருந்திருக்கலாம். துப்பு உடனடியாக துலங்கவில்லை என்பதற்காக எந்த நடவடிக்கைகளையும், அல்லது வழக்குகளையும் காவல் துறையினர் கைவிட்டு விடவில்லை. 1 ஆண்டுக்காலம், 2 ஆண்டுக்காலம் ஆனாலும் அந்த வழக்குகளிலே தடயங்கள் கிடைக்குமா, அதை வைத்துக் கொண்டு வழக்குகளை தொடுக்கலாமா கைது செய்யலாமா என்று ஆய்வுகள் செய்து கொண்டுதான் இருக்கின்றனர்.

இங்கே கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். வணிக ஒற்றுமை என்கிற ஏட்டிலே இந்தப் பேரவையைப் பற்றியும், பேரவையின் உறுப்பினர்களைப் பற்றியும் உரிமை மீறுகின்ற வகைளில் கேலியாகவும், கிண்டலாகவும், கேலி செய்து எழுதியதற்கு அவர்களிடத்திலே கேட்டபோது, அப்படித்தான் என் மனப்போக்கு, அப்படித்தான் எழுதுவேன், அதை மாற்றிக் கொள்ள மாட்டேன், அதற்காக வருத்தமோ மன்னிப்போ தெரிவிக்க மாட்டேன் என்று சொல்கிற அளவுக்கு வந்தபோது, இந்தப் பேரவையினுடைய ஒப்புதலைப் பெற்று, இரண்டு வாரகாலம் அவருக்கு சிறை தண்டனையை பேரவைத் தலைவர்



1985 ஜூலை 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். ஆகவே அவைத் தலைவருக்கு சட்டமன்ற நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் சிறையில் அடைக்கவோ, சிறைத்தண்டனை கொடுக்கவோ உரிமை உண்டு. அதே மாதிரி காவல் துறையினருக்கு அவரைக் கைது செய்ய உத்திரவிட்டபோது அவர் சென்னையிலேயே இல்லை. பிடிக்க வேண்டும் என்றும் உத்திரவிடப்பட்டிருக்கிறது. அவர் இன்னமும் கிடைக்காமல் தலைமறைவாகியிருக்கிறார். அவர் எப்படியும் வீட்டிற்கு வந்துதான் ஆக வேண்டும். ஆபீசிற்கு வந்துதான் தீர வேண்டும். இருந்தாலும் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று நீண்ட நாட்களாக துப்பு துலக்காமல் இருந்த சில பெருங் குற்றங்களை காவல் துறையினர் தம் விடா முயற்சியின் காரணமாக கண்டுபிடித்துள்ளனர். அவைகள் மீது வழக்கும் தொடரப்பட்டுள்ளன.

அந்த வகையில், 1983ல் தியாகராய நகரில் வயது முதிர்ந்த தம்பதிகள் தாக்கப்பட்டு மரணமடைந்தனர். ரூ. 1,00,000 மதிப்புள்ள நகைகள் மற்றும் பணம் களவாடப் பட்டன. இதேபோன்று வேப்பேரியிலும் ஒரு மூதாட்டி கொலை செய்யப்பட்டு ரூ. 40,000 மதிப்புள்ள நகைகள் களவாடப் பட்டன. நீண்ட நாட்கள் துப்பு துலங்கவில்லை. காவலரின் புலன் விசாரணையில் தொய்வு ஏற்படவில்லை. கடைசியில் தப்பிச் சென்ற வேலைக்காரியையும், அவளது கணவனை யும் இரண்டு ஆண்டுகள் கழித்து கைது செய்துள்ளனர். பொருட் கள் மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது.

சென்னை புறநகர் பகுதிகளில் பல இடங்களில் 10—6—1983 முதல் 27—6—1984 வரை நடந்த 13 வழக்குகளில் சம்பந்தப் பட்ட முகமூடிக் கொள்ளையர்கள் கூட்டத் தலைவனையும் அவன் கூட்டாளிகள் 5 நபர்களையும் காவல் துறையினர், அவர்கள் டெல்லிக்குச் சென்றிருக்கிறார்கள் என்று கண்டறிந்து தொடர்ந்து டெல்லிக்குச் சென்று அவர்களை டெல்லியில் கைது செய்துள்ளனர். வழக்குகள் விசாரணையில் உள்ளது.

அதேபோல கோவையில் 16—2—1984 அன்று இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மதிப்புள்ள தங்க நகைகள் அஞ்சலக ஊர்தியில் எடுத்துச் செல்லும்போது களவாடப்பட்டது. பாதுகாப்புக்குச் சென்றவர்களின் கவனம் திசை மாற்றப்பட்டது. புலன் விசாரணை தொடர்ந்து நடைபெற்றபோது இறுதியில் குற்றவாளி பிடிபட்டார். அவர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூலை 10

[முற்பகல் 11-30]

விருத்தாசலம் கடை வீதியிலுள்ள ஒரு நகைக்கடையில் 19—3—1984 அன்று ரூ. 35,000 மதிப்புள்ள நகைகள் களவாடப் பட்டன. காவல் துறையினரின் அயராத முயற்சியின் காரண மாக வழக்கு கண்டு பிடிக்கப்பட்டது. குற்றவாளி தண்டிக்கப் பட்டான்.

7—1—1984 அன்று நாமக்கல் மத்திய கூட்டுறவு வங்கியின் காசாளர், பணம் எண்ணும்போது அவரது கவனத்தை திசை திருப்பி ரூ. 47,400 களவாடப்பட்டது. குற்றப் புலனாய்வுத் துறையினரின் கவனம் திருச்சி ராம்ஜி நகரை நோக்கியது. எதிரி கைது செய்யப்பட்டு பணம் மீட்கப்பட்டது. வழக்கு நீதி மன்ற விசாரணையிலுள்ளது.

துவரங்குறிச்சி அடுத்த முருகபுரியில் 14—8—1983 அன்று ஒருவரின் ரூ. 4,16,000 மதிப்புள்ள தங்க, வெள்ளி நகைகள் களவாடப்பட்டன. குற்றப் புலனாய்வுத்துறையினர் விசாரணையில் சோர்வடையவில்லை. மூவரைக் கைது செய்து முழுப் பொருட்களையும் கைப்பற்றினர். வழக்கு நீதிமன்றத் தில் உள்ளது.

2—8—1984 அன்று மீனம்பாக்கம் விமான நிலையத்தில் ஏற்பட்ட வெடிகுண்டு விபத்தில் 30 நபர்கள் உயிரிழந்தனர். 37 நபர்கள் காயமுற்றனர். முறையாக புலன் விசாரணை மேற் கொள்ளப்பட்டது. சம்பந்தப்பட்ட 10 பேர்கள் கைது செய்யப் பட்டனர். வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

சென்னையை அடுத்த விருகம்பாக்கத்தில் 24—2—1984 அன்று ஜெயப்பிரகாஷ் என்பவர் மனக்கசப்பினால் தனது தங்கை, அவர்தம் கணவர், குழந்தைகள், உறவினர் உட்பட 9 நபர்களைக் கொலை செய்துவிட்டு, பிரேதங்களை வீட்டுக்குள் பூட்டிவைத்து விட்டு தலைமறைவாகி விட்டார். காவல் துறையி னருக்கு 27—2—1984-ல் தகவல் கிட்டியது. இது ஒரு சவாலாக அமைந்தது. புலன் விசாரணை முடுக்கி விடப்பட்டது. குற்றம் பதிவு செய்யப்பட்ட மூன்று நாட்களுக்குள் எதிரி கைது செய்யப்பட்டான். நீதிமன்றத்தில் எதிரிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அந்த மரண தண்டனை இப் போது மேல்முறையீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த மரண தண்டனை விதிக்கப்பட்டது அப்படியே இருக்கிறது.

கர்நாடக வங்கியின் மேலாளர் வங்கியிலே இரவில் கொலை செய்யப்பட்டார். முதலில் துப்பு துலங்காமலிருந்தது. அந்த வங்கியிலேயே வேலை செய்தவர் பல லட்சக் கணக்கான ரூபாயை கொள்ளையடித்துச் சென்று விட்டார் என்றும், அது



1985 ஜூலை 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

யாராக இருக்கக் கூடுமென்றும் புலன் விசாரணை செய்த வகையில், அதை கண்டுபிடித்து கர்நாடக மாநிலத்தில் அவரை யும், அவர் தகப்பனாரையும் கைது செய்தார்கள். அவர்கள் பணத்தை பரணில் வைத்திருந்தார்கள். அதையும் கைப்பற்றிக் கொண்டு வந்தது மட்டுமல்லாமல், அந்த வழக்கும் தொடுக்கப் பட்டு, வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. அதற்கிடையில் கொலையுண்டவரின் மனைவி தனக்கு 6 லட்சம் ரூபாய் அந்த வங்கி, தன்னுடைய கணவர் வேலை செய்து கொண்டிருந்த போது படுகொலை செய்யப்பட்டதன் காரணமாக, தன்னுடைய குடும்பத்தைக் காப்பாற்ற வழங்க வேண்டுமென்று வழக்கு தொடுத்தார்கள். உயர் நீதிமன்றத்தில் நீதிபதி 2 லட்சம் ரூபாயை இடைக்காலமாக பாங்கிலே வைத்து, டெபாசிட்டாக வைத்து அதிலிருந்து வருகிற வட்டியை கொலையுண்டவரின் மனைவிக்கு தரவேண்டுமென்று உத்தரவிட்டார்கள். அந்த வங்கியினர் நாங்கள் 15 ஆயிரம் தான் தருவோம். அவர் வேலை நேரத்தில், அதாவது வித்தின் தி ஓர்க்கிங் டைமில், கொலை செய்யப்படவில்லை. இரவு 10 மணிக்கு வேலை செய்து கொண்டிருந்திருக்கிறார் என்பதை காரணம் காட்டி மேல் முறை யீட்டை செய்திருக்கிறார்கள். அதிலே 2 லட்சம் ரூபாய் வைப் புத் தொகை வைக்க வேண்டுமென்று ஒரு குறிப்பு சொல்லப் பட்டிருக்கிறது. அந்த வட்டித் தொகையை அந்த அம்மையா ருக்கு கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்து, புதிய காவல் நிலையக் கட்டிடங்களைக் கட்ட வேண்டுமென்று உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். 1982 முதல் 1985 வரையில் 85 புதிய காவல் நிலையங்கள் ஆங்காங்கு கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் கட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

சென்னை நகரத்தில் வாகன வசதிகளைப்பற்றி சொன்னார்கள். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வந்த குறிப்பை உறுப் பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் நாஞ்சிலார் அவர்களும் சுட்டிக்காட்டினார்கள். அதிலே இந்தியன் எக்ஸ்பிரசில் சொல்கிறபோது, 'அக்கார்டிங் டு தி அவெய்லபிள் இன்பர்மேஷன்' என்று தான் போட்டிருக்கிறார் கள். அவர்களுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சொல்லி இருக்கிறார்கள். எந்த ஆட்சியையும் சில ஏடுகள் ஆதரிக் கின்றன, சில ஏடுகள் நடுநிலையில் இருந்து ஆதரிக்கின்றன. சில ஏடுகள் பகைத்துக் கொண்டு வருகின்றன. மூன்றாவது ரகத்தைச் சேர்ந்தது இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை. அவர் களுக்கு கிடைத்த தகவலை வைத்துக் கொண்டு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் உண்மையான நிலையை விளக்க விரும்புகிறேன். (குறுக்கீடு). கிலையபிள் இன்பர்மேஷன் என்னவென்பது கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

ஆகவே அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அது பத்திரிகையில் வந்து காவல் துறைக்கு ஒரு இழுக்கை ஏற்படுத்த வேண்டும். அதை கண்காணிக்கின்ற அரசுக்கு இழுக்கு ஏற்படுத்த வேண்டுமென்ற அடிப்படையிலே ஏற்படுத்தப்படுகிற உள்நோக்கம் தான் முக்கியம். அதைத்தான் சொல்ல விரும்புகிறேனே தவிர வேறல்ல. அப்படி தெரிந்த கருத்தை வைத்துக்கொண்டு, உண்மையோ, தவறோ இப்படிப்பட்ட நிலைமையென்று எடுத்துச் சொல்வது எங்களை உற்சாகப்படுத்துகிற தன்மையில் பயன்படுகிற ஒன்று தான். இல்லையென்று சொல்லவில்லை. இருக்கிற குறைபாடுகளை செய்தித் தாள்கள் எடுத்துச் சொல்வதற்கு, மற்றவைகளை எடுத்துச் சொல்வதற்கு நாங்கள் விரோதிகள் அல்ல. குற்றங்களை எடுத்துச் சொல்வதற்கு விரோதிகள் அல்ல. எடுத்துச் சொன்னால்தான் அந்தத் துறையில் என்னென்ன நடக்கின்றன என்று மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும், மற்றவர்களும் அறிந்து கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது. அது குறித்து இந்த மன்றத்தில் எழுப்புவதற்கு வாய்ப்பிருக்கிறது.

திரு. கி. மனோகரன்: எடுத்துச் சொன்னால் உள்நோக்கம் கற்பிப்பது என்று ஆகிவிடுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுவும் உண்டு. என்ன இல்லை. ஆகவே உள்நோக்கத்தோடு எடுத்துச் சொல்வதும் உண்டு. இருக்கிற நிலைமையை எடுத்துச் சொல்வதும் உண்டு. ஆகவே கற்பனை செய்து எடுத்துச் சொல்வதும் உண்டு. கற்பனையின் மூலமாக இவற்றை எடுத்துச் சொல்வதும் உண்டு. கற்பனை ஓட்டத்திலே மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சில சமயங்களில் சென்று விடுகிறார்கள். கவிஞர் ரகுமான்கான், அவர்கள் தன்னுடைய பெயருக்குக்கூட ஒரு விளக்கம் சொன்னார்கள். தன்னுடைய பெயரிலே ராமாயணத்தினுடைய ஒரு பகுதி இருக்கிறது என்று சொன்னார்கள் அது என்ன என்றால், ரகு என்றால் ராமன். மான் என்றால் பொய் மான். கான் என்றால் காடு. ராமன் பொய்மானைத் துரத்திக்கொண்டு நீண்ட தூரம் போனது மாதிரி (சிரிப்பு) எல்லா நேரங்களிலும் அல்ல, சில நேரங்களில் இப்படிப்பட்ட தகவல்களிலே ரகுமான்கான் அவர்கள் துரத்திக்கொண்டு நீண்ட தூரம் சென்று விடுகிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, ராமன் கானகத்தில் மானைத் தேடி போனது உண்மைதான். ஆனால் அந்த ராமன் நியாயமாக இருந்தவன். ராமராஜ்யம் அது. ராமன்தான் வெற்றி பெற்றான். ராமனுக்கு எதிரான சக்திகள்தான் பொய்யான தகவல்களை தந்தது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் பேசும் போது குறிப்பிட்ட சில வாசகங்களைக் கவனிக்க வேண்டும். சில நேரங்களில்தான் என்று சொன்னேன். ஆகவே, சில





நேரங்களில் ராமன் துரத்திக்கொண்டு போனது மாதிரி மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களும் செல்கிறரர்கள். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொல்கிற அத்தனையும் பொய்மானைத் துரத்துகிற சங்கதி என்று நான் சொல்லவில்லை.

அந்த வகையிலே சென்னை மாநகரக் காவல்துறைக்கு லாரிகள் 58, பேருந்துகள் 6, ஜீப்புகள் 10, கார்கள் 20, மோட்டார் சைக்கிள்கள் 151, மொத்தம் 404 வாகனங்கள் உள்ளன. இதிலே 292 வாகனங்கள் நன்றாக ஓடும் நிலையில் உள்ளன. 112 வாகனங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளன. இதிலே 19 வாகனங்கள்தான் பயன்படுத்த முடியாத அளவிற்கு அறவே பயனற்றவை என்று தள்ளப்பட்டது 19. 93 வாகனங்கள் பழுதுபார்க்கப்பட்டு, மீண்டும் கொண்டு வந்து சேர்க்கிற அளவிற்கு, பழுது பார்க்கும் பட்டறைகளிலே பழுது பார்க்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் 93 வாகனங்கள் வேளச்சேரியில் உள்ள அரசினர் வாகன பழுது பார்க்கும் நிலையத்திலும், 37 வாகனங்கள் நகர காவல் வாகன போக்குவரத்து நிலையத்திலும், 5 வாகனங்கள் அனுமதிக்கப்பட்ட பழுது பார்க்கும் நிலையங்களிலும் இருக்கின்றன. ஆகவே, இதிலே கிட்டத்தட்ட பணியாற்றுகின்ற வாகனங்கள் 72.3 சதவீதம் ஆகும். 20 சதவீத வாகனங்கள் பழுதுபார்க்கப்பட்டு வருகின்றன. அவைகள் பழுது பார்க்கப்பட்டு விரைவிலே அவைகள் நடைமுறைக்கு கொண்டு வரக்கூடிய அளவிற்கு, அவைகள் வருவதும் போவதுமான சூழ்நிலையில் இருக்கக்கூடும். இதிலே 7.7 சதவீதம் வாகனங்கள் பயனற்றவை என்று ஒதுக்கப்பட்டு உள்ளன. அவைகள் பாதுகாக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

காவல்துறைக்கு என்று ஒரு தனி விமானம் தேவைதானா என்றும், இது அவசியம்தானா என்றும் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கூறும்போது விளக்கம் கேட்டு தெரிவித்தார்கள். இருவர் அல்லது நால்வர் உட்கார்ந்து பறந்து செல்லக் கூடிய கனம் இல்லாத குறுகிய தூரம் பறக்கக்கூடிய விமானங்கள் மேற்கு ஜெர்மன் நாட்டிலே, திருவாளர்கள் இன்டரிலிஜனோ என்ற நிறுவனத்தினர் தயாரித்து வருகிறார்கள். இப்படிப்பட்ட விமானங்களை மேலை நாட்டைப் பொறுத்தவரையில் அவர்கள் காவல் துறையில் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள், சில பல நாடுகளில். இங்கிருந்து சென்ற தலைமைக் காவல் அதிகாரி அவர்கள் அங்கு நடைபெற்ற மாநாட்டுக்கும் கருத்தரங்குக்கும் கலந்துகொள்ள போனபோது, இவற்றை எல்லாம் பார்த்து வந்து அந்தக் குறிப்பை எடுத்துச் சொன்னார்கள். அந்தக் குறிப்பை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். அதனுடைய விவரங்கள் வருமாறு : 2 இருக்கைகள் கொண்டு விமானம் 250 கி.மீ. வரை பறக்கும். அதிக அளவு வேகம்

மணிக்கு 160 கி.மீ. சாதாரண வேகத்தில் 50 முதல் 150 கி.மீ. வரை வேகத்தில் பறக்கும். 150 மீட்டர் குறைந்தபட்ச உயரத்திலும், 3 ஆயிரம் மீட்டர் அதிகபட்ச உயரத்திலும் பறக்கும். விமானத்தைக் கிளப்புவதற்கு 50 முதல் 100 மீட்டர் கொண்ட ஓடு பாதை போதுமானது. கீழே இறக்குவதற்கு 30 மீட்டர் தூரம் போதுமானது. கெட்டியான தரையில் இந்த விமானத்தை இறக்க முடியும். விமானத்தினுடைய விலை 1,21,800 ரூபாய். அதைக் கப்பலிலே சென்னைக்குக் கொண்டுவர ஆகும் செலவு 25 ஆயிரம் ஆக மொத்தம் 1,46,800 ரூபாய். இது இரு இருக்கை கொண்ட விமானத்திற்கு. 4 இருக்கைகள் கொண்டு விமானத்தின் விலை 4 லட்சத்து, 48 ஆயிரம் ரூபாயிலிருந்து 8 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் வரையில் வருகிறது. இதை எதற்காக பயன்படுத்த முடியும் என்று சொன்னால், அவர்கள் எதற்குப் பயன்படுத்துகிறார்கள் என்று பார்க்கும் போது, சட்டம் ஒழுங்கு நிலைமைகளை சமாளிக்க, கூட்டங்கள் ஊர்வலங்கள், போன்றவைகளின் நிலைமைகளை நேரடியாக உடனடியாக, மேலே இருந்து கவனித்து, தேவையான தகவல்களை உயர் அதிகாரிகளுக்கு தொலைபேசி மூலமாகவும் , ஒயர்லெஸ் மூலமாகவும் தெரியப்படுத்தவும், அதுமட்டுமல்லாமல், குற்றங்கள் புரிந்துவிட்டு, விரைந்து வண்டிகள் மூலமாக தப்பி ஓடுகின்ற குற்றவாளிகளைப் பின் தொடர்ந்து அவர்கள் மறைந்து இருக்கக்கூடிய இடங்களைக் கண்டறியவும், சில பல பகுதிகளில், காடுகளிலே புதர்களிலே மற்றும் பல இடங்களுக்குச் சென்று மறைந்து விடுகின்றார்கள். அப்படிப்பட்ட இடங்களுக்கு சாதாரணமாக வாகனங்கள், மற்றவைகளை வைத்துக்கொண்டு அணுக முடியாது.

(முற்பகல் 11-40)

அதற்கும் மற்ற நாடுகளில் எல்லாம் பயன்படுத்துகின்ற வகையில் இங்கே பயன்படுத்த முடியும் என்று சாலைகள் அல்லது போக்குவரத்து வசதிகள் இல்லாத இடங்களில் சற்று உயரத்தில் பறந்து சென்று நிலைமைகளைக் கண்டறிவதற்கும் மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்கள் ஏற்படும் போது மக்களின் நிலைமையை உடனுக்குடன் கண்டறிவதற்கும் பயன்படும்.

இதற்கான கருத்துரு காவல்துறைத் தலைவரிடமிருந்து பெறப்பட்டது. சுற்றோட்ட ஆணைக்கிணங்க சமூக விரோதிகளைப் பிடிக்க ஆயுதங்களுடனுள்ள குறைந்தது 4 பேராவது பயணம் செய்யும் வசதி உடையதாக உள்ள வான ஊர்தி தேவையென அரசு கருதுகிறது என்றும், ஆதலால் மேற்கண்ட வசதி படைத்த வான ஊர்தி தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்றும், தக்க ஒருவரது பெயரை குறிப்பாகத் தெரிவிக்கக் கோரியும், அவரை வெளிநாடுகளுக்கு அனுப்பி தகுந்த வான ஊர்தியைத் தேர்வு செய்யவும், அவர் வான ஊர்தியின் நிலை, பல்துறை அறிவு வாய்ந்த மற்றும் நாம் கருதில்



கொண்ட சிறப்பு நோக்கமும் அவ்வாறு உபயோககரமான வான ஊர்தியையும் தேர்ந்தெடுக்கக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும் எனறும், மேலும் அவர் நமது தேவையைப் பற்றி முழுவதும் அறிந்தவராகவும், தேர்ந்தெடுக்கக்கூடியவான ஊர்தியின் தொழில் நுட்பம் சம்பந்தமான முழு விவரங்களும் தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும் என்றும காவல் துறைத் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டார். இதற்கு குற்றப் புலனாய்வுத் துறையின் நுண்ணறிவுப் பிரிவு துணைத் தலைவரை அனுப்பலாம் என அத்துறைத் தலைவர் பரிந்துரைத்துள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது. இன்னும் அப்படிப்பட்ட விமானம் வாங்கப்படவில்லை. ஆனால் அதற்கான செயற்குறிப்பு மட்டும் இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

காவலர் சங்கங்களைப் பற்றி மாண்புமிகு திரு. ரமணி அவர்களும் குறிப்பிட்டார்கள், மற்றவர்களும் குறிப்பிட்டார்கள். அதைப் பொறுத்த வரையிலும் இந்த அரசுக்கு மாறுபட்ட கருத்துக்கள் இல்லை. 1979 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்கு அனுமதி அளித்து இருக்கிறார்கள்.

ஆகவே, 1979 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே காவலர்களின் குறைகளை அரசுக்கு எடுத்துரைக்க காவலர்களுக்கு ஒரு சங்கம் அமைக்க அனுமதி அளிக்க வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் அனுப்பியிருந்தார்கள். 1—6—1979 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பத்திரிகையாளர் மத்தியில் மாநில அரசு காவலர் நலனுக்கு ஒரு சங்கம் ஏற்படுத்திக்கொள்ள கொள்கை அளவில் ஏற்றுள்ளதாக அறிவித்தார்கள். பின்னர் 6—6—1979-ல் புதுடெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் இதைப்பற்றி பரிசீலனை செய்து, மாநில அரசுகள் காவல்துறை பணியாளர்களுக்கு சங்கம் ஏற்படுத்திக்கொள்ள அனுமதி அளிக்கலாமென அறிவுரை வழங்கியது. அதன் அடிப்படையில், இம்மாநிலத்தில் சில நிபந்தனைகளுடன் மூன்று சங்கங்கள் அமைத்துக்கொள்ள கீழ்க்கண்ட பதவிகளில் பணியாற்றுவோர்க்கு அரசு 8—6—1979 இல் அனுமதித்தது.

1. மாநில காவல் பணியைச் சார்ந்த அலுவலர்களான கண்காணிப்பாளர், கூடுதல் கண்காணிப்பாளர், துணை கண்காணிப்பாளர் ஆகியோருக்கென ஒரு சங்கம்,

2. ஆய்வாளர், துணை ஆய்வாளர், உதவி ஆய்வாளர், உதவித் துணை ஆய்வாளர் அளவில் உள்ள அதிகாரிகளுக்கென ஒரு சங்கம்.

3. தலைமைக் காவலர், முதல் நிலைக்காவலர், இரண்டாம் நிலைக் காவலர் ஆகியோருக்கென ஒரு சங்கம்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூலை 10

சில காவல்துறைப் பணியாளர்களின், அனைத்துப் பணியாளர்களுக்கும் ஒரே சங்கம் அமைக்க வேண்டுமென்ற வேண்டுகோளின் பேரில் அப்போதிருந்த விதி 8, திருத்தப்பட்ட காவலர் அணி (உரிமை, கட்டுப்பாடு சட்ட விதிகள் 1966) படி அரசு நடவடிக்கை எடுக்க இயலவில்லை. ஆயினும், மத்திய அரசு விதி 8-னைத் திருத்தியது. திருத்தப்பட்ட காவலர் அணி (உரிமை கட்டுப்பாடு சட்ட விதிகள் 1966) படி, பல்வகைப்பட்ட பணியாளர்கள் ஒரே சங்கம் அமைக்க முடியாதிருந்த தடையினை மத்திய அரசு விலக்கியது. திருத்திய விதியின்படி 20-1-1981 அன்று, காவலர் முதல் ஆய்வாளர் வரை சில கொள்கை கட்டுப்பாட்டுடன் ஒரே சங்கமாக இயங்க அரசு ஆணையிட்டது. காவலர் முதல் ஆய்வாளர் வரையிலான சங்கத்தின் சட்ட அமைப்பை சங்கமே வரைந்து, காவல்துறைத் தலைமை அதிகாரியின் பரிசீலனைக்குப் பின் அரசின் ஒப்புதலுக்கு அனுப்புமாறு காவல்துறைத் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டார். அதன்படி காவல் துறைத் தலைவர், காவலர் சங்கம் வரைந்த துணைச் சட்டத்தின் மீது மேல் மட்டக் குழு தெரிவித்த பரிந்துரைகளை அரசுக்கு அனுப்பினார். அரசு இதனை ஆய்ந்து, மேல் மட்டக் குழு பரிந்துரை செய்துள்ள யோசனைகளின் அடிப்படையில் வரைவு துணைச் சட்டத்தில் சங்கமே தேவையான மாற்றங்களை செய்து, அப்படி மாற்றம் செய்யப்பட்ட துணைச் சட்டங்களை அரசுக்கு அனுப்புமாறு காவல்துறைத்தலைவர் கேட்டுக்கொள்ளப் பட்டார்.

இதற்கிடையில் காவல் துறை தலைவர் தமிழ்நாடு ஆய்வாளர் காவலர் சங்கம், தமிழ்நாடு காவலர் சங்கம் ஆகியவற்றின் துணைச் சட்டங்கள் ஒப்புதல் அளிப்பதற்கு முன் நடவடிக்கை எடுக்கப் படுவதை பற்றி தெரிவிக்கப்பட்டது.

பிறகு திரு வெங்கடேசன் தலைமையிலான ஆய்வாளர் சங்கம் 20—1—1981 நாள் அரசு வெளியிட்ட ஆணையை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கைத் தொடர்ந்தது. இச் சங்கம் ஆய்வாளர்கட்கென தனிச் சங்கம் செயல்பட வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறது. இவ்வழக்கில் உயர்நீதி மன்றம் சங்க தேர்தல் மற்றும் ஒரு பொதுவான சங்கம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டாமென்று அரசுக்கும் காவல்துறை தலைவருக்கும் மறு உத்திரவு வரும் வரை இடைக்காலத் தடை வழங்கியது.

உயர்நீதி மன்றத்தின் தடை உத்தரவு தொடர்ந்து அமுலில் இருப்பதாலும், திரு வெங்கடேசன் கொடுத்த வழக்கு உயர்நீதி மன்றத்தின் விசாரணையில் உள்ளதாலும், அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலவில்லை.



1985 ஜூலை 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இதற்கிடையில் திரு. அந்தோணிசாமி என்னும் முன்னாள் உதவி ஆய்வாளர் அங்கீகரிக்கப்படாத காவல் துறை சார்நிலை சங்கத்தின் தானே நியமிக்கப்பட்ட தலைவராவார். ஆய் வாளர் முதல் காவலர் வரை ஒரே சங்கமாக அமைக்கப் படுவதற்கு உண்டான ஆணையை செயல்படுத்த வேண்டுமென்று கோரி, காவல் துறை தலைவர் 1—11—1981 இல் இட்ட ஆணையை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடர்ந்தார். இந்த வழக்கில் இடைக்காலத் தடையும் பெற்றார். இந்தத் தடை 25—6—1982 இல் உயர்நீதிமன்றத்தால் நீக்கப்பட்டது.

உயர்நீதிமன்றம் திரு. அந்தோணிசாமி தொடந்த வழக்கில் தீர்ப்பு அளிக்கும் போது, அவர் ஏதேனும் மனு கொடுத் தால் அதன் மீது மனு கொடுத்த தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் ஆணை வழங்குமாறு ஆணையிட்டது. திரு. அந்தோணிசாமி 10—3—1983 அன்று சார்நிலை ஆய்வாளர் முதல் காவலர் வரை ஒரே சங்கமாக செயல்பட மனு ஒன்றை காவல் துறை தலைவரிடம் அளித்தார். உயர்நீதி மன்றம் காவலர் சார்நிலைச் சங்கப் பொதுச் செயலாளர் திரு. வெங்க டேசன் தொடர்ந்த வழக்கில் வழங்கிய தீர்ப்புக்கும், திரு- அந்தோணிசாமி கோரும் சங்க அமைப்பின் மீது அளித்த தீர்ப்புக்கும் முரண்பாடுகள் இருப்பதால், நடவடிக்கை எடுக்க இயலவில்லை.

திரு. அந்தோணிசாமி கொடுத்த மனுவின் மீது பரிசீலனை செய்து வரும்போதே, திரு. சுந்தரம், குற்றப்பதிவறை, நெல்லை மாவட்டம், அவர் திரு. அந்தோணிசாமி கோரும் காவலர் சங் கத்தை அங்கீகரிக்கவோ அல்லது பரிசீலிக்கவோ கூடாது என்று உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தொடர்ந்துள்ளார். உயர் நீதிமன்றம் அவர் கொடுத்த வழக்கில் இடைக்காலத் தடை உத்திரவை வழங்கியுள்ளது.

காவலர் சங்கத்தின் பொறுப்பாளர்கள் மீது பதவி நீக்கம் போன்ற நடவடிக்கைகளை அரசு எடுக்கவில்லை. 1983 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் சென்னை நகர காவல் ஆணையர் பிறப்பித்திருந்த 41 விதிக்கு முரண்பாடாக திரு. அந்தோணிசாமி தடையை மீறி காவல்துறை தலைமை அலுவலகத்திற்கு முன், ஒரு சிலரோடு மறியல் செய்யும் நோக்கத்தோடு எழும்பூர் கென்னட் வீதியிலிருந்து வரும்போது எழும்பூர் காவல் நிலைய ஆய்வாளரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார். பின்பு, மாஜிஸ்திரேட்டு, உத்தரவுப்படி நிபந்தனைக்குட்பட்ட ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்.

48 மணி நேரத்திற்கு மேற்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக் கும் அரசு ஊழியர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட வேண்டுமென்ற விதிகளுக்கு ஏற்ப இவர் தற்காலிக வேலை

நீக்கம் செய்யப்பட்டார். இந்த உத்தரவை எதிர்த்து, இவர் கொடுத்த வழக்கை உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்துவிட்டு, இவருடைய தற்காலிக வேலை நீக்கம் சட்டப்படி சரியே என்று தீர்ப்புக் கூறியது. இப்போது அவர் பணியிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார்.

ஆகவே, உயர்நீதிமன்றத்தினுடைய இந்த இடைக்காலத் தடையைப் பற்றிய தீர்ப்புக்கள் வந்ததற்குப் பிறகு, அந்தச் சங்கம் அமைப்பதிலே தமிழக அரசு குறுக்கே இருக்காது. அந்த உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அந்த இடைக் கால தடை உத்தரவை நீக்கிவிட்டதற்குப் பிறகு தக்க முடிவை எடுக்கும் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அழகு நிலையங்களைப் பற்றி எல்லாம் சில உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். இத்தொழிலில் ஈடுபடும் நபர்கள், அல்லது இதர நபர்கள், அப்படிப்பட்ட அழகு நிலையம் வைக்கக் கூடாது என்று தடுக்க உரிமை இல்லை. ஆனாலும், இந்தத் தொழிலை நடத்தும் எந்த ஒரு நபரும் உரிமை இருப்பதாக எல்லாக் கோணங்களிலும் தோன்றினாலும், இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் அல்லது அதில் வேலைக்கு அமர்த்தப் படுகிறவர்கள் விபச்சாரம் போன்ற குற்றங்கள் அல்லது விபச் சாரத்தின் மூலம் பயன் பெறுகிறார்கள் என்பது தான் உண்மை.

இங்கு தான் காவல்துறைக்கு குற்றங்களைத் தடுக்கவும் அமைதியை பேணிக்காக்கவும், முறைகேடாக நடப்பவர் களைத் தடுத்து நிறுத்தவும், அந்த முறைகளில் அய்யத்திற் குரிய முறைகளில் இருக்கும் நபர்களைப் பிடிக்கவும், குற்றவாளி களை நீதிமன்றத்திற்குக் கொண்டு வர வேண்டியும் இருப்பதால், அவசியம் ஏற்படுகிறது.

சென்னை மாநகரில் சுமார் 84 உடலைப் பிடித்துவிடும் நிலையங்கள், அழகு நிலையங்கள், மன மகிழ் மன்றங்கள் உள்ளன

சென்னை நகரில் கடந்த ஆறு மாதங்களில், பெண்கள் மீதும் உடலைப் பிடித்து விடும் அழகு நிலையங்களை சட்ட விரோதமாக பயன்படுத்தி, பொது அமைதிக்குக் குந்தகமும் தொந்தரவும் விளைவித்த இதர நபர்கள் மீதும் 457 வழக்குகள் பதிவு செய்யப் பட்டன. ஆகவே வேண்டுமென்றே யாரையும் கைது செய்ய வேண்டும் என்பது அல்ல.

இங்கே ஆம்னி பஸ் வழக்குகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் கள் சொன்னார்கள். ரகுமான்கான் அவர்களும் குறிப்பிட்டுச் சொன்னார்கள்.





சென்னை நகரம் மற்றும் மாவட்டங்களில் வாடகைச் சுற்றுலா பேருந்து இயக்குபவர்கள், பயணப் பிரதிநிதிகள் ஆகியோர் ஒரு பக்கமும், காவல் துறை மற்றும் போக்குவரத்துத் துறை அதிகாரி கள் மறு பக்கமும் ஒன்றாக இணைந்து செய்த சூழ்ச்சி காரண மாக சுற்றுலாப் பேருந்துகள் செல்லாத அனுமதி சீட்டுகளுடனோ அல்லது அனுமதிச் சீட்டுகளே இல்லாமலோ முறையான பேருந்து கள் போல் ஓடின. காவல்துறை அதிகாரிகளும் போக்குவரத்துத் துறை அதிகாரிகளும் வாடிக்கையாகக் கையூட்டு பெற்று இந்த ஊழலில் உட்கையாயிருந்தனர் என்ற குற்றச்சாட்டு பற்றி கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்புத் துறை இயக்குனர் இயக்க கத்திற்கு வந்தது. அதை இயக்குநரகம் விசாரித்து அரசுக்கு 20–4–1982 அன்று அதன் அறிக்கை வரப்பெற்றது.

அந்த அறிக்கையின் அடிப்படையில், 123 காவல் அதிகாரிகள் மற்றும் 79 போக்குவரத்து அதிகாரிகள் மீது விசாரணை செய்ய தனி ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயம் ஒன்று 1983 ஆம் வருடத் தில் அமைக்கப்பட்டது. தீர்ப்பாயத்தின் விசாரணைக்குட்படுத்தப் பட்டவர்கள் 123 பேரிலே விசாரணை முடிந்து, 24 பேர் மீது அறிக்கைகள் வந்திருக்கிறது.

மற்றவர்கள் மீது விசாரணை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. போக்குவரத்துத் துறையைப் பொறுத்த வரையிலும் 79 பேர் அதிலே விசாரணை 25 பேர் மேல் முடிந்து இருக்கிறது. மற்றவர்களுடைய விசாரணை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

(முற்பகல் 11–50)

தனி ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயம் இதுவரை அனுப்பி யுள்ள 24 காவல் துறை அதிகாரிகள் மற்றும் 25 போக்குவரத்து அதிகாரிகள் மீதான அறிக்கைகளில் 1 காவல் ஆய்வாளர், 2 காவல் துணை ஆய்வாளர்கள், 1 வட்டாரப் போக்குவரத்து அலுவலர் 5 மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மீது அமைக்கப்பட்ட குற்றச் சாட்டுகள் நிரூபணமாகியுள்ளன என்றும், ஏனைய அதிகாரிகள் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபணமாகவில்லை என்றும் முடிவு தெரிவித்துள்ளது. அந்த அறிக்கைகள் ஒவ்வொன்றும் தனித் தனியே ஆய்வு செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

காவல் துறையைச் சேர்ந்த 99 பேர்கள், போக்குவரத் துத் துறையைச் சேர்ந்த 54 பேர்கள் ஆகியவர்களைப் பொறுத்து அறிக்கைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஓமலூர் காவல் நிலையத்தில் பழனி கவுண்டர் மகன் கண்ணன் என்பவர் இறந்துபட்டார் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு, 457, 380 சம்பந்தமான வழக்கில் 29–6–1985 அன்று

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூலை 10

மாலை 6 —00 மணியளவில் கைது செய்து ஓமலூர் காவல் நிலைய லாக்கப்பில் அன்று இரவு (29—6—85) 9 மணிக்கு அடைத்தனர். ஆனால் 30—6—85 காலை 1—30 மணியளவில் அவர் தூக்கில் தொங்குவதை இரண்டாம் நிலை காவலர் சுந்தரம் கண்டதாகவும் கூறப்படுகிறது. இது குறித்து மேலதிகாரிகளுக்கு தகவல் கொடுக்கப்பட்டு, சங்ககிரி வருவாய்க் கோட்ட ஆட்சியர் (மேட்டூர் கோட்டம்—பொறுப்பு) ஓமலூர் காவல் நிலையம் விரைந்துள்ளார். 21 வயதுள்ள வாலிபர் ஒருவர் கயிற்றின் உதவியால் லாக்கப் ரூமில் உட்புற கதவில் தூக்கிலிட்டு கொண்டிருப்பதைக் கண்டார். பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் லாக்கப் ரூம் திறக்கப்பட்டு உடல் வெளியே எடுக்கப்பட்டது. பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிணப் பரிசோதனை நடைபெற்றது. தூக்கிலிட்டுக்கொண்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார் என பஞ்சாயத்தார்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். பிறகுப் பிரேதப் பரிசோதனைக்காக உடல் மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இது குறித்து மேட்டூர் வருவாய்க் கோட்டாட்சியர் காவல்நிலைய ஆணை எண். 145—ன் கீழ் விசாரணை நடத்தி அறிக்கை அனுப்புமாறு சேலம் மாவட்ட ஆட்சியரால் பணிக்கப்பட்டுள்ளார். எனவே, பஞ்சாயத்தார்கள் கூறியதை அப்படியே ஏற்கவில்லை. கோட்டாட்சியரின் அறிக்கை வந்ததற்குப் பிறகு இதற்குத் தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, விசாரணைக்கு அரசு உத்தரவிட்டிருக்கும் இந்த வேளையில் அந்த இடத்திற்குப் போன உயர் போலீஸ் அதிகாரி ஒருவர் இது தற்கொலை என்று பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்திருக்கிறார்களே, இது விசாரணையின் போக்கை மாற்றாதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பொறுத்தவரையிலே யாரும் கருத்து சொல்லக் கூடாது தான். விசாரணையில் இருக்கிறது. கொலையா, அல்லது தற்கொலையா என்ற நிலைமை இப்பொழுது தெரியாது. பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிணப் பரிசோதனை நடைபெற்றது. பஞ்சாயத்தார்கள், இது தற்கொலை என்று கருத்து தெரிவித்திருந்தாலும்கூட, அதிகாரிகளோ மற்றவர்களோ இது குறித்து கருத்து சொல்லக் கூடாதுதான். அப்படிச் சொல்லியிருந்தால் அது திருத்தப்பட வேண்டிய ஒன்று. அறிக்கை வந்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஆகவே, கொலை செய்யப்பட்டாரா அல்லது வேறு வகையிலே செய்யப்பட்டாரா என்பது குறித்து தெரிகின்ற வகையில் வருகின்ற அந்த அறிக்கையின் தன்மையின் அடிப்படையில் கட்டாயம் நடவடிக்கை எடுக்கப்பட்டு உரியவர்கள் தண்டிக்கப்படுவார்கள். அது எப்படியிருந்தாலும், லாக்கப்பில் தற்கொலை செய்துகொண்டார் என்றே வைத்துக் கொண்டாலும்கூட, அங்கே காவல் காத்த காவலர், அங்கே காவல் காக்க வேண்டியவர், தற்கொலைக்கான



1985 ஜூலை 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

முயற்சி செய்து தொங்குகின்ற அளவிற்கு நிலைமை ஏற்படும் வரையில் இந்தக் காவலர் என்ன செய்து கொண்டிருந்தார் என்பது போன்ற நிலைமைகள் இருப்பதால், 2457 என்ற எண்ணுள்ள காவலர் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். அறிக்கை வந்த பிறகு நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, காமராஜர் மாவட்டம், மேல்கள்ளன்குளம் கிராமத்தில் 6—7—85 அன்று நடந்த துப்பாக்கிச்சூடு சம்பவம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். அருப்புக்கோட்டை மற்றும் திருச்சுழி ஆய்வாளர்கள் ஒரு காவல் குழுவினருடன் மேல் கள்ளன்குளம் கிராமத்திற்கு 6—7—85 அன்று காலை 4—30 மணி அளவில் மூன்று குற்றவாளிகளைத் தேடிச் சென்றுள்ளனர். மோட்டார் பம்பு செட்டைத் திருடிவிட்டார்கள் என்றும் அதற்கான துப்பு கிடைத்தாலும் பகலில் சென்றால் இப்படி நேரும் என்பதால் காலை 4—30 மணியளவில் சென்றிருக்கிறார்கள். அவர்கள் மூவரையும் கைது செய்து போலீஸ் வேனில் ஏற்றி திரும்பும்போது கிராமவாசிகள் அந்த வேனைச் சூழ்ந்துகொண்டு குற்றவாளிகளைக் கொண்டு போக வழிவிட மறுத்துவிட்டனர். கிராமவாசிகள் காவலர்களை கற்களால் தாக்க முற்பட்டதைத் தொடர்ந்து அந்தக் குற்றவாளிகளை அங்கேயே விட்டு விட்டு திரும்பியுள்ளனர். கிராமத்தை விட்டு வெளியேறிய பின்னர், ஒரு உதவி ஆய்வாளர் ஒரு தலைமைக் காவலர் மற்றும் 4 காவலர்கள் கிராமத்திலேயே தங்கிவிட்டது கண்டறியப்பட்டது. மீண்டும் கிராமத்திற்குச் சென்று அவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டபோது, கிராமவாசிகள் காவல் குழுவினரை கற்களாலும், தடிகளாலும், மற்றும் கத்தியாலும் தாக்க முற்பட்டபோது காவலர்கள் தற்காப்பிற்காகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டிய அவசியமேற்பட்டது. இக்குழப்பத்தில் 22 காவலர்கள் காயமடைந்தனர். காவலர்களின் துப்பாக்கிக் குண்டிற்கு 37 வயதுள்ள முனியம்மாள் என்ற பெண்மணியும் 45 வயதுள்ள ராமன் என்ற ஆணும் பலியானார்கள். மேலும் 4 குழந்தைகள் உட்பட 15 பேர்கள் காயம் அடைந்துள்ளார்கள். இறந்தவர்கள் சடலங்கள் பஞ்சாயத்தார் முன்னிலையில் அருப்புக்கோட்டை வருவாய்க் கோட்ட அலுவலரால் சோதனை செய்யப்பட்டது. பிறகு சடலங்கள் பிரேத பரிசோதனைக்கு அருப்புக்கோட்டை மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மாவட்ட ஆட்சியாளரும் மதுரைக்காவல் துறை துணைத் தலைவரும் மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளரும் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்றனர். நிலைமை இப்பொழுது கட்டுக்கடங்கி இருக்கிறது. விசாரணை நடத்தும்படியாக மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூலை 10

மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி விசாரணை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியதற்கிணங்க மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி விசாரித்து வருகிறார். மருத்துவத் துறை தன்மையும் வந்த பிறகு முழுத் தன்மைகளும் வரும். ஆனால், இப்படிப்பட்ட துப்பாக்கிச் சூடு வரவேண்டு மென்ற அவசியம் இல்லை. ஆனால் ஏற்பட்டது வருந்தத்தக்க ஒன்றுதான். ஆனால், அந்த ஊரிலுள்ளவர்களுடைய நிலைமை மற்றவைகள் தொடர்ந்து இருக்கின்றன என்றெல்லாம் மாண்பு மிகு உறுப்பினர்கள் கூட இங்கே சுட்டிக்காட்டினார்கள். அப்படிப் பட்ட தன்மையிலேதான் முன்கூட்டி ஜாக்கிரதையாகச் செல்ல வேண்டுமென்பதற்காக, மற்றவர்களெல்லாம் பகல் நேரத்திலே போய் கைது செய்ய வேண்டிய நிலைமைகள் இருந்தாலும் இப்படிப்பட்ட வழக்குகளிலே இரவிலே போய் கைது செய்வதற் கிணங்க நிலைமைகளை மேற்கொண்டார்கள்.

முஸ்தபா முகமது என்பவர் 19,500 டாலர், கிட்டத்தட்ட ரூ. 3 இலட்சம் பெறுமானமுள்ள அன்னிய நாட்டுப் பணத்தை வைத்திருந்தார்கள் என்றும் அவரைப் பற்றிய குறிப்புகளையும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். 1—7—1985 அன்று இரவு, கும்பகோணம் பஸ் நிலைய சாலை எண். 34-ல் வசிக்கும் திரு. முஸ்தபா முகமது, வயது 30, தகப்பனார் பெயர் அகமது ஜலாலுதீன் என்பவர், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்தின் மூலம், சென்னை, பிராட்வே பேருந்து நிலையத்தில் வந்து இறங்கினார். அங்கே, அவரிடம் ஒரு காவலர் அணுகி, சென்னைக்கு வந்ததற்கான காரணத்தை அவரிடம் கேட்க, அதற்கு, திரு. முஸ்தபா முகமது அவர்கள், தான் சென்னையி லுள்ள இலங்கைத் துணை தூதுவர் அலுவலகத்தில் 'விசா' பெறுவதற்காக, சென்னை வந்ததாகத் தெரிவித்தார். அந்த காவலர் அவரைப் பேருந்து நிலையத்தின் அருகில் நிறுத்தப் பட்டிருந்த டி.எம்.ஒய். 434 என்ற பதிவு எண் கொண்ட காரினுள் இருக்கும் தனது அதிகாரியைச் சந்திக்குமாறு கூறினார்.

அதன் பேரில், திரு. முஸ்தபா முகமது அந்தக் காரிலிருந்த அதிகாரி என்று சொல்லப்பட்ட மற்றொரு காவலரைச் சந்தித் தார். ஆக, இந்த இரண்டு காவலர்களும், அவருக்கு விசா பெற்றுத் தருவதாக உறுதியளித்து, அவரிடம் இருந்த விமான பயணச் சீட்டு, மற்றும் 19,500 அமெரிக்க டாலர்களையும் அவரிடமிருந்து பெற்றுக் கொண்டு, அவரை 2—7—1985 அன்று காலை, இலங்கை துணை தூதுவர் அலுவலகத்தின் அரு கில் தங்களைச் சந்திக்குமாறு கூறி அனுப்பி விட்டனர். அவர்களது நடவடிக்கையில் ஐயுற்ற திரு. முஸ்தபா முகமது அவர்கள் பி-2 எஸ்பிளனேடு காவல் நிலையத்தில், 2—7—1985 அன்று, சுமார் 2-30 மணிக்கு இதுபற்றி ஒருபுகார் கொடுத்தார். அதன் பேரில், எஸ்பிளனேடு காவல் நிலையத்தினரால் 420-வது பிரிவின்கீழ், வழக்குப் பதிவு செய்யப்பட்டது. வழக்கு விசாரணை யின்போது, எஸ்பிளனேடு காவல் நிலைய குற்றப் பிரிவு ஆய்வாளர்



1985 ஜூலை 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அவர்கள் திருச்சி, ஆயுதப் படை வாகனப் பிரிவைச் சேர்ந்த
காவலர் எண். 1228 பழனியப்பன் மற்றும் காவலர் எண். 1242
கந்தசாமி ஆகிய இருவரையும், 5—7—1985 அன்று, சென்னை
ராஜாஜி சாலையில் கைது செய்துள்ளார். இந்த வழக்கு விசா
ரணையில் உள்ளது. இந்த வழக்கு மேலும் தொடரப்பட
இருக்கிறது. காவலர்கள் இந்த மோசடியைச் செய்தார்கள்
என்பதற்காகக் காவல் துறையினர் இந்த வழக்கை தொடுத்திருக்
கிறார்கள். அது தவிர, அந்நியச் செலாவணி அவர்களிடத்திலே
எப்படி வந்தது என்பதை மத்தியத் துறையைச் சேர்ந்தவர்கள்
ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இப்படி மோசடி
செய்து, பொய் சொன்னவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட
வேண்டுமென்றுதான் அதற்காக நடவடிக்கையை அரசு மேற்
கொண்டு வருகிறது என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

உதகமண்டலத்திலே நடிகர் இராஜ்குமார் அவர்கள் நடிப்ப
தற்குச் சென்றபொழுது ஏற்பட்ட கலவரத்தைப் பற்றியும்
அவர்மீது தாக்குதல் பற்றியும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள்
குறிப்பிட்டுச் சொன்னார்கள். இந்த அவையிலே ஒத்தி வைப்புத்
தீர்மானம் வந்தபொழுது, அப்பொழுது ஏற்பட்டிருக்கிற சூழ்
நிலைகள் எல்லாம் விளக்கிக் கூறப்பட்டது. அதனை விசாரிப்ப
தற்காக நீதிபதி நஞ்சப்பன் அவர்கள் தலைமையில் ஒருவிசாரணை
குழு அமைக்கப்பட்டது.

9—3—1984 அன்று சம்பவம் நடந்த உதகையில் படப்பிடிப்
பின்போது பாதுகாப்பு அளிக்கச் சரியான காரணங்களால் தான்
இயலாமல் போயிற்று என்றும், அன்று பாதுகாப்பு அளிக்காதது
காவல் அதிகாரிகளின் பொறுப்பற்ற உணர்வையோ அல்லது
தளர்ச்சியையோ எவ்வகையிலும் உணர்த்தாது என்றும், இந்தச்
சம்பவத்திற்குக் கர்நாடக மாநிலத்தில் வாழும் பெரும்பான்மை
மொழிபேசும் கன்னடியர்கள் அங்கு வாழும் சிறுபான்மை மொழி
பேசும் தமிழர்களைக் கர்நாடக மாநிலத்தைவிட்டு வெளியேறும்
படி துன்புறுத்தி வந்தது தான் காரணம் என்று எடுத்துக்காட்டி
இவ்வாறு வேறு மொழி பேசுபவர்களைத் துன்புறுத்தி வெளி
யேற்ற முயற்சிப்பதும், வேறு மொழி பேசுபவர்களைத் தாக்கு
வதும் யாராலும் சகித்துக் கொள்ள முடியாது என்று குறிப்பிட்டு,
இத்தகைய செய்கைகள் இந்திய தண்டனைச் சட்டத்தின் 153(அ)
மற்றும் 153 (ஆ) பிரிவுகளின்கீழ் குற்றங்களாகக் கருதப்பட்டு
தண்டனைக்குட்பட்டாலும், இத்தகைய உணர்வுகளை முற்றி
லும் ஒழிக்க தீவிர நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு அத்தகைய
உணர்வுகளை வேரோடு களைய வேண்டியது அவசியம் என்றும்,
ஆணைக் குழு பரிந்துரை செய்துள்ளது.

(நண்பகல் 12-00)

ஆணைக் குழுவின் பரிந்துரையை அரசு ஏற்று மேல் நட
வடிக்கை எடுத்து வருகிறது. நடைபெற்ற நிகழச்சிக்குப் பின்னால்
நடிகர் திரு. ராஜ்குமார் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களைச் சந்தித்து சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்

கள். முதலமைச்சர் அவர்களும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை
களை கனிவோடு தெரிவித்தார்கள். என்ன நடந்தது என்றால்,
முதல் நாள் இன்ன இடத்தில் படம் எடுக்கிறோம் என்று சொல்லி
யிருக்கிறார்கள். காவல் துறையினரும் சரி என்று சொல்லியிருக்
கிறார்கள். அடுத்தநாள் படம் எடுக்கச் செல்லும்போது அந்த
இடத்தில் வெயில் சரியாக இல்லை என்று அங்கிருந்து 2, 3
கிலோமீட்டர் தூரத்திற்கு அப்பால் போய் படம் எடுத்திருக்
கிறார்கள். காவல் துறையினர் அந்தக் குறிப்பிட்ட இடத்திற்குப்
போய் பார்த்துவிட்டு, யாரும் இல்லாததால் வந்து விட்டார்கள்.
அவர்கள் படம் எடுத்த இடத்தில் காவல் துறையினர் இல்லை ;
அவர்கள் அங்கே போக வாய்ப்பில்லை. பொதுவாக யார்,
எப்போது படப்பிடிப்புக்குச் சென்றாலும் பொது மக்கள் அந்த
இடத்தில் கூடுவது வழக்கம். நடிகர், நடிகைகளைப் பார்க்க
வேண்டும் ; அவர்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலால்
அவர்களைச் சுற்றி நிற்பது இயற்கை. அப்படிப்பட்ட நேரங்
களில் முன்னறிவிப்பு கொடுத்தால், பாதுகாப்பு கொடுப்பதும்
வழக்கம். ஆனால் மாறிச் சென்ற காரணத்தால் இப்படிப்பட்ட
ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

சேலம் கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் தெய்வமணி
என்ற பெண் இறப்புபற்றி பலரும் எடுத்துச் சொன்னார்கள்.
சேலம் கிச்சிப்பாளையத்திலுள்ள கஸ்தூரிபாய் தெருவில்
வசித்து வந்த திருமதி பேச்சியம்மாளின் வீட்டில் சில வெள்ளிப்
பாத்திரங்கள் காணாமல் போனது தொடர்பாக அதே தெருவில்
வசித்து வந்த சுமார் 19 வயதுள்ள தெய்வமணி என்ற திருமண
மாகாத ஆதிதிராவிட பெண் கிச்சிப்பாளையம் காவலர்களால்
கைது செய்யப்பட்டு காவல் நிலையத்திலுள்ள லாக்கப் அறையில்
அடைக்கப்பட்டிருக்கிறாள். இக்காவல் நிலையத்தில் உள்ள
'லாக்கப்' அறையில் தெய்வமணி தூக்குப்போட்டுக் கொண்டு
தற்கொலை செய்து கொண்டது குறித்த சம்பவம் பற்றி விசா
ரணை செய்ய திரு. ஏ. எம். நஞ்சப்பன் அவர்களை ஒரு நபர்
ஆணைக் குழுவாக அரசு நியமித்தது. முடிவாக, தெய்வமணி
சந்தேகப்படும் சூழ்நிலையில் காவல் நிலையத்தில் காவலில்
இருக்கும்பொழுது இறந்திருக்கிறாள் என்று தெரிவதால் அரசு
இதுபற்றி ஒரு பொறுப்புள்ள நேர்மையும் திறமையும் வாய்ந்த
உயர்மட்ட காவல் துறை அதிகாரியை நியமித்து தீவிர புலன்
விசாரணை செய்து உண்மையை அறிய வேண்டியது அவசிய
மாகவும் நியாயமாகவும் இருக்கிறது என்றும், தீவிர விசா
ரணைக்கு பிறகு இது சம்பந்தமாக தக்க நடவடிக்கைகள் எடுக்கப்
பட வேண்டியது அவசியம் என்றும் விசாரணைக் குழு பரிந்துரை
செய்துள்ளது.

ஆணைக் குழுவின் பரிந்துரையை ஏற்று, தெய்வமணியின்
மரணத்திற்கான உண்மையான காரணங்களை கண்டறிய
மாநில அரசு குற்றப்பிரிவு புலனாய்வுத் துறையின் தீவிர விசா
ரணைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. குற்றப்பிரிவு புலனாய்வுத்
துறையிடமிருந்து அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.





ஆக, தற்கொலைதான் என்று தீர்மானமாக முடிவு செய்யப்படவில்லை ; கொலைதான் என்று சொல்லவும் இல்லை. மேற்கொண்டு தீவிர புலன் விசாரணைக்குப் பிறகு கண்டுபிடிக்க வேண்டுமென்று விசாரணைக் குழு தெரிவித்திருக்கிறது. ஆக, உயர்மட்டத்தில் நேர்மையும் திறமையும் வாய்ந்த ஒருவரைக் கொண்டு புலன் விசாரணை செய்யச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அறிக்கையை அரசு ஏற்று, மேற்கொண்டு அரசு கண்காணித்து வருகிறது என்பதை இங்கே குறிப்பிட விருப்புகிறேன்.

நாங்குனேரி காவல் நிலைய ஆய்வாளர் திரு. மங்களதனராஜ் மீதான கற்பழிப்பு புகார் பற்றி இங்கே திருமதி யசோதா அவர்கள் குறிப்பிட்டார்கள் ; மற்றவர்களும் குறிப்பிட்டார்கள். திருநெல்வேலி மாவட்டம், நாகல்குளம் கிராமத்தைச் சார்ந்த திருமதி சுப்புலட்சுமி என்பவர் அவருடைய கணவருக்கும், கணவரின் தங்கைக்குமிடையே ஏற்பட்ட சொத்து தகராறு சம்பந்தமாக எழுந்த வழக்கு சம்பந்தமாக காவல் துறை உதவி கோரியிருந்ததாகவும், 7—6—1984 அன்று தானும் தனது கணவரும் நாங்குனேரி காவல் துறை ஆய்வாளர் திரு. மங்களதனராஜிடம் சென்றதாகவும் எதிர் தரப்பினர் அன்று மாலை அங்கு வர இருப்பதாகவும், அவர்களை விசாரணை செய்யும்போது தன் கணவர் உடன் இருக்க வேண்டாமென்று கூறி அவரை மட்டும் அனுப்பிவிட்டு தன்னை மட்டும் ஏமாற்றி அங்கு தங்கச் செய்து விட்டதாகவும், அன்று இரவு ஆய்வாளர் மங்களதனராஜ் தன்னைக் கற்பழித்து விட்டதாகவும் புகார் கூறியிருந்தார்.

இப்புகார் குறித்து சேரன்மாதேவி சார் ஆட்சியர் காவல் நிலைய ஆணை எண். 145-ன் கீழ் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பித்துள்ளார். விசாரணை அலுவலரின் கருத்தை ஏற்று, காவல் ஆய்வாளர் மங்களதனராஜ் மீது குற்றவியல் மற்றும் துறை நடவடிக்கைக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அவ்வாணை மற்றும் விசாரணை அறிக்கை முறையற்றது என்று மங்களதனராஜ் சென்னை உயர்நீதி மன்றத்தில் தடையுத்தரவு பெற்றுள்ளார். இருந்தாலும் அரசு இந்த தடையுத்தரவை விரைவில் நீக்குமாறும், வழக்கை தொடர்ந்து நடத்துமாறும் கூடுதல் அரசு வழக்குரைஞரை அரசு கேட்டுக் கொண்டுள்ளது. வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. விரைவிலே இந்தத் தடை நீக்கப்பட்டு, அதன் பிறகு முறைப்படி நடவடிக்கை எடுக்கப்படும். இப்படிப்பட்ட பிரச்சனைகளுக்கு இந்த அரசு இடம் கொடுக்காது, கொடுக்கவும் கூடாது. இப்படிப்பட்ட குற்றங்களுக்கு கடுமையான தண்டனை விதித்தால்தான், கடுமையாகத் தண்டிக்கப்பட்டால்தான், மற்றவர்களுக்கு இது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் என்று அரசு ஏற்று, அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூலை 10

திருப்பூரில் உதவிப் பேராசிரியராக இருந்த திருமதி நாகம்
மாள் மரணம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான்
அவர்கள் குறிப்பிட்டு எடுத்துக் கூறினார்கள். திருப்பூர்
எல்.ஆர்.ஜி. நாயுடு பெண்கள் கல்லூரியில் உதவிப் பேராசிரிய
ராக திருமதி நாகம்மாள் பணியாற்றி வந்தார். திருப்பூர்
கடந்த 1—7—1982 அன்று திருமதி நாகம்மாள் என்பவருடைய
மரணம் சந்தேகத்திற்கிடமான மரணம் என காவல் துறையில்
குறிக்கப்பட்டு '' தற்கொலை '' என வழக்கு முடிக்கப்படும்
தருவாயில் உள்ளதாகவும், உண்மையில் திருமதி நாகம்மாள்
வரதட்சணை கொடுமையால் அவருடைய கணவர் திரு, முனி
யப்பன், உதவிப் பேராசிரியர், அரசினர் கலைக் கல்லூரி,
திருப்பூர் என்பவரால் கொலை செய்யப்பட்டதைக் குறித்து
இரகசியப் புலன் விசாரணை வேண்டி இறந்த நாகம்மாவின்
தகப்பனார் திரு. சாமிக் கவுண்டரும் ஏனைய சகோதரர்களும்
விண்ணப்பித்தனர்.

அதன் பேரில் விசாரணை எல்லாம் செய்யப்பட்டது. கடைசி
யில் குற்றப் புலனாய்வுத் துறையில் இது தற்கொலை அல்ல
என்றும் கணவரால் கொலை செய்யப்பட்டுள்ளார் என்றும்
தெரிய வந்தது. ஆகையால் திரு. முனியப்பன் மீது 302, 201
ஐ.பி.சி.படி குற்றம் சாட்டப்பட்டு திருப்பூர் இரண்டாம்
வகுப்பு குற்றவியல் நீதிபதி முன் 6—1—1984 அன்று வழக்கு
பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கில், கோயம்புத் தூர் கூடுதல்
செஷன்ஸ் நீதிபதி அவர்கள் முனியப்பனைக் குற்றவாளி எனத்
தீர்ப்பளித்து. அவருக்கு 302 ஐ.பி.சி-படி ஆயுள் தண்டனை
யும், 201 ஐ.பி.சி-படி 100 ரூபாய அபராதமும் சேர்த்து விதிக்கப்
பட்டது. மேலே குறிப்பிட்ட வழக்கை குறித்து முதல் அமைச்சர்
அவர்களுக்கு குறிப்பு ஒன்று வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில்
குற்றத்தை நிரூபித்து குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கித்
தந்து, துப்பு துலக்குவதில் சிறந்த எடுத்துக்காட்டாகவும், குற்றப்
புலனாய்வுத் துறை செயல்பட்டதற்கு குற்றப் புலனாய்வுத்
துறைக்குப் பாராட்டு தெரிவிக்கவும் மெத்தனமாகக் கண்காணிப்பு
செய்தமைக்காக சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகள்
மீது அதாவது இக்குற்றத்தைக் கண்டுபிடிக்காமல் மெத்தனமாக
இருந்த காவல் துறையின் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்
டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதுகுறித்து பின்னர்
விசாரிக்கப்பட்டு அந்த விசாரணை வந்ததன் காரணத்தால்தான்
குற்றவாளிக்கு ஆயுள் தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்
டிருக்கின்றது. முதலிலே குற்றத்தைக் கண்டுபிடிக்காமல் இருந்த
வர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், தக்க
தண்டனை தரவேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்
கள் மூலமாக ஆணையிடப்பட்டிருக்கின்றது.

டாக்டர் சீத்தாலட்சுமி என்பவரிடத்திலே ஆட்டோ ஓட்டுநர்
தவறாக நடந்தது பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள்.
22—4—1985 அன்று இரவு டாக்டர் சீதாலட்சுமி அவர்கள்



1985 ஜூலை 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தனது சொந்த காரியமாக சென்னையில் உள்ள உட்லன்ட்ஸ்
ஹோட்டலிலிருந்து இம்பீரியல் ஹோட்டலுக்குப் போக ஒரு
ஆட்டோ ரிக்ஷாவை ஏற்பாடு செய்துகொண்டு செல்லும்போது,
ஆட்டோ டிரைவர் வேறு வழியாகச் சென்றார். வைஷ்ணவா
கல்லூரிக்கு முன்பாக, பெரியார் ஈ.வே.ரா. சாலையில் ஆட்டோ
வந்து கொண்டிருக்கையில், ஆட்டோ ஓட்டுநர் மற்றும் அவரது
கூட்டாளிகள் டாக்டர் சீதாலட்சுமியுடன் தவறாக நடந்து
கொண்டு, அவரது சொத்துக்களைப் பறித்துக்கொண்டனர்.
இது சம்பந்தமாக கே. 8 அரும்பாக்கம் கா.நி.கு. எண். 369/85,
354 மற்றும் 379 ஆகிய பிரிவுகளின்கீழ் வழக்கு ஒன்று பதிவு
செய்யப்பட்டது. புகார் கொடுத்தவர், சிறு காயங்
களுக்காக அரசினர் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ
மனையில் புற நோயாளியாக சிகிச்சை செய்யப்பட்டார்.
விசாரணையின்போது, சேகர் (எ) பாணை சேகர் மற்றும் சேகர்
ஆகிய இரண்டு பேர்களும் ராயப்பேட்டையைச் சேர்ந்தவர்
கள் —அந்த இரண்டு பேர்களும் ஆட்டோ ஓட்டுநர்கள். அவர்கள்
கைது செய்யப்பட்டனர். மேலும் ஆட்டோ ரிக்ஷா பறிமுதல்
செய்யப்பட்டது. இரண்டு குற்றவாளிகள் மீதும் 10-வது
மெட்ரோபாலிடன் நடுவர் மன்றத்தில் குற்றப் பத்திரிகைத்
தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணை
யில் இருந்து வருகின்றது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் காவல்
துறை அதிகாரி பிரேம்குமார் என்பவருக்குப் பதவி உயர்வு
கொடுத்தது பற்றிய நிலைமைகளை எடுத்துச் சொன்னார்கள்.
அதுபற்றி விசாரிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள்.

திரு. பிரேம்குமாரை தற்காலிகப் பணி நீக்கத்திலிருந்து விடு
வித்து பணியில் சேர அனுமதிக்க வேண்டுமா என்ற பிரச்சினை
ஆராயப்பட்டது. பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்
துறை, பணியிலிருக்கும் ஒருவர் புதிய பதவிக்காகத் தேர்வாணைக்
குழுவிற்கு மனுச் செய்தால் அந்த மனுவை தேர்வாணைக் குழு
விற்கு அனுப்பும் அலுவலர், இவரது மனுவை அனுப்புவது
பொது நலனுக்கு உகந்ததா என்பதை ஆராய்ந்துதான் அனுப்ப
வேண்டும். தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ள திரு. பிரேம்
குமாரின் மனுவை மதுரை வடக்கு காவல்துறை கண்காணிப்
பாளர், துறைத் தலைவருக்கோ அல்லது அரசுக்கோ அனுப்பித்
தான் இதுபற்றி முடிவெடுத்திருக்க வேண்டும். அதில் அவர்
தவறிவிட்டார். சட்டத்துறை இந்த விவகாரத்தை ஆய்வு
செய்தது. தேர்வாணைக் குழு திரு. பிரேம்குமார் மீது குற்ற
வழக்கு உள்ளது என்பது தெரிந்தும் அவரைத் தேர்ந்தெடுத்து
நியமனத்திற்குப் பரிந்துரை செய்துள்ளது. ஆகவே அவரைத்
தற்போது பணியிலிருந்து நீக்கினால் சட்டச் சிக்கல்கள் ஏற்படும்
என்றும் திரு. பிரேம்குமார் மீதுள்ள குற்ற வழக்கில் அவர்

தண்டனை பெற்றால் அதற்கு ஏற்றவாறு நடவடிக்கை எடுக்க லாம் என்றும் கருத்து கொண்டது. இக் கருத்துக்களின் மீது ஆணை வேண்டி சம்பந்தப்பட்ட கோப்பு முதலமைச்சருக்கு பணிந்தனுப்பப்பட்டுள்ளது.

(பிற்பகல் 12-10)

திரு. பிரேம்குமார் தன்னை பயிற்சிக் கல்லூரிக்கு அனுமதிக் காதது குறித்து அதனை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனு தாக்கல் செய்துள்ளார்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர் துணைக் கண் காணிப்பாளராக நியமனம் பெற அப்பதவிக்கு போட்டி நடத்தும் ஆண்டில் ஜூலை முதல் நாளன்று அவர் 33 வயதைக் கடந் திருக்கக் கூடாது. ஆனால் திரு. ஆவுடையப்பன் என்டவர் இப்போட்டிக்கு மனு செய்யும்போது 1—7—1982-ல் அவர் 36 வயதாக இருந்தார். 3—10—1960 ஆம் நாளிட்ட அரசாணை யின்படி முன்னாள் இராணுவத்தினருக்கு வயது வரம்பை தளர்த்த வகை செய்யப்பட்டுள்ளது. திரு. ஆவுடையப்பன் இராணு வத்தில் பணியாற்றி இருந்ததால் அவரைத் தேர்ந்தெடுத்திருப்ப தாகவும், அவருக்கு வயது வரம்பை தளர்த்த வேண்டுமென்றும் தேர்வாணைக் குழு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. ஆனால் இத்தகவலை தேர்வாணைக் குழு திரு. ஆவுடையப்பனுக்கு நியமன ஆணையினை வெளியிட்ட பிறகுதான் தெரிவித்தது. அவர் மீது எடுக்கப்பட்டிருக்கிற குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப் பட்டுவிட்டால் அவர் மீது தகுந்த நடவடிக்கையை எடுக்க இந்த அரசு தயங்காது என்பதையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, ஒரு சப் இன்ஸ்பெக்டர் சஸ்பெண்ட் செய்யப்பட்டு, ஏற்கெனவே அவர் மீது கிரிமினல் வழக்குகள் இருக்கின்றன. அந்த நிலைமையிலே மெட்டிரியல் பேக்ட்ஸ் ஹேவ்பீன் சப் பிரஸ்ட். அதிலிருந்து சர்வீஸ் கமிஷனிலே இருக்கக்கூடிய உறுப் பினர்கள், எப்படி இவரை சிபாரிசு செய்து அந்தப் பரிந்துரையை செய்தார்கள். இது சாதாரண தப்பு அல்ல. இன்னும் சொல்லப் போனால், தெரிந்தே வேண்டுமென்றே உண்மைகள் மறைக்கப் பட்டிருக்கின்றன. அதற்கு பின்னாலே நான் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன். ஒரு விசாரணையை வையுங்கள். அது சம்பந்த மாக நான் மேலும் விவரங்களைச் சொல்ல தயாராக இருக் கிறேன். காரணம் தெரிந்தே சில தவறுகள் நடைபெற்றிருக் கின்றன. எனவே நான் கேட்கிறேன். டிபார்ட்மெண்ட் என்குயரி என்றும், அதற்கு டிபார்ட்மெண்டல் ஆக்ஷன் என்று முடித்து விடாமல், ஒரு நீதி விசாரணை வைத்தால், நானே பொறுப்பு ஏற்றுக் கொண்டு சில தகவல்களை தரத் தயாராக இருக்கிறேன். அரசு தயாராக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுப்ப வேண்டிய குறிப்புகளை முறைப்படி தேர்வாணைக் குழு அனுப்பாததினால் தான் இந்தத் தவறு ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அப்படி அனுப்ப வேண்டியவர்கள் அனுப்பாமல் இருந்ததற்காக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொன்னது போல அது பற்றிய அதிக விவரங்கள் இருக்கு மானால் , அதை எழுதிக் கொண்டு வந்து முதல்வர் அவர்களிடம் கொடுப்பார்களேயானால், விசாரணைக் கூட தேவையில்லை., தனியாக எழுதி மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தருவாரே யானால் கூட போதும். அரசு நடவடிக்கை எடுக்கும்.

இது குறித்து யாரையும் காப்பாற்ற வேண்டிய அவசியமோ எந்த அதிகாரியையும் காப்பாற்ற வேண்டிய தேவையோ அரசுக்கு இல்லை. உள்ளபடியே தவறுகள் நடந்திருக்கின்றன என்பதற்கு ஆதாரங்கள் இருந்தால், அதற்கு யார் யார் காரணமோ அவர் கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், அது மற்றவர்களுக்கும் எடுத்துக் காட்டாக இருக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசி னுடைய எண்ணம். எனவே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பை விட மேற்கொண்டு ஏதாவது தகவல்கள் அவருக்கு தெரிந்திருக்கு மானால், அதைத் தனியாக எழுதி தருவார்களேயானால், அதன் மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆயத்தமாக இருக்கும். முதலமைச்சர் அவர்கள் எடுப்பார்கள் என்று இந்த நேரத்திலே நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து திண்டிவனம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் வீட்டிலே திருடு போனதைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். திண்டிவனம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் கடந்த 15—3—1985 அன்று திண்டிவனம் வந்து தங்கிவிட்டு இல்லத்தை பூட்டிவிட்டு சென்னை சென்று பின்னர் 21—4—1985 அன்று இரவு 7-30 மணியளவில் திரும்ப வீட்டிற்கு வந்தபோது தன்னுடைய வீட்டில் ரூ. 12,000 மதிப்புள்ள பொருட்கள் திருடு போனது அறிந்தார். அவர் கொடுத்த புகாரின் பேரில் திண்டிவனம் காவல் நிலைய குற்ற எண். 299/85 பிரிவு 452, 380-ன் படி வழக்கு பதிவு செய்து விசாரணை செய்யப்பட்டது.

சங்கர் என்கின்ற சின்னசாமி, சேகர் என்கின்ற சின்ன சங்கர் ஆகியோரைப் பற்றிய கைரேகை தடயம் கிடைக்கப் பெற் றுள்ளது. அவர்கள் மீது இந்த வழக்கில் சந்தேகம் உள்ளபடி யாலும், மேலும் பழைய குற்றவாளிகளான கேடி நடராஜா, டி. சி. கணேசன், எச். ஓ. பூகுளக், கண்ணன் ஆகியோர் மீதும் இவ்வழக்கில் சந்தேகம் உள்ளதாக தெரிகிறது. திருட்டைக் கண்டு பிடிக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

அடுத்து ஆர்டர்லி முறை ஒழிக்கப்பட்டு விட்டதா இல்லையா என்ற வகையில் இங்கே வினா எழுப்பப்பட்டது. 15—8—1980 முதல் காவல் துறையில் ஆர்டர்லி முறை இருக்கக்கூடாது என்றும் காவலர்களை வீட்டில் பணியாளர்களாக பயன்படுத்தக் கூடாது என்றும் அமைச்சரவைக் கூட்டத்திலேயே முடிவு எடுக்கப்பட்டு, அது நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு பதிலாக அரசு அடிப்படை ஊழியர்கள் என்ற முறையில் அதிகாரிகள் மற்றவர்கள் இல்லங்களில் எப்படி அடிப்படை ஊழியர்கள் நியமிக்கப்படுகிறார்களோ, அப்படித்தான் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். எங்காகினும் அப்படி நம்முடைய விதிமுறைகளுக்கு மாறாக, உத்திரவுகளுக்கு மாறாக நடக்குமானால் அது பற்றி விசாரித்து தக்க நடவடிக்கையை எடுக்கவும் அரசு ஆயத்தமாக இருக்கிறது.

பிரேம்குமார் தனக்கு பயிற்சி கொடுக்கவேண்டுமென்று உயர் நீதிமன்றத்திலே ஒரு வழக்கு தொடுத்திருக்கிறார். பயிற்சி கொடுக்கப்படவில்லை. ஆகவே, இது நிலுவையில் உயர்நீதி மன்றத்தில் இருக்கிறது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து வத்தலக்குண்டு நாகராசன் கள்ளத் திருமண இதழ் அடித்தது குறித்து மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் எடுத்துச் சொன்னார்கள். நாகராஜன் என்பவருக்கு தாண்டிக்குடியில் எஸ்டேட் உள்ளது. இவர் தனது சொந்த சகோதரியின் மகள் சாந்தி என்பவரை 1973-ம் ஆண்டு திருமணம் செய்துள்ளார். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளன.

இவர் வத்தலக்குண்டு பஞ்சாயத்து விரிவாக்க பணியாளராக பணியாற்றும் நடராஜன் என்பவரின் பெண் டாக்டர் உமாதேவி என்பவருடன் தொடர்பு ஏற்பட்டு, அவரை இரண்டாம் தாரமாக திருமணம் செய்துள்ளார். நடராஜனின் மனைவி திருமதி கஸ்தூரி மதுரை மாவட்டத்தில் சமூக நலத்துறை அதிகாரியாக பணியாற்றி வருகிறார். இவர்களுக்கு நான்கு பெண்கள் உள்ளனர். மூத்தவர் டாக்டர் உமாதேவி, இரண்டாவது பெண் கிரிஜேஸ்வரி, மூன்றாவது பெண் கீதா, நான்காவது பெண் கலா.

டாக்டர் உமாதேவி 23—7—1984 அன்று இறந்துவிட்டார். உமாதேவி இறந்தவுடன் அவரது தங்கையான கலாவை (தற்போது சிவகாசியில் உள்ள ஐய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரியில் எம். எஸ்ஸி., படித்து வருகிறார்) தான் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்ற நோக்குடன், தனக்கும் கலாவிற்கும் 27—1—1985 அன்று திருமணமென்று, திருமணப் பத்திரிகையை நாகராஜன் அடித்து விநியோகித்துள்ளார்.

இவ்விஷயமறிந்த கலாவின் பெற்றோர்கள் அக்கல்லூரி முதல்வருக்கு தகவல் தெரிவித்து, தங்கள் மகளை யார் அழைத்தாலும் அனுப்பக்கூடாது என தெரிவித்துள்ளனர்.





நடராஜன் அவரது மனைவி கஸ்தூரி மற்றும் அவர்தம் குடும்பத்தினர் தன்னுடைய வீட்டினுள் நுழைந்து கலாவை மணக்கும்படி தன்னைக் கட்டாயப் படுத்தியதாகவும், தான் தனது இரண்டாவது மனைவி உமாதேவிக்குக் கொடுத்த சொத்துக்களை அவர்கள் சுருட்டிக் கொண்டு போய்விட்டனர் என்றும் நாகராஜன் 19—1—1985 அன்று புகார் கொடுத்ததின் பேரில் பட்டிவீரன்பட்டி காவல் நிலையத்தில் வழக்கொன்று பதியப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

விசாரணையில் இது மிகைப்படுத்தி கொடுக்கப்பட்டதென்றும், இதிலே உண்மையில்லை என்பதும் தெரிய வந்தது. அந்த வழக்கில் காவல்துறையினர் நியாயமான நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். நாகராஜனுக்கு காவல்துறையினர் எந்தவிதமான சாதகமான செயலும் செய்யவில்லை. மேலும் நாகராஜன் மீது யாரும் எந்தவிதமான புகாரும் கொடுக்கவில்லை. பெற்றோர்கள் கொடுத்த தன்மையை வைத்துக் கொண்டு மேல்நடவடிக்கையை அரசு எடுத்துக் கொண்டு வருகிறது.

அடுத்து, பூந்தமல்லி சுப்பிரமணியசாமி சிலை திருட்டு. செங்கை மாவட்ட பூந்தமல்லியை அடுத்த தென்னீர்க்குப்பத்தில் உள்ள சுப்பிரமணிய சுவாமி கோவிலில் 2—6—1985-க்கு முன்பு தெய்வயானை, சண்டிகேஸ்வரர், மாணிக்கவாசகர் சிலைகள் திருடு போயின. 3—6—1985 அன்று திரு. நாகராஜ குருக்களின் பிராது மீது பூந்தமல்லி காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. சிலைகளின் மதிப்பு ரூபாய் 7,500.

6—6—1985 அன்று காடுவெட்டியைச் சார்ந்த குற்றவாளிகள் பாபு, ஜெயபால், லோகன் மற்றும் மோகன் ஆகியவர்கள் கைது செய்யப்பட்டு களவு போன சிலைகள் மீட்கப்பட்டன.

28—6—1985 அன்று குற்றவாளிகள் மீது நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

அதேபோல பரமக்குடி கோவில் சிலை திருட்டு பற்றி தெரிவித்தார்கள். காவல்துறை துணைத்தலைவர் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய பதிவேடுகளின்படி பரமக்குடி கற்பூரநாத சுவாமி கோவிலில் சமீப காலத்தில் சிலை திருட்டுப் போனதாக தகவலில்லை. பரமக்குடி காவல் நிலையத்தைத் தொடர்பு கொண்டு விசாரணை செய்ததிலும் பரமக்குடி கற்பூரநாத சுவாமி கோவிலில் சிலை திருட்டுப் போனதாகத் தெரியவில்லை.

1980-ம் ஆண்டு பரமக்குடி காவல் நிலைய சரகத்திலுள்ள அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவிலில் (ஊரப்புலி கிராமம், இராமநாதபுரம் மாவட்டம்) 15—3—1980 அன்று மூன்று

சிலைகள், நடராஜர், சிவகாமியம்மாள், சௌந்திரநாயகி அம்மன் களவாடப்பட்டுள்ளன. இது பரமக்குடி காவல் நிலையத்தில் குற்ற எண் 131/80-ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு, குற்றவாளி பொன்னுசாமி என்பவனை கைது செய்து சிலைகள் மீட்கப்பட்டுள்ளன. போதிய சாட்சிகள் இல்லாததால் நீதி மன்றத்தில் எதிரி விடுதலை செய்யப்பட்டான்.

இப்படி பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டே போகலாம். பல்வேறு வழக்குகள் இருக்கின்றன. வழக்குகள் என்றால் நான் முதலில் சொன்னதைப் போல ஒரு இலட்சத்து சில்லரை வழக்குகள் இருக்கின்றன. இவ்வளவு வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கிற போது, யாருக்கும் ஆதரவு தரவேண்டுமென்றோ, யாரையும் காப்பாற்ற வேண்டுமென்பதோ இந்த அரசின் எண்ணமில்லை. அந்த நோக்கம் இந்த அரசிற்கு இல்லை என்பதைக் குறிப்பிட்டுக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அந்த அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

மதுரை, கோயம்புத்தூர் நகரங்களைப் பொறுத்தவரையில் பெருநகரங்களாக இருப்பதால், சென்னையில் இருப்பதைப் போல ஆணையாளரை நியமிப்பதைப் பற்றி கேட்டிருக்கிறார்கள். மதுரை, கோயம்புத்தூர் நகரங்களில் மெட்ரோபாலிட்டன் திட்டத்தை துவங்குவதற்காக சட்ட நுணுக்கங்களை பரிசீலித்து ஏற்பாடு செய்வதற்காக தனி அதிகாரிகளாக இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்களுடைய அறிக்கையை டி.ஜி.பி. இடம் அதாவது தலைமை காவல் துறை அதிகாரி அவர்களிடம் கொடுத்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் ஒரு நகரத்தின் மக்கள் தொகை 10 இலட்சத்திற்கு மேற்பட்டால் பெருநகரங்களாக ஆக்கலாம் என்ற தன்மையின் அடிப்படையில், அது ஆய்வு செய்யப்பட்டு விரைவில் அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

இங்கே திருவொற்றியூர் தங்கசாமி கொலையைப் பற்றிச் சொன்னார்கள். திருவொற்றியூரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, டோக்கியோ, மணி, சேகர், செட்டி ஆகியவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. இது வழக்கு மன்றத்திலே இருந்து கொண்டு இருக்கிறது. ஜாமீனில் வெளியே வந்திருக்கிறார்கள்.

அதுபோன்று தேர்தல் நடக்கும்போது, வேட்பாளராக இருந்த ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்ற அளவிற்கு அதன் சார்பாக சேகர், ரவி, யுவராஜ், முத்தையா போன்ற





வர்கள் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு தொடரப்பட்டு இருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டுக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அம்மையார் அவர்கள் கூறும்போது, பெண் வார்டர்களாக இருப்பவர்களுக்கு, எஸ்கார்ட் ஆக இருப்பவர்களுக்கு தினக்கூலியாக இப்போது 7½ ரூபாய் என்று உயர்த்தப்பட்டு உள்ளது. ஆகவே, அந்தப் பணியை நிரந்தரமாக்கவேண்டும் என்று சொன்னார்கள். இது மாதத்தில் 30 நாளும் இருக்கிற வேலையல்ல. எவ்வப்போது வேலைகள் வருகிறதோ, அவ்வப்போது தற்காலிகமாக நியமிக்கப்படுகிற காரணத்தால் தான் அவர்கள் தற்காலிகமாக இருந்து கொண்டு இருக்கிறார்களே தவிர, நிலையாக ஆக்குவதற்கு உரிய சூழ்நிலைகள் இருக்குமேயானால் அவர்கள் நிரந்தரம் ஆக்கப்படுவார்கள்.

அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, இந்தக் காவல் துறையை மேலும் செம்மைப்படுத்த வேண்டும், சீர்படுத்தவேண்டும் அதனுடைய பணிகள் நல்ல முறையில் அமைய வேண்டும் என்று சொன்னதாக அவைகளை ஏற்றுக்கொண்டு, அவற்றை அந்தத் துறையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அக்கறை கொண்டு செய்வார்கள் என்பதை இந்த அவைக்கு எடுத்துச் சொல்கிறேன். ஆகவே, இதைப் பொறுத்து, இன்னும் சில பல வசதி வாய்ப்புக்களை பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க காவல்துறையில், குற்றத்தைக் கண்டுபிடிப்பதற்கான கருவிகள் வசதிகள் மேம்பாடு செய்யப்படவேண்டும், எண்ணிக்கைப் பெருக்கப்படவேண்டும், அவர்களுடைய வசதி வாய்ப்புக்களை மேலோங்கச் செய்ய வேண்டும் என்று எடுத்துச் சொன்னக் கருத்துக்களுக்கு இணங்க பல புதிய திட்டங்களை இந்த ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புதல் அளித்து, அதை அறிவிக்கச் செய்யும்படியாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அந்த வகையில் சில அறிவிப்புக்களை இந்த அவையில் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கினை மேலும் திறம்படப் பேணிக் காக்கும் பொருட்டு, தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் கூடுதலாக இரண்டு புதிய அணிகள் ஏற்படுத்தப்படும். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ஆகும் தொடர் இனச் செலவு ரூபாய் 1,54,40,710. தொடரா இனச் செலவு ரூபாய் 1,84,29,515 ஆகும். இந்த இரண்டு அணிகளிலும் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 1,770 நபர்களாகும்.

தமிழ்நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கினைச் திறமையாக நிலைநாட்டும் பணியில் காவல்துறை வாகனங்களின் இன்றியமையா முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, வாகனங்களுடைய எண்ணிக்கையை உயர்த்தவேண்டும் என்ற நோக்கத்தோடு காவல் துறையின் உபயோகத்திற்காக ரூபாய் 1 கோடி செலவில் புதியதாக வாகனங்கள் வாங்கப்படும். இந்த ஒரு கோடி ரூபாய்ச் செலவில் தேவைப்படுகின்ற வாகன வசதிகள் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாடு காவல்துறையில் பணியாற்றும் காவல் பணியாளர்கள், பாதுகாப்பின் பொருட்டு, அனுப்பப்படும் பணிகளுக்காக, இடம் மாற்றும் பொழுது, அவர்களுக்கு தற்பொழுது பந்தோபஸ்து படி வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு வழங்கப்பட்டு வரும் பந்தோபஸ்து படி உயர்த்தப்படுகிறது. இதன் காரணமாக அரசுக்கு ஆகும் மொத்தக் கூடுதல் செலவு ஆண்டு ஒன்றுக்கு 41.45 இலட்சம் ரூபாய் ஆகும்.

தமிழ்நாட்டில் ரூபாய் 25 இலட்சம் செலவில் 9 புதிய காவல் நிலையங்களும், ஒரு புறக் காவல் நிலையமும் கீழ்க்கண்ட இடங்களில் ஏற்படுத்தப்படும்.

வட ஆற்காடு மாவட்டம், இராணிப்பேட்டை தொழிற்கூடப் பகுதியில் ஒரு காவல் நிலையம், தர்மபுரி மாவட்டத்தில், பங்களா குருபரப்பள்ளியில் ஒரு காவல் நிலையம், மற்றும் நாகரசம்பட்டியில் ஒரு காவல் நிலையம், தஞ்சாவூர் மாவட்டத்தில் அரித்துவாரமங்கலத்தில் ஒரு காவல் நிலையம், புதுப்பட்டினத்தில் ஒரு காவல் நிலையம் மற்றும் சேதுபாவாசத்திரத்தில் ஒரு காவல் நிலையம், செங்கல்பட்டு மாவட்டம், கொரட்டூரில் ஒரு காவல் நிலையம், திருநெல்வேலி மாவட்டம் மாசர்பட்டியில் ஒரு காவல் நிலையம். தென்னார்க்காடு மாவட்டம், எடைக்கல் கிராமத்தில் ஒரு புறக் காவல் நிலையம், சென்னை நகரத்தில் சென்னை இராயபுரம் மீன்பிடி துறைமுகப் பகுதியில் ஒரு காவல் நிலையம்.

தமிழ்நாட்டில், சட்டம் மற்றும் ஒழுங்கை திறம்பட பேணிக் காக்கும் பொருட்டு, கீழ்க்கண்டவாறு காவல் நிலையங்கள் வகைப்படுத்தப்பட்டு, காவல் பணியாளர்கள் ஒவ்வொரு காவல் நிலையங்களிலும் நியமிக்கப்படுவார்கள். அந்த வகையிலே ஆய்வாளர்கள் 3 பேர்கள்; சார்பு ஆய்வாளர்கள்/ரிசர்வ் ஆய்வாளர் 12 பேர்கள்; தலைமைக் காவலர் 21 பேர்கள்; காவலர் (1) நிலை 26 பேர்கள்; காவலர் (2) நிலை 154 பேர்கள்.

தமிழ்நாடு காவல்துறையில் அமைச்சுப் பணியில் உள்ள வேலைப் பளுவினை ஆராயும் பொருட்டு நிறுவப்பட்ட சிறப்புக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் காவல்துறையில் கூடுதலாக 200 அமைச்சுப் பணியாளர்கள் நியமனம் செய்யப்படு





வார்கள். இதற்கு ஆகும் செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 15 இலட்சம் ஆகும். இதனால் தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள், நேர்முக உதவியாளர்கள் 6; கண்காணிப்பாளர்கள் 50; உதவியாளர்கள் 100; இளநிலை உதவியாளர்கள் 30; சுருக்கெழுத்து தட்டச்சர்கள் 5; தட்டச்சர்கள் 6; பதிவு எழுத்தர்கள் 3; ஆக 200 பேர்கள்.

தமிழ்நாட்டில், சட்டம் மற்றும் ஒழுங்கினை நிலைநாட்டும் பணியில் ஈடுபட்டுள்ள காவலர்களுக்கு, வழங்கப்பட்டு வந்த ஊதியத்தின் விகிதத்தை மாற்றி அமைக்கவேண்டும் என்று, தேசிய காவல் குழு, நேஷனல் போலீஸ் கமிஷன், பரிந்துரை செய்தது. இதன் அடிப்படையில், காவலர்கள் நிலை—2. தற்போது பெற்று வந்த அடிப்படை ஊதியத்தின் விகிதமான ரூபாய் 280–450 என்பதனை உயர்த்தி ரூபாய் 295–475 என்ற விகிதத்திற்கு மாற்றப்பட்டு உள்ளது.

இதேபோன்று முன்பு தலைமைக் காவலர்கள் ரூ. 350—10 420–15-600 என்ற விகிதத்தில் பெற்று வந்த அடிப்படை சம்பள விகிதத்தினை தற்போது அமைச்சுப் பணியில் உள்ள உதவியாளர்கள் பெறும் ஊதியத்தின் அளவான ரூ. 400–700 என்ற அடிப்படை . விகிதத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இதே போல் காவல் வானொலிப் பிரிவு மற்றும் சேமப்படை பிரிவு பணியாற்றும் உதவி சார்பு ஆய்வாளர்களின் பதவித் தரம் காவல்துறையில் உள்ள மற்றய சார்பு ஆய்வாளரின் பதவித் தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும் காவல்துறையில் பணியாற்றி வரும் காவல் ஓட்டுநர்கள், மற்றும் ஒயர்லஸ் ஆப்ரேட்டர்கள் ஆகியவர்களுக்கு தற்போது முறையே ரூ. 40 மற்றும் ரூ. 25 சிறப்பு ஊதியமாக உயர்த்தப்பட்டுள்ளது.

காவலர்களுக்கு ரூபாய் 4.50 ஆக வழங்கப்பட்டு வந்த உணவுப் படி ரூ. 6 ஆகவும் சார்பு ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர்களுக்கு முறையே வழங்கப்பட்டு வந்த உணவுப் படி ரூ. 6லிருந்து 7.50 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

காவல் பணியாளர்கள் அவர்களுக்குரிய விடுமுறை நாட்களில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடும்பொழுது அதற்காக அவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் விடுமுறை ஈட்டுப்படி ரூ. 7லிருந்து ரூ. 10 ஆக உயர்த்தப்படுகிறது.

தமிழ்நாடு காவல்துறையில் பணியாற்றி வரும் உள்ளூர் காவலர்களுக்கு தற்பொழுது சீருடை மற்றும் கறுப்புக் காலணிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக தற்பொழுது நிர்ணயிக்கப்பட்டுள்ள காலத்தினை மாற்றியமைத்து ஆணை வெளியிடப்படும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூலை 1

இதற்காகும் மொத்தச் செலவு ஆண்டு ஒன்றிற்கு ரூபாய் 9.84 லட்சம் ஆகும்.

தமிழ்நாடு சிறப்புக் காவல்படை அணிகளில் பிரிவுகள் 1, 3, 4, 5-ல் கேரிசன் பிரிவுகள் ஏற்படுத்தப்படும்.

இதற்காகும் செலவு ஆண்டு ஒன்றிற்கு ரூபாய் 12.14 இலட்சம் ஆகும்.

ஒரு கேரிசன் பிரிவிற்குரிய பணியாளர்களின் எண்ணிக்கை உதவி ஆய்வாளர் ஒருவர், ஹவில்தார் 3 பேர்கள், நாயக் 3 பேர்கள், லான்ஸ் நாயக் 3 பேர்கள், காவலர் 30 பேர்கள் ஆக மொத்தம் 40 பேர்கள்.

தமிழ்நாடு காவல்துறையில் குற்றப் புலனாய்வுத் துறையில் முக்கிய குற்றங்களைத் துப்புத் துலக்கும் பணியில் உள்ள பிரிவிற்கு கூடுதல் பணியாளர்கள் நியமனம் செய்யப்படுவார்கள்.

இதற்காகும் செலவு ரூபாய் 10 லட்சம் ஆகும். பணியாளர் பற்றிய விவரங்கள். காவல்துணைக் கண்காணிப்பாளர் ஒருவர், காவல் ஆய்வாளர்கள் 7 பேர்கள், காவல் சார்பு ஆய்வாளர்கள் 14 பேர்கள், தலைமைக் காவலர்கள் 14 பேர்கள், காவலர்கள் (இரண்டாம் நிலை) 84 பேர்கள். காவலர் (ஓட்டுநர்) ஒருவர், அலுவலக உதவியாளர் ஒருவர் என்று நியமிக்கப்படுவார்கள்.

நீரடிக் கழிவு இல்லாத காவல் நிலையங்களில் நீரடிக் கழிவிட வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இதற்காகும் தொடரா இனச் செலவு ரூபாய் 7.03 இலட்சம் ஆகும்.

காவல்துறையில் பணியாற்றுபவர்கள் நலனைக் கருத்தில் கொண்டு காவல்துறையினரின் குடியிருப்புகள் அதிகமாக உள்ள பெரு நகரங்களில் காவல்துறையினரின் உபயோகத்திற்கென்று தனியாக கடலூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் காவல் மருத்துவ நிலையங்கள் ஏற்படுத்தப்படும்.

இதற்காகும் செலவு ஆண்டொன்றுக்கு ரூபாய் 6.70 இலட்சம் ஆகும்.

1984-85 ஆண்டிலிருந்து காவலர் நல நிதிக்கு அரசு வழங்கி வந்த தொகையை ரூபாய் 3.5 இலட்சத்தில் இருந்து இப்போது ரூபாய் 5 இலட்சமாக உயர்த்தப்படுகிறது.

தமிழகத்திலுள்ள போக்குவரத்துக் காவலர்கள் கடும் வெயிலில் நின்று கொண்டு போக்குவரத்தினை ஒழுங்கு செய்யும் பணியினை மேற்கொள்ளும்போது அவர்களுக்கு வெய்யிலின் கொடுமையிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் 122 போக்குவரத்து நிழற் குடைகள் ஏற்படுத்தப்படும்.



1985 ஜூலை 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இதற்காகும் தொடரா இனச் செலவு ரூபாய் 8 லட்சத்து 11 ஆயிரத்து 300 ஆகும்.

தென்னாற்காடு மாவட்டம் விழுப்புரத்தில் ஒரு காவல் கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்படும்.

இதற்காகும் செலவு ஆண்டு ஒன்றிற்கு ரூ. 7.20 இலட்சம் ஆகும்.

**தொழில் நுட்ப அலுவலர்கள்**

சார்பு ஆய்வாளர்கள் 3 பேர்கள், சார்பு ஆய்வாளர் (தொழில் நுட்பம்) ஒருவர், உதவி ஆய்வாளர்கள் 2 பேர்கள், தலைமைக் காவலர் 3 பேர்கள், காவலர் நிலை-2, 3 பேர்கள், மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கைக் காப்பாற்ற ஆய்வாளர் ஒருவர், சார்பு ஆய்வாளர் 3 பேர்கள், தலைமைக் காவலர் 6 பேர்கள், காவலர் நிலை—2, 9 பேர்கள், அலுவலக உதவியாளர் ஒருவர் நியமிக்கப்படுவார்கள்.

புதிய தொலைபேசி வசதி. சென்னை நகரம் மற்றும் மாவட்டங்களில் உள்ள காவல் நிலையங்களுக்கு ரூ. 5 இலட்சம் செலவில் தொலைபேசிக் கருவிகள் இந்த ஆண்டு அமைத்துக் கொடுக்கப்படும்.

**சென்னை நகரம்**

போர்ட், ஆனை கவுனி, ஏழு கிணறு, கொத்தவால் சாவடி, அண்ணாசாலை, மெரினா, அண்ணா சதுக்கம், அரசு எஸ்டேட், ஸ்ரீனிவாசபுரம் அபிராமபுரம், எழும்பூர், ஆயிரம் விளக்கு, சேத்துப்பட்டு, பெரிய மேடு, வண்ணாரப்பேட்டை.

(பிற்பகல் 12-30)

டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர், அடையாறு, சாஸ்திரி நகர், அமைந்தகரை, பெரவள்ளூர், அரும்பாக்கம், ஹார்பர், முத்தியால்பேட்டை, புளியந்தோப்பு, ஓட்டேரி, சர்மா நகர், கோடம்பாக்கம், பாண்டி பஜார், சூளை மேடு, குமரன் நகர், ஆகிய இடங்களிலும், செங்கல்பட்டு மாவட்டத்தில் டி.டி. வனம், எம். எம். காலனி, கொரட்டூர் ஆகிய இடங்களிலும், செய்து தரப்படும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூலை 10

செங்கல்பட்டு மேற்குப் பகுதியில், செவ்வாப்பேட்டை, கல்பாக்கம், மேல்மருவத்தூர் ஆகிய இடங்களிலும், தென்னாற்காடு, ஓமங்கலம், கம்மாபுரம், புதுச் சத்திரம் ஆகிய நிலையங்களிலும், வடாற்காடு மாவட்டம், வட பந்தல் நிலையத்திலும், சேலம் இரும்பு எஃகு தொழிற்சாலை பகுதியிலேயும், அரசு மருத்துவமனை காவல் நிலையத்திலேயும், தர்மபுரியில் கிருஷ்ணகிரி காவல் நிலையத்திலும், நிதிகண்ட பாளையம் காவல்நிலையம், தோப்பூர், சிங்காரம்பட்டி, தூதூர், மாவட்டக் குற்றப் பிரிவு அலுவலகத்திலும், திருச்சிராப்பள்ளி கொட்டப்பட்டி, உப்பிலியாபுரம், தாத்தையங்கார்பேட்டை, கே. பரமத்தி, அரியலூர் சிமெண்ட் திட்டம், காவல் இருப்புப்பாதை ஆகிய இடங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் மண்டையூர், நாகுடி, கரூர், திரிபுனவாசல், மாத்தூர் ஆகிய இடங்களிலும், தஞ்சாவூர் தெற்கு பகுநியில் தஞ்சாவூர் தெற்கு, பைன்காத்தூர், காலபால், எடையூர், தோகூர் ஆகிய இடங்களிலேயும், தஞ்சை கிழக்கு, கரியப்பட்டினத்திலும், கோயம்புத்தூர் புறநகரில், புத்தூர் அணை, ஆலந்துறை, துணைக் காவல் கண்காணிப்பாளர் ஆயுதப்படை ஆகிய இடங்களிலும், கோயம்புத்தூர் ஊரகம், கடம்பாறை, பெருனநல்லூர், அலியூர் ஆகிய இடங்களிலும், பெரியார் மாவட்டம் கருங்குலப்பாளையம்—என்ற இடத்திலும், மதுரை தெற்கு எஸ்.எஸ். காலனி, விமான நிலையம் ஆகிய இடங்களிலும், மதுரை, வீரவேடு, மதுரை காவல் மருத்துவமனை ஆகிய இடங்களிலும், இராமநாதபுரம் கிழக்கு கேணிக்கரை, பாமன், துணைக் காவல் கண்காணிப்பாளர் குற்றப் பிரிவு ஆவணங்கள் வைப்பறை ஆகிய மூன்று இடங்களிலும், திருநெல்வேலி மாவட்டம் கள்ளிடைக்குறிச்சி, அச்சம்புதூர், முக்கூடல், பசுவந்தளை ஆகிய இடங்களிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில், தூதூர் என்ற இடத்திலும், நீலகிரி மாவட்டத்தில் துணைக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், ஆயுதப் படை ஆகிய இடங்களிலும், இந்த ஆண்டு தொலைபேசி வசதிகள் சிறப்பாகச் செய்து தரப்படும்.

தமிழகத்திலுள்ள அனைத்துக் காவல் நிலையங்கள், ஆயுதப்படைப் பிரிவு மற்றும் காவல் வானொலிப் பிரிவிற்கு முதலுதவிப் பெட்டிகள் மூன்றுவருட காலத்தில் படிப்படியாக வழங்கப்படும். இதற்காகும் தொடரா இனச் செலவு ஆண்டொன்றிற்கு ரூபாய் 3,21,243 ஆகும்.

சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள பி3 காவல் நிலையத்தினை பலப்படுத்தும் பொருட்டு அதற்கு கூடுதல் காவல் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள். இதற்காகும் செலவு ஆண்டு ஒன்றிற்கு ரூபாய் 4.31 இலட்சம்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் அளிக்கப்பட்ட உறுதி மொழியின் அடிப்படையில் திண்டிவனம் காவல் நிலையத்தில் உள்ள காவல் பணியாளர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படும். இதற்காகும் செலவு ஆண்டு ஒன்றிற்கு ரூபாய் 2 இலட்சத்து 31 ஆயிரம் ஆகும்.



1985 ஜூலை 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இரவு நேரங்களில் பணிபுரியும் சாலைப் போக்குவரத்து காவலர்களுக்கு, அவர்களின் பாதுகாப்பை முன்னிட்டும், அவர்களின் பணியினைச் செவ்வனே செய்யும் பொருட்டும், தன்னிச்சையாக ஒளி பிரதிபலிக்கும் சிவப்பு ஆடிகள் கொண்ட இடுப்புக் கச்சை (லெதர் பெல்ட்) வழங்கப்படும். இதற்காகும் மொத்தச் செலவு ரூபாய் 4,500 ஆகும்.

தமிழகத்தில், காவல்துறையில் உள்ள பல்வேறு அலுவலகங்களில் பணியாற்றும் பணியாளர்களின் உபயோகத்திற்காக, ரூபாய் 88,861 செலவில் மரச் சாமான்கள் வழங்கப்படும்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் பணி புரியும் சலவைத் தொழிலாளர்களுக்கு மொத்தம் 122 சலவைப் பெட்டிகள் ரூபாய் 49 ஆயிரத்து 550 செலவில் வழங்கப்படும்.

தமிழ்நாடு காவல் வானொலிப் பிரிவில் உள்ள 10 ஜெர்மன் எச். எப். டிரான்ஸ் ரிசீவர் கருவிகளுக்குப் பதிலாக, 10 ஆர்.எம்.எஸ். 4204 எச்.எப். டிரான்ஸ் ரிசீவர் கருவிகளை வாங்கி பயன்படுத்தப்படும். இதற்காகும் மொத்தச் செலவு ஆண்டு ஒன்றிற்கு ரூபாய் 3 இலட்சத்து 69 ஆயிரம் ஆகும்.

காவல் பயிற்சிக் கல்லூரியில், காவலர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சித் திட்டத்தை, நவீனப்படுத்தும் வகையில், சென்னையிலுள்ள காவல் பயிற்சிக் கல்லூரிக்கு ரூபாய் 32 ஆயிரத்து 336 செலவில் 35 எம். எம். நிழற்பட கருவி ஒன்று வாங்கப்படும்.

சென்னை நகரில் பணியாற்றும் காவல்துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகளுக்கு குடியிருப்பு வசதிகள் செய்து தரப்படும்.

காவல்துறையில் பணியாற்றும் காவல் துணைக் கண்காணிப்பாளர்களுக்கு குடியிருப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

கோயம்புத்தூர் மாவட்ட காவல்துறை துணைத் தலைவர் குடியிருப்பு வளாகத்திற்குள் அலுவலக கட்டிடம் கட்டுதல், மதுரை மாவட்டம் திண்டுக்கல் கக்கன் நகரில் உள்ள காவல் குடியிருப்புக்கு கிணறு மற்றும் மேல் தொட்டி கட்டுதல், மதுரை தெற்கு மாவட்ட காவல் நிலையத்தில் சைக்கிள் நிறுத்தும் இடம் கட்டுதல், வடக்கு காவல் ஆயுதப் படைக்கு இடி தாங்கியுடன் கூடிய பெரிய வாயு அறை கட்டுதல், தல்லாகுளம் சட்டம் ஒழுங்கு, காவல்நிலைய குற்றப் பிரிவு மற்றும் போக்குவரத்து பிரிவு போன்ற பத்து பிரிவுகளுக்கு கட்டிடம் கட்டுதல், மதுரை துணைக் காவல்துறைத்

தலைவரின் குடியிருப்புக்கு முன்னேற்றப்பணி செய்தல், குதிரைப் படைக்கான குதிரை லாயம் கட்டுதல், திருச்சிராப்பள்ளி, கண்டோன்மென்ட் காவல் நிலையத்தில் குற்றப் பிரிவு ஆய்வாளருக்கு அலுவலகம் கட்டுதல், ஜெயங்கொண்டம் காவல் நிலையத்தில் பழுது பார்த்தல், திருப்பரங்குன்றம் காவல் குடியிருப்புக்கு குடிநீர் குழாய் ஏற்படுத்தல், பழனி சிறப்புக் காவல்படையின் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்துதல், மதுரை திருமங்கலம் துணைக் காவல் கண்காணிப்பாளர் குடியிருப்புக்கு மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டுதல், மதுரை தெற்கு ஆயுதப்படை நூலகத்திற்குக் கூடுதல் வசதி செய்து கொடுத்தல், திருச்சியில் வானொலி செய்தி தொடர்பகம் கட்டுதல், பெரியார் மாவட்டம் பெருந்துறை காவல் நிலையத்தில் பொருள்களை வைத்து பாதுகாப்பதற்காக ஒரு அறை கட்டுதல், கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் காவல் கட்டுப்பாட்டு அறை, வானொலி தொழிற் கூடம் மற்றும் வட்ட ஆய்வாளர் அலுவலகம் கட்டுதல், வடாற்காடு மாவட்டம் மேல் பட்டு திருப்புநிலையம் வானொலிப் பிரிவிற்கு நிலையான குடிநீர் வசதி செய்து கொடுத்தல், தென்னாற்காடு மாவட்டம், கடலூரிலுள்ள ஒரு விரல் ரேகைப் பிரிவிற்கு தனியாக ஒரு கட்டிடம் கட்டுதல், சேலம் மாவட்டத்தில் காவல் வானொலி அலுவலகத்தில் முதல் மாடி கட்டிடம் கட்டுதல், சேலம் இருப்புப்பாதை காவல் குடியிருப்பில் மேல்நிலை நீர்த் தொட்டி, மின்சார மோட்டார் மற்றும் நீர்க் குழாய்கள் அமைத்தல், நீலகிரி மாவட்டம் காவல் அலுவலகத்தை விரிவுபடுத்தி கட்டிடம் கட்டுதல், திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடியில் ஒரு காவல் கட்டுப்பாட்டு அறை கட்டுதல், பாளையங்கோட்டை சேமப்படை பிரிவில் வாயு அறை மற்றும் கிடங்கு அறைக்கு சிமென்ட் பலகை போடுதல், எட்டையபுரம் காவல் குடியிருப்பில் குடிநீர் வசதி எற்படுத்துதல், கன்னியாகுமரி மாவட்டம் இராஜாக்கமங்கலம் காவலர் குடியிருப்பு வளாகத்தில் கிணறு தோண்டுதல், அறுமணைக் காவல் நிலையத்திற்கு குடி நீர் வசதி செய்து கொடுத்தல், அஞ்சுகிராமம் காவலர் குடியிருப்பினைச் சுற்றி கம்பி வேலி கட்டுதல், மேற்கு சிவகாசியில் உள்ள காவல் மருத்துவமனையில் பணிபுரியும் பணியாளரின் குடியிருப்புக்குக் குடி நீர் வசதி செய்து கொடுத்தல், சென்னை மாவட்டம் இராஜாத்தினம் விளையாட்டு மைதானத்தில் வடக்குப் பகுதியைச் சுற்றி ஒரு சுவர் கட்டுதல், மற்றும் வண்ணாரப்பேட்டை மற்றும் சைதாப்பேட்டை காவல் நிலையங்களில் வானொலி பட்டறை மற்றும் மின் கலன்கள் வைக்கும் அறை கட்டுதல் போன்ற கட்டுமான மற்றும் செப்பனிடும் பணிகளுக்காக ரூபாய் 59.86 இலட்சம் செலவிடப்படும்.

பெரியார் மாவட்டத்தில் உள்ள காவல்துறைக் கண்காணிப்பாளருக்குக் குடியிருப்பு வசதி செய்து தரப்படும்.





காவல்துறை பணியாளர்கள் நாள்தோறும் ஆற்ற வேண்டிய பணிகளில் சட்டம் பற்றிய அடிப்படை விதிகளைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் கருதி இந்தியத் தண்டனைச் சட்டம்/குற்றவியல் சட்டம்/ இந்தியச் சான்றுச் சட்டம் ஆகியவற்றில் அவர்களுக்கு அடிக்கடி தொடர்புடைய முக்கியச் சட்டப் பிரிவுகள் பற்றிய விவரங்களை எளிய நடையில் தொகுத்து சிறிய புத்தக வடிவில் அவர்களது அன்றாட உபயோகத்திற்காகக் கொடுக்கப்படும்.

தமிழ்நாடு தீயணைப்புத் துறை சேமநல நிதிக்கு அரசு ஆண்டுதோறும் அளித்து வரும் மானியத் தொகையை ரூபாய் 10,000-லிருந்து ரூபாய் 50,000 ஆக உயர்த்தப்படும்.

இதற்காக ஆண்டொன்றிற்கு ஏற்படும் தொடர் இனச் செலவு ரூபாய் 40,000 ஆகும்.

தமிழ்நாடு தீயணைப்புத்துறை மாநில பயிற்சிப் பள்ளியில் பணியாற்றும் நிலைய அலுவலர் (போக்குவரத்து), ஓட்டுநர், இயந்திரக் கம்மியர் மற்றும் தீயணைப்பு ஓட்டுநர் ஆகியவர்களுக்கு முறையேமாதம் ஒன்றுக்கு ரூபாய் 50 ரூபாய் 25 மற்றும் ரூபாய் 25 என போதனைப்படி வழங்கப்படும்.

இதனால் ஆண்டொன்றிற்கு ஏற்படும் கூடுதல் தொடரினச் செலவு ரூபாய் 1,200 ஆகும்.

தீயணைப்புத் துறையில் உதவி நிலைய தீயணைப்பு அலுவலர் என்ற ஒரு புதிய பதவி இடங்கள் 15 ஏற்படுத்தப்படும். இதற்காகும் செலவு ரூ. 1.7 இலட்சமாகும்.

தீயணைப்புத் துறையில் திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டாரம் ஒன்று ஏற்படுத்தப்படும். இதற்காகும் தொடரினச் செலவு ஆண்டொன்றுக்கு ரூ. 96,000 மும் தொடராயினச் செலவு ரூபாய் 26,000 மும் ஆகும்.

தமிழ்நாட்டில் தீயணைப்புத் துறையில், நிர்வாகத் திறனை அதிகரிக்கும் நோக்கத்தோடு, தற்போதுள்ள செங்கல்பட்டு-தென்னாற்காடு கோட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதினால் அரசிற்கு ஆண்டொன்றிக்கு ரூபாய் 1.06 இலட்சம் தொடரினச் செலவாகவும், தொடராயினச் செலவாக ரூ. 0.26 இலட்சமும் ஏற்படும்.

தமிழ்நாட்டில், இந்த ஆண்டு ஐந்து இடங்களில் புதியதாகத் தீயணைப்பு நிலையங்கள் தோற்றுவிக்கப்படும். இதற்காகும் தொடரினச் செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 13 இலட்சம். ஆகும். தொடராயினச் செலவு ரூபாய் 15 இலட்சம் ஆகும் (குறுக்கீடு) திருமங்கலத்தில் தீயணைப்பு நிலையம் கட்ட ஒத்துக்

கொள்ளப்பட்டிருக்கிறது. என்ஜின்கள் மற்றவைகளை உருவாக்குகின்ற பணிகளைச் செய்வதற்கு நமக்குச் சரியாக இல்லாததால், தனியார் கம்பெனிகளிடத்தில் கொடுத்தும் சரியாக வராததால், கட்டுமானக் கழகத்தின் மூலம் கட்டும்படியாகச் சொல்லியிருக்கிறோம். (குறுக்கீடு) கட்டி முடிக்கப்பட்டு விட்டால் வந்துவிடும். வரக்கூடிய ஏற்பாடுகளைக்கூட நாமே செய்திருக்கிறோம், விரைவிலே வரும். ஏனென்றால், 4 ஆண்டுக்காலமாக அந்த இடங்களில் வைக்க வேண்டுமென்று எண்ணியும் அதற்கான தனி முறைகளிலே வாகனங்கள், வசதிகள், தண்ணீர்,டாங்குகள் மற்றவைகள் எல்லாம் வேண்டியிருக்கிறது. அதை தனியார்கள் எல்லாம் சரியாக எடுத்துக்கொள்ளவில்லை. அதோடு அவர்கள் அதிகமான அளவுக்குக் கேட்டார்கள். ஆக, நாமே 3 இடங்களிலே கட்டுமானக் கழகங்களிடம் கொடுத்து அவற்றைச் செய்யலாம் என்று அவர்களும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிகமான அளவுக்கு போகாமலும், நாம் எந்த அளவுக்கு ஆக வேண்டுமென்று விரும்புகிறோமோ அந்த அளவுக்குக் கட்டித் தர போக்குவரத்துத் துறையினுடைய கட்டுமானக் கழகங்கள் முன் வந்திருப்பதன் காரணமாக இந்த ஆண்டிலேயே கொண்டு வரப்படும் என்ற அளவுக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

இப்பொழுது புதிதாக வருகின்ற 5 நிலையங்கள், திருச்சி மாவட்டத்தில் அரவக்குறிச்சியில் ஒன்றும், தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளியில் ஒன்றும், செங்கல்பட்டு மாவட்டம் செங்குன்றத்தில் ஒன்றும் மதுரை மாவட்டம் சோழவந்தானில் ஒன்றும், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் சிங்கம்புணரி ஆகிய ஐந்து இடங்களில் இந்த ஆண்டு கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

(பிற்பகல் 12—40.)

தீயணைப்பு நிலையம், தீயணைப்பு நிலையங்கள் உள்ள கட்டுப்பாட்டு அறையில் கூடுதல் பணியாளர்கள் ஏற்படுத்தப்படுவார்கள். இத்திட்டத்தினால் அரசிற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 2.18 இலட்சம் தொடரினச் செலவாக ஏற்படும்.

தஞ்சாவூர் மற்றும் சேலத்தில், புதிதாக பிரிக்கப்பட்டுள்ள இரு கோட்டங்களின் உபயோகத்திற்காக, இரண்டு ஜீப்புகள் வாங்கப்படும். இதற்கான தொடரினச் செலவு ஆண்டொன்றுக்கு ரூ. 0.50 இலட்சமும் தொடரா இனச் செலவாக ரூ. 1.60 இலட்சமும் ஏற்படும்.

தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஒசூர் தொழிற்பேட்டை வளாகத்திலுள்ள தீயணைப்பு நிலையத்திற்குக் கூடுதலாக ஒரு நீர்தாங்கி வண்டி ரூ. 3.20 இலட்ம் செலவில் வழங்கப்படும்.





சென்னை, கிண்டியிலுள்ள ஆளுநர் மாளிகையில் தீயணைப்பு நிலையம் ஒன்று திறக்கப்படும். இதற்காகும் தொடரினச் செலவு ஆண்டொன்றுக்கு ரூ. 2.17 இலட்சமும் தொடராயினச் செலவு ரூ. 3.33 இலட்சமும் ஆகும்.

காவல் துறை மற்றும் சிறைத்துறையில் பணிபுரியும் தற்காலிக பெண் வழித் துணைக் காவலர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் தினப்படி ரூ. 3-லிருந்து ரூ. 8 ஆக உயர்த்தப்படும். இதற்கென ஆண்டு ஒன்றிற்கு ஆகும் செலவு ரூ. 7,11,000 ஆகும்.

இவை அனைத்திற்கும், மாண்புமிகு முதல்வர் அறிவித்த வகையிலேயே, ஆகின்ற கூடுதல் மொத்தச் செலவு ரூ. 7 கோடியே 7 இலட்சத்து 50,000 அளவுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது, இவ்வளவுக்குத்தான் இந்த ஆண்டு முடியும். அவ்வளவுக்குத்தான் நிதித் துறையும் இடம் கொடுக்கும். ஆக, அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் பல சொல்லியிருந்தாலும் அவற்றை எல்லாம் மெல்ல, மெல்ல, நாளடைவில் மேற்கொள்ளப்படும் என்று சொல்லி இந்த மானியக் கோரிக்கைகள் இரண்டையும் பற்றி நீண்ட நேரம் எடுத்துச் சொல்லிவிட்டேன் விளக்கங்கள் பெறவேண்டுமென்பதற்காக. இவ்வளவு செலவினத்திற்குப் பிறகு அதிலேயும் மேற்கொண்டு வன்முறையில் ஈடுபட்டு வெட்டு போடாமல் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்பு நிலையம் திருத்துறைப்பூண்டியில் வரும் என்று 4 வருஷமாக இடம் பெற்று வருகிறது இந்த விளக்கக் குறிப்பில். இன்னமும் கிடைக்கவில்லை. இந்த வருஷமாவது உறுதியாகக் கிடைக்குமா என்றுதான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி ஆராயலாம். நான் சொன்ன 34-லே திருத்துறைப்பூண்டி இருந்தால், திரு. சிந்தனுக்குச் சொன்ன பதில் உங்களுக்கும் பொருந்தும்.

திரு. வி. பி. சிந்தன் : தலைவர் அவர்களே, முன்னவர் அவர்களிடமிருந்து நான் எதிர்பார்ப்பது, தமிழகத்தினுடைய போலீஸ் கொள்கையில் ஏதேனும் அடிப்படையான மாற்றம் ஏற்படுமா என்பதுதான். அவர் விளக்கமாக, விரிவான ஒரு தகவல் அறிக்கையைக் கொ( )த்திருக்கிறார்களே தவிர, ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் தொழிலாளர்கள், விவசாயிகள், அரிசன மக்கள், வழக்கறிஞர்கள், அவர்களிடம் எல்லாம் பிரச்சினைகள் ஏற்படும்போது நம்முடைய போலீஸ் கடந்த காலத்தில் நடந்து கொண்ட முறை எவ்வளவு தவறானது என்பதை

எங்கள் பக்கத்திலேயிருந்து சுட்டிக் காட்டினோம். குறைகள் இருக்கலாம், மிகைப்படுத்திக் கூறப்பட்டிருக்கலாம், அதற்கெல்லாம் நான் இப்போது போகவில்லை. இப்பொழுதெல்லாம் ஆளுங் கட்சியினுடைய, இன்னும் விளக்கிச் சொல்வோமேயானால் It has become a pliable instrument in hands of the ruling party. அந்தக் குற்றச்சாட்டுக்கு அமைச்சர் பதில் சொல்வாரா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே விளக்கி எடுத்துச் சொன்னேன். இந்த அரசு நடைபெற்றுக் கொண்டு வருகிற முறைகளை, கையாளப்பட்டு வருகிற முறைகளை, தெளிவாக எடுத்துச் சொன்னேன். இந்த அரசு தொழிலாளர்களுக்கோ, எழுத்தாளர்களுக்கோ அல்லது ஆசிரியர்களுக்கோ, அல்லது வழக்கறிஞர்களுக்கோ, மற்றவர்களுக்கோ, யாருக்கும் மாறுபட்ட ஒன்று அல்ல என்பதைநடந்து முடிந்த பொதுத் தேர்தலே மிகச் சிறப்பாக தெளிவாகக்காட்டியிருக்கிறது. செய்தியாளர்களையும், வழக்கறிஞர்களையும் மாணவர்களையும் ஆசிரியர்களையும் இந்த அரசு விரோதித்துக் கொண்டிருந்தால் அவர்களுடைய நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்றிருக்க முடியாது.

ஆக, எந்த இடத்தில் யார் தவறு செய்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அவர்கள் குற்றவாளிகளாக இருந்தால் அவர்கள் மீது முறைப்படி வழக்குத் தொடரப்பட வேண்டும். அந்த வகையில் அரசு உண்மையைக் கண்டறிந்து, நியாயமான நடவடிக்கைகளை எடுக்கும். நியாயமான உணர்வுகளின் அடிப்படையில் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு தந்திருக்கிறோம். தொழிற்சாலைகள் மூடப்பட்ட போது இதற்கு முன்னால் தொழிலாளர்களுக்கு நிவாரணம் கொடுத்தார்களா என்பது சந்தேகம். ஆனால் இந்த அரசு பொறுப்புக்கு வந்த பிறகு பல இலட்சக்கணக்கான ரூபாய் மூடப்பட்ட தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு நிவாரணமாகத் தந்திருக்கிறது. அதே நேரத்தில் அரசு உடைமைக்கும், தொழிற்சாலைக்கும் பாதுகாப்பு தர வேண்டும். முதலாளியாக இருந்தாலும் சரி, தொழிலாளியாக இரு தாலும் சரி, பொதுமக்களாக இருந்தாலும் சரி,எல்லோருக்கும் பாதுகாப்பு தர வேண்டும். அந்த வகையில் நியாயமான அடிப்படையில் யாராக இருந்தாலும் பாதுகாப்பு தரப்படும்.

நாட்டிலே ஏராளமான வழக்கறிஞர்கள் இருக்கும் போது வழக்கறிஞர்களுக்கும் காவல் துறைக்கும் வரக் கூடிய தகராறு அந்தப் பிரிவினர் எல்லோருக்குமான தகராறு அல்ல. குறிப்பிட்ட இருவருக்குள் வரக்கூடிய தகராறாக இருக்கிறது. அப்படிப்பட்டத் தகராறைக் கூட முடித்து வைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருதி, முன்னாள் நீதிபதி திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் தலைமையில் ஒரு குழு அமைத்து



இப்படிப்பட்ட பிரச்சனைகள் காவல் துறைக்கும் வழக்கறிஞர்களுக்கும் வருமானால் உடனடியாக விசாரித்து, அவர்கள் தருகின்ற தீர்ப்பின் அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுக்க முடிவு செய்திருக்கிறது. இரண்டு தனிப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட தகராறை இரு இனத்தவர்களுக்கான தகராறாக்கிவிடுவது பொருத்தமானதல்ல. ஒரு வழக்கறிஞருக்கும் ஒரு காவல் துறை அலுவலருக்கும் தகராறு வந்து விட்டால் அது காவல் துறையிலுள்ள அத்தனை பேர்களுக்கும் வழக்கறிஞர்கள் அத்தனை பேர்களுக்கும் ஏற்பட்ட தகராறாகி விடாது. ஒரு மாணவருக்கும் போக்குவரத்துத் துறையில் பணியாற்றுகின்ற கண்டக்டர் ஒருவருக்கும் தகராறு என்றால் அது இரண்டு பேர்களுக்கும் இடையிலே தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை. அதற்காக மாணவர்கள் அத்தனை பேர்களும் ஒன்றாகத் திரண்டு வந்து, போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்கள் அத்தனை பேர்களும் ஒரு பக்கம் திரண்டு வந்து, அது சென்னை முழுவதும் பரவி, தமிழ்நாடு முழுவதும் பரவிடக் கூடாது என்ற அடிப்படையில், நியாயமான அடிப்படையில் தீர்வு காணாமல் தொழிலாளர் விரோதக் கொள்கையை வைத்திருந்தால் இந்த அரசு நிலைக்காது. நாட்டில் இருக்கிற மக்கள் அத்தனை பேருடைய நம்பிக்கையும் இருந்தால் தான் ஆட்சிக்கு வரமுடியும். அந்த வகையில்தான் நாங்கள் காரியங்களைச் செய்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கிடைத்தத் தகவல்களைத் தெரிவிக்கிறார்கள். அதற்குத் தகுந்த பதில்களை, நியாயமான பதில்களை நாங்கள் தகவல்களாக எடுத்து வைக்கிறோம். தகவல்களைச் சொல்லாத நிலையில் உண்மையைத் தெரிந்து கொள்ள முடியாது. அதற்காகத்தான் இன்ஃபர்மேஷன் டிபார்ட்மென்ட் இருக்கிறது. தகவல் தருவதற்காகத்தான் நாங்கள் அந்தப் பிரிவை வைத்திருக்கிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த தகவல்களை வைத்து, அந்த அடிப்படையில் இயன்ற அளவு செய்கிறோம். குற்றமே நடக்கவில்லை, தகராறு இல்லை, நூற்றுக்கு நூறு சரியாக நடக்கிறது என்று நான் சொல்லவில்லை. சில இடங்களில் கொடுமை நடக்கிறது, முறைகேடுகள் நடக்கின்றன என்பதை ஏற்றுக் கொள்கிறேன். அதற்கெல்லாம் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் காவல் நிலையங்களில் ஏற்படுகின்ற சாவுகளைப் பற்றிய முடிவு அல்லது விசாரணை அல்லது அதிகாரிகள் சொல்லுகிற தீர்ப்பு, பஞ்சாயத்தார் சொல்லுகிற தீர்ப்பு அத்தனையும் கைதிகள் தூக்குப்போட்டு செத்தார்கள் என்று தான் வருகிறது. ஆகவே, தொடர்ந்து இப்படி தூக்குப் போட்டு இறந்தார் என்று சொல்லுகிறபோது, தூக்குப்போடாத அளவுக்கு பாதுகாப்பு ஏதாவது செய்ய முடியாதா? ஏன் அந்த வகையில் அரசு நடவடிக்கைஎடுக்கக் கூடாது ?

[1985 ஜூலை 10

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, காவல் நிலையத்தில் 24 மணி நேரமும் கண்காணிக்க வேண்டுமென்றுதான் மூன்று ஷிப்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் முழு நேரமும் கண்காணிக்க வேண்டும், கண்காணித்திருக்க வேண்டும். பாரா பார்க்கின்றவர் பாரா பார்க்காமல் இருந்தால் சில நேரங்களில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறக் கூடும். விசாரணைக் குழு அறிக்கைகள் அத்தனையும் தூக்கு என்று வரவில்லை. சில இடங்களில் சந்தேகம் இருக்கிறது. அடித்ததன் மூலம் அல்லது படாத இடத்தில் பட்டதன் காரணமாக இறந்தார் என்று வந்திருக்கிறது. அதற்கெல்லாம் உரிய நடவடிக்கை எடுத்து வருகிறோம். தூக்குப் போட இடம் இருக்கக் கூடாது ; வாய்ப்பு இருக்கக் கூடாது என்பது தான் அரசின் எண்ணம். தூக்கு போடக் கூடிய அளவுக்கு வசதிகளும் இருக்கக் கூடாது, கண்காணிப்பு இருக்க வேண்டும். அந்த வகையிலே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்த ஆலோசனையை பரிசீலித்து, தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

(பிற்பகல் 12.50)

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய தொகுதிப் பிரச்சினை ஒன்றைப் பற்றிக் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் விளக்கவுரையில் காவல் துறைக்குத் தொலைபேசி வசதி செய்து கொடுப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் சென்ற தினம் கூட கோரிக்கை வைத்தேன். எங்களுடைய தொகுதியில் பள்ளிப்பட்டு போலீஸ் ஸ்டேஷனில் தொலைபேசி வசதி அவசியம் கொடுக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறேன். இந்த நிதியாண்டிலே அது அமலாக்கப்பட வேண்டும் என்று ஒரு கோரிக்கையினை வைக்க விரும்புகிறேன்.

கோரிக்கை எண் 15—காவல் துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

திரு. கோ. வீரய்யன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

திருவாளர்கள் என்.எஸ்.வி. சித்தன், கு. சுப்பராயன், எஸ். என். இராமசாமி ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திருப்பம் பெற்றுக் கொள்ளப் பெற்றன.



1985 ஜூலை 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 99,90,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்.

திரு. கோ. வீரய்யன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றதாகக் கருதப் பெற்றது.

திருவாளர்கள் என்.எஸ்.வி. சித்தன், எஸ்.என். இராமசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,35,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடபெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(இ) கோரிக்கை எண் 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த மானியக் கோரிக்கை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 44,09,60,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

**திரு. சி. பழனிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பெரிய கல்ராயன் மலை கீழ் நாட்டிலுள்ள கண்யாவளவு ''கொங்காடு'' ஆகிய கிராமங்களில் வீடுகள் தீப்பற்றி எரிந்ததால் தாட்கோ மூலம் இலவச வீடுகள் கட்டிக் கொடுப்பதின் அவசியத்தைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 44,09,60,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**திரு. எஸ். என். இராமசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தொகுதி, அனவரதநல்லூர் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 44,09,60,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கைக் குறிப்பு** அவையின் முன் வைக்கப் பெற்றுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்விகளுக்குக் கடைசியில் என்னுடைய பதில் அளிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***திரு. சா. ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் 1985—86-ஆம் ஆண்டுக்கான ஆதி திராவிடர் நலன் சம்பந்தப்பட்ட கோரிக்கையின் மீது நடைபெறுகின்ற விவாதத்தில் நான் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

சுதந்திரம் அடைந்து 38 ஆண்டுகள் ஆகியும் கூட இந்த ஆதி திராவிடர் மக்களின் நிலைமை மிகவும் பரிதாபகரமான நிலையில் உள்ளது. 1967-ஆம் ஆண்டுக்குப் பின் ஆதி திராவிட மக்கள் தொகை அதிகரிக்கப்பட்டும் அந்த மக்களின் வருவாய் அதிகரிக்கவில்லை, வாழ்க்கைத்தரம் உயரவில்லை என்பது வருந்தத்

**720-738ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.





தக்கது. வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களின் எண்ணிக்கை நலிந்த நிலையில் உள்ள மக்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாகத்தான் இருந்து கொண்டிருக்கின்றது. அவர்கள் தாழ்த்தப்பட்ட நிலைமையில்தான் இருக்கிறார்கள் என்பது வேதனைக்குரிய விஷயமாகும். தாழ்த்தப்பட்ட மக்களின் இந்தப் பரிதாபகரமான நிலைமைக்குக் காரணம் கல்வி வளர்ச்சி பெறாததுதான் என்று அண்ணல் காந்தியடிகளும், மறைந்த பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்களும் அறியாமையைப் போக்க கல்விதான் முக்கியம் என்றும் ஏழ்மையில் இருந்து விடுபட கல்வி உதவியாக இருக்கும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் அறியாமை என்ற கொடுமையைப் போக்க நலத்துறைப் பள்ளிகள் துவக்கப்பட்டன. இது ஓரளவுக்குத் தாழ்த்தப்பட்ட மக்களின் கண்களைத் திறந்துவிட்டது. ஆனால் இந்த நலத் துறைப் பள்ளிகள் சீராக நடக்கின்றனவா என்று கேட்டால், ஒழுங்காக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவா என்று கேட்டால் அதுபற்றி யாரும் கவலைப்படவில்லை. துறை அதிகாரிகள் கூட இந்தப் பள்ளிகளைச் சரிவரக் கண்காணிப்பது கிடையாது. அங்கு பணிபுரியும் ஆசிரியர்கள் நிலைமையும் மிகவும் பரிதாபகரமான நிலையில் உள்ளது. இருந்தாலும் அங்கே பணிபுரியும் ஆசிரியர்களை தொலை தூரத்திற்கு, அடிக்கடி மாற்றுகிறார்கள். தாலுக்கா விட்டு தாலுக்காவிற்கும் மாவட்டங்களை விட்டு மாவட்டத்திற்கும் ஏறத்தாழ 800க்கும் மேற்பட்ட ஆசிரியர்களை இந்த வருடத்தில் மாற்றியிருக்கிறார்கள். இது மிகவும் மோசமான ஒரு நிலைமையாக இருக்கிறது. ஆசிரியர்கள் இதுபோன்று மாற்றப்படுகின்ற நிலைமை என்பது தேவைதானா என்பதை அரசு சிந்திக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். இதனால் மக்களின் வரிப்பணம் மிகவும் பாழாகிறது. அவர்களுக்கு அளிக்கப்படும் பயணப்படி தொகையை வேறு நல்ல காரியங்களுக்கு பயன்படுத்தலாமே என்று கேட்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆதித்திராவிட மக்களுக்காக வீட்டு வசதி வாரியம் என்று தனியாக இருப்பதாக சொல்கிறார்கள். ஆனால் அந்த வாரியம் உருப்படியாக எதையும், எந்தக் காரியத்தையும் செய்வதாகத் தெரியவில்லை. வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன அதன் மூலமாக என்று சொல்லுகிறார்கள். ஆனால் அந்த வீடுகள், புறாக் கூண்டுகள் போன்றுதான் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அதிலே ஆர்.எல்.இ.ஜி.பி. மற்றும் என்.ஆர்.இ.பி. திட்டங்களின் மூலமாக கட்டிக் கொடுக்கப்படுவதாகக் கூறுகிறார்கள். ஹட்கோ மூலமாகவும் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அதிலே ஆர்.எல்.இ.ஜி.பி. மற்றும் என்.ஆர்.இ.பி. திட்டங்களின் மூலம் கட்டிக் கொடுக்கப்படும் வீடுகளில் 10

சதவீதம் தான் ஆதித்திராவிடர்களுக்காக ஒதுக்கப்படுகின்றன. அந்த ஒதுக்கீட்டை இன்னும் அதிகமாக்கி ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1967–68 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே இந்தத் துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 6 கோடியே 31 லட்சம். ஆனால் அதற்கு பத்தாண்டுகள் கடந்து 1977–78லே இந்த இலாக்காவிற்காக ஒதுக்கப்பட்ட தொகை சுமார் 14 கோடியே 78 லட்சமாகும். ஆனால் அதே சமயத்தில் 1984–85லே சுமார் 48 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு 1985–86 ஆம் ஆண்டிலே அதிலே 4 கோடி ரூபாயைக் குறைத்து—இந்த வருஷத்திற்கும், போன வருஷத்திற்கும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, 4 கோடி ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. இந்த ஆண்டு அதாவது 1985–86ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ள தொகை 44 கோடியே 9 லட்சத்து 60 ஆயிரம் ஆகும். இது 4 கோடி ரூபாய் போன ஆண்டை விடக் குறைவாக உள்ளது. என்ன காரணம் என்று சரியாக விளக்கம் கொடுக்கப்படவில்லை.

இந்த அரசுக்கு நிதி பற்றாக்குறை உள்ளதா ? ஏன் போன ஆண்டிலே இந்தத் துறைக்கு 48 கோடி ரூபாய் அளவிற்கு ஒதுக்கியிருக்கும் போது, இந்த ஆண்டு அதை விட 4 கோடி ரூபாயை குறைத்துக் கொடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே தன்னுடைய உரையிலே பதிலாக தெரிவிப்பார்கள் என்று கருதுகிறேன்.

அதே சமயத்தில் இந்த 44 கோடி ரூபாய் ஒதுக்கீடு என்பது பார்ப்பதற்கு மொத்தத்தில் அதிக தொகை மாதிரி, பெரிய தொகை மாதிரி தெரிந்தாலும், ஆதித்திராவிட மக்களுக்காக, அவர்களின் நலனிற்காக, அவர்களின் மேம்பாட்டிற்காக, கொடுக்கப்பபடிருக்கிற திட்டங்களுக்கு அது போதுமானதாக இருக்கிறதா என்பதை இந்த மாமன்றம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே சமயத்தில் இந்த அவையிலே உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளிலே ஆதித்திராவிட மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற அந்த 44 தொகுதி என்ற எண்ணிக்கையின் அடிப்படையிலாவது இந்த நிதி ஒதுக்கீடு இருக்கிறதா என்று இந்த மாமன்றம் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே சமயத்தில் நான் பொதுவாகவும் சில விஷயங்களை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசை சில விஷயங்களில் நான் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன். கிராம அதிகாரிகள் என்று—வி.ஏ.ஓ. என்று சொல்லத்தக்க—கிராம அதிகாரிகளை 12 ஆயிரம் பேர்களை தமிழகத்தில் அண்மையில் நியமனம்





செய்தார்கள். அதில் சிறப்பு என்னவென்றால், குறிப்பாக ஆதித்திராவிட மக்களுக்கு அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு, கிராம அதிகாரிகள் பதவிக்கு வருவது என்பது ஒரு மிகப் பெரிய விஷயம். அவர்களைப் பொறுத்த வரையில் குதிரைக்கொம்பிற்கு சமம் என்றுதான் சொல்லவேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் உள்ள அந்த ஆதித் திராவிட மக்களில் 2 ஆயிரம் பேர்களுக்கு, கிராம அதிகாரிகளாக வருவதற்கு வாய்ப்பு கொடுத்து, ஒரு பெரிய காரியத்தை சாதித்துக் காட்டியிருக்கிறார்கள். அதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன். புரட்சித் தலைவர் அவர்களே, இந்த சமுதாயத்தினருக்கு இந்த வகையில் ஒரு பெரிய நல்ல காரியத்தை செய்திருக்கிறார்கள் என்பதற்காகவும் அவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அடுத்து ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் நமது இந்தியாவிற்கு ஒரு தங்கமோ, வெள்ளியோ கூட பரிசுப் பதக்கங்கள் கிடைக்கவில்லையே என்பதற்காக, மாணவர்கள் சிறு வயதிலேயே சத்துணவை சாப்பிட்டு நல்ல உடல் ஆரோக்கியத்தோடு இருந்தால் தான், அவர்கள் பிற்காலத்திலே சிறந்த விளையாட்டு வீரர்களாக வர முடியும், இது போன்ற பந்தயங்களில் வெற்றி பெற முடியும் என்றுதான், இந்த சத்துணவு திட்டத்தை முதல்வர் அவர்கள் கொண்டு வந்தார்களோ என்று கூட நான் கருதுகிறேன். அதுவும் நம் நாடு ஏழைகள் அதிகமாக வாழ்கின்ற நாடு. அதிலும் குறிப்பாக 90 சதவீத ஆதித்திராவிட மக்களின் குழந்தைகள் சத்துணவு சாப்பிட்டு நலம் பெற்று ஆரோக்கியமாக விளங்கிட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான் சத்துணவைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றும் நான் கருதுகிறேன்.

(பிற்பகல் 1—00)

ஆகவே இந்த அரசை நான் பாராட்டுகிறேன். அண்மையில் ஒரு உத்தரவில் தற்காலிகமாக வேலை செய்த 10 (ஏ) (1) என்ற நிலையிலிருந்து அரசு ஊழியர்களை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பணி நிரந்தரம் செய்திருக்கிறார்கள். அப்படி பணி நிரந்தரம் செய்யப்பட்ட 12 ஆயிரம் பேர்களில், ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை சதவீதத்தினர் பலன் பெற்றிருக்கிறார்கள் என்ற விவரத்தினை இந்த மன்றத்திற்கு தெரிவிக்கவில்லை. நான் கேள்விப்பட்ட வரையில் ஆதி திராவிட சமுதாயத்தினர் 8 சதவீதமோ அல்லது 10 சதவீதமோ தான் பயன்பெற்றிருக்கிறார்கள் என்று அறிகிறேன். ஆகவே மீதமுள்ள 8 சதவீதத்தை, அல்லது 10 சதவீதத்தை எப்போது இந்த அரசு நிரப்பப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதுகுறித்து அமைச்சர் அவர்கள் பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

136419

[திரு. சா. ஜெயச்சந்திரன்] [1985 ஜூலை 10

அதேநேரத்தில் அரசு நிறுவனங்களாக இருந்தாலும், அரசுத் துறை பொது நிறுவனங்களாக இருந்தாலும் தாழ்த்தப்பட்டவர்களுக்காக 18 சதவீதம் வேலை வாய்ப்பில் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று நிர்ணயித்துள்ளார்கள். ஆனால் எந்த நிறுவனமும் இந்த முறையை பின்பற்றுவதில்லை. இது வேதனை தரக்கூடிய விஷயமாகும். அரசிடமிருந்து உதவி பெறுகிற எல்லா நிறுவனங்களிலும் இந்த 18 சதவீதக் குறியீட்டை அவர்கள் பூர்த்தி செய்ய வேண்டும். ஆனால் எந்த நிறுவனமும் இந்த விஷயத்தில் அக்கறை காட்டுவதில்லை. எத்தனை பேர்களை தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை பணியில் நியமித்திருக்கிறார்கள் என்ற கணக்கை வாங்கி தெரிவிக்கிறார்களே தவிர, முழுமையாக எந்த நிறுவனத்திலாவது 18 சதவீத குறியீட்டை பூர்த்தி செய்திருக்கிறார்களா என்றால் கிடையாது. இதுகுறித்து யாரும் கவலைப்படுவதில்லை. இந்தத் துறை அமைச்சர் அவர்கள் கூட கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் பஞ்சாயத்துக்களுக்கு தேர்தல் நடத்தப்படுமென்றும், அதற்காக ஒதுக்கீட்டு முறையையும் அரசு அறிவித்தது. பலர் நீதிமன்றங்களுக்குச் சென்று இந்த ஒதுக்கீட்டு முறையை ரத்து செய்துவிட்டு, பழைய முறையில் தேர்தல் நடத்த வேண்டுமென்று கோரியதாகவும், அதற்கு அரசு முன்வந்ததாகவும் தெரிகிறது. அதையும் அரசு அறிவித்தது. அரசு உண்மையில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்காக இட ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று கருதியிருந்தால் சட்டத்தின் அடிப்படையில் அதனைச் செய்திருக்கலாம். ஆனால் விளம்பரத்திற்காக இட ஒதுக்கீடு முறையில் தேர்தல் நடக்குமென்று அரசு அறிவித்திருக்கிறது என்பது வேதனைப்படக் கூடிய விஷயம். ஒருவனுக்கு இலையில் சாப்பாடு போட்ட பிறகு, அவன் சாப்பிட உட்காருகிற போது இலையை இழுத்துவிடுவதைப் போன்றுதான், பஞ்சாயத்து தேர்தல்கள் அறிவிக்கப்பட்டு, இடஒதுக்கீடுகள் எல்லாம் செய்யப்பட்டு, அரசு இடஒதுக்கீடு முறையில் தேர்தல் நடக்குமென்று அறிவித்து விட்டு, கடைசியில் நீதிமன்றங்களில் தடையாணை வாங்கிவிட்டதால், தான் இடஒதுக்கீடு முறையில் தேர்தல் நடத்த முடியவில்லை என்று தெரிவித்தது. அரசு இந்த இடஒதுக்கீட்டு கொள்கையில் தீவிர எண்ணம் கொண்டிருக்குமானால், சட்டம் இயற்றிவிட்டு அதற்குப் பின்னாலே தேர்தல்களை வைத்திருக்கலாம். ஆகவே எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற முறையிலேதான் அரசு செயல்படுகிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இலாக்காவிற்கு அமைச்சராக பொறுப்பேற்று இருக்கிறவர்கள் தமிழகத்திலே 44 சட்டமன்ற தனித் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற உறுப்பினர்களை இதுவரையில் அழைத்து பேசவே இல்லை. ஆனால்



1985 ஜூலை 10] [திரு. சா. ஜெயச்சந்திரன்]

பாராளுமன்றத்தில் அப்படிப்பட்ட கூட்டங்கள் அடிக்கடி அந்த துறை அமைச்சர்களால் கூட்டப்படுகிறது. அப்படி அந்தக் கூட்டங்கள் கூட்டப்பட்டு விவாதங்கள் மூலமாக கிடைக்கிற தகவல்களை மசோதாக்களின் மூலம் அந்தப் பலன் மக்களுக்கு கிடைக்கும் வகையில் செய்து அவைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலத்தில் அந்த முறை பின்பற்றப்படுவதில்லை. அதனைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்த, துறைக்காக நிதி நிலை அறிக்கையில் நான்கே நான்கு வரிகள் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடுகு சிறுத்தாலும் காரம் போகாது என்று சொல்வார்கள். அந்த வகையில் சமூக நலத்துறை என்ற தலைப்பிலே ஆதிதிராவிடர் நலம் பற்றி கொண்டு வந்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்காக இயங்கிக் கொண்டிருக்கிற அரசு என்று சொல்லப்படுகிறது. அப்படியென்றால் இவர்களுக்காக தன்னிச்சையாக இயங்கும் வகையில் ஒரு இலாக்காவை ஏன் ஏற்படுத்தக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

யார் ஆட்சிக்கு வந்தாலும் இது உங்களுடைய ஆட்சி, நாங்கள் உங்களுக்காகவே இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் நிதிநிலை அறிக்கையில் பக்கம் 28-ல் பாரா 51-ல் ஆதிதிராவிடர் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய நோக்கமாகக் கொண்டு ஆதி திராவிடர் சிறப்பு அம்ச திட்டத்தை செயல்படுத்திக் கொண்டு வருகிறது என்றும், இதற்காக பல்வேறு முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகிறது என்றும் மாண்புமிகு நாவலர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் நல்ல தமிழில் அலங்கார நடையில் பேசுகிற புலமை பெற்றிருக்கிறார்கள். அழகு தமிழிலே விவாதத்தில் கலந்து கொண்டு எல்லோரின் பாராட்டுதல்களையும் பெற்றிருக்கிறார் என்பதாலோ என்னவோ, நிதிநிலை அறிக்கையில், சிறப்பு அம்சத் திட்டத்தை மேற்கொள்ள பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம் என்று வார்த்தை ஜாலங்கள் மூலம் சொல்லி இருக்கிறார்கள். திட்டவட்டமாக இந்தச் சமுதாயத்தின் வளர்ச்சிக்காக எதையும் அவர்கள் குறிப்பிடவில்லை. (மணியடிக்கப்பெற்றது)

*திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை இந்த நிலைக்கு ஆளாக்கி, வளர்த்த எங்களது இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியினைக் கூறி இந்த மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்த சபாநாயகருக்கு நன்றி கூறி எனது பேச்சைத் தொடர்கிறேன்.

புரட்சித் தலைவரின் புனித ஆட்சியில் தமிழக மக்கள் அடைந்த நன்மைகள், பயன்கள் ஏராளம். அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள், வழங்கப்படும் உரிமைகள் எந்த ஒரு ஆட்சியிலும் இல்லாத ஒரு சிறப்பான நிலையில் இருக்கிறது. எங்கள் இதய தெய்வமாம் புரட்சித் தலைவரின் நல்லாட்சியின் பயன்கள் மேலும் இந்த மக்களுக்குக் கிடைத்து, இந்த மக்களின் வாழ்க்கைத் தரம் மேலும் மேலும் உயர்வாகவும், சிறப்பாகவும் அமையும் நோக்கத்தோடு இந்த மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்காக தாயுள்ளம் கொண்ட தலைவரின் கால் பணிந்து சில கோரிக்கைகளை அவையின் முன் சமர்ப்பிக்கிறேன்.

என்னுடைய தொகுதியான, உப்பிலியாபுரம் தொகுதி, பெரும் பகுதி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், ஏழை எளிய மக்கள் வாழும் வானம் பார்த்த தொகுதியாகும். இங்குள்ள மக்கள் மழைக்காலங்களில் வரும் நீரை பயன்படுத்தி, விவசாயம் செய்து வருகிறார்கள். இங்கு வாழும் ஆதி திராவிட மக்கள், மலைவாழ் மக்கள், உரிமையோடு வாழ, எந்தப் பிடிப்பும் இல்லாமல் தினக் கூலியை மட்டும் நம்பி வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். இவர்களுக்கு ஆண்டு முழுவதும், நிரந்தரத் தொழில் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எனது தொகுதியில் உள்ள செங்காட்டுப்பட்டி, கீரம்பூர், துறையூர், உப்பிலியாபுரம், கொப்பம்பட்டி ஆகிய கிராமங்களில், அதிகமான ஆதி திராவிட மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடு கட்டிக் கொடுக்கவும், பச்சைமலை அடிவாரப்பகுதியில் உள்ள புறம்போக்கு, தரிசு, வன இலாக்காவுக்கு சொந்தமான சமப் பகுதி நிலங்களையும், பிரித்துக் கொடுத்து, ஆதி திராவிட, பழங்குடி மக்களின் பொருளாதாரத்தை மேம்படச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியின் அதிகமான பரப்பில் பச்சைமலை இருக்கிறது. இங்குள்ள பழங்குடி மக்களின் வாழ்க்கை, உலக அதிசயங்களில் ஒன்றாகக் கூடிய அளவிற்கு, பின்தங்கியிருக்கிறது. தினை வகைகளை மட்டுமே உண்டு உயிர் வாழும் இவர்களின் உயிர்களுக்கு பாதுகாப்பு இல்லை. அங்கே வாழும் பழங்குடி மக்கள் நோய்வாய்ப்பட்டு, உயிருடன் போராடுபவர்களையும், பிரசவத்திற்கு வேதனையுறும் கர்ப்பிணி பெண்களையும் 20 கி. மீட்டர் தொலைவில் உள்ள நகரங்களுக்கு பிணத்திற்கு பாடை கட்டுவது போல் கட்டி, மருத்துவமனைக்கு தூக்கிச் செல்வதும், செல்லும் வழியிலேயே அவர்கள் உயிர் பிரிந்து, உடலை மீண்டும் சொந்த இடத்திற்கே எடுத்துச் செல்லும் அவல நிலைமையையும் நினைக்கும்போது என் மனம் வேதனைப்படுகிறது. இதனை அரசு உடனே கவனித்து பழங்குடி மக்களுக்கு நல்ல ஒரு தீர்ப்பினை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





எனது தொகுதியைச் சார்ந்த பச்சைமலைப் பகுதியிலே இருக்கும் செங்காட்டுப்பட்டிக் கிராமத்திற்கு கப்பிச் சாலைகள் போடப்பட்டுள்ளன. பஸ் விடுவதாகச் சொல்லி, இது வரையில் பஸ் விடப்படாமல், அங்கே வாழும் மக்கள் பழங்குடி மக்கள், பெரும் அவதிக்கு உள்ளாகிறார்கள். அங்கே உள்ள மக்கள் 1985 ஆம் ஆண்டு கூட பேருந்துகளைப் பார்க்காமல் இருக்கிறார்கள். பேருந்து எப்படி இருக்கும் என்பது கூட தெரியாமல் இருக்கிறார்கள்.

பச்சைமலையில் ஆதி திராவிட உறைவிடப் பள்ளிகள் 17 இருக்கின்றன. இவற்றில் பணியாற்றும் ஆசிரியர்கள் கடமை உணர்வு அற்றவர்களாகவும், அரசின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்படாதவர்களாகவும் நடந்து கொள்கிறார்கள். மாதத்தில் ஒரு வாரம் கூட பள்ளிக்குச் செல்வதில்லை. பழங்குடி மக்களையும் அவர்களின் குழந்தைகளையும், இந்த நல்ல அரசையும் அவர்கள் ஏமாற்றி வருகிறார்கள்.

சாப்பாட்டில் காய்கறிகள், சரியாகப் போடுவதில்லை. உறைவிடப் பள்ளிகளுக்கு காய்கறி விற்பனை செய்பவர்கள், சரிவர விநியோகம் செய்வதிலே பல தவறுகள் நடக்கின்றன. காய்கள் நல்லதாக இல்லை. இக்காய்கறி ஒப்பந்தப் புள்ளிகளை தற்சமயம், மார்க்கெட் ரேட்டில் யார் ஒப்பந்தப் புள்ளி கோருகிறார்களோ, அவர்களுக்குக் கொடுத்தால், அங்கு காய்கறிகள் ஒழுங்காக விநியோகிக்கப்படும். 1 பவுன் விலை 2,000 ரூபாய் என்றால், ஒரு ஒப்பந்தக்காரர் 500 ரூபாய்க்கு தருகிறேன் என்றால், அந்தப் பவுன் எப்படியிருக்கும் என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

(பிற்பகல் 1–10)

எனவே, தற்பொழுது விடப்பட்ட குறைந்த விலையில் 5 பைசா, 10 பைசா டெண்டர்களை நீக்கி மார்க்கெட் ரேட்டிற்கு யார் கேட்டுள்ளார்களோ அவர்களுக்கு கொடுக்கவேண்டும். அதனால், அங்கு பயிலும் மாணவர்கள் பயன்பெறுவார்கள். ஆதி திராவிடர், மற்றும் பழங்குடியினர் ஏழை, எளிய குழந்தைகள், பள்ளி இறுதி படிப்பை முடித்து விட்டு தொழிற்கல்வி கற்க வேண்டுமானால் திருச்சி, சேலம் போன்ற நகரங்களுக்குச் சென்று படிப்பை தொடர முடிகிறது. எனவே, அரசு ஐ.டி.ஐ. எனது தொகுதியில் ஏற்படுத்தித்தர வேண்டிக் கொள்கிறேன். தனியார் நிறுவனத்தின் கீழ் ஐ.டி.ஐ. ஏற்படுத்தினால் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏழை, எளிய மாணவி, மாணவர்கள் நன்கொடை என்ற பெயரில் பணம் கொடுத்து சேர முடியாத நிலைதான் உண்டாகும். அப்பொழுது வசதி படைத்தவர்கள் மட்டுமே, சேர்ந்து கல்வி கற்கும் நிலைஏற்படும். எனவே தான் அரசு ஐ.டி.ஐ. வேண்டும் என்று கூறுகிறேன். ஆதி திராவிடர், பழங்குடியினர் நலன் கருதி மேற்படி கல்வி நிறுவனத்தை எனது தொகுதியில் நிறுவ வேண்டுகிறேன்.

[திருமதி இரா. சரோஜா] [1985 ஜுலை 10

பச்சைமலைக்கு துறையூரிலிருந்து செம்பிளிச் சாம்பட்டிக்கு மின் இணைப்பு செய்யும் வேலை 1975 ஆம் ஆண்டு துவக்கப் பட்டு, இதுவரை மின் இணைப்பு கொடுக்கப்படாமல் இருப்பதால் அங்கு வாழும் பழங்குடி மக்கள், நரக வேதனை அடைந்து வருகிறார்கள்.

எனது தொகுதியைச் சார்ந்த, பச்சைமலைப் பகுதியில், சந்தன மரங்கள் நன்கு வளர்கின்றன. இவற்றில் உள்ள சந்தன மரங்களை கொண்டு சந்தன எண்ணெய், சந்தன சோப்பு, தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தினால், கச்சாப் பொருட் கள் உற்பத்தியாகும். அங்குள்ள பழங்குடி மக்களும் பயனடை வார்கள். எனது தொகுதி மக்களும் பயனடைவார்கள். இதனை பரிசீலித்து, பல கோடி ரூபாயை ஆதி திராவிட மற்றும் பழங்குடி யினருக்காக செலவு செய்யும் எங்களது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுக்க பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் துறையூரில் கண்டசாரி சர்க்கரை ஆலை துவக்கப்பட்டு இப்பொழுது மூடப்பெற்றுவிட்டது. அதனை மீண்டும் திறந்து சர்க்கரை ஆலையை அரசே ஏற்று நடத்தினால் உப்பிலியாபுரம் தொகுதி ஆதி திராவிட மக்கள் பயனடைவார்கள். எனவே, அரசு இதனை பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் ஜில்லாவை, சேர்ந்த பச்சைமலைப் பகுதி யையும் திருச்சி ஜில்லாவில் உள்ள பச்சைமலைப் பகுதி யையும் சேர்த்து ஒரு தனி ஊராட்சி ஒன்றியமாக அமைத்தால், அங்குள்ள மலை வாழ் மக்களின் கல்வித் தரம், பொருளாதார முன்னேற்றம், அத்தியாவசிய தேவைகள், போக்குவரத்து, சாலை வசதிகள் ஏற்பட வாய்ப்பு உள்ளன. எனவே, பச்சைமலைப் பகுதியை தனி ஊராட்சி ஒன்றியமாக்க நான் வற்புறுத்திக் கூறுகிறேன். அரசு பல கோடி ரூபாய்களை செலவு செய்தும், பழங்குடி மக்கள் அவர்கள் வாழ்க்கையில் 5 சதவீதம் கூட முன்னேற்றம் அடையாமல் இருப்பதற்கான காரணத்தை அரசு பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் கீரம்பூரில், 2 ஆயிரம் ஆதி திராவிட மக்கள் வசிக்கிறார்கள்.. அவர்களுக்கு 300 குடியிருப்பு வீடுகள் அனுமதிக்கப்பட்டதில் இதுவரை, நிலம் கையகப்படுத்தப் படாமலும், பட்டா வழங்கப்படாமலும் இருக்கிறது. கிருஷ்ணா புரத்தில் 75 வீடுகளுக்கு, பட்டா வழங்கப்பட்டு, 5 வருடங்கள் ஆகிறது. இன்னும் வீடு கட்டிக் கொடுக்கப்படவில்லை. சிக்கத் தம்பூர், சிக்கத்தம்பூர் பாளையத்தில் 250 வீடுகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. ஆனால் நிலம் இதுவரை கையகப் படுத்தவில்லை.



1985 ஜுலை 10] [திருமதி இரா. சரோஜா]

செங்காட்டுப் பட்டியில் வசிக்கும், 2,000 ஆதி திராவிட மக்களுக்காக, 50 வீடுகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டு, வேலை நடந்து வருகிறது. மற்றும் 90 குடும்பங்களுக்கு பட்டா வழங்கப்பட்டும், காலனி கட்டும் வேலை துவங்கப்படவில்லை.

துறையூரில் அரசு மருத்துவ மனைக்கு மேற்புறம் சுமார் 200 வீடுகளுக்கு பட்டா வழங்கி 10 ஆண்டுகள் ஆகிறது. இன்னும் காலனி கட்டப்படாமல் இருப்பதோடு ஏழை, எளிய ஆதி திராவிட மக்கள், அவற்றை வயிற்றுப் பசிக்காக மற்ற இனத்த வர்களுக்கு விற்றுக்கொண்டு இருக்கிறார்கள். இதனால் எஞ்சிய ஆதி திராவிட மக்களுக்கும் வீடு கட்டிக் கொடுப்பதில் பெரும் சிரமம் ஏற்படலாம். இதனை அரசு பரிசீலித்து மீண்டும் ஆதி திராவிட மக்களுக்கே நிலத்தை ஒப்படைக்கவும் கூடிய விரைவில் காலனியை கட்டிக்கொடுக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

பச்சைமலையில் உள்ள கிராமப் பழங்குடி மக்கள் அனைவருக்கும் வீடு கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசை கேட்டுக்கொள்கிறேன்.

பச்சைமலைப் பகுதிகளில் வீடுகள் கட்டப்படுகின்றன. அங்கே வேலை செய்யும் கான்ட்ராக்ட்காரர்கள் அங்குள்ள மரங்களை அறுத்து வீடுகளைக் கட்டுவதற்குப் பயன்படுத்துவதோடு, மரப் பலகைகளை கீழே கொண்டு வந்து விற்று விடுகிறார்கள். ஆகவே, அங்கு கட்டும் வீடுகள் ஓடு போடப்படாமல், கெட்டிக் கட்டிடம் கட்டிக் கொடுக்கவேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

அங்குள்ள மரங்களை அறுப்பதினால் இயற்கை அழகு அழிக்கப் படுகிறது. உப்பிலியாபுரம் ஒன்றியத்திலுள்ள பச்சை மலை கிராமத்தில் சித்தூரில் நான்கு வீடுகள் கட்டி குடியிருக்க முடியாத நிலைமையில் கட்டப்பட்டுள்ளன. அடியில் போடப் பட்ட அஸ்திவாரம் சரியில்லாமல் வீடுகள் இடிந்து விழும் நிலையில் உள்ளன. அதனை உடனே கவனிக்கவேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடியினர் என்று சொல்லிக் கொண்டு முற்பட்ட வர்கள், வசதி படைத்தவர்கள், தங்களுடைய உண்மை ஜாதியை மறைத்து, அரசு சலுகைகள் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன், அரசு வேலைக்குச் செல்லவேண்டும் என்ற நோக்கத்துடன் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்பட்டு, பயனடைந்து வருகிறார்கள். உதாரணமாக, நாயுடு, நாயக் கர்கள், காட்டு நாயக்கன் என்றும், குறும்பக் கவுண்டர் குறும்பாஸ் என்றும், ஊரடையர் என்பவர்கள் ஊராளி என்றும், ரெட்டியார் இனத்தைச் சேர்ந்தவர்கள் கொண்டா ரெட்டி என்றும் ஊடுருவல் செய்யப்படுகிறது.

இதனால் உண்மை பழங்குடியினர் பாதிக்கப்படுகின்றனர். மேலே கண்ட முற்பட்டவர்கள் தங்களின் செல்வாக்கினால் முன் வந்து விடுகிறார்கள்.

சென்ற மே மாதம் கொடைக்கானல் சென்று இருந்த போது, அங்கே உள்ள பழங்குடியினரை சந்திக்க விரும்பினேன். ஆனால், அவர்கள் வசிக்கும்இடத்திற்கு போக்குவரத்து செல்லாது என்றும், சாலை வசதி இல்லை என்றும் கூறப்பட்டது. அது போல் உண்மையான பழங்குடியினர் வாழும் பகுதிகளுக்கு சாலை போக்குவரத்து வசதியின்றிதான் இருக்கிறார்கள். எனவே, அரசு இதில் முழுக் கவனம் செலுத்த பழங்குடிமக்கள் வாழும் இடங்களுக்கு எல்லாம் சாலைப் போக்குவரத்து வசதிகளை அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கொள்ளுகிறேன்.

மேலும், பச்சைமலைப் பகுதியிலே சில கான்டிராக்ட்காரரர்கள் அங்கே சென்று மரங்களை அறுப்பதை உடனே கவனிக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுகொண்டு, இங்கே பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு சபையின் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே இயங்கக்கூடிய இந்த அரசு பல துறைகளிலும், அரிசன மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும், பல நல்ல காரியங்களை இன்றைக்குச் செய்து வருகிறது என்பதை நாங்கள் மனப் பூர்வமாக ஏற்றுக்கொள்ளுகிறோம்.

எப்படி இருந்தாலும் கூட கல்வித் துறை, வேலைவாய்ப்பு, தொழில் துறை, இந்தமாதிரி பல துறைகளிலே இன்னும் அவர்களுக்குக் கை கொடுத்து, நாம் அவர்களைச் சற்று முன்னுக்குக் கொண்டு வரக்கூடிய சூழ்நிலையை உருவாக்கினால் தான் அவர்கள் நல்ல முறையிலே வாழ்க்கையை நடத்த முடியும் என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

முன்பு 'ஸ்டேட் அரிஜன் வெல்பேர் கமிட்டி' என்ற கமிட்டி இந்த அரசு அமைந்த காலத்திலிருந்து, ஒவ்வொரு ஆண்டும் அமைத்து, கான்ஸ்டிடியூட் பண்ணி, அதிலே எம்.எல். ஏ.-க்கள் இருப்பார்கள். வெளியிலே இருந்து விஷயம் தெரிந்தவர்களும் இருப்பார்கள். அந்தக் கமிட்டியின் மூலம் ஆராய்ச்சி செய்து, அவர்களுடைய குறைபாடுகள், சங்கடங்கள் பற்றி தெரிந்துகொண்டு, என்னென்ன காரியங்களை ஆற்றவேண்டுமோ அவற்றை ஆற்றிக் கொண்டு இருப்பார்கள். கடந்த 80-வது ஆண்டிலே இருந்து அந்த கமிட்டி போடப்பட்டதா என்றால்,





அமைச்சரிடத்தில் இருக்கிறது, முதல்வர் இடத்தில் இருக்கிறது என்று சொல்லி, அந்தக் கமிட்டியை இது வரைக்கும் அமைக்கவில்லை.

நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், பேக்வேர்டு கமிட்டி என்று வைத்து, அது கிராமம், கிராமமாக, ஜில்லா, ஜில்லாவாக சென்று, குறைபாடுகளை எல்லாம் அறிந்து, அதன் அறிக்கையை அமைச்சரவைக்கு அளிக்கிறது.

அந்த அடிப்படையிலே இந்தக் கமிட்டியை அமைக்காமல் இருப்பதால், அரிஜன சமுதாயத்தில் படித்தவர்களும், வேலையில் உள்ளவர்களும், கிராமங்களில் உள்ளவர்கள், ஏன் இந்த கமிட்டியை அமைக்கவில்லை என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தயவு செய்து, இந்த சட்டமன்றக் கூட்டம் முடிந்து செல்வதற்குள்ளாகவாவது, அந்தக் கமிட்டியை அமைத்துக் கொடுத்தால் அது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

தொழிற்துறையை எடுத்துக் கொண்டால், அவர்கள் எக்னாமிகல்லி பேக்வார்டு, அதாவது பொருளாதாரத் துறையிலே முன்னுக்கு வரவேண்டும். பொருளாதாரத் துறையிலே முன்னுக்கு வந்தால் தான் உண்மையிலேயே தீண்டாமை என்பது ஒழிக்கப்படும்.

(பிற்பகல் 1–20)

அந்தச் சூழ்நிலையில் கூட்டுறவுத் துறையின் மூலம் ஆடுகள் வாங்கவும், பால் மாடுகள் வாங்கவும், இன்னும் பல காரியங்களுக்கும் செய்து தருகிறோம். அப்படிச் செய்து வந்தாலும் கூட சிறு சிறு கடைகள் வைப்பதற்கு, சைக்கிள் கடைகள், பலசரக்குக் கடைகள், தையல் கடைகள், ஜவுளிக் கடைகள் போன்றவைகளை வைப்பதற்கு 25,000 ரூபாய்களைக் கடன் கொடுத்து, அதிலே கொஞ்சம் குறைந்த பகுதியை மானியமாகக் கொடுத்து, பாக்கியைக் குறைந்த வட்டிக்குக் கொடுத்தால் அதன் மூலம் அவர்களும், பல குடும்பங்களும் முன்னுக்கு வருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசின் உதவித் தொகையோடு தாட்கோ காரியங்களைச் செய்கிறது. அதன் மூலம் எங்கெல்லாம் அரிசன மக்கள் நிறைந்து வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் தாட்கோவின் மூலம் நூற்பாலைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இப்பொழுதே கூட மதுரை மாவட்டத்தில் தேனியில் இருக்கிறது'

கமுதியில் இருக்கிறது. 300 பேர், 500 பேர் என்று அரிசன மக்களுக்கும், 10 சதவீதம் மற்றவர்களுக்கும் என்ற முறையில் நல்ல சூழ்நிலையில் இருக்கிறது. நாம் மட்டும் போடவில்லை இந்தப் பணத்தை. மத்திய அரசின் உதவியும் இருப்பதால், எங்கெல்லாம் அரிசன மக்கள் அதிகமாக வாழ்கின்றார்களோ, அதாவது ரிசர்வ் சீட் எங்கேயெல்லாம் இருக்கிறதோ, அந்தப் பகுதிகளிலெல்லாம் குறிப்பாக பருத்தி அதிகமாக விளைகின்ற இடங்களாகப் பார்த்து, அந்த மில்களை ஆரம்பித்துக் கொடுத்தால் இன்னும் சற்றுச் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்லூரிகளில் படித்து, லா காலேஜ்களில் படித்து வெளியே வருகின்ற பி.சி. மாணவர்களுக்கு, அட்வகேட்-ஜெனரல், பப்ளிக் பிராசிகியூட்டர் ஆகியவர்களாக வருவதற்கு, இவர்கள் பணம் கொடுத்து, உதவித் தொகை கொடுத்து பயிற்றுவிக்கிறார்கள், பிற்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கின்றபொழுது ஏன் அரிசன மாணவர்களுக்கும் இந்தப் பயிற்சியைக் கொடுக்கக் கூடாது என்று கேட்கிறேன். இவர்களுக்கும் இந்தப் பயிற்சியைக் கொடுக்கின்ற முறையில் நாம் இந்தத் திட்டத்தை அமல்படுத்தினால் இவர்களும் அட்வகேட்-ஜெனரலாகவும், பப்ளிக் ப்ராசிகியூட்டராகவும் வருவதற்கான வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் அமைச்சரவைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன், தாட்கோ மூலம் கட்டப்படும் வீடுகளுக்குக் கொடுக்கப்பட்ட தொகையான 4,000 ரூபாயை இப்பொழுது 6,000 ரூபாயாக உயர்த்தி, பல ஆயிரக்கணக்கான வீடுகளை கிராமப்புறங்களில் வாழ்கின்ற அரிசன மக்களுக்குக் கட்டிக் கொடுத்து வருகின்றார்கள். அது மிகவும் பாராட்டத்தக்கதாகும். இருந்தாலும் கூட இந்த 6,000 ரூபாய் கூட போதவில்லை. இன்றைக்கு கொத்தனாருக்கு 30 ரூபாய் கொடுக்க வேண்டும், ஒரு மூட்டை சிமெண்டின் விலை 72 ரூபாய், 73 ரூபாய் என்று விற்கிறது, செங்கல் ஆயிரத்திற்கு 300 ரூபாய், 350 ரூபாய், 400 ரூபாய் என்று ஆகிவிட்டது, மரத்தின் விலையும் ஏறிக் கொண்டே போகிறது. இந்தச் சூழ்நிலையில் இந்த 6,000 ரூபாய் என்பதை, 10,000 ரூபாய் என்று உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வீடுகளின் எண்ணிக்கையைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டாலும்கூட, முழுமையான வீட்டைக் கட்டிக் கொடுத்தவர்கள் ஆவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1983–84 ஆம் ஆண்டு, 1984–85 ஆம் ஆண்டுக்கு 43,000-த்துச் சொச்சம் வீடுகள் சேங்க்ஷன் செய்யப்பட்டதாகவும், அதில் வெறும் 14 வீடுகள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன



என்றும் புள்ளி விவரம் சொல்கிறது. இது சரியான புள்ளி விவரம்தானா ? இது தவறான கணக்காக இருந்தால் இதைத் தயவு செய்து மாற்றிக் கொள்ள வேண்டும். 43,909 houses have been sanctioned, of which 14 houses have so far been completed.

என்று போடப்பட்டிருக்கிறது. இப்படி 43,909 வீடுகள் சேங்க்ஷன் செய்யப்பட்டு வெறும் 14 வீடுகள் தான் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன என்றால் இது சரியான கணக்கு இல்லை என்று நான் கருதுகிறேன். அப்படி என்றால் என்ன நிலைமை என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்ற பொழுது விளக்குவது சற்றுச் சாலச் சிறந்ததாக இருக்கும்.

அரிசன சமுதாயத்திலே அருந்ததியர்கள் வாழுகின்ற பகுதிகளைக் கணக்கெடுக்க வேண்டும். என்னுடைய பழனி தொகுதியிலே அதிகமான அருந்ததியர்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதி இல்லை, குடிதண்ணீர் வசதி இல்லை, லைட் வசதி இல்லை, இப்படி மிகவும் சிரமமான நிலையில் அவர்கள் வாழ்கிறார்கள். அப்படிப்பட்ட மக்களுக்கு, அரிசனங்களிலேயே இன்னும் பின்தங்கியுள்ள மக்களுக்கு நாம் திட்டத்தைப் போட்டு, கடனாகக் கொடுக்காமல் தாட்கோ மூலமாக அவர்களுக்கு வீடு கட்டி கொடுக்க வேண்டும். அவர்களெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்களைக் கடவுளாக நினைத்துக் கொண்டிருப்பவர்கள். முதல்வரவர்கள் உடல் நிலை சரியில்லாமல் அமெரிக்காவிற்குச் சென்றிருந்த நேரத்தில், இங்கே தேர்தல் வந்தவுடன், நான் அவர்களைப் பார்த்த பொழுது, அவர்கள் அழுத அழுகை இருக்கின்றதே, தங்களுடைய வீட்டிலே உள்ள தலைவனுக்கு ஏதாவது ஏற்பட்டால் எப்படிப்பட்ட நிலைமை இருக்குமோ அப்படிப்பட்ட ஒரு நிலையில் இருந்தார்கள். அந்த அளவிற்கு மாண்புமிகு முதலமைச்சவர்ரகளிடத்திலே அவர்களுக்கு ஒரு பக்தி இருக்கிறது. அவர்களைப் பற்றி மாநிலம் முழுவதும் கணக்கெடுத்து, அவர்களுக்கெல்லாம் வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டும். அவர்களுக்காக ஐந்தாண்டுத் திட்டம் போட்டாவது தாட்கோ மூலமாக வீடு கட்டிக் கொடுப்பதற்கான வழிவகைகளைச் செய்தால் அது சற்றுச் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே ஒரு கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது ரிசர்வேஷனைப்பற்றி, கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்டிலே 12.83 என்றும் பப்ளிக் செக்டாரிலே 12.39 என்றும் என்று. அந்தக் கணக்கு உண்மைதானா என்று நாம் சற்று ஆராய்ந்து பார்ப்போமானால், உண்மையிலேயே அந்தக் கணக்குச் சரியல்ல என்பது தெரியும். அதற்கு ஒரு உயர் மட்டக் குழு இருக்கிறது. ஐ. ஏ. எஸ். அதிகாரிகளைக் கொண்ட குழு அது.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1985 ஜூலை 10

நான் கேட்கிறேன். இந்தச் சட்டமன்றத்திலே பணியாற்றுகிறார்களே, இந்த செக்ரட்டேரியட்டிலே பணியாற்றுகிறார்களே, இந்தத் துறைகளிலே மட்டும் கணக்கு எடுத்துக் கொள்ளுங்கள். சட்டமன்றத்திலே பணியாற்றுபவர்களில் 18 சதவீதம் இருக்கின்றதா? ரெவினியூவிலே 18 சதவீதம் இருக்கின்றதா? சமூக நலத் துறையில் 18 சதவீதம் இருக்கிறதா என்று கணக்குப் பார்ப்போனால் நிச்சயமாக இருக்காது. அந்தக் கணக்கெல்லாம், ஸ்காவன்சர்கள், கூட்டுகின்றவர்கள், தண்ணீர் ஊற்றுகின்றவர்கள், அவர்களையெல்லாம் சேர்த்துதான் 12.83 12.39 என்று கணக்கு வருகிறது என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், பல இடங்களிலே நான் சென்று பார்த்திருக்கிறேன், விசாரித்திருக்கிறேன்.

அதற்கு ஒரு உதாரணம் என்னவென்றால். இப்பொழுது பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் கூட சிலகெஸட் போஸ்ட்களுக்கு அட்வர்டைஸ்மெண்ட் வருகிறது. அதில் ரிட்டர்ன்டெஸ்டில் பாஸ் செய்து விடுகிறார்கள். பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலே எழுத்து மூலமாக நடக்கும் டெஸ்டிலே பாஸ் செய்து விடுகிறார்கள். பிறகு, ஓரல் இண்டர்வியு நடக்கிறது. அப்பொழுது அவர்களைக் கேள்வி கேட்டு அவர்களுக்கு உத்தியோகம் கொடுப்பதில்லை. அந்த உத்தியோகமே கொடுக்காமல், 'சூட்டபில் பெர்சன் நாட் அவெய்லபிள்' என்று சொல்லி, தகுதியான ஆள் இல்லை என்று சொல்லி தள்ளிவிட்டு விடுகிறார்கள். இந்த நிலைமை இன்றைக்கு இருக்கிறது. ... நல்ல வேலைகளில் அவர்கள் இடம் பெறுவதில்லை. ... இருந்தும்கூட, அவர்களுக்கு அருகதை இருந்தும்கூட அவர்கள் தள்ளப்படுகிற நிலை இருக்கிறது. இது இந்த முதல்வருடைய காலத்தில் நடக்கக்கூடாது. இதையெல்லாம் கண்காணித்துப் பார்த்து, இந்த அரிசன மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய முறையிலே மாற்றினாலொழிய 18 சதவீதம் கொடுக்க முடியாது என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு ஒரு உதாரணம் சிப்காட் என்ற ஒரு நிறுவனம். அந்த சிப்காட் நிறுவனத்தில் பி.இ. பர்ஸ்ட் கிளாஸ் பாஸ் செய்த நபர் இருக்கிறார். அவர் இன்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மென்டிலிருந்து டெப்புட்டேஷனில் அங்கே வந்துள்ளார். அவரை அங்கு போட்டு அவர் 7 ஆண்டுக்காலம் அங்கே பணி புரிந்தார். அங்கே அவருக்கு விதி இல்லையென்று சொல்லியிருந்துங்கூட, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவருடைய திறமையைப் பார்த்து, விதியைத் தளர்த்தி உத்தியோகம் கொடுக்கலாம், அவருக்குப் போட்டுக் கொடுக்கலாம் என்று டெவலப்மென்ட் ஆபீசராகப் போட்டார்கள். அங்கே போட்ட பிறகு, அதே சிப்காட்டிலே இரண்டு போஸ்ட்களுக்கு அட்வர்டைஸ்மென்ட் வந்தது. அதாவது, சீப் ஆபீசர். அந்த போஸ்டுக்கு எல்லோரும் இன்டர்வியூவுக்கு வந்தார்கள். அப்படி வரும்போது,



1985 ஜூலை 10] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

எஸ். சி.க்கு ரிட்டர்ன் டெஸ்ட் வைத்தால் அவர் பாஸ் செய்து விடுவார் என்று கருதி, அந்த இலாகாவிலே வேலை செய்யக் கூடிய அவரை தள்ளிவிட்டு, அவருக்குத் தகுதியில்லை, அவர் வேலை செய்ய இலாயக்கில்லாதவர் என்று சொல்லி, இரண்டு சீட்டையும் பி.சி.க்காகக் கொடுத்து விட்டார்கள். இது நியாயம் அல்ல, தர்மம் அல்ல. இது யாருடைய காலத்திலே நடப்பது? நம்முடைய மாண்புமிகு முதல்வர் காலத்திலே நடக்கக்கூடாது என்பதற்காகத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நன்றாக பணியாற்றக்கூடிய சில ஐ.ஏ.எஸ். ஆபீசர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று கண்டு பிடிக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம், சிறப்பான முறையிலே பணியாற்றக் கூடியவர்களுக்கெல்லாம் முக்கிய பொறுப்பு கொடுத்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமே தவிர, அவர்களை எங்கோ ஒரு மூலையிலே உட்கார வேண்டிய அளவுக்கு வைப்பது 'பிக்காஸ் ஆப் ஹிஸ் கம்யூனிட்டி' அந்த ஜாதியிலே பிறந்தது பாவம் என்று மற்றவர்கள் சொல்லக் கூடிய நிலைமை இருக்குமானால், அது நல்லதல்ல என்பதையும் இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்கிறேன். எனவே, இவற்றையெல்லாம் பார்த்து, அதற்குக் கொஞ்சம் நல்ல சூழ்நிலை உருவாக்கிக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதையும் கூறிக் கொள்கிறேன்.

அடுத்து, வீட்டு மனைப் பட்டா. அதற்குக் கூட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவருடைய அமைச்சரவை 13 ஆண்டுக்காலத்திற்குள்ளாக, வீடில்லாதவர்களே இல்லை என்ற நிலைமை உருவாக வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அது எஸ்.சி. யாக இருந்தாலும் சரி, பி.சி. யாக இருந்தாலும் சரி, வறுமைக் கோட்டுக் கீழே உள்ள மக்கள் அத்தனை பேர்களுக்கும் வீட்டு மனைக் கொடுக்க, ஐந்தாண்டுத் திட்டத்தைப் போட்டு, எங்கே எல்லாம் வீட்டு மனை இல்லாமல் இருக்கிறார்களோ, அங்கேயெல்லாம் அவர்களுக்கு வீட்டுமனை கொடுக்கக் கூடிய ஒரு நிலைமையை விரைவிலே உருவாக்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு ரூரல் ஹவுசிங் ஸ்கீம். இந்த அமைச்சருடைய பொறுப்பிலே அது இல்லாவிட்டாலும் மாண்புமிகு வீட்டு வசதி வாரிய அமைச்சருடைய பொறுப்பிலே இருக்கிறது. சென்ற 1983–84 ஆம் ஆண்டு 24,000 வீடுகள் அரிசனங்களுக்கு மட்டும் கட்டிக் கொடுப்பதாக ஒரு கணக்கு வைக்கப்பட்டு சாங்ஷன் செய்யப்பட்டது. சாங்க்ஷன் செய்யப்பட்ட பிறகு, பட்டா வாங்க, அவர்கள் பாவம், தாசில்தாரிடம் பதிவு செய்ய 33 ஆண்டுகளுக்கு வில்லங்கம் சான்றிதழ் ரிஸிஸ்திரார் ஆபீசில் வாங்கினார்கள். அதை வாங்கிய பிறகு, அவர்கள் தங்களை அந்தக்

சங்கத்திலே அங்கத்தினர்களாகப் பதிவு செய்து கொண்டார்கள். பிறகு வீடு சாங்க்ஷன் ஆகிவிட்டது. பதிவு செய்து கொண்ட உறுப்பினர்களுக்கு வீடு சாங்க்ஷன் ஆகிவிட்டது.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் எங்கள் ஊரிலே 133 வீடுகளுக்கு சாங்ஷன் செய்தார்கள். அதிகாரிகளும் சொன்னார்கள். வீடு சாங்ஷன் ஆகிவிட்டது கூரையை பிரித்து விடுங்கள் என்று, அவர்கள் சொன்னதை நம்பி, நானே போய் சொன்னேன். நீங்கள் எல்லாம் கூரையை பிரித்து வைத்துவிட்டு, வானத்தைப் பாருங்கள் என்று நான் குடியிருக்கும் சொந்த ஊரில் நானே சொன்னேன். அந்த மக்களும் கூரையைப் பிரித்துவிட்டார்கள். அதன் பிறகு இரண்டு மாதங்கள் கழித்துவந்து, அந்த வீடுகள் எல்லாம் கட்ட வேண்டாம் என்று உத்தரவு வந்துவிட்டது, அதனால் கட்ட முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இப்படிப்பட்ட நிலைமை எங்கெல்லாம் இருக்கிறதோ அதைக் கவனித்து அங்கே வீடு கட்டுவதற்கு சாங்ஷன் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குப் பின்னாலே ஆஸ்டல் பிரச்சனை இருக்கிறது. ஆஸ்டலில் சேர்ப்பதற்கு தேர்வு வைக்கிறோம். ஜூன் 3-ந் தேதியே ஸ்கூல் திறந்து விட்டது. இன்னும் ஆஸ்டல் செலக்ஷன் வைக்கவில்லை. ஸ்கூல் திறந்து 15 நாட்களுக்குள் ஆஸ்டல் செலக்ஷனை வைத்து விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. அவர்களுக்கு புஸ்தகம் கொடுக்கிறோம். அதைக் கூட காலாகாலத்தில் கொடுக்க வேண்டும். பள்ளிக்கூடம் திறந்து, 2, 3 மாதம் கழித்து ஆகஸ்ட் மாதம் கொடுத்தால் என்ன பிரயோஜனம்? ஏதோ மளிகைக் கடையில் போடுவது மாதிரி கொடுக்கக்கூடாது. கொடுப்பதை உரிய காலத்திலே கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

கடைசியாக ஒன்றை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் தோட்டக் குறிச்சியில் ஜாதி இந்துக்களுக்கும் அரிசனங்களுக்கும் சண்டை கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நடந்தது. அந்த சண்டையில் 200 வீடுகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் என்று சொல்கிறார்கள். அது நடந்து ஒரு மாதம் கூட ஆகவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : அதை நான் குறித்து வைத்துக் கொள்ளவில்லை ; அதனால் தவறாகச் சொல்லிவிட்டேன், அதை நான் வாபஸ் வாங்கிக்கொள்கிறேன். இப்படிப்பட்ட ஜாதிக் கலவரம் வருகிறபோது அதற்குச் சில அரசு அலுவலர்களும் தூண்டுகோலாக இருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்கள் யார் என்று கண்டுபிடித்து, அவர்களை அடையாளம் காட்ட வேண்டும். சமூக விரோதச் செயல்களைத் தூண்டிவிடுகிறவர் யார் என்பதை அடையாளம் காட்டி, கடுமையான நடவடிக்கை எடுத்து, அவர்களை ஜெயிலில் போடும் நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக துணிகள் கொடுக்கிறோம். துணி தைத்துக் கொடுப்பதைப் பார்த்தால் உண்மையிலே ரொம்ப சங்கடமாக இருக்கிறது. சரியான அளவு இல்லாமல் தைத்துக்கொடுக்கிறார்கள். அது குப்பையில் போடுகிறமாதிரி இருக்கிறது. மாதர் சங்கங்கள் மூலமாக சரியான அளவு எடுத்து, தைத்துக் கொடுக்கும் நிலைமைகளை உருவாக்கிக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும்.

சோஷியல் வெல்பேர், அரிச வெல்பேர் இரண்டையும் ஒரே செக்ரட்டரிதான் கவனித்து வருகிறார். அவர்கள் இதிலே கவனம் செலுத்த வேண்டும். துணியை தைத்துக் கொடுக்கும்போது சுருக்கம் இல்லாமல், குறைபாடு இல்லாமல், பற்றாமல் போகிறது என்ற நிலைமை ஏற்படாமல், ஒழுங்காக அவரவர் அளவுக்கு ஏற்றபடி தைத்துக் கொடுப்பதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

திரு. ஆர். சிவக்குமார் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறையினுடைய மானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி சொல்லி என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நாட்டிலே உள்ள மக்கள் தொகையில் பழங்குடியினர் 18 சதவீதம் உள்ளனர். பொருளாதார சூழ்நிலை காரணமாக சமுதாய அமைப்பில் நசுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, கஷ்டப்பட்டு, இருக்கக்கூடிய இந்தப் பிரிவினருடைய பொருளாதாரம் மேம்பாடு அடையவும் வாழ்க்கை வசதிகள் சீரடையவும் பல்வேறு திட்டங்களை இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு தீட்டி, மக்களுக்குச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் பொருளாதார மேம்பாடு அடைவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட குறியீடு 10 இலட்சம் ஆதிதிராவிட குடும்பமாகும். 1985—86 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தின்கீழ் பல்வேறு வளர்ச்சித் துறைகள் மூலமாக 125.34 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. பழங்குடியினருக்கு மட்

[திரு. ஆர். சிவக்குமார்] [1985 ஜூலை 10

டும் 762 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் சுமார் 27,000 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் சுமார் 47,000 குடும்பங்கள் பயனடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

கல்விக்காக இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சி உண்மையிலேயே அகில இந்தியாவிலே படித்தவர்கள் எல்லாம் கூட பாராட்ட வேண்டிய ஒன்று என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒன்று முதல் 12-வது வகுப்பு வரை இருப்பவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகின்றது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களில் பள்ளி செல்லும் வயதை எட்டிய சுமார் 25 இலட்சம் பேரில் 20 இலட்சம் பேர் பள்ளியில் சேர்க்கப் பட்டுள்ளார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைபட்டவனாக இருக்கிறேன். அவர்கள் ஒவ் வொருவருக்கும் சுமார் 250 முதல் 350 வரை கல்வி உதவித் தொகை யாக அளிக்கப்பட்டு வருகின்றது. இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி போன்ற அனைத்திந்திய பணிகளுக்கான போட்டித் தேர்வு எழுதிட ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு இரண்டு மாத கால சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. சிறந்த மாணவர்களுக்காக டெல்லியிலுள்ள [illegible] படிப்பு மையத்திற்கு குடிமை முறை அரசுப் பணித் தேர்வுகளில் பயிற்சி பெறவும் அனுப்பப்படுகிறார்கள். பழங்குடியினருக்காக 160 பள்ளிகளை மாணவர்களின் நலன் கருதி அரசு நடாத்தி வருகின்றது.

பள்ளிகளில் பயிலும் சுமார் 10,000 மாணவர்களுக்கு உணவு, உறைவிட வசதி ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. கல்வியினுடைய தரத்தை மேம்படுத்துகின்ற வகையில் 500 உயர் நிலைப்பள்ளிகளிலும், 300 மேல் நிலைப் பள்ளிகளிலும் பள்ளி நேரம் முடிந்த பிறகு ஒன்றரை மணி நேரம் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. அதன்மூலம் 57,000 மாணவ மாணவிகள் பயடைகிறார்கள். ஆதிதிராவிடர்களுக்கு 713, பழங்குடியினருக்கு 22 ஆக மொத்தம் 735 விடுதிகள் அரசால் ஆதிதிராவிடர் மற் றும் பழங்குடியினருக்காகக் கட்டப்பட்டு வருகின்றன. தங்க வசதியுடன் இலவசமாகக் கல்வி பயில வழிவகைகள் செய்யப் பட்டு அந்த வகையில் நடத்தப்பட்டு வருகின்றன. புதிய விடுதி கள் திறப்பதற்காகவும் பராமரிப்பதற்காகவும் 562 இலட்சங்கள் 1985–86 ஆம் ஆண்டு செலவழிக்கப்பட்டிருக்கின்றது. என் னுடைய தொகுதியில் அப்பன் திருப்பதி என்னும் இடத்தில் உள்ள அருள்மிகு கள்ளழகருக்குச் சொந்தமான மண்டபம் ஒன்றில் ஆதிதிராவிடர் நலத் துறை விடுதி ஒன்று செயல் பட்டுக் கொண்டிருக்கிறது. அருள்கூர்ந்து அதற்கு நிரந்தரமான விடுதி கட்டித் தரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.



1985 ஜூலை 10] [திரு. ஆர். சிவக்குமார்]

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டத்திற்காக அளிக்கப்படும் நிதி ஒதுக்கீட்டில் சுமார் 50 விழுக்காடுக்கு மேல் அவர்களுடைய கல்விக்காகச் செலவிடப்படுகின்றது. ஆதிதிரா விடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளின் மேம்பாட்டிற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு பாசன கிணறுகள் வெட்டவும் உழவு மாடுகள் வாங்கவும், சிறுதொழில்களை ஆரம் பிக்கவும் கறவை மாடுகள் வாங்கவும் கடன் வழங்குகின்றது. மானியங்களும் தரப்படுகின்றன. இந்த ஆண்டுக்காக மட்டும் சுமார் 32.15 இலட்சம் மானியத் தொகையாகச் செலவிடப்பட் டுள்ளது. இந்தப் பிரிவினரைச் சேர்ந்த வழக்கறிஞர்களுக்கு மானியமாக சட்டப் புத்தகங்கள் வழங்கவும் அலுவலகப் பொருட் கள் முதலியவற்றுக்காகக் கடன் கொடுத்தும், மானியமாகக் கொடுத்தும் உதவி செய்யப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக 3 சென்ட் நிலம் இலவசமாகப் பட்டா செய்து கொடுக்கப்படுகிறது. இதுவரையில் 8 இலட்சத்திற்கு அதிகமான ஆதி திராவிட குடும் பங்களுக்கு வீட்டுமனை வழங்கப் பட்டிருக்கின்றது. இந்த ஆண் டில் சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி சுமார் 20,000 குடும்பங்களுக்கு வீட்டுமனை களும் வழங்கப்பட்டிருக்கின்றன. தாட்கோ நிறுவனத்தின் மூல மாக வீடுகட்டும் பணி நடத்தப்பட்டு வந்தது. அது தற்போது பயன்பெறுவோர் பொறுப்பிலேயே விடப்படுகிறது. சமவெளிப் பகுதிக்கு ரூபாய் 6,000-மும், மலைப் பகுதிக்கு ரூபாய் 9,000-மும் கொடுக்கப்படுகிறது. இதுகாறும் 71,397 வீடுகள் ஆதிதிராவிடர் களுக்குக் கட்டப்பட்டுள்ளன. இது தவிர கிராமப்புற வசதித் திட்டத்தின் கீழ் 1.54 இலட்சம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு காப்புறுதித் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்படுகின்றன. ஆதிதிராவிடர் குடியிருப்பு களுக்கு கிணறு வெட்டுதல், தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் ஏற்படுத்துதல் போன்ற குடிநீர் வசதிகளைச் செய்து கொடுக்க 14.41 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கின்றது.

இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துதல், மயானப் பாதைகள் அமைத்தல், சமூகக் கூடங்கள் அமைத்தல் போன்ற பணிகள் செய்யப்படுகின்றன. சாதிபேதமற்ற சமுதாயம் அமைக்க வேண்டும் என்பதில், அதாவது தீண்டாமை ஒழிக்கப்படவேண் டும் என்பதில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு தீவிரமாக கவனம் செலுத்தி வருகின்றது.

[பிற்பகல் 1-40].

21 நடமாடும் காவல் பிரிவுகளும் இயங்கிக் கொண்டிருக் கின்றன. சுமார் 10 ஆயிரம் வழக்குகள் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு அதில் 4 ஆயிரம் வழக்கு க்ளில் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. தீண்டாமை ஒழிப்புப்

[திரு. ஆர். சிவக்குமார்] [1985 ஜூலை 10

பிரச்சாரம் செய்வதற்காக 104 கிராமங்களில் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது. அதன் மூலமாக தீண்டாமையின் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் திருநெல்வேலி மாவட்டங்களில் பொது இறை வழிபாடும், விளக்கு பூஜைகளும் செய்வதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. தீர்த்த யாத்திரை என்ற திரைப் படத்தின் மூலமாக தீண்டாமையின் கொடுமையை கிராமங்களில் ஒழிக்க கிராமங்களில் திரையிடுவதற்காக வசதி செய்து தரப் பட்டிருக்கிறது. கலப்பு திருமணங்களை அரசு பல வகைகளிலும் ஊக்குவித்து பாராட்டி வருகிறது. அவர்களுக்கு தங்கப் பதக்கம் வழங்குவதோடு பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கியிருக்கிறார்கள். இது தவிர திருமணம் செய்வதற்காக ரூபாய் 300-ம் வழங்கப்படுகிறது. அவர்களின் குழந்தைகள் படிப்பதற்காக மருத்துவம், பொறியியல் போன்ற துறைகளில் படிக்க முன்னுரிமை 6 இடங்களும், பார்மஸி வகுப்பில் 1 இடமும் ஒதுக்கப் படுகிறது.

இறுதியாக என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் சமயநல்லூர் தொகுதியில் 8 ஆயிரம் பட்டாக்கள் கொடுப்பதற்காக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தலைமையில் விழா நடத்துவதாக ஏற்பாடு செய்யப்பட்டு, அவசர அலுவல் காரணமாக அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பட்டாக்கள் தயாராக இருந்தாலும் கொடுக்கப்படாத நிலையிலே இருக்கின்றன. ஆகவே தயவுசெய்து அவைகளைக் கொடுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று அவைத் தலைவர் அவர்களின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இலங்கனூர் என்னும் கிராமத்திலே ஆதிதிராவிட நலப் பள்ளி ஒன்று 3 லட்சம் ரூபாய் செலவிலே கட்டி முடிக்கப்பட்டும் அது திறக்கப்படாத நிலையிலே இருக்கிறது ஒரு வருட காலமாக. ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டும், இலவச புத்தகங்கள் அரசினால் அந்தப் பள்ளிக்கு அனுப்பப்பட்டும் இருக்கின்றன. ஆனால் நடுநிலைப் பள்ளியாக துவக்குவதற்கான அரசு ஆணை பிறப்பிக்கப்படவில்லை என்ற காரணத்தினால் அது திறக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே உடனடியாக ஆணை பிறப்பித்து அந்தப் பள்ளியை ஆரம்பிக்க வேண்டும் என்று இந்த மன்றத்தின் வாயிலாக சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் 20 அம்சத் திட்டத்தில் 7-வது அம்சத் திட்டமான ஆதிதிராவிட மக்களின் முன்னேற்றம் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றிற்கான பணிகளைச் செய்கிற வகையில் 1980–85-ல் நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 9 லட்சம். அதில் ரூ. 8.90



1985 ஜூலை 10] [திரு. ஆர். சிவக்குமார்]

லட்சத்தை ஆதிதிராவிட குடும்பங்களில் பொருளாதார முன்னேற்றத்தில் பயன் அடையச் செய்வதன் மூலம் நிறைவு செய்யப் பட்டுள்ளது. 6-வது ஐந்தாண்டு திட்டத்தில் 19 ஆயிரம் பழங்குடியினருக்கு அந்த இலக்கு இருந்தது. இந்த திட்டக் காலத்தில் 27–2–1984 பழங்குடியினர் பயன் அடைந்துள்ளனர்.

இறுதியாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மானியக் கோரிக்கை எண். 31-ன் கீழ் பேச வாய்ப்பு அளித்தமைக்கு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 11–7–1985 அன்று காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-43 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

253. எச்.வி.ஐ. ஸ்பிண்டில் ஆயிலுக்கு விதிக்கப்படும் விற்பனை வரியினை 10 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக குறைப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 14–5–1985 ஆம் நாளிட்ட 420 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)]

254. ஸ்டீல் அத்தாரிட்டி ஆப் இந்தியாவிற்குச் சொந்தமான டி.டி.எஸ். 2720 மற்றும் டி.டி.எஸ்.. 2721 எண்கள் கொண்ட தீயணைப்பு ஊர்திகளுக்கு (Fire Tenders) விதிக்கப்படும் தண்டத் தீர்வையினை தள்ளுபடி செய்வது குறித்து உள் (போ. 1) துறையின் 23–4–1985 ஆம் நாளிட்ட 990 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)]

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

166. கோரிக்கை எண் 31—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1985–86 (தமிழ், ஆங்கிலம்).

167. 1985–86 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

## இணைப்பு

(698ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றம்.

''ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்'' என்ற தலைப்பின் கீழ் 1985–86ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை எண். 31-இல் ரூ. 4,409.60 இலட்சம் ஒதுக்க ஒப்புதல் அளிக்குமாறு இச்சட்டமன்றப் பேரவையினை வேண்டுகிறேன்.

2. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 484 லட்சமாகும். இதில் ஆதி திராவிடர் 88.81 இலட்சம் பேர். இது மொத்த மக்கட் தொகையில் 18.35 விழுக்காடு ஆகும். பழங்குடியினர் 5.20 இலட்சம் பேர். இது இம்மாநிலத்தில் மொத்த மக்கட் தொகையில் 1.07 விழுக்காடு ஆகும். தமிழ்நாட்டில் மொத்த மக்கட் தொகையில் கல்வியறிவு பெற்றவர்கள் 46.76 விழுக்காடு ஆகும். ஆதிதிராவிடர்களில் 29.67 விழுக்காடும், பழங்குடியினரில், 20.45 விழுக்காடும் கல்வி அறிவு பெற்றுள்ளனர்.

3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மானிய கோரிக்கையின் மீது அரசின் கொள்கை விளக்கத்தை இப் பேரவையில் நான் எடுத்துக் கூறும் முன், அவர்களுக்காக பல்வேறு துறைகள் மூலம் அரசு எடுத்த சமூக, பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளைப் பற்றி கூற விழைகிறேன்.

4. இவ்வரசு ஆதிதிராவிடர்களின் சமூக, பொருளாதார நிலையை உயர்த்தும் பணிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. அவர்களுடைய நலிவுற்ற பொருளாதார நிலையின் காரணமாக, சமூக நிலையில் தாழ்வுற்று இருக்கிறார்கள். அதனால் அவர்கள் சமூக நிலையில் கொடும் செயல்களுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். எனவே அவர்களுடைய மேம்பாட்டுக்கு திட்டமிடப்பட்ட ஒரு சீரிய பொருளாதார அடிப்படையில் ஒரு நிரந்தர தீர்வு காண இந்த அரசு விழைகிறது.

5. நெடுங்காலமாக தமிழக அரசு ஆதி திராவிடர்/பழங்குடியினர் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு வருகிறது.

6. ஆதிதிராவிடர்களுக்காக வகுக்கப்பட்ட சிறப்பு உள்ளடக்க திட்டம் மற்றும் பழங்குடியினருக்காக பழங்குடியினர் நல துணைத்திட்டம் ஆகியவற்றை துவக்கியதன் மூலம் அவர்களுடைய முன்னேற்றம் மேலும் வலுப்பட்டுள்ளது.



இவ்விரண்டு திட்டங்களும், அவர்களுடைய வாழ்க்கைக்கு புது நம்பிக்கையினை தோற்றுவித்துள்ளன. ஆதிராவிடர்கள் நலனுக்காக சிறப்பு உள்ளடக்க திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வளர்ச்சி துறையிலும் குறிப்பிட்ட பணியில் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு, அதன் மூலம் உண்டான திட்டங்களினால், இருமுனைக் குறிக்கோள்களாகிய (1) வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள 50 விழுக்காடு ஆதிதிராவிடர் குடும்பங்களை வறுமை நிலையிலிருந்து விடுவித்து நல்ல நிலைமைக்கு கொண்டு வருதல் மற்றும் (2) ஏழாவது ஐந்தாண்டு கால திட்டத்தில் ஆதி திராவிடர் காலனிகளில் அடிப்படைத் தேவைகளையும் மற்றும் இதர வசதிகளையும் செய்து கொடுக்க வகை செய்தல் ஆகியவை நிறைவேற்றப்படுகிறது. பொருளாதார வளர்ச்சி திட்டங்களினால் ஆறாவது ஐந்தாண்டு கால திட்டத்தின் குறியீடான 9 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களில் 8.90 இலட்சம் குடும்பங்கள் பயனடைந்துள்ளனர். ஏழாவது ஐந்தாண்டு கால திட்டத்திற்கான குறியீடு 10 இலட்சம் குடும்பங்களாகும். இதில் 1985-86ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 2 இலட்சம் குடும்பங்கள், பொருளாதார மேம்பாட்டு திட்டங்களைச் செயல்படுத்துவதுடன் சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் மூலம் ஆதி திராவிடர் காலனிகளில் அடிப்படை வசதிகளை ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செய்து கொடுப்பதை குறிக்கோளாக கொண்டுள்ளது. 1985-86இல் இத் திட்டத்தின்கீழ் பல்வேறு வளர்ச்சித் துறைகளின் மூலம் 125.34 கோடி செலவிடப்படும். இது குறித்த விரிவான விவரங்கள் இணைப்பு (II)-ல் உள்ளது.

7. பழங்குடியினர் மக்கள் தொகை குறைவாக இருந்த போதிலும், அவர்கள் பிரச்னைகளை தனித்தன்மை வாய்ந்ததாகவும், சிக்கலானதாகவும் உள்ளன. பழங்குடியினர் மிகுந்து காணப்படும் சேலம், தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி மற்றும் வடாற்காடு மாவட்டங்களில் 9 தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் பழங்குடியினர் துணைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பழங்குடியினர் துணைத் திட்டமானது, ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழும் பழங்குடியினர் குடும்பங்களின் நலனுக்காக செயல்படுத்தப்படும் தீவிரத் திட்டமாகும். தமிழ்நாட்டில் மேற்கண்ட 9 குறியிடப்பட்ட இடங்களில் சுமார் 2.10 இலட்சம் பழங்குடியினர் வாழ்கிறார்கள். இத்திட்டத்தின் கீழ் பொருளாதார முன்னேற்ற பணிகளும் அவர்கள் வசிக்கும் பகுதி மேம்பாடு அடையவும் குடிநீர் வசதி, சாலை அமைத்தல், மின் வசதி அளித்தல், பள்ளி வசதி, சுகாதார வசதி போன்ற அனைத்து முன்னேற்ற பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின்படி 1985-86 ஆம் ஆண்டில் பல்வேறு துறைகளின் மூலம் பழங்குடியினர் நலனுக்காக ரூ. 761.57 இலட்சம் செலவு செய்யப்படும். இதன் விவரங்கள் கீழே இணைப்பு (iii)-ல் உள்ளன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 19,000 பழங்குடி

யினர் குடும்பங்கள் பயன் பெறுவர் என்று நிர்ணயம் செய்யப் பட்டிருந்தும், அத் திட்டத்தின் மூலம் இதற்கு மேலாக 27,254 பழங்குடியினர் குடும்பங்கள் பயனடைந்துள்ளன. ஏழாவது ஐந்தாண்டுக் காலத் திட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 46,979 பழங்குடியினர் குடும்பங்களாகும்.

8. சுருங்கக் கூறுமிடத்து அரசு மேற் கொண்ட முயற்சி களால், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களின் சமூக பொரு ளாதார நிலைகளில், குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட் டுள்ளது. உதாரணமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரில் கற்றோர் நிலை 1971 ல் இருந்ததைவிட இப்போது முறையே 7.85 மற்றும் 11.43 விழுக்காடு உயர்ந்துள்ளது. இதே கால அளவில் பொது மக்கள் தொகையில் கற்றோர் நிலையில் உயர்வு 7.30 விழுக்காடு ஆகும். 1985-86 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம் பாட்டுக்கு அரசு செலவிடும் மொத்தத் தொகை ரூ. 172.66 கோடிகளாகும்.

9. நான் இதுவரை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுக்காக அரசு மேற் கொண்ட முயற்சிகளை பொது வாகக் கூறியுள்ளேன். இப்போது 'ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்தின்' கீழ் மேற் கொள்ளப்படும் பணிகளின் சிறப்பியல்புகளை தங்கள் முன் வைக்கிறேன்.

**கல்வி :**

10. ஆதி திராவிடர்களின் சமூக பொருளாதார முன்னேற்றம் கல்வியைச் சார்ந்து உள்ளதால், அரசு இதற்கு முன்னுரிமை தருகிறது. தமிழ்நாட்டில் 12-வது வகுப்பு வரை எல்லோருக்கும் இலவச கல்வி அளிக்கப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் மாணவர்களுக்கு முதுநிலை பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. அதிக அளவில் ஆதி திரா விடர் மற்றும் பழங்குடியினர் குழந்தைகளுக்கு ஆரம்ப கல்வி அளிக்க எல்லா முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன. பள்ளிக்குச் செல்லும் வயதுடைய 25 இலட்சம் ஆதிதிராவிடர் குழந்தை களில் 19.56 இலட்சம் பேர் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதாவது, 78.3 விழுக்காடு பள்ளி செல்லும் வயது வந்த ஆதி திராவிடர் மாணவர்கள் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஏழாவது ஐந்தாண்டுக் காலத் திட்டத்தில் மேலும் 4 இலட்சம் ஆதி திராவிடர் குழந்தைகள் கல்வி அறிவு பெற வகை செய்யப் படும். எல்லா ஆதி திராவிடர் குடியிருப்புகளின் அருகாமையில் ஆரம்பக் கல்வி பெற, பள்ளி வசதி செய்து கொடுக்கப்பட்டுள் ளது. இத்தகைய உறுதியான நடவடிக்கைகளினால் ஆதி திரா விடர் பழங்குடியினர்களுடைய கல்வி நிலை விகிதம் மேலே கூறிய படி குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்துள்ளது. ஆதி திராவிடர்



மற்றும் பழங்குடியினர் பெற்றோர்கள், அவர்களது குழந்தை களுக்குக் கல்வி அளிப்பதனால் ஏற்படும் சுமையை குறைக்க, அவர் களின் குழந்தைகளுக்கு மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பு மற்றும் மெட்ரிக் படிப்புக்கு மேற்பட்ட படிப்பு பெற படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. மெட்ரிக் படிப்புக்கு முந்திய படிப்புக்கு வழங்கப்படும் உதவித் தொகை பெறுவதற்கு நிர்ண யிக்கப்பட்ட பெற்றோரின் ஆண்டு உச்சவருமானம் நீக்கப்பட்டு விடுதியில் தங்கிப் பயிலாத அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களும் பயன்பெறும்படி தற்பொழுது வகை செய்யப்பட்டுள்ளது. ஆண்டு வருமானம் ரூ. 6,000-க்கு மேற்படாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பெற்றோர் களின் குழந்தைகளுக்கு கல்விச் சலுகையாக மெட்ரிக் படிப்பு வரை உறைவிட படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. தற் போதைய உண்டு உறைவிடக் கட்டண வீதம் அவர் ஆணா, பெண்ணா என்பதைக் கொண்டும் அவர் எந்த வகையான படிப்பு பயிலுகிறார் என்பதைக் கொண்டும் கணக்கிட்டு ரூ. 250- லிருந்து ரூ. 350 வரை அளிக்கப்படுகிறது.

மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்டப் படிப்பு :

11. மெட்ரிக் படிப்புக்கு மேற்படிப்பு வரை எல்லா ஆதி திராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்கும் இலவசப் கல்வி அளிக்கப்படுகிறது. மாணவர்களால் செலுத்தப்படும் தனிக் கட்டணம் மற்றும் இதர அனைத்துச் செலவுகளும்உதவித்தொகை யில் அடங்கும். விடுதியில் தங்கிப் படிப்பவர்களைப் பொறுத்த வரையில் மேற்கண்ட சலுகைகளும், புத்தகத்திற்காகும் செலவு மற்றும் உண்டு உறைவிடச் செலவு சேர்த்தும் படிப்புதவித் தொகையாக வழங்கப்படும். மெட்ரிக் படிப்புக்கு மேற்பட்ட படிப்பு உதவித்தொகை திட்டத்தின்கீழ் மாநில அரசு படிப்பு உதவி திட்டம் மற்றும் மத்திய அரசின் படிப்பு உதவி திட்டம் என இரண்டு திட்டங்கள் உள்ளன(மத்திய அரசு முழுஉதவித்தொகை யையும் இத்திட்டத்தின்கீழ் கொடுப்பதில்லை). மத்திய அரசு மற் றும் மாநில அரசு படிப்பு உதவித் திட்டத்தின்கீழ் உதவி பெறும் மாணவரின் பெற்றோர் ஆண்டு வருமானம் முறையே ரூ.12,000-க் குள்ளும் மற்றும் 6,000-க்குள்ளும் இருக்க வேண்டும். விடுதியில் தங்கிப் பயிலாத மாணவர்கள் மற்றும் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு அவர்கள் ஆண்களா அல்லது பெண்களா மற்றும் எந்த படிப்பு பயிலுகின்றனர் என்பதை கணக்கில் கொண்டு மத்திய அரசு பராமரிப்பு உதவித்தொகை மாதந் தோறும் முறையே ரூ. 50-லிருந்து ரூ. 120 மற்றும் ரூ. 75- லிருந்து ரூ. 200 வரை தற்போது தரப்படுகிறது. மாநில அரசு திட்டத்தின் கீழ் ரூ. 50-லிருந்து ரூ. 75 வரை விடுதியில் தங்கி படிக்கும் ஒவ்வொரு மாணவருக்கும் மாதந்தோறும் அளிக்கப் படுகிறது. மேற்கண்ட இவ்விரு திட்டங்களின்கீழ் ஆண்டு தோறும் கிட்டத்தட்ட 59,000 ஆதிதிராவிடர் மாணவர்களும்

300 பழங்குடி மாணவர்களும் பயனடைகிறார்கள். மேற்காணப் பட்ட படிப்புஉதவித் தொகைகளைத் தவிர காந்தியடிகள் நினைவு படிப்புத் தொகை, தகுதி-வருவாய் பரிசுத்திட்டம் மற்றும் தகுதிக்கென்று வழங்கும் தனி மானியம் போன்ற ஊக்க உதவித் தொகைகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர் களுக்கு வழங்கப்படுகின்றன. படிப்பு உதவித்தொகை தவிர படிப்புக்கு ஆகும் செலவை சரிகட்ட, கடன் உதவித்தொகை தேவைப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்விதம் பயன் பெறுவோர் ஆண்டிற்கு சுமார் 8,200 மாணவர்கள் ஆவர். துப்புரவு பணிகளில் ஈடுபட்டுள்ளோர்களின் பிள்ளைகள் பயன் அடையும் வகையில் சிறப்பு உதவித்தொகைகள் தரப்படுகின்றன. இதன் வாயிலாக பயனடைவோர் கிட்டத்தட்ட 600 மாணவர் கள் ஆவர்.

பள்ளிகள் :

12. இந்த அரசு நடத்தி வரும் 952 பள்ளிகளில் 2.09 இலட்சம் மாணவர்கள் பயிலுகின்றனர். இம்மாணவர்களுக்கு பாட நூல் மற்றும் குறிப்பேடுகள் இலவசமாக வழங்கப்படு கின்றன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளி களில் மூன்று முதல் எட்டு வகுப்புவரை உள்ள வகுப்புகளில்பயிலும் எல்லா மாணவர்களுக்கும் இலவசமாக இரண்டு ஜதை சீருடை கள் வழங்கப்படுகின்றன. பழங்குடியினர் மாணவர்களின் நலன் கருதி அரசு 160 பள்ளிகளை நடத்தி வருகிறது. இப்பள்ளி களில் பயிலும் 9,800 பழங்குடியினர் மாணவர்களுக்கு உணவு மற்றும் உறைவிட வசதிக்ள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, 500 உயர் நிலைப்பள்ளிகளிலும் மற்றும் 300 மேல்நிலைப் பள்ளிகளிலும் பள்ளி நேரம் முடிந்தபின் ஒன்றரை மணி நேரம் சிறப்பு பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று செயற்படுத்தப்படுகிறது. (அ) ஆங் கிலம், (ஆ) கணிதம், (இ) இயற்பியல், (ஈ) இரசாயனம், (உ) விலங்கியல், (ஊ) தாவரவியல், (எ) வணிகவியல் போன்ற பாடங் கள் மேற்படி திட்டத்தில் உள்ளடங்கும். மேற்படி திட்டத் தினால் 57,000 மாணவர்கள் பயனடைகின்றனர்.

விடுதிகள் :

13. ஆதிதிராவிடர் மாணவர்கள் இலவசமாக உணவு மற்றும் தங்கும் வசதியுடன் கல்வி பயில 735 விடுதிகள் (713 ஆதிதிரா விடர்களுக்கு மற்றும் 22 பழங்குடியினர்களுக்கு) அரசால் நடத்தப்படுகின்றன. இவ்விடுதிகளில் 50,238 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற மாணவர்கள் தங்கிகல்வியைத்தொடரு கிறார்கள். ஆதிதிராவிடர் மாணவர்கள் ஆதிதிராவிடர் அல்லாத பிற மாணவர்களுடன் கலந்திருக்கும் பொருட்டு முற்பட்டோர்



மற்றும் பின் தங்கிய வகுப்பு மாணவர்களும் இவ்விடுதிகளில் அனு மதிக்கப்படுகிறார்கள். இவ்வாறு விடுதிகளில் தங்கும் மாணவர் ஒருவருக்கு ஆகும் உணவுச் செலவு அவ்விடுதியிலிருக்கும் பகுதியை பொறுத்தும், மாணவர் பயிலும் படிப்பு பிரிவை பொறுத்தும் ரூ. 60–லிருந்து ரூ. 95–வரை நிர்ணயிக்கப்படுகிறது. ஆதிதிரா விடர் மாணவருக்கு உணவு மற்றும் தங்கும் வசதிகளை அளிப் பதற்காக 1985—86-ல் 15 புதிய விடுதிகள் திறக்கப்படும். இவ் வாண்டில் ஆதிதிராவிடர் விடுதிகளில், கூடுதலாக 750 மாணவர் களை சேர்க்கும் பொருட்டு, தற்பொழுதுள்ள விடுதிகளில் மாண வர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். புதிய விடுதிகளைத் திறப்பதற்காகவும், பராமரிப்பதற்காகவும் 1985—86-ல் ரூ. 561.80 இலட்சங்கள் செலவிடப்படும்.

அரசு நடத்தும் விடுதிகள் தவிர, மேலும் இத்தகைய 41 விடுதிகள் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. இந்த விடுதிகளுக்கு அரசால் நிதி உதவி கொடுக்கப்பட்டு வருகிறது.

விடுதிகளுக்கான கட்டிடங்கள் கட்டுதல்

14. விடுதியில் தங்கி படிப்பவர்களுக்காக இன்றியமையாத வசதிகள் கொண்ட விடுதிகள் படிப்படியாக கட்டப்படுகின்றன. இதற்காக 1985—86-ல் ரூ. 160 இலட்சம் செலவிடப்படும். மேலே குறிப்பிடப்பட்டவற்றிலிருந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி மேம்பாட்டுக்கு அரசு எல்லா முயற்சிகளை யும் மேற்கொண்டுள்ளது என்பது தெளிவாகும். உண்மை யிலேயே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டங் களுக்காக அளிக்கப்படும் நிதி ஒதுக்கீட்டில் 50 விழுக்காடுக்கு மேல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்விக்கென செல விடப்படுகிறது.

பொருளாதார மேம்பாடு

15. தமிழ்நாட்டில் வசிக்கும் ஆதிதிராவிடர்களில் சுமார் 7.40 இலட்சம் பேர் விவசாயிகள். இவர்களுடைய பொருளா தார் மேம்பாட்டிற்காக பாசனக் கிணறுகள் வெட்டுவதற்காக ரூ. 5,000-ம், உழவு மாடுகள் வாங்குவதற்காக ரூ. 600-ம் மானியமாக வழங்கப்படுகின்றன. இதில் மானியத் தொகை மொத்த செலவில் 1/3 பகுதியாகும். எஞ்சிய 2/3 பகுதியான தொகை நிதி உதவி நிறுவனங்களால் வழங்கப்படும். 1985—86 ஆம் ஆண்டில், ஆதிதிராவிடர் பழங்குடியினர் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ. 10.13 இலட்சங்கள் செலவிடப் படும்.

கிராமப்புற கைவினைஞர்கள் பிற உதவியை எதிர் நோக்காமல், தங்கள் சுய முயற்சியினால் தங்கள் தொழிலை மேற்கொள்ளும் பொருட்டு தொழில் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

சிறு தொழில்கள் தொடங்குவதற்காக நிதி உதவியும் கீழ்க் கண்டவாறு அளிக்கப்படுகிறது :—

(1) அரசு மான்யம் .. 25 விழுக்காடு.

(2) தொடக்க செலவு தொகை 25 விழுக்காடு.

(3) வங்கி மூலம் கடன் .. 50 விழுக்காடு.

ஆதிதிராவிடர்கள், கறவை மாடுகள் வளர்ப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டுதலைக் கருத்தில் கொண்டும், பாலின் மிகுதி யான தேவையினை கருத்தில் கொண்டும், பால் வழங்கு கூட்டுறவு சங்கங்கள் அவர்களுக்காக நிறுவப்பட்டுள்ளன. கறவை மாடு ஒன்றின் விலை ரூ. 2,500. இதில், 50 விழுக்க காடு தொகை ரூ. 1,250 மானியமாகவும், எஞ்சிய தொகை நிதி நிறுவனங்களாலும் வழங்கப்படுகிறது. மானியமாக வழங்கப் படும் 50 விழுக்காடு தொகையில், 33⅓ விழுக்காடு தொகை, ஆதிதிராவிடர் நலத்துறை நிதியிலிருந்தும், எஞ்சிய தொகை, மத்திய சிறப்பு நிதியில் இருந்தும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு உறுப்பினரும் இரண்டு கறவை மாடுகள் வாங்குவதற்கு தகுதி உடையவர் ஆவர். இத்திட்டத்தின் கீழ், 1985—86-ல் ரூ. 32.15 இலட்சங்கள் செலவிடப்படும்.

பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு

16. தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் நடத்தப்படும் தொகுதி,4 பணிக்குரிய போட்டித் தேர்வினை எழுத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கு சிறப்பு பயிற்சி அளிக்கப் படுகிறது. இப்பயிற்சியின் காலம் இரண்டு மாதங்களாகும்.

இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி போன்ற அனைத்து இந்திய பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுத விழையும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் வெற்றி வாய்ப்பினை மேம்பட செய்ய முன் பயிற்சி 1966 ஆம் ஆண்டி லிருந்து அளிக்கப்படுகிறது. முதல் வகுப்பில் தேர்ச்சி பெறு கின்ற திறமை மிக்க ஆதிதிராவிடர் விண்ணப்பதார மாணவர் களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 12,000 அல்லது அதற்கு குறைவாக இருப்பின் டெல்லியில் உள்ள டாக்டர் ராவின் படிப்பு மையத்திற்கு குடிமுறை அரசுப் பணித் தேர்வு களில் சிறப்பு பயிற்சி பெறவும் அனுப்பப்படுகிறார்கள். வழக் கறிஞர் தொழில் செய்ய விரும்பும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியை சேர்ந்த சட்ட பட்டதாரிகள் தங்கள் பெயரை வழக்கறிஞர் குழுவில் பதிவு செய்து கொள்ளவும், அவர்கள் தங்கள் தொழிலை நடத்தும் பொருட்டு நீதி மன்றக் கட்டிடங் களில் ஒதுக்கப்படுகின்ற வழக்கறிஞர்களுக்கான அறை





வாடகை போன்ற செலவினத்திற்கு கடனாக ரூ. 750-ம் மற்றும் சட்ட புத்தகங்கள், மரச் சாமான்கள் முதலியவை வாங்குவதற்கு ரூ. 750-ம் அரசு மான்யமாகவும் வழங்கப்படு கிறது.

வீட்டு வசதி

17. (1) வீட்டுமனைகள் வழங்கல்.—வசிப்பதற்கென்று சிறி தளவுநிலம் கூட சொந்தமாக இல்லாத ஆதிதிராவிடர்களின்நிலை பரிதாபத்திற்குரியது. இக்குறைகளைக் களைய அவர்களுக்கு வீட்டு மனைகளை அரசு வெகுகாலமாக வழங்கி வருகிறது. அரசு புறம்போக்கு நிலங்கள் கிடைக்குமிடத்து, அவைகள் வீட்டு மனைகளாக ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர்களுக்கு மாவட்ட ஆட்சியர்களால் ஒப்படைப்பு செய்யப்படுகின்றன. குடியிருப்பு சட்டத்தின் கீழும் அவர்களுக்கு நிலங்கள் ஒப்ப டைப்பு செய்யப்படுகின்றன. தனியார் நிலங்களும் நிலஎடுப்பு செய்யப்பட்டு, ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைகளாக ஒப் படைப்பு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு ஆதிதிராவிடர் குடும்பத்திற்கும் 3 சென்ட் நிலம், வீட்டு மனையாக ஒப் படைப்பு செய்யப்படுகிறது. இதுவரை தனியார் நிலங்கள் எடுப்பு செய்யப்பட்டு, 4,47,880 குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. இவற்றைச் சேர்த்து இதுவரை 8 இலட்சத்திற்கும் அதிகமான ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு பல்வேறு திட்டங்களின்கீழ் வீட்டுமனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 1985—86-ல் ரூ. 98.88 இலட்சம் செலவில் நில எடுப்பு செய்து சுமார் 20,000 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்படும்.

(2) வீடுகள் கட்டல்.—ஆதிதிராவிடர் குடும்பங்களுக்காக வீட்டு வசதி வழங்கும் திட்டம் வெகு காலமாக இந்த அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வீட்டு வசதியளிக்கும் பணியில் ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் செயல்பட்டு கொண்டு இருக்கின்றன. ஆரம்பத்தில் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டும் பொறுப்பு தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச் சிக் கழகத்திடம் (தாட்கோ) ஒப்படைக்கப்பட்டு இருந்தது. தற்போது ஆதிதிராவிடர்களுக்காக வீடுகள் கட்டுதலில், மேற் பார்வையிடல், தொழில் நுட்ப ஆலோசனை கூறல், அரசு மானியத்தை பயன் பெறுவோருக்கு வழங்கல் போன்ற பணி களை செய்யும் வகையில் தாட்கோவின் செயல்முறை மாற்றி யமைக்கப்பட்டிருக்கிறது. தற்சமயம் சமவெளிப் பகுதி மற்றும் மலைப்பகுதிகளில் முறையே ரூ. 6,000 மற்றும் ரூ. 9,000 செலவில் வீடுகள் கட்டப்படுகின்றன. வீடுகள் கட்டும் பணி பயன்பெறுவோர் பொறுப்பிலேயே விடப்படுகின்றது. வீட்டு வசதி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதிலிருந்து 71,397 வீடுகள் ஆதி திராவிடர்களுக்காகக் கட்டப்பட்டிருக்கின்றன.

ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ஆதி திராவிடர்களுக்காக சுமார் 1.54 இலட்சம் வீடுகள் கிராமப்புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டிருக்கின்றன. இவை தவிர தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு காப்புறுதி திட்டங்களின் கீழ் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டப்படுகின்றன.

### அடிப்படை வசதிக்கான மேம்பாட்டு திட்டங்கள்

18. ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது தலையாய திட்டங்களில் ஒன்றாகும். பொதுவாகக் கூறுமிடத்து இப்பொழுது அனேகமாக எல்லா குடியிருப்புகளிலும் குடிநீர் வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. ''ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்'' என்ற பிரிவின் கீழ் கிணறு ஒன்று ரூ. 7,500 என்ற வீதத்தில் குடிநீர் கிணறுகளும் மற்றும் ரூ. 15,000 செலவில் தரைமட்ட நீர்த்தேக்கமும் ஏற்படுத்தப்படுகிறது. 1985–86-ல் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளில் குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்காக ரூ. 14.41 இலட்சம் செலவு செய்யப்படும். இது தவிர, எல்லா ஆதி திராவிடர் குடியிருப்புகளிலும் குடிநீர் வசதி கிடைத்திட ஊரக வளர்ச்சி இயக்ககம் மற்றும் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் போன்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பையும் நிதியையும் திரட்டப்படும்.

பற்பல சமயங்களில் ஆதி திராவிடர்களின் சமூக கொந்தளிப்பிற்கு, அவர்களின் மயானத்திற்கு பொதுப்பாதை இல்லாமையே மூல காரணங்களில் ஒன்றாகும். ஆதி திராவிடர்களின் மயானங்களுக்கும், குடியிருப்புகளுக்கும் பாதைகள் அமைக்க 1985–86-ல் ரூ. 20.00 இலட்சம் செலவு செய்யப்படும். சமீபத்தில் சேகரித்த புள்ளி விவரப்படி சுமார் 2,850 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை வசதிகள் தேவைப்படுகின்றன. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு காப்புறுதி திட்டம் மூலம் இக்குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை வசதிகள் செய்து கொடுக்க வகை செய்யப்படும்.

1985–86-ல் கூடுதல் நீர்புற சலவைக் கூடங்கள், மற்றும் சமூகக் கூடங்கள் அமைக்கப்படும்.

### தீண்டாமை ஒழிப்பு

19. பன்னெடுங்காலமாக நிலவிவரும் தீண்டாமையை ஆதி திராவிடர்களுக்காக மேற்கொள்ளப்படும் பொருளாதார வளர்ச்சி மற்றும் உள்ளமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களால் மட்டும்





ஒழித்துவிட முடியாதென்பதை உணர்ந்துள்ள இந்த அரசு மாநிலத்தில் ''குடியியல் உரிமைகள் பாதுகாப்பு'' சட்டத்தை, தீவிரமாக செயல்படுத்திக் கொண்டு வருகிறது. 21 நடமாடும் காவல் படை பிரிவுகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த காவல் படை பிரிவுகள் 1984 டிசம்பர் முடிய 10,866 வழக்குகளை பதிவு செய்துள்ளன. இவற்றில் 4,112 வழக்குகள் நீதி மன்றங்களால் தண்டனை வழங்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இழைக்கப்படும் குற்றங்களை விசாரிக்க நான்கு தனி நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நீதி மன்றப் பணிகளைக் கவனிப்பதற்காக ஆறு தனி வழக்குத் தொடர்பு குழுக்கள் அமைக்கபபட்டு உள்ளன.

இவை தவிர ஒவ்வொரு வட்டத்திலும் துப்புரவாகப் பராமரிக்கப்படும் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு வானொலிப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. தீண்டாமை ஒழிப்பிற்காக பாடுபடும் கிராமங்களில், அப் பணியில் சிறந்து விளங்கும் இரு கிராமங்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. தீண்டாமை ஒழிப்பு பற்றி பொது மக்களின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் சனவரி ''24 தேதி முதல் 30 தேதி முடிய'' ''தீண்டாமை ஒழிப்பு வாரம்'' கொண்டாடப்படுகிறது. தீண்டாமை ஒழிப்பிற்கு அரசு முயற்சி மட்டும் போதாது. தீண்டாமையினை ஒழிப்பதற்கு அரசு எடுக்கும் முயற்சிக்காக சமூக சேவை செய்யும் தொண்டு நிறுவனங்கள் பெரிய அளவில் ஆதரவு அளிக்கக் கூடும் என்று அரசு கருதுகின்றது. ஆதலால், இராமநாதபுரம், காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தென் ஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் ஆதி திராவிடர்களுக்கு கொடுமை இழைக்கக் கூடிய இடங்களில் 104 கிராமங்களில் தீண்டாமை ஒழிப்பிற்கான பிரச்சாரம் செய்வதற்கு தொண்டு நிறுவனங்களுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இந்த 104 கிராமங்களிலும் ஆதி திராவிடர் நலன் மற்றும் இன ஒற்றுமை விஷயங்களுக்காக கிராம அளவிலான குழு மற்றும் மாவட்ட அளவிலான குழுக்கள் ஏற்படுத்தி அரசு ஆணைகள் இடப்பட்டுள்ளன. இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள 12 கிராமங்களில் பரிட்சார்த்த முறையில் பொது இறை வழிபாடு, விளக்கு பூஜை நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தீண்டாமையின் கொடுமை ஒழிப்பினை பிரச்சாரம் செய்வதற்காக ''தீர்த்த யாத்திரை'' (Pilgrimage) என்ற செய்தித் திரைப்படம் தயாரிக்கப்பட்டு அதை கிராமங்களில் திரையிட்டுக் காட்ட ஒரு கூண்டு உந்து வாங்கப்பட்டிருக்கிறது.

சாதி சமயமற்ற ஒரு சமுதாயத்தினை உருவாக்கும் நோக்குடன் கலப்பு மணம் புரிந்த தம்பதியருக்கு தங்க பதக்கங்களும் பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. இவை தவிர

இத்தகைய தம்பதியரின் ஆண்டு வருமானம் ரூ. 6,000 அல்லது அதற்கு குறைவாக இருந்தால் அவர்கள் பெயரில் ரூ. 4,000 தேசிய சேமிப்புப் பத்திரத்தில் முதலீடு செய்யப்படுகிறது. மேலும் திருமண செலவிற்கென ரூ. 300-ம் வழங்கப்படுகிறது. கலப்புத் திருமண தம்பதிகளின் குழந்தைகளுக்கென்று, ஒருங்கிணைந்த எம்.பி.பி.எஸ்., முதலாம் ஆண்டு பட்டப் படிப்பிற்காக 6 இடங்களும், முதலாம் ஆண்டு பொறியியல் பட்டப் படிப்பிற்காக 5 இடங்களும் சித்த மருத்துவக் கல்லூரியில் 2 இடங்களும் நாட்டு முறை மருந்தாக்கப்பட்டய பார்மஸி வகுப்பில் 1 இடமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் (தாட்கோ) :

20. இந்நிறுவனம் 1974-ம் ஆண்டு பிப்ரவரி திங்களில் நிறுவப்பட்டது. ஆரம்பத்தில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் பணி இக் கழகத்தின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. இந்நிறுவனம் 1974-ல் இருந்து 1985 ஏப்ரல் முடிய 51,760 வீடுகளை ஆதி திராவிடர்களுக்காகக் கட்டியுள்ளது. தற்சமயம், வீடொன்று, சமவெளி மற்றும் மலைப் பகுதிகளில் முறையே ரூபாய் 6,000 மற்றும் ரூபாய் 9,000 செலவில் கட்டப்படுகிறது. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வளர்ச்சிக் கழகம் தற்சமயம் பயன்பெறக் கூடிய ஆதி திராவிடர்களை, அவர்களுடைய வீடுகளைக் கட்டும் பணியில் ஈடுபடச் செய்யும் நோக்குடன் அவர்களுக்கு வீடு கட்டுதல் குறித்து தொழில் நுட்ப ஆலோசனை வழங்குதல், இவ்வாறு கட்டப்படும் வீடுகளை மேற்பார்வையிடுதல் மற்றும் அரசு மானியத்தை வழங்கல் முதலிய பணிகளை செய்யும் வகையில் திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. பயன் பெறுவோர் ஆர்வத்துடன் பங்கு கொள்ளும் நோக்கத்துடன், வீடுகளை கட்டும் பொறுப்பு அவர்களிடையே விடப்பட்டுள்ளது. மேலும், ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், மாணவர் இல்லங்கள், ஆசிரியர்களுக்கு குடியிருப்புகள் மற்றும் பணிக் கொட்டில்கள் கட்டும் பொறுப்பினையும் நல்ல முறையில் விரைவில் முடிக்கும் நோக்குடன் இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அகில இந்திய கோட்பாட்டின் வழி நின்று, ஆதி திராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டினை நடைமுறைப்படுத்துவதற்காக தாட்கோவில் வளர்ச்சிப் பகுதி ஒன்று அரசு தொடங்கியுள்ளது. ஆதி திராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு மத்திய அரசிடமிருந்து பெறப்படும் சிறப்பு நிதி உதவித் தொகை இந்நிறுவனத்திடமே ஒப்படை செய்யப்படுகிறது. அரசின் ஒப்புதலின் பேரில் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு இந்நிறுவனம் பணம் வழங்குகின்றது. மாநிலத்தில் 30 வட்டாரங்களில் இந்நிறுவனம் கூட்டுக் கிராம வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்துகிறது.





தொடக்கச் செலவு வழங்கும் திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பும் தாட்கோவிடமே விடப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின்படி ஒரு தொழிலுக்குத் தேவைப்படும் மொத்தத் தொகையில் 25 விழுக்காடு தொடக்க செலவு தொகை 4 விழுக்காடு வட்டிக்கு வழங்கப்படுகிறது. எஞ்சிய தொகை அரசு மானியமாகவும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடனாகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டம் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். மொத்த செலவில் 49 விழுக்காடு மத்திய அரசாலும் எஞ்சிய 51 விழுக்காடு மாநில அரசாலும் பொறுப்பேற்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் இது வரை ரூ. 10.00 கோடி தாட்கோவிடம் ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. 95,793 ஆதி திராவிடர்கள் பயன்பெறும் வகையில் தாட்கோ இதுவரை ரூ. 662.26 இலட்சம் வழங்கியுள்ளது. 1985-86-ல் இத்திட்டத்திற்காக ரூ. 200.00 இலட்சம் தாட்கோவிற்கு ஒப்படை செய்யப்படும். தொடக்க செலவு வழங்கும் வழி முறைகளை எளிதாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் இத்திட்டம் துரிதமாக செயல்படுத்த வழி வகுக்கும்.

இட ஒதுக்கீடு பற்றிய விதிமுறை :

21. (அ) கல்வி நிலையங்களில் சேர்க்கை.—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு கல்வி நிலையங்களில் முறையான பிரதிநிதித்துவம் வழங்கும் பொருட்டு மருத்துவம், பொறியியல் மற்றும் தொழில் கல்வி நிலையங்கள் உட்பட ஒவ்வொரு கல்வி பிரிவிலும் 18 விழுக்காடு என இட ஒதுக்கீடு தற்பொழுது வழக்கத்தில் உள்ளது.

(ஆ) அரசு பணிகளில் நியமனம்.—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு மாநில அரசு பணிகளில் 18 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பணி நியமன அதிகாரிகள் இட ஒதுக்கீட்டு விதிமுறைகளை வழுவாமல் பின்பற்றுகிறார்களா என்பதை நிலையாக ஆய்வு செய்யும் பொருட்டு துறைத் தலைவர்களும் தலைமை செயலகத் துறைகளும் ஆண்டு விவர அறிக்கை சமர்ப்பிக்கும்படி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த துறை அவர்களின் தலைமையில் ஒரு உயர் அதிகார கண்காணிப்புக் குழு இட ஒதுக்கீடு விதிமுறைகளை செயற்படுத்துதல் பற்றி ஆய்வு செய்கிறது.

விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு மறு வாழ்வு அளித்தல் :

22. பண்ணையடிமைகளாக துன்பப்பட்டு வந்த கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டு சமூகத்தில் உரிமையுடனும் பொருளாதாரத்தில் சுதந்திரமாகவும் வாழ அவர்களுக்கு மறுவாழ்வு

அளிக்கப்படுகிறது. இதுவரை 32,576 கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டு, வீட்டு மனை வழங்குதல், விவசாய நிலங்கள் அளித்தல், உழவுத் தொழில் கருவிகள் வழங்குதல், மாட்டுப் பண்ணை மற்றும் கோழிப் பண்ணைகள் உருவாக்க மான்யம் வழங்குதல் ஆகிய திட்டங்களின்கீழ் மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளனர். விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளை தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு பொறுப்புத் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் சேர்க்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். எல்லா மாவட்டங்களிலும் கொத்தடிமைகள் மறுவாழ்வுத் திட்டங்களை சிறப்பாக நடைமுறைப் படுத்துவதற்கான வழி வகை குறித்து ஆலோசனை கூறுவதற்காக மாவட்டம் மற்றும் வட்டார அளவில் கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**சிறப்பு உள்ளடக்கத் திட்டம்:**

23. தமிழ்நாட்டிலுள்ள ஆதி திராவிடர்களின் மேம்பாட்டை துரிதப்படுத்துவதற்காக அரசு 1980–81 ஆம் ஆண்டிலிருந்து சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு :—

(அ) ஆதி திராவிடர் குடும்பங்களில் ஐம்பது சதவீதத்தினர் ஏழாம் ஐந்தாண்டு திட்டக் காலத்தில் வறுமைக் கோட்டினை கடக்க உதவி செய்தல்.

(ஆ) ஆதிதிராவிடர் காலனிகளுக்கு அடிப்படை தேவைகள் மற்றும் இதர வசதிகள் செய்தல்.

மேலே குறிப்பிடப்பட்ட இலக்குகளை அடைவதற்கு பல முனைத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. பல்வேறு துறைகளின் மூலதனங்களை ஒன்றாக்கி, ஆதிதிராவிடர் குடும்பங்கள், ஒன்றுக்கு மேற்பட்ட திட்டங்களின் மூலம் பயன் பெற்று வறுமைக் கோட்டினைக் கடக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. இதர பிரிவுகளிலிருந்து குறிப்பாக பயன் பிரித்து கூற முடியாத திட்டங்களிலிருந்து பெறும் நன்மையை கணக்கில் கொள்ளாது, பயன் பிரித்தறிய கூடியத் திட்டங்களிலிருந்து ஆதி திராவிடர் அடையக் கூடிய நன்மையை மட்டுமே சிறப்பு உள்ளடக்கத் திட்டம் குறிக்கோளாகக் கொள்ளும்.

**சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளது :—**

24. (1) **பொருளாதார முன்னேற்றம் :** (அ) தமிழ் நாட்டில் கிட்டத்தட்ட 7.40 இலட்சம் விவசாயிகள் ஆதி திராவிடர்கள் ஆவர். உற்பத்தி திறனை உயர்த்துவதன் மூலம், ஆதிதிராவிடர்



விவசாயிகள் வருமான நிலையை உயர்த்த உயர் ரக விளைச்சலைத் தரும் விதைகள், நாற்றுகள், உரங்கள், 25 சதவீதம் மானிய விலையில் கொடுக்கப்படுகின்றது. 1984–85 ஆண்டு இரண்டு இலட்சங்களுக்கு மேற்பட்ட ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு விதைகளும் மற்றும் நாற்றுகளும் 25 சதவீத மானியம் விலையில் விநியோகிக்கப்பட்டது. உபரி நிலங்களை ஒதுக்கிடப் பெற்றவர்களுக்கு, நிலத்தை பயன்படுத்துவதற்காகவும் மேம்படுத்தப்பட்ட வேளாண்மை இடு பொருட்களை பயன்படுத்துவதற்காகவும், ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 2,500 கொடுக்கப்படுகிறது. 1984–85-ல், 1,761 ஆதிதிராவிடர் பயன் அடைந்தனர். பாசனக் கிணறுகள் வெட்டவும் உழவு மாடுகள் வாங்கவும் அதற்காகும் செலவில் 33 1/3 சதவீதம் மானியமாக கொடுக்கப்படுகிறது. தேவையான இடங்களில் ஆதிதிராவிடர்களின் நிலங்களில் மண்வளப்பாதுகாப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது. 4,014 ஆதிதிராவிடர் விவசாயிகளின் நிலங்களில் இம் மண்வளப்பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 3,000 ஆதிதிராவிடர் நிலத்தில் 1985–86 ஆண்டில் இப்பணி மேற்கொள்ளப்படும். 1984–85-ல் பட்டுப்புழு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 997 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன் அடைந்தனர். வருமான இடைவெளியை நிறைவு செய்ய, செம்மறி ஆட்டுப் பண்ணை, கோழிப் பண்ணை கறவை மாடுகள் வளர்த்தல் போன்ற துணைமை வாழ்க்கைத் தொழில் நடத்த உதவி வழங்கப்பட்டுள்ளது. வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு தகுந்த கூலி பெற குறைந்த அளவு கூலி நிர்ணயித்தல் செயற்படுத்தும் சட்டம் மிகுந்த பயனை தந்துள்ளது.

(ஆ) அவர்கள் வருமானத்தை அதிகப் படுத்திக்கொள்ள செம்மறி ஆட்டுப் பண்ணை, கோழிப்பண்ணை, கறவை மாடுகள் வளர்த்தல் போன்றவற்றின் வழியாகவும் உதவி தரப்படுகின்றது. 1984–85-ல், 12,469 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயனடைய வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது. ஊரக கைவினைஞர்களுக்கு கருவிகள் மற்றும் துணைக் கருவிகள் இலவசமாக கொடுக்கப்படுகின்றன. ஆதிதிராவிடர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தால் பயனடைந்தவர்களில் கிட்டத்தட்ட 45 விழுக்காடு ஆதி திராவிடர்கள். 1984–85-ல் இத்திட்டத்தின்கீழ் 1,02,409 ஆதிதிராவிடர் பயன் அடைந்தனர்.

(இ) ஆண்டு முழுவதும் வேளாண்மை மற்றும் அதன் சார்புடைய பணிகள் ஆதாயம் தரத்தக்க வகையில் இருக்காது என்ற காரணத்தால் வாழ்க்கைத் தொழில் படிவ மாற்றதேவை உன்னிப்பாக கவனித்துப் பார்த்து அதனால் அவர்களின் வாழ்க்கைத் தொழில் படிவத்தில் மாற்றம் செய்ய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. மைய அரசிடமிருந்து பெறக் கூடிய மத்திய

அரசு சிறப்பு நிதி உதவிமூலம், ஆதி திராவிடர்களுக்கு தொடர்ந்து பணியில் வருமானம் தரக்கூடிய செங்கல் உற்பத்தித் தொழில், கயிறு உற்பத்தித் தொழில், கையால் காகித உற்பத்தி செய்தல், நேபாள நெசவு இல்லங்கள், ஊரக நெசவு நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சிறு தொழில் போன்ற இதர தொழில் நடத்த தாராளமாக நிதி உதவி அளிக்கப்படுகிறது. 1984–85-ல் 2,376 ஆதிதிராவிடர் பயன் பெறுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

(ஈ) ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பின்தங்கிய வட்டாரம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த வட்டாரத்தில், பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம், பயனடைய வறுமை கோட்டிற்குகீழ் வாழும் 1,000 ஆதி திராவிடர் குடும்பங்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் குடும்பத்தில் ஒருவருக்கு வருடம் முழுவதும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. 1982–83-ல், 15 வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, கூட்டு வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்த அனுமதிக்கப்பட்டன. 1984–85-ல், அவ்வாறு 15 வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. 6,875 ஆதி திராவிடர் குடும்பங்கள் பயன்பெற ரூ. 474.52 இலட்ச செலவில் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டன. செய்யும் தொழில்களில் அதிக ஆதாயம் தரத்தக்கதாக ஆக்க, உதவி வழங்கும் முறை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக பால் பண்ணை வைப்பதன் மூலமாக அதிக ஊக்கமும் பயனும்பெற தரப்படும் மானிய அளவு 50 விழுக்காடு உயர்த்தப்பட்டுள்ளது. ஐ.ஐ.டி. நுழைவுத் தேர்வில் வெற்றி பெற மாணவர்களுக்கு தேர்வுக்கு முன் பயிற்சி அளிக்கப்படுகிறது. நகரப் பகுதிகளில் வசிக்கக் கூடிய ஆதி திராவிடர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களால் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்களின் மூலம் உதவி வழங்கப்படுகின்றனர். 1984–85-ல் 5,000 ஆதி திராவிடர் குடும்பங்கள் பயனடையும். பொருளாதார திட்டங்களில் கணிசமான அளவில் பெண்கள் பயன் அடைந்துள்ளனர்.

சுருக்கமாகச் சொல்லப் போனால், ஆதி திராவிடர்களின் பொருளாதார முன்னேற்றத்தில் வெற்றி காண ஆதி திராவிடர்களுடைய தேவைக்கேற்ப திட்டங்களை மாற்றி அமைப்பது பற்றி எல்லாவித உரிய வழிகளும் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1984–85-ல் 1.80 இலட்ச ஆதிதிராவிடர் குடும்பங்கள் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பயனடைய வேண்டும் என்று நிர்ணயித்து இருந்த போதிலும் 2.20 இலட்சம் குடும்பங்கள் இத்திட்டங்களின் மூலம் பயன் அடைந்தனர். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பல்வேறு பொருளாதார முன்னேற்றத் திட்டத்தின் வாயிலாக குறியீடு நிர்ணயம் செய்யப்பட்ட 9 இலட்சம் குடும்பங்களில் 8.90 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 10 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன் பெறும்.



24. (2) சமுதாயப் பணி—சமுதாயப் பணிப் பிரிவில் போதிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அனைத்து 26,000 காலனிகளுக்கு குடிநீர் வசதி வழங்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 3,000 ஆதி திராவிடர்களின் காலனிகளில் (புதிய காலனிகள் உட்பட) அவர்கள் வசிக்கும் இடத்தின் அருகில் குடிநீர் வசதி தேவைப்படுகிறது. 1985–86-ல் 745 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்து தரப்படும். தேசீய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு காப்புறுதி திட்டத்தின் மூலம் ஆதி திராவிடர் காலனிகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கப்படும். 1984–85-ல் 372 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டன. ஊரக மின் வசதி திட்டத்தில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது. அண்மை காலத்தில் ஏற்பட்ட குடியிருப்புகளைத் தவிர மற்ற எல்லா காலனிகளுக்கும் மின் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. குடிசைகளுக்கு மின்வசதி ஏற்படுத்தும் திட்டத்தில், 1984–85-ல், 23,284 ஆதி திராவிடர் குடிசைகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டது. 1985–86 ஆம் ஆண்டின் குறியீடு (i) 160 குடியிருப்புகள் (ii) 10,000 ஆதி திராவிடர் குடிசைகள்.

7 வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அனைத்து ஆதி திராவிடர் காலனிகளில் வசிப்போருக்கும் தேவையான குடிநீர் வசதி, இணைப்பு சாலைகள் தெரு விளக்குகள், மயான வசதிகள், மயானத்திற்கு செல்லக் கூடிய பாதை வசதிகள் மற்றும் சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

பழங்குடியினர் :

25. தமிழ்நாட்டில் பழங்குடி மக்கட் தொகை 5.20 இலட்சமாகும். அவை மொத்த மக்கட் தொகையில் 1.07 சதவீதமாகும். பழங்குடியினர் முன்னேற்றத்தை விரைவு படுத்த அவர்கள் செறிந்துள்ள பகுதிகளில் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பழங்குடியினர் துணைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பழங்குடியினர் துணைத் திட்டத்தை செயற்படுத்த, பழங்குடியினர் அதிகமாக உள்ள 9 பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டது. கிட்டத்தட்ட 2.10 இலட்சம் தமிழகப் பழங்குடியினர் இந்த 9 பகுதிகளில் வசிக்கின்றனர். பழங்குடி துணைத் திட்டத்தின் கீழ் பொருளாதார முன்னேற்றத்திட்டங்களான தோட்டக் கலை, கால்நடை வளர்ப்பு, மண் வளப் பாதுகாப்பு, சிறு பாசனம், பட்டுப்புழு வளர்ப்பு, சிறு தொழில், தேனீ வளர்த்தல் போன்றவை செயல்படுகின்றன. மேற்கண்ட தொழிலுக்குத் தேவையான இடு பொருள்கள் தென்னார்காடு மாவட்டத்தில் உள்ள கல்ராயன் தவிர, (75 சதவீதம் மானியம் தரப்பட்டுள்ளது) மற்ற பகுதிகளில் பழங்குடியினருக்கு 50 சதவீதம் மானியமாகக்

கொடுக்கப்படுகின்றது. 1984-85-ல் உயர் ரக விளைச்சல் தரக் கூடிய விதைகள் மற்றும் நாற்றுகள் 4,854 ஏக்கர் பரப்புள்ள பழங்குடியினர் நிலத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. பட்டுப்புழு வளர்க்கும் தொழிலில் 405 பழங்குடியினர் குடும்பங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 50 விழுக்காடு மானிய விலையில், 1,330 பழங்குடியினர் குடும்பங்களுக்கு கறவை மாடுகள் வழங்கப்பட்டன. 200-க்கு மேற்பட்ட பழங்குடியினர் குடும்பங்களுக்கு, தேனீக்கள் வளர்ப்பு கூடுகள் வழங்கப்பட்டன. 3,747 குடும்பங்கள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். இத் திட்டங்கள் யாவும் பழங்குடியினர் பண்பாட்டினை பாதிக்காத வகையில் நேர்த்தியாகத் தீட்டப்பட்டுள்ளது. 1984-85-ல் இருபது அம்சத் திட்டத்தின் கீழ், 5,850 பழங்குடியினர் குடும்பங்கள் பயனடைய குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், இவ்வருடத்தில் 11,235 குடும்பங்கள் பயன் அடைந்துள்ளனர். மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனங்கள், தோட்டக் கலைத் துறை மற்றும் கால் நடை வளர்ப்புத் துறைகள் மூலம் இக்குடும்பங்கள் அதிக அளவில் பயன் அடைந்துள்ளனர். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் வாயிலாக 27,254 குடும்பங்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவ்வாறு 35,000 பழங்குடியினர் குடும்பங்கள் பயனடைய வழிவகுக்கும். பழங்குடியினருடைய பொருளாதாரத்திற்கு பாதிப்பு உண்டாக்கக் கூடிய இடைத் தரகர்களின் நடவடிக்கைகளைத் தடுக்கும் பொருட்டு 12 பெரிய அளவிலான பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் (லேம்ப்ஸ்) இப்பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாக, இப் பகுதிகளில் வசிக்கும் எல்லாப் பழங்குடியினரும் இக்கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களாவர். இச்சங்கங்கள் பயன்பாட்டுக் கடன்கள் மட்டுமல்லாமல், குறுகிய காலக் கடன், நடுத்தரக் காலக் கடன் தருகின்றது. இது மட்டுமல்லாமல், நியாயமான அளவில் ஆதாயம் அவர்களுக்குக் கிட்டுவதற்காக அவர்களுடைய தயாரிப்பு பொருட்களை இச்சங்கங்கள் விற்கும் பொறுப்பினை ஏற்றுள்ளன. இச்சங்கங்களின் வாயிலாக பழங்குடியினருக்கு அத்தியாவசிய பொருட்கள் நியாய விலையில் விற்கப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட குடும்ப வறுமையை ஒழிக்கும் திட்டங்களைத் தவிர, சாலை அமைத்தல், சுகாதார வசதி செய்தல், பள்ளிக் கட்டிடங்கள் ஏற்படுத்துதல், தெருக்கள், காலனிகளில் மின் வசதி செய்தல், குடிநீர் வசதி செய்தல் போன்ற பகுதி முன்னேற்ற திட்டங்கள் இப்பழங்குடியினர் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. 1984-85 இல் 104 பழங்குடியினர் குடியிருப்புக்களுக்கு குடிநீர் வசதி செய்து தரப்பட்டது. இதே ஆண்டில், பழங்குடியினர் கிராமங்களை சமவெளி பகுதிகளுடன் இணைப்பதற்கு ரூ. 155.51 இலட்சம் செலவு செய்யப்பட்டது. பழங்குடியினர் துணைத் திட்டப் பகுதியில் 20 பழங்குடியினர் கிராமங்களுக்கு மின் இணைப்பு வசதி அளிக்கப்பட்டது.



29 துணை சுகாதார நிலையங்கள் இப்பகுதிகளில் அமைக்கப்பட்டன. 10,200 பழங்குடியினர் குழந்தைகளின் நன்மைக்காக 160 பள்ளிகள் மற்றும் 22 விடுதிகள் (பழங்குடித் துணைத் திட்டம் செயல்படாத இடங்களிலும்) பராமரிக்கப்படுகின்றன. அரசின் முயற்சியின் காரணமாக பொது மக்கட்தொகையில் படித்தவரின் அளவு 1971-இல் 7.30 சதவீதமாக உயர்ந்திருந்த போது பழங்குடியினரின் படித்தவர்கள் எண்ணிக்கை 11.43 சதவீதமாக உயர்ந்திருந்தது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பழங்குடியினர் குடும்பத்தினருக்கு மேலே குறிப்பிடப்பட்ட எல்லா திட்டங்களும் செயல்படுத்துவதுடன் காலனிகளுக்கு எல்லா அடிப்படை வசதிகளும் செய்து தரப்படும்.

பழங்குடியினர் துணைத் திட்டம் செயல்படுத்தப்படாத பகுதிகளில் வாழும் பழங்குடியினர் நலனுக்காக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் மூலம் அவர்களது நலன் பாதுகாக்கப்படும்.

வேளாண்மை தொழில் நுட்ப அளவு திறன் பெறாத மற்றும் எண்ணிக்கையில் குறைந்து கொண்டிருக்கும் பண்டைய பழங்குடியினர் கண்டு பிடிக்கப்பட்டு, அவர்களுக்காக தனித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

1985-86-ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் வசிக்கக் கூடிய 9,309 பழங்குடியினர் குடும்பத்திற்கு ரூ. 761.57 இலட்சம் செலவழிக்கப்படும் இவற்றில் பண்டைய பழங்குடியினரும் அடங்குவர்.

**இருபது அம்ச திட்டம் 7—(அ) மற்றும் 7 (ஆ) :**

26. பாரதப் பிரதமர் அவர்களின் இருபது அம்சத் திட்டமானது தீவிரமாகச் செயல்படுத்தப்படுகின்றது. இருபது அம்சத் திட்டத்தின் ஏழாவது அம்சம் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினரின் முன்னேற்றத்தை விரைவு படுத்துவதற்கு வழிவகை செய்கிறது. 1980-85-ஆம் ஆண்டுகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 9 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களில் 8.90 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களினால் பயன் பெற்றுள்ளனர். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 19,000 பழங்குடியினர் குடும்பங்கள் பயன் பெறுவர் என்று குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தும், இத்திட்டக் காலத்தில் 27,254 பழங்குடியினர் குடும்பங்கள் பொருளாதார திட்டங்களின் மூலம் பயன் பெற்றுள்ளனர். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் பல்வகை பொருளாதார

மேம்பாட்டுத் திட்டங்கள் மூலமாக 10 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களும், 46,979 பழங்குடியினர் குடும்பங்களும் பயன் பெற வகை செய்யப்படும்.

27. கோரிக்கை எண். 31-ன் கீழ் ரூ. 4,409.60 இலட்சமும், கோரிக்கை எண் 43 (பல்வகை) லிருந்து ரூ. 0.37 இலட்சமும், கோரிக்கை எண் 58 (பல்வகை மூலதனம்) லிருந்து ரூ. 410.00 இலட்சமும், கோரிக்கை எண் 59 (கடன் மற்றும் முன் பணம்) லிருந்து ரூ. 71 இலட்சமும் ஆதி திராவிடர் முன்னேற்றத்திற்காக 1985-86-ஆம் ஆண்டில் செலவு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

28. இவ்வாறாக, இம் மாநிலத்தில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு அயராது பாடுபட்டு வருகிறது.

136419
சென்னை-600 009
D
V211,31 N85
N85-12-4